THE BOOK WAS DRENCHED

UNIVERSAL
LIBRARY
OU_208030
UNIVERSAL
LIBRARY

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. Tm 894.811 N514 Accession No. TM 475

Author Nachinarkiniyar.

Title Tolkappiyam - porulathikaram. 1955.

This book should be returned on or before the date last marked below.

கழக வெளியீடு : சஉக

தொல்காப்பியம்

பொருளதிகாரம்

அகத்திணையியல்
புறத்திணையியல்

நச்சினார்க்கினியர் உரை

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி : : சென்னை-1

First Edition: March, 1947.
Second Edition : „ 1955.

[All Rights Reserved]

Checked 1959

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., I/140, BROADWAY, MADRAS-I.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, Madras-1. II Ed. C. 1020.

முன்னுரை

தொல்காப்பியம் என்னும் நூல் தமிழ்மொழியில் உள்ள நூல்களிலெல்லாம் மிகப் பழமையும் பெருமையும் வாய்ந்த இயல்நூலாகும். பண்டைக்காலத்துத் தமிழ்ப் பழங் குடிகளுள் ஒன்றான காப்பியக்குடியிற் பிறந்து சிறந்தோர் ஒருவராற் செய்யப்பட்டமையின், இஃது இப்பெயர் பெற்றது. காப்பியஞ் சேந்தனார் என்று பெயர்கொண்ட ஒரு புலவர் நற்றிணையில் ஒரு செய்யுளைப் பாடினோராகக் காணப்படுகின்றார். காப்பியாற்றுக் காப்பியனார் என்பது பதிற்றுப்பத்துள் ஒரு பத்தைப் பாடிய புலவர் பெயர். இவற்றாலும் காப்பியம் என்பது தமிழ்நாட்டோடே தொடர்புற்றுத் தமிழ்க்குடியைக் குறிப்ப தாகவே அறியப்படும். தொல்காப்பியர் தமிழ்முனியாகிய அகத் தியர் இயற்றிய அகத்தியத்தை நிலைகண்டுணர்ந்தே இந்நூலைச் செய்தனர். இதை,

> "ஆனாப் பெருமை அகத்திய னென்னும்
> அருந்தவ முனிவன் ஆக்கிய முதல்நூல்
> பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
> நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்."

எனப் பன்னிருபடலப் பாயிரம் கூறுமாற்றால் தெளிக. இவர் சங்கம் வளர்த்த முதற்குடியிற் றோன்றிய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து இந்நூலை அரங்கேற்றின ரென்பதும், அதங்கோட்டாசான் என்ற புலவர்பெருமான் முன் அது நிகழ்ந்த தென்பதும் இந்நூற் பாயிரத்தால் தெள்ளிதின் உணரப்படும்.

இவர் காலம் வடமொழி வியாகரணம் இயற்றிய பாணினி யின் காலத்துக்கு முற்பட்ட தென்பது பெரிதும் கருதத்தக் கது. தொல்காப்பியப் பாயிரத்திலேயே "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என இவர் சிறப்பிக்கப்படுகின்றார். வட மொழிக்கு ஐந்திரம் என்ற இலக்கணமே முற்பட்டிருந்த தென் பதும், அதற்குப் பின்னேயே பாணினீயம் தோன்றிய தென்ப தும் வடநூலாரும் ஒப்பும் உண்மையாகும். ஆதலின் தொல்

காப்பியம் பாணினியின் வடமொழி வியாகரணத்துக்கு மிகவும் முற்பட்ட தென்பது தெளிந்த துணிபன்றே? "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என இவர் சிறப்பிக்கப்படுதற்குக் காரணம் என்னே எனின், தமிழ்மொழிக்குப் பேரிலக்கணம் செய்யப் புகுந்த இவர், அக்காலத்துச் சிறந்து விளங்கியிருந்த மற்றொருமொழியான வடமொழி இலக்கண வமைதியையும் நிலைகண்டுணர்ந்து இருமொழி அமைதியையும் அறிந்தமைந்த உரவோர் ஆயதைத் தெரிவிக்கவேண்டி என்க. மற்று இவர் வடமொழி இலக்கண மறிந்தமை கூறப்பட்டதன்றி, அகத்தியம் முதலிய தமிழிலக்கண நூலுணர்ச்சி பாயிரத்தில் குறிக்கப்பட வில்லையெனின், அப் பாயிரமே மூற்பகுதியில், 'முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணிப்—புலந்தொகுத்தோனே போக்கறு பனுவல்', எனத் தெள்ளிதின் உரைத்தமையால், தங்காலத்துக்கு முற்பட்ட தமிழிலக்கண நூல் முழுவதும் அவர் கண்டவர் என்பதும், அந் நூற்பொருள் முழுவதையும் தாம் முறைப்படுத் தினர் என்பதும், விரிந்து கிடந்த அந்நூற்பொருளை எல்லாம் தம் அஃகியகன்ற அறிவால் தொகுத்துக் கூறினர் என்பதும், ஆதலின் இங்ஙனம் செய்த நூல் எவ்வகைக் குற்றமுமற்று விளங்குவதென்பதும் தெளிய உணர்த்தப்பட்டன.

நூல் என்பது இக்காலத்து இலக்கண இலக்கியங்களை யெல்லாம் குறிப்பினும், முற்காலத்து இலக்கண நூலையே வரைந்து குறித்ததாகும். நச்சினார்க்கினியரும் 'முதுநூல் அகத் தியமும் மாபுராணமும் பூதபுராணமும் இசைநுணுக்கமும்" என உணர்த்தியமை காண்க. பிற்காலத்துப் பவணந்தியால் செய்யப் பட்ட நன்னூலின் சிறப்புப் பாயிரத்தில்.

> "..... முன்னோர் நூலின்
> வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்."

என்று கூறப்படுகிறது. ஈண்டும் நூல் என்றே இலக்கணத்தைக் குறித்து, நன்னூல் அம் முந்துநூற்கு வழிநூலாகச் செய்யப் பட்டதென்று உணர்த்தப்பட்டமை காண்க. தொல்காப்பியத் துக்கு, முதல்நூலாகச் சிறந்த இலக்கணமான அகத்தியம் சுட்டப்படாமை போலவே, நன்னூற் பாயிரத்தும் அதற்கு முன்னைய சிறந்த இலக்கணமான தொல்காப்பியம் சுட்டட்

படாமை காண்க. மேலும் தொல்காப்பியப் பாயிரத்தின் மூற் பகுதியில்,

> வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
> எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி

என இலக்கியங்க ளெல்லாம் செய்யுள் என்று குறிக்கப்பட்டுப் போந்தமையால், நூல் என்பது இலக்கணத்தையே வரைந் துணர்த்திற்றென்பது தெளிவு.

ஆகவே, உலக வழக்கை யுணர்ந்து, பண்டைத் தமிழிலக் கியங்களை யாராய்ந்து, எழுத்து, சொல், பொருள் என்பவற்றின் அமைதிகளை யுணர்ந்து, சிறந்த அகத்திய முதலாய இலக்கணங் களையும் தெளிந்து, இந்நூலைச் செய்தனர் தொல்காப்பியர் என்பது தெளியப்பட்ட உண்மையாம்.

எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றும் மூன்றதி காரத்தால் கூறப்படுகின்றன. எழுத்தும் சொல்லும் தமிழ் மொழியின் அமைதியை விளக்குவன. பொருள் அத்தமிழ் மொழி வழக்கிற்கு நிலைக்களனுயுள்ள தமிழரது ஒழுக்கத்தை எடுத்துக் காட்டுவதாகும்.

இப்பொருளதிகாரம், தமிழரே உலகத்தோற்றத்தில் முதற்கண் நிலைபெற்ற பண்டைப் பெருங்குடியின ராவரென் பதைத் தெளிய உணருமாறு உரைத்துச் செல்கிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானிலப்பகுப்பு மக்கள் வாழ்க்கையிடம் படிப்படியாக மாறிய முறையையே தெரிவிப்ப தாகுமன்றே? உலகத்தே முதலில் மக்கள் மரஞ் செறிந்த மலை யிடத்தேயே தோன்றி, எதிர்ப்பட்ட விலங்குகளைக் கொன் றுண்டு வாழ்க்கை நடாத்திப், பின் காலப்போக்கில் முல்லை நிலத்தே வந்து தங்கி, வரகு முதலியன விதைத்துப் பயன்கொண்டு வாழ்ந்து, பின் மருத நிலத்தே ஆற்று நீரைத் தேக்கிப் பயன் கொண்டு, மேம்பட்ட உழுதொழில் செய்து வாழ்ந்து, பின் பல்வகைத் தொழிலும் பெருக்கி, நெய்த னிலத்தே பட்டின மமைத்துக் கடல் கடந்து நாவாய் மூலம் சென்று வாணிகம் புரிந்து மேம்பாடெற்றமை வரலாற்றுண்மையன்றே?

> கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
> முன்தோன்றி மூத்த குடி. (புற-வெ-உ-கசு)

என்று கூறிக், குறிஞ்சி நிலத்தையே மக்கட்டோற்றத்திற்கான முதலிடமாகக் குறிப்பிட்டமையும் காண்க.

மக்கட்பெருக்கத்துக்குக் காரணராயிருந்த இத் தமிழ்க் குடியினரிடத்தே, அத்தன்மைக் கேற்பக் காதலும் வீரமும் சிறந்திருந்தமையையும், அவ்விரண்டையும் நுனித்தறிந்து வரையறை செய்து நன்முறையில் ஒழுகிவந்ததையுமே பொருளதிகாரம் விரித்துப் பேசுவதாகும்.

காதலொழுக்கத்தை நுனித்தறிந்த தமிழர், அதைப் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்றே வகையாக வகுத்துரைத்தனர். இவை எந்நிலத்தும் நிகழுமாயினும் நாடகவழக்கினும் உலகியல்வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கத்தால், இடம் காலம் முதலியவற்றுட்படுத்துக் கூறப்பட்டன.

வீரவுணர்வு மிகுந்த தமிழர், அவ்வீரத்தை அறநெறி வழுவாது ஓம்பிப் போற்றிய வகையும், அவர்கள் வீரத்தின் மேம்பாடும் வகைப்படுத்தி உரைக்கப்பட்டன.

பொருளதிகாரம் இவற்றை அகவொழுக்கம், புறவொழுக்கம் என்று கூறுகிறது. இவற்றைச் சிறந்தெடுத் துணர்த்துவதே அகத்திணை இயல், புறத்திணை இயல் என்ற இரண்டுமான இப் பொருளதிகாரப் பகுதியாம். அகவொழுக்கமாயிற்று, இரு பாலாருள் ஒருவரோடொருவர் மனமொன்றிய காதலொழுக்க மாதலின். புறவொழுக்கமாயிற்றுச், சிறப்பாகப் பிறரின் மாறு பாட்டு அறமும் பொருளும் கருதித் தோன்றும் போரொழுக்க மாதலின். அகவொழுக்கமல்லாத பிறவெல்லாம் இப்புறவொழுக்கத்தில் அடங்கும்.

அகத்திணை இயல், தமிழர் வாழும் நிலம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் (பாலை) எனப் பகுக்கப்படு மென்பதும் அவ்வந்நிலத்தில் இன்னின்ன காலங்கள் சிறந்தன வென்பதும், அவ்வந்நிலத்து வாழ் மக்கள் குறவர், இடையர், உழவர், பரதவர், எயினர் எனப்படுவர் என்பதும், அவ்வந்நிலத்துத் தெய்வம், உணவு, விலங்கு, பறவை, மரம், பறை, செய்தி, யாழ் முதலியன வேறுவே றென்பதும், மக்கள் காதலொழுக்கத்தில் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னுமைந்தும் நிகழு

மென்பதும், மக்கள் கல்வி, பகை தூது, பொருள் என்பன பற்றிக் காதலியைப் பிரிவரென்பதும், பிரிவின்கண் நற்றாய், செவிலிதாய், தோழி, கண்டோர், தலைவன் என்போர் கூறு முறை இவை என்பதும், காமஞ்சாலா இளமையோள்மாட்டுக் காதல்புரியும் கைக்கிளையினியல்பு, கழிபெருங் காமுகராய் ஒழுகும் பெருந்திணை இயல்பு இவை என்பதும் கூறுகின்றது.

இனிப் புறத்திணை இயல், பகையரசர் நாட்டிலுள்ள பசுக்களுக்குத் தீங்குவராமற் காத்தல் அறமெனக் கருதிப், போர் கொண்டெழுதற்கு முன் வெட்சிப்பூச் சூடிச் சென்று, அப்பசுக்களுக்கு ஓரிடையூறும் உண்டாகாவண்ணம் கவர்ந்து வரும் முறைகளும், பகைவர் அரணை அடைந்து உழிஞைப்பூச் சூடி, அவ்வரணிடத்து நின்று போருடற்றி, அரணைத் தம் வசப்படுத்தும் முறைகளும், மாற்றாரும் எதிர்ந்து வந்தழித், தும்பைப்பூச் சூடி அவரோடு போர்புரியும் முறைகளும், வென்றவழி வாகைப்பூச் சூடி வெற்றியைக் கொண்டாடும் முறைகளும், இவையன்றிப் பார்ப்பார், அரசர், வேளாளர், அறிவர், தாபதர், பொருநர் என்போர் சிறந்து மேம்படும் முறைகளும், நிலையா உலகத்தியல்பும், பிறர் மேம்பாட்டைப் புகழ்ந்து பாடும் முறையும் கூறுகின்றது.

காதலைத் தூயமுறையில் நுனித்தறியும் பேருணர்வுடன், உலகில் தோன்றிய பழங்கால மக்கட் கூட்டத்தினரிடையே மேம்பட்டுத் தோன்றுதற்கான குணமாய வீரவுணர்வும் வாய்ந்த தனிநாகரிகர் தமிழ்மக்கள் என்பதை யுணர்த்தும் இத் தொல் காப்பியம், தமிழரின் பழம் பண்பாட்டை யுணர்த்திய ஒரு தனிப்பெரு நூலாயது பெரிதும் உணரத்தக்கது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உ

கடவுள் துணை.

தொல்காப்பியம்

பொருளதிகாரம்

நச்சினார்க்கினியம்

முதலாவது

அகத்திணையியல்

க. கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப.

என்பது சூத்திரம்.

நிறுத்த முறையானே பொருளினது இலக்கணம் உணர்த்தினமையின் இது பொருளதிகாரமென்னும் பெயர்த்தாயிற்று. இது நாண்மீனின் பெயர் நாளிற்குப் பெயராயினாற்போல்வதோர் ஆகுபெயர். பொருளாவன :—அறம் பொருளின்பமும், அவற்றது நிலையின்மையும், அவற்றினீங்கிய வீடுபேறுமாம். பொருளெனப் பொதுப்படக் கூறவே, அவற்றின் பகுதியாகிய முதல் கரு உரியும், காட்சிப்பொருளும், கருத்துப்பொருளும், அவற்றின் பகுதியாகிய ஐம்பெரும் பூதமும், அவற்றின் பகுதியாகிய இயங்குதிணையும் நிலைத்திணையும், பிறவும் பொருளாம்.

எழுத்துஞ் சொல்லும் உணர்த்தி அச்சொற்றொடர் கருவியாக உணரும் பொருள் உணர்த்தலின், மேலதிகாரத்தோடு இயைபுடைத்தாயிற்று. அகத்திணைக்கண் இன்பமும், புறத்திணைக்கண் ஒழிந்த மூன்று பொருளும் உணர்த்துப. இது வழக்கு நூலாதலிற் பெரும்பான்மையும் நால்வகை வருணத்தார்க்கும் உரிய இல்லறம் உணர்த்திப் பின் துறவறமுஞ் சிறுபான்மை கூறுப. அப்பொருள்கள் இவ்வதிகாரத்துட் காண்க.

பிரிதனிபிரித்தங் கூறவே, இன்ப நிலையின்மையுங் கூறிக், 'காமஞ் சான்ற' என்னுங் கற்பியற் சூத்திரத்தால் துறவறமுங் கூறினர். வெட்சிமுதலா வாகையீறாக அறனும் பொருளும் பயக்கும் அர சியல் கூறி, அவற்றது நிலையின்மை காஞ்சியுட் கூறவே, அறனும் பொருளும் அவற்றது நிலையின்மையுங் கூறினர். 'அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்' *என்னுஞ் சூத்திரத்தான் இல்லற முந் துறவறமுங் கூறினர். இங்ஙிலையாமையானும் பிறவாற் றானும் வீட்டிற்குக் காரணங் கூறினர். இங்ஙனங் கூறவே, இவ்வாசிரியர் பெரிதும் பயன் றருவதோர் இலக்கணமே கூறின ராயிற்று ; இதனைச் செய்த புலனெறி வழக்கினை யுணர்ந்தோர் இமமை மறுமை வழுவாமற் செம்மை நெறியால் துறைபோவ ராதலின்.

இப்பொருளை எட்டுவகையான் ஆராய்ந்தாரென்ப ; அவை அகத்திணை புறத்திணையென இரண்டு [1]திணை வகுத்து அதன்கட் கைக்கிளை முதற் பெருந்திணை யிறுவா யேழும் வெட்சி முதற் பாடாண்டிணை யிறுவா யேழுமாகப் பதினொரு [2]பால் வகுத்து, ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலி பரிபாடல் மருட்பா வென அறு வகைச் [3]செய்யுள் வகுத்து, முல்லை குறிஞ்சி மருதம் நெய்த லென நால்வகை [4]நிலன் இயற்றிச் சிறுபொழு தாறும் பெரும் பொழு தாறுமாகப் பன்னிரண்டு [5]காலம் வகுத்து, அகத்திணை வழுவேழும் புறத்திணை வழுவேழுமெனப் பதினொரு [6]வழு வமைத்து, நாடக வழக்கும் உலகியல் வழக்குமென இருவகை [7]வழக்கு வகுத்து, வழக்கிடமுஞ் செய்யுளிடமுமென இரண்டு [8]இடத்தான் ஆராய்ந்தாராதலின். எட்டிறந்த பல்வகையான் ஆராய்ந்தாரென்பார் முதல் கரு உரியுந், திணைதொறு மீதிய பெயருந், திணைநிலைப் பெயரும், இருவகைக் கைகோளும், பன் னிருவகைக் கூற்றும், பத்துவகைக கேட்போரும், எட்டுவகை மெய்ப்பாடும், நால்வகை உவமமும், ஐவகை மரபு மென்பர்.

இனி, இவ்வோத்து அகத்திணைக்கெல்லாம் பொது இலக் கண முணர்த்துதலின் அகத்திணையிய லென்னும் பெயர்த் தாயிற்று ; என்னை ? எழுவகை யகத்திணையுள் உரிமைவகை யால் நிலம்பெறுவன இவையெனவும் அந்நிலத்திடைப் பொது வகையால் நிகழ்வன கைக்கிளை பெருந்திணை பாலை யெனவுங் கூறலானும், அவற்றுட் பாலைத்திணை சில்வகையால் நடுவண தெனப்பட்டு நால்வகை யொழுக்கம் நிகழாநின்றழி அந்நான் கனுள்ளும் பிரிதற்பொருட்டாய்த் தான் பொதுவாய் நிற்கு மெனக் கூறலானும், முதல் கரு உரிப்பொருளும் உவமங்களும்

* தொல். புறத். எதி.

மரபும் பொதுவகையாற் கூறப்படுதலானும் பிறவும் இன்னோ ரன்ன பொதுப் பொருண்மைகள் கூறலானு மென்பது. இங்ங னம் ஓதிய அகத்திணைக்குச் சிறப்பிலக்கணம் ஏனை ஒத்துக் களாற் கூறுப.

ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியுங் கூடுகின்ற காலத் துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனுக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்ப முறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார். எனவே, அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகு பெயராம்.

இதனை ஒழிந்தன, ஒத்த அன்புடையார்தாமே யன்றி எல் லார்க்குந் தெய்த்துணரப் படுதலானும், இவை இவ்வாறிருந்த தெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும், அவை புறமெனவே படும். இன்பமே யன்றித் துன்பமும் அகத்தே நிகழுமாலெனின், அதுவும் காமங் கண்ணிற்றோல் இன்பத்துள் அடங்கும். ஒழிந்த துன்பம் புறத்தார்க்குப் புலனுகாமை மறைக்கப்படாமையிற் புறத்திணைப்பாலதாம். காம நிலையின்மையான் வருந் துன்ப மூந் 'தாபதநிலை' 'தபுதாரநிலை' *யென வேறும். திணையாவது ஒழுக்கம்; இயல்: இலக்கணம்; எனவே, அகத்திணை யியலென் றது இன்பமாகிய ஒழுக்கத்தினது இலக்கணமென்றவா றாயிற்று. இவ்வோத்துக்கள் ஒன்றற்கொன்று இயைபுடைமை அவ்வவ் வோத்துகளுட் கூறுதும்.

இனி, இச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனிற் கூறக் கரு திய பொருளெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் :—கைக்கிளை முதலா-கைக்கிளை யெனப் பட்ட ஒழுக்கம் முதலாக; பெருந்திணை இறுவாய்-பெருந்திணை யென்னும ஒழுக்கத்தினை இறுதியாகவுடைய ஏழினையும்; முற் படக் கிளந்த எழுதிணை என்ப-முற்படக் கூறப்பட்ட அகத் திணை யேழென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

எனவே, பிற்படக் கூறப்பட்ட புறத்திணையும் ஏழுள வென்றவாறாயிற்று. எனவே, இப்பதினைன்கு மல்லது வேறு பொருளின்றென வரையறுத்தா ராயிற்று. அகப்புறமும் அவை தம்முட் பகுதியாயிற்று. முதலும் ஈறும் கூறித் திணை யேழெனவே 'நடுவ ணைந்திணை'† உளவாதல் பெறுதும்; அவை மேற் கூறுப.

* தொல். புறம் எகூ. † தொல். அகம். உ.

கைக்கிளை யென்பது ஒருமருங்கு பற்றிய கேண்மை. இஃது ஏழாவதன் தொகை. எனவே, ஒருதலைக் காமமாயிற்று. எல்லாவற்றினும் பெரிதாகிய திணையாதலிற் பெருந்திணையாயிற்று. என்னை? எண்வகை மணத்தினுள்ளும் கைக்கிளை முதல் ஆறு திணையும் நான்கு மணம் பெறத், தானொன்றுமே நான்கு மணம் பெற்று நடத்தலின். பெருந்திணையிறுவாய்-பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. முற்படக் கிளந்தவென எடுத்த லோசையாற் கூறவே, பிற்படக் கிளந்த ஏழுதிணை யுளவாயிற்று. அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்திணை என வரும்.

ஒழிந்தோர் பன்னிரண்டென்றாதலிற் புறத்திணையேழென்ற தென்னையெனின், அகங்கை இரண்டுடையார்க்குப் புறங்கை நான்காகாது இரண்டாயவாறுபோல, அகத்திணையேழற்குப் புறத்திணை யேழென்றலே பொருத்தமுடைத்தாயிற்று. எனவே, அகதிணைக்குப் புறத்திணை அவ்வந் நிலத்து மக்கள்வகையாற் பிறந்த செய்கை வேற்றுமையாதலின் ஒன்றொன்றற்கு இன்றியமையாதவாறுயிற்று. கரந்தை அவ்வேழற்கும் பொதுவாகிய வழூவாதலின், வேறு திணையாகாது. எண்வகை மணனும் எதிர்சென்று கூறுவதாகலானுங், காமஞ் சாலா விளமைப்பருவம் அதன்கண்ணதாகலானுங் கைக்கிளையை முற்கூறினார். என்ப வென்றது அகத்தியனாரை. இக் குறியீடுகளும் அகத்தியனாரிட்ட வென்றுணர்க. (க)

உ. அவற்றுள்,
நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே.

இது முற்கூறிய ஏழனுள் தமக்கென நிலம் பெறுவனவும் நிலம் பெறுதனவுங் கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் - முற்கூறிய ஏழு திணையுள்; நடுவண் ஐந்திணை - கைக்கிளை பெருந்திணைக்கு நடுவுநின்ற ஐந்தொழுக்கத்திணை; படு திரை வையம் பாத்திய பண்பே - ஒலிக்குந் திரைசூழ்ந்த உலகிற்கு ஆசிரியன் பகுத்துக் கொடுத்த இலக்கணத்தை; நடுவணது ஒழிய - நடுவணதாகிய பாலையை அவ்வுலகம் பெறுதே நிற்கும்படியாகச் செய்தார் எ - று.

எனவே, யானும் அவ்வாறே நூல் செய்வ லென்றார்.

உலகத்தைப் படைக்கின்ற காலத்துக் காடும் மலையும் நாடுங் கடற்கரையுமாகப் படைத்து, இந்நால்வகை நிலத்திற்கு

ஆசிரியன் தான் படைத்த ஐவகை ஒழுக்கத்திற் பாலை யொழிந் தனவற்றைப் பகுத்துக் கொடுத்தான். அப் பாலை ஏனையபோல ஒருபாற் படாது நால்வகை நிலத்திற்கும் உரியவாகப் புலனெறி வழக்கஞ்செய்து வருதல்பற்றிப் பாலைக்கு நடுவணதென்னும் பெயர் ஆட்சியுங் குணனுங் காரணமாகப் பெற்ற பெயர். 'நடுவு நிலைத்திணையே நண்பகல் வேனில்'* என ஆள்ப. புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பவற்றிற்கு இடையே பிரிவு நிகழ்தலானும், நால்வகை யுலகத்திற்கிடையிடையே,

> "மூல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
> நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்
> பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்."
>
> (சிலப். காடு. சுஉ-சுசு)

என, முதற்பொருள் பற்றிப் பாலை நிகழ்தலானும், நடுவண தாகிய நண்பகற்காலந் தனக்குக் காலமாகலானும், புணர்தற்கும் இருத்தற்கும் இடையே பிரிவு வைத்தலானும், உலகியற் பொரு ளான அறம்பொரு ளின்பங்களுள் நடுவணதாய பொருட்குத் தான் காரணமாகலானும், நடுவணதெனக் குணங் காரணமா யிற்று.

பாயிரத்துள் எல்லை கூறியதன்றி ஈண்டும் எல்லை கூறினர், புறநாட்டிருந்து தமிழ்ச்செய்யுள் செய்வார்க்கும் இதுவே இலக் கணமாமென்றற்கு.

இவ்விலக்கணம் மக்கள் முதலிய அகனைந்திணைக்கே யாத லின் இன்பமே நிகழுந் தேவர்க்காகா.

'காமப் பகுதி கடவுளும் வரையார்.' (தொல் - பொருள். அஉ)

நடுவணைந்திணை யென்னுது ஐந்திணை யென்றார், பாலையும் அவற்றோ டொப்பச் சேறற்கு. இத்திணையை மூன்றாக மேற் பகுப்பர். (உ)

கூ. முதல்கரு வுரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை

இது நடுவணைந் திணையைப் பகுக்கின்றது.

(இ - ள்.) பாடலுள் பயின்றவை நாடும் காலை—புலனெறி வழக்கிடைப் பயின்ற பொருட்களை ஆராயுங் காலத்து; முதல்

* தொல். அகத். கூ.

கரு உரிப்பொருள் என்ற மூன்றே—முதலுங் கருவும் உரிப் பொருளும் என்ற மூன்றேயாம்; இவலுங் காலே முறை சிறந் தனவே—அவைதாம் செய்யுள் செய்யுங்கால் ஒன்று ஒன்றனிற் சிறந்து வருதலுடைய என்றவாறு.

இங்ஙனம் பாடலுட் பயின்ற பொருண்முறை மூன் றெனவே, இம் மூன்றும் புறத்திணைக்கும் உரியவென்பது பெறுதும். அது புறத்திணைச் சூத்திரங்களுள், 'வெட்சி தானே குறிஞ்சியது புறனே' (தொ) என்பன முதலியவற்றுற் கூறுப.

முதலிற் கருவும், கருவில் உரிப்பொருளுஞ் சிறந்துவரும். இம்மூன்றும் பாடலுட் பயின்று வருமெனவே வழக்கினுள் வேறு வேறு வருவதன்றி ஒருங்கு நிகழாவென்பதூஉம், நாடுங் காலே யெனவே புலனெறிவழக்கிற் பயின்றவாற்றுன் இம்மூன் றனையும் வரையறுத்துக் கூறுவதன்றி வழக்குநோக்கி இலக் கணங் கூறப்படாதென்பதூஉம் பெறுதும்; 'நல்லுலகத்து, வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்' (தொல். பாயிரம்) என்று புகுந்தமையிற் பொருளும் அவ்விரண்டினுளும் ஆராய்தல் வேண்டுதலின்.

இஃது இல்லதெனப்படாது, உலகியலேயாம். உலகியலின் றேல், ஆகாயப்பூ நாறிற்றென்றுழி அது சூடக் கருதுவாரு மின்றி மயங்கக் கூறினனென்று உலகம் இழித்திடப்படுதலின் இதுவும் இழித்திடப்படும். இச் செய்யுள்வழக்கினை நாடக வழக்கென மேற்கூறினர், எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல் போலாது, உள்ளோன் தலைவனுக இல்லது புணர்த்தன் முதலாகப் புனைந்துரைவகையாற் கூறும் நாடக இலக்கணம்போல யாதானுமொரோவழி ஒரு சாராரார்மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமுங் காலமும் நியமித்துச் செய்யுட்செய்த ஒப்புமை நோக்கி. மற்று இல்லோன் தலைவனுக இல்லது புணர்க்கும் நாடக வழக்குப்போல் ஈண்டுக் கொள்ளாமை, 'நாடக வழக்கு' என்னுஞ் சூத்திரத்துட் (குறூ) கூறுதும்.

> "கணங்கொளருவிக் கான்கெழு நாடன்
> குறும்பொறை நாட னல்வய னூரன்
> தண்கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற்
> கடும்பகல் வருதி கையறு மாலை
> கொடுங்கழி நெய்தலுங் கூம்புங்
> காலை வரினுங் களைஞரோ விலரே." (ஐங்குறுநூறு-கஅக)

என இவ் ஐங்குறுநூற்றுள் இடம் நியமித்துக் கூறியது செய்யுள் வழக்கு.

இனி, அவை முறையே சிறந்து வருமாறு :—

"முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ
இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பிற்
பரலவ லடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புறக் கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானங்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தட்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே." (அகம்-சு)

இது குறித்த காலம் வந்தது, அவரும் வந்தாரென ஆற்று வித்தது. இக்ஙனிற்றியானைநிரையுண், முல்லைக்கு முதலுங் கருவும் வந்து உரிப்பொருளாற் சிறப்பெய்தி முடிந்தது.

"இலைபா ராட்டுங் கடுநடை வயக்களிறு
முளைதரு பூட்டி வேண்டுகுள கருத்த
வாணிற வுருவின் ஒளிறுபு மின்னிப்
பருவுவறைப் பஃறுளி சிதறிவான் நவின்று
பெருவரை நளிர்சிமை அதிர வட்டித்துப்
புயலே றுரைஇய வியலிருள் நடுநாள்
விறலிழைப் பொலிந்த காண்பின் சாயற்
றடைஇத் திரண்டநின் றேள்சேர் பல்லதைப்
படாஅ வாகுமெங் கண்ணென நீயும்
இருண்மயங் கியாமத் தியவுக்கெட விலங்கி
வரிவயங் கிரும்புலி வழங்குநர்ப் பார்க்கும்
பெருமலை விடரகம் வரவரி தென்னாய்
வரவெளி தாக வெண்ணுதி யதனால்
நுண்ணிதிற் கூட்டிய பன்மா ணூரந்
தண்ணிது கமழு நின்மார் பொருநாள்
அடைய முயங்கே மாயின் யாமும்
விறலிழை நெகிழச் சாஅய்தும் அதுவே
அன்னை யறியினு மறிக அலர்வாய்
அம்பன் மூதூர் கேட்பினுங் கேட்க
வண்டிறை கொண்ட வெரிமருள் தோன்றியொடு
ஒண்பூ வேங்கை கமழுந்
தண்பெருஞ் சாரற் பகல்வந் தீமே." (அகம்-உகஅ)

இஃது இடத்துய்த்துப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டான் வரைவுகடாயது. இம் மணிமிடைபவளத்துட், குறிஞ்சிக்கு முதலுங் கருவும் வந்து உரிப்பொருளாற் சிறப்பெய்தி முடிந்தது.

"வண்டுபடத் ததைந்த கண்ணி ஒண்கழல்
உருவக் குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவே ளாவி
அறுகோட் டியானைப் பொதினி* யாங்கண்
சிறுகா ரோடன் பயிலெழு சேர்த்திய
கற்போற் பிரியலம் என்ற சொற்றும்
மறந்தனர் கொல்லோ தோழி சிறந்த
வேய்மருள் பணைத்தோள் நெகிழச் சேய்நாட்டுப்
பொலங்கல வெறுக்கை தருமார் நிலம்பக
அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின்
நிழல்தேய்ந் தலறிய மரத்த அறைகாய்
பறுநீர்ப் பைஞ்சுனை ஆமறப் புலர்தலின்
உகுநெற் பொரியும் வெம்மைய யாவரும்
வழங்குநர் இன்மையின் வெளவுநர் மடியச்
சுரம்புல் லென்ற ஆற்ற அலங்குசினை
நாரின் மூருங்கை நவிரல் வான்பூச்
சூரலங் கடவளி எடுப்ப ஆரற
றுடைதிரைப் பிதிர்விற் பொங்கிமுன்
கடல்போல் தோன்றல காடிறந் தோரே."
(அகம்-க)

இது பிரிவிடையாற்றாது தோழிக்குக் கூறியது. இக் களிற்றியானை நிரையுட், பாலைக்கு முதலுங் கருவும்வந்து உரிப் பொருளாற் சிறப்பெய்தி முடிந்தது.

"சேற்றுநிலை முனைஇய† செங்கட் காரான்
ஊர்மடி கங்குலின் நோன்தளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய
அந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டோ டு பணிமலர் ஆரு மூர
யாரை யோநிற் புலக்கேம் வாருற்று
உறையிறந் தொளிருந் தாழிருங் கூந்தல்
பிறரும் ஒருத்தியை நம்மனோ தந்து
வதுவை அயர்ந்தனை யென்ப அஃதியாங்
கூறேம் வாழியர் எந்தை செறுநர்
களிறுடை அருஞ்சமந் ததைய நூறும்
ஒளிறுவாள் தானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லி னன்னூ ரன்னஎம்
ஒண்டொடி நெகிழினும் நெகிழ்க
சென்றீ பெருமநின் தகைக்குநர் யாரோ."
(அகம்·சசு)

---

* 'பொதினி' என்பது ஒரு மலை.
(பாடம்) † 'முனைஇய.'

இது வாயின் மறுத்தது. இக் களிற்றியானைநிரையுள், மருதத்திற்கு முதலுங் கருவும் வந்து உரிப்பொருளாற் சிறப் பெய்தி முடிந்தது. 'வண்டோது பனிமல' ரெனவே வைகறையும் வந்தது.

"கானல் மாலைக் கழிப்பூக் கூம்ப
நீனிறப் பெருங்கடல் பாடெழுந் தொலிப்ப
மீனூர் குருகின் மென்பறைத் தொழுதி
குவையிரும் புன்னைக் குடம்பை சேர
அசைவண் டார்க்கும் அல்குறு காலைத்
தாழை தளரத் தூங்கி மாலை
அழிதக வந்த கொண்டலொடு கழிபடர்க்
காமர் நெஞ்சங் கையறு பினையத்
துயரஞ் செய்துநம் அருளா ராயினும்
அரு அ லியரோ அவருடைக் கேண்மை
அளியின் மையின் அவணுறைவு முனை
வாரற்க தில்ல தோழி கழனி
வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்புந்
தண்ணுமை வெரீஇய தடந்தாள் நாரை
செறிமடை வயிரிற் பிளிற்றிப் பெண்ணை
அகமடற் சேக்குந் துறைவன்
இன்றுயின் மார்பிற் சென்றஎன் நெஞ்சே." (அகம்-சo)

இது பொருட் பிரிவிடைத் தோழிக்கு உரைத்தது. இக் களிற்றியானை நிரையுள், நெய்தற்கு முதலுங் கருவும் வந்து உரிப் பொருளாற் சிறப்பெய்தி முடிந்தது. இச்சிறப்பானே முத லின்றிக் கருவும் உரிப்பொருளும் பெறுவனவும், முதலுங் கருவு மின்றி உரிப்பொருளே பெறுவனவுங் கொள்க.

"திருநகர் விளங்கு மாலில் கற்பி
னரிமதர் மழைக்கண் மாஅ யோளொடு
நின்னுடைக் கேண்மை யெவனே முல்லை
யிரும்பல் கூந்த லுற்றமு
முருந்தேர் வெண்ப லொளியுநீ பெறவே."

இது பொருள்வயிற் பிரிந்தோன் சுரத்து நினைந்து உரைத் தது. இது முதற்பொருளின்றி வந்த முல்லை.

"கரந்தை விரைஇய தண்ணறுங் கண்ணி
யினைய ரேவ வியங்குபரி கடைஇப்
பகைமுனை வலிக்குந் தேரொடு
வினைமுடித் தனர்நங் காத லோரே."

இது வந்தாரென் றுற்றுவித்தது. இது முதலுங் கருவு மின்றி வந்த முல்லை.

"கறைபரந்த சாந்த மறவெறிந்து காளா
லுறையெதிர்ந்து வித்தியவூ ழேனற்-பிறையெதிர்ந்த

தாமரை போன்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
வேமரை போந்தன வீண்டு." (திணைமாலை நூற். க)

இது மதியுடம்படுத்தது. இது முதற்பொருளின்றி வந்த குறிஞ்சி.

"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய ளெனுள்வேற் கண்ணி
மூலையும் வாரா முதுக்குறைந் தனளே."

இஃது இளையள் விளைவிலளென்றது. முதலுங் கருவு மின்றிவந்த குறிஞ்சி. இது நாணநாட்டம்.

"நாளு நாளு மாள்வினை யழுங்க
வில்லிருந்து மகிழ்வோர்க் கில்லையாற் புகழென
வொண்பொருட் கல்வர்நங் காதலர்
கண்பனி துடையினித் தோழி நீயே." (சிற்றெட்டகம்)

இது வற்புறுத்தாற்றியது, இஃது உரிப்பொருளொன் றுமே வந்த பாலை.

"பூங்கொடி மருங்கி னெங்கை கேண்மை
முன்னும் பின்னு மாகி
யின்னும் பாண னெம்வயி னனே."

இது வாயின் மறுத்தது. இஃது உரிப்பொருளொன்றுமே வந்த மருதம்.

"அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
யேதின் மாக்களு நோவர் தோழி
யொன்று நோவா ரில்லைத்
தெண்கடற் சேர்ப்ப னுண்டவென் னலக்கே."

இது கழிபடர். இது பேராணும் உரிப்பொருளாணும் நெய்தலாயிற்று.

இங்ஙனங் கூறவே உரிப்பொருளின்றேற் பொருட் பய னின் றென்பது பெற்றும். இதனானே முதல் கரு வுரிப்பொருள் கொண்டே வருவது திணையாயிற்று. இவை பாடலுட் பயின்ற வழக்கே இலக்கணமாதலின் இயற்கையாம். அல்லாத சிறு பான்மை வழக்கினைச் செயற்கையென மேற்பகுப்பர். (கூ)

சு. முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே.

இது நிறுத்தமுறையானே முதல் உணர்த்துவான் அதன் பகுதியும் அவற்றுட் சிறப்புடையனவும் இல்லனவுங் கூறு கின்றது.

(இ - ள்.) முதல் எனப்படுவது—முதலெனச் சிறப்பித்துக் கூறப்படுவது; நிலம் பொழுது இரண்டின் இயல்பு என மொழிப—நிலனும் பொழுதும் என்னும் இரண்டினது இயற்கை நிலனும் இயற்கைப் பொழுது மென்று கூறுப; இயல்பு உணர்ந்தோரே—இடமுங் காலமும் இயல்பாக உணர்ந்த ஆசிரியர் என்றவாறு.

இயற்கையெனவே செயற்கை நிலனுஞ் செயற்கைப் பொழுதும் உளவாயிற்று. மேற் 'பாத்திய' (உ) நான்கு நிலனும் இயற்கை நிலனும்.

ஐந்திணைக்கு வகுத்த பொழுதெல்லாம் இயற்கையாம்; செயற்கை நிலனும் பொழுதும் முன்னர் அறியப்படும்.

முதல் இயற்கைய வென்றதனாற் கருப்பொருளும் உரிப்பொருளும் இயற்கையுஞ் செயற்கையுமாகிய சிறப்புஞ் சிறப்பின்மையும் உடையவாய்ச் சிறுவரவினவென மயக்கவகையாற் கூறுமாறு மேலே கொள்க. இனி நிலத்தொடு காலத்தினையும் முதலென்றலிற் காலம்பெற்று நிலம்பெறாத பாலைக்கும் அக்காலமே முதலாக அக்காலத்து நிகழுங் கருப்பொருளுங்கொள்க. அது முன்னர்க் காட்டிய உதாரணத்துட் காண்க. (ச)

நி. மாயோன் மேய காடுறை உலகமுஞ்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

இது 'நடுவணது' (உ) ஒழிந்த நான்காணும் அவ் 'வைய'த்தைப் பகுக்கின்றது.

(இ - ள்.) மாயோன் மேய காடு உறை உலகமும், சேயோன் மேய மை வரை உலகமும், வேந்தன் மேய தீம் புனல் உலகமும், வருணன் மேய பெரு மணல் உலகமும்—கடல்வண்ணன் காதலித்த காடுறையுலகமுஞ், செங்கேழ் முருகன் காதலித்த வான் தங்கிய வரைசூழலகமும், இந்திரன் காதலித்த தண்புன லூடுங், கருங்கடற் கடவுள் காதலித்த நெடுங்கோட்டெக்கர் நிலனும், முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என சொல்லிய முறையால் சொல்லவும் படுமே—முல்லை குறிஞ்சி மருதம்

நெய்தலென ஒழுக்கங் கூறிய முறையானே சொல்லவும் படும் என்றவாறு.

இந்நான்கு பெயரும் எண்ணும்மையோடு நின்று எழுவாயாகிச் சொல்லவும்படும் என்னுந் தொழிற்பயனிலை கொண்டன. என்றது இவ்வொழுக்கம் நான்காயினும் அந்நான்கு நிலத்தையும் கிரனிறை வகையாற் பெயர் கூறப்படுமென்றவாறு. எனவே, ஒழுக்கம் நிகழ்தற்கு நிலம் இடமாயிற்று.

உம்மை எதிர்மறையாகலின், இம்முறையன்றிச் சொல்லவும் படுமென்பது பொருளாயிற்று. அது தொகைகளினுங் கீழ்க்கணக்குகளினும் இம்முறை மயங்கிவரக் கோத்தவாறு காண்க.

முல்லைநிலத்துக் கோவலர், பல்லா பயன் தருதற்கு மாயோன் ஆகுதி பயக்கும் ஆபல காக்கவெனக் குரவை தழீஇ மடைபல கொடுத்தலின், ஆண்டு அவன் வெளிப்படுமென்றார்.

உதாரணம் :—"அரைசுபடக் கடந்தட்டு" என்னு முல்லைக் கலியுட்,

> "பாடிமிழ் பரப்பகத் தரவஞ் ணை யசைஇய
> வாடுகொ ணேமியாற் பரவுதும்." (கலி-கo஫)

எனவரும்,

> "படையியிவான் மற்கண்டீர் காமன் மடையடும்
> பாலொடு கோட்டம் புகின்." (கலி-கo஬)

என அவன் மகனாகிய காமனும் அந்நிலத்திற்குத் தெய்வமாதல் 'அவ்வகை பிறவுங் கருவென மொழிப,' (கஅ) என்புழி வகையென்றதனாற் கொள்க.

இனிக் குறிஞ்சி நிலத்திற்குக் குறவர் முதலியோர் குழீஇ வெறியயர்தற்கு வேண்டும் பொருள்கொண்டு வெறியயர்பவாகலின், ஆண்டு முருகன் வெளிப்படுமென்றார்.

அஃது, "அணங்குடை நெடுவரை" என்னும் அகப்பாட்டினுட்,

> "படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
> நெடுவேட் பேணத் தணிகுவ ளிவள்." (அகம்-உஉ)

எனவரும். "சூரர மகளிரொ டேற்ற சூளே"* என்புழிச் சூரர மகளிர் அதன் வகை.

---

* குறுந்தொகை-நிக.

இனி ஊடலுங் கூடலுமாகிய காமச்சிறப்பு நிகழ்தற்கு மருதநிலத்திற்குத் தெய்வமாக "ஊடலும் பாடலு மூடலு முணர்தலும்" உள்ளிட்ட இன்பவிளையாட்டு இனிதினுகரும் இமையோர்க்கும் இன்குரலெழிலிக்கும் இறைவனுகிய இந்திரனை ஆண்டையோர் விழவுசெய்து அழைத்தலின், அவன் வெளிப்படு மென்றார்.

அது,

"வையைப் புதுப்புன லாடத் தவிர்ந்தமை
தெய்வத்திற் றேற்றித் தெளிக்கு." (கலி-கூஅ)

என, இந்திரனைத் தெய்வமென்றதனாலும், இந்திர விழவு நெடுத்த காதையானும் உணர்க.

இனி நெய்தனிலத்தில் தலையர்க்கு வலைவளந் தப்பின் அம்மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக் கோடு நட்டுப் பரவுக் கடன் கொடுத்தலின், ஆண்டு வருணன் வெளிப்படுமென்றார். அவை,

"சினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினுன்." (பத்து-பட்டினஅசு-எ)

எனவும்,

"கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வ நோக்கி." (அகம்-ககo)

எனவும்,

"அணங்குடைப் பனித்துறை கைதொழு தேத்தி
யாயு மாயமொ டயரும்" (அகம்-உசo)

எனவும் வரும்.

இனிப் பாலைக்குச்,

"சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ." (கலி-கசு)

எனவும்,

"வளிதரு செல்வனே வாழ்த்தவு மியைவதோ." (கலி-கசு)

எனவும் ஞாயிற்றைத் தெய்வமாக்கி அவனிற் றோன்றிய மழையினையுங் காற்றினையும் அத்தெய்வப் பகுதியாக்கிக் கூறுப வாலெனின், எல்லாத் தெய்வத்திற்கும் அந்தணர் அவி கொடுக்குங்கால் அங்கி ஆதித்தன்கட் கொடுக்குமென்பது வேதமுடிபாகலின், ஆதித்தன் எல்லா நிலத்திற்கும் பொது வென மறுக்க. இவ்வாசிரியர் கருப்பொருளாகிய தெய்வத்

திணை முதற் பொருளோடு கூட்டிக் கூறியது தெய்வவழிபாட்டு மரபிதுவே, ஒழிந்தது மரபன்றென்றற்கு. எனவே அவ்வந் நிலத்தின் தெய்வங்களே பாலைக்குந் தெய்வமாயிற்று.

உறையுளகென்றூர், ஆவும் எருமையும் ஆடும் இன்புறு மாற்றால் நிலைபெறும் அக்காட்டின் கடவுளென்றற்கு. மைவரை எனவே மழைவளந் தருவிக்கும் முருகவேளென்றூர். இந்திரன் யாற்றுவளனும் மழைவளனுந் தருமென்றற்குத் தீம்புனலென்றூர். திரைபொருது கரை கரையாமல் எக்கர் செய்தல் கடவுட்கருத்தென்றற்குப் பெருமணலென்றூர்.

இனி, முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்ற முறை யென்னே? யெனின், இவ்வொழுக்கமெல்லாம் இல்லறம் பற்றிய ஒழுக்கமாதலின், கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழை யாது இல்லிருந்து நல்லறஞ்செய்தல் மகளிரது இயற்கை முல்லையாதலின் அது முற்கூறப்பட்டது. எனவே, முல்லை யென்ற சொற்குப் பொருள் இருத்தலாயிற்று. "முல்லை சான்ற முல்லையம் புறவின்"* என்பவாகலின், புணர்தலின்றி இல்லறம் நிகழாமையிற் புணர்தற் பொருட்டாகிய குறிஞ்சியை அதன் பின் வைத்தார். இதற்குதாரணம் இறந்தது. "கருங்காற் குறிஞ்சி சான்றவெற் பணிந்து"† என்பது கரு. புணர்ச்சிப் பின் ஊடல் நிகழ்தலின் அதன்பின் மருதத்தை வைத்தார். 'மருதஞ் சான்ற மருதத் தண்பணை"‡ என்புழி மருதமென்றது ஊடியுங் கூடியும் போகம் நுகர்தலை பரத்தையிற் பிரிவுபோலப் பிரிவொப்புமை நோக்கி நெய்தலை ஈற்றின்கண் வைத்தார், நெற்றற் பறையாவது இரங்கற் பறையாதலின், நெய்தல் இரக்கமாம்.

"ஐதக லல்குன் மகளிர்
நெய்தல் கேளன்மார் நெடுங்கடை யானே." (புறம்-கூஅக)

என வரும்.

இனி, இவ்வாறன்றி முல்லை முதலிய பூவாற் பெயர்பெற்றன இவ்வொழுக்கங்களெனின், அவ்வந்நிலங்கட்கு ஏனைப்பூக்களும் உரியவாகலின் அவற்றாற் பெயர்கூறலும் உரியவெனக் கடாயி னார்க்கு விடையின்மை உணர்க.

இதனானே நடுவுநிலைத்திணையொழிந்த நான்கற்கும் பெய ரும் முறையுங் கூறினன். இந்நான்கும் உரிப்பொருளாதல் 'புணர்தல் பிரிதல்'§ என்புழிக் கூறுதும். கருப்பொருளாகிய

* பத்து - சிறுபாண்-கசுக. † பத்து - மதுரை - கூ00.
‡ பத்து - சிறுபாண்-கஅசு. § தொல்-பொருள்-கச.

தெய்வத்தை முதற்பொருளோடு கூறியது, அவை 'வந்த நிலத்தின் பயத்த'* மயங்குமாறுபோல மயங்காது இது வென்றற்குங் கருப்பொருளுடைத் தெனப்பட்ட பாலைக்குத் தெய்வத்தை விலக்குதற்குமென் றுணர்க.

உதாரணம் :—

"வன்புலக் காட்டுநாட் டதுவே." (நற்றிணை-நிகூ)

எனவும்,

"இறும்புபட் டிருளிய விட்டருஞ் சிலம்பிற்
கன்யிசைச் சிறுநெறி." (அகம்-கஉஅ)

எனவும்,

"அவ்வய னண்ணிய வளங்கே ழூரன்." (அகம்-உசு)

எனவும்,

"கானலுங் கழறுது * * * மொழியாது." (அகம்-கஎ0)

எனவும் நால்வகை யொழுக்கத்திற்கு நால்வகை நிலனும் உரியவாயின வாறு காண்க. (நி)

சூ. காரும் மாலையும் முல்லை குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்.

இது முதலிரண்டனுள் நிலங்கூறிக் காலங்கூறுவான் முல்லைக்குங் குறிஞ்சிக்கும் பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுங் கூறுதனுதலிற்று.

(இ - ள்.) காரும் மாலையும முல்லை—பெரும்பொழுதினுட் கார்காலமுஞ் சிறுபொழுதினுள் அக்காலத்து மாலையும் முல்லை யெனப்படும்; குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்—பெரும்பொழுதினுட் கூதிர்க்காலமுஞ் சிறுபொழுதினுள் அதனிடை யாமமுங் குறிஞ்சி யெனப்படும் என்றவாறு.

முதல் கரு உரிப்பொருளென்னும் மூன்றுபாலுங்கொண்டு ஓர் திணையாமென்று கூறினுரேனும் ஒரு பாலினையுந் திணை யென்று அப்பெயராலே கூறினர்; வந்தான் என்பது உயர்திணை என்றாற்போல. இது மேலனவற்றிற்கும் ஒக்கும். இக்காலங்கட்கு விதந்து ஓர் பெயர் கூறுது வாளா கூறினர், அப்பெயர் உலகவழக்கமாய் அப்பொருள் உணரநிற்றலின். காலவரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்கவோரை முதலாகத்

* தொல்-பொருள். கக.

தண்மதிக்கு உரிய கற்கடகவோரை யீறுக வந்து முடியுந்துணை ஓர் யாண்டாமாதலின், அதனை இம்முறையானே அறுவகைப் படுத்து இரண்டு திங்கள் ஒரு கால மாக்கினர். இனி ஒரு காளிணைப் படுசுடரமையந் தொடங்கி மாலையெனவும், அதன்பின் இடையாம மெனவும், அதன்பின் விடிய லெனவும், அதன்பின் காலை யெனவும், அதன்பின் நண்பக லெனவும், அதன்பின் எற் பாடெனவும் ஆறுகப் பகுத்தார். அவை ஒரோவொன்று பத்து நாழிகையாக. இம்முறையே சூத்திரங்களுட் சிறுபொழுது வைப் பர். பின்பனியும் நண்பகலும் பிற்கூறிய காரணம் அச்சூத்திரத் துக் கூறுதும்.

முல்லைக்குக் காரும் மாலையும் உரியவாதற்குக் காரண மென்னை? யெனின், பிரிந்து மீளுந் தலைவன்றிறமெல்லாம் பிரிந் திருந்த கிழத்தி கூறுதலே முல்லைப் பொருளாயும், பிரிந்து போகின்றான்திறங்கூறுவனவெல்லாம் பாலையாகவும் வருதலின், அம்முல்லைப் பொருளாகிய மீட்சிக்குந் தலைவி இருத்தற்கும் உபகாரப்படுவது கார்காலமாம்; என்னை? விண்ணவயிற் பிரிந்து மீள்வோன், விரைபரித் தேரூர்ந்து பாசறையினின்று மாலைக் காலத்து ஊர்வயின் வருஉங் காலம் ஆவணியும் புரட்டாதியும் ஆதலின், அவை வெப்பமுந் தட்பமும் மிகாது இடை நிகர்த்த வாகி ஏவல் செய்தவரும் இளையோர்க்கு நீரும் நிழலும் பயத்த லானும், ஆர்பதம் மிக்கு நீரும் நிழலும் பெறுதலிற் களிசிறந்து மாவும் புளளுந் துணையோ டின்புற்று விளையாடுவனகண்டு தலைவற்குந் தலைவிக்குங் காமக்குறிப்பு மிகுதலானுமென்பது. புல்லை மேய்ந்து கொல்லேற்றோடே புனிற்றுக் கன்றை நினைந்து மன்றிற் புகுதரவுந் தீங்குழ லிசைப்பவும் பந்தர்முல்லை வந்து மணங் களுற்றவும் வருகின்ற தலைவற்கும் இருந்த தலைவிக்குங் காமக்குறிப்புச் சிறத்தலின், அக்காலத்து மாலைப்பொழுதும் உரித்தாயிற்று.

இனிக் குறிஞ்சியாவது புணரற்பொருட்டு. அஃது இயற் கைப் புணர்ச்சி முதலியனவாம். இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த பின் களவு நீட்டிப்பக் கருதுந் தலைவற்குக் களவினைச் சிறப்பிக் குங்கால், தலைவி அரியளாகவேண்டுமாகவே அவ்வருமையை ஆக்குவது ஐப்பசியுங் கார்த்திகையுமாகிய கூதிரும் அதன் இடையாமமுமென்பது. என்னை? இருள் தூங்கித் துளி மிகு தலிற் சேறல் அரிதாதலானும், பாணுட் கங்குலிற் பரந்துடன் வழங்காது மாவும் புள்ளுந் துணையுடன் இன்புற்று வதிதலிற் காமக்குறிப்புக் கழியவே பெருகுதலானுங், காவன்மிகுதி நோக்காது வருந்தலைவனைக் குறிக்கண்ணெதிர்ப்பட்டுப் புணருங் கால் இன்பம் பெருகுதலின், இந்நிலத்திற்குக் கூதிர்க்காலஞ் சிறந்ததெனப்படும்.

உதாரணம் :—

"விருந்தின் மன்ன ரருங்கலந் தெறுப்ப
வேந்தனும் வெம்பகை தணிந்தனன் றீம்பெயற்
காரு மார்கலி தலையின்று தேரும்
ஓவத் தன்ன கோபச் செந்நிலம்
வள்வாய் ஆழி உள்ளுறு புருளக்
கடவிக் காண்குவம் பாக மதவுநடைத்
தாம்பசை குழவி வீங்குசுரை மடியக்
கனையலங் குரல காற்பரி பயிற்றிப்
படுமணி மிடற்ற பயிறை யாயங்
கொடுமடி யுடையர் கோற்கைக் கோவலர்
கொன்றையங் குழலா பின்றைத் தூங்க
மனைமனைப் படரு நனைநகு மாலைத்
*தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையிற் றீவிய மிழற்றி
மூஇழ்நிலாத் திகழ்தரு மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி
வருகுவை யாயின் தருகுவென் பாலென
விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றித்
திதலை யல்குலெங் காதலி
புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே." (அகம்-டுச)

இது பாகற்குரைத்தது. இது முல்லைக்கட் காரும் மாலையும் வந்தது. அகம்,

"மன்றுபா டவிந்து மனைமடிந் தன்றே
கொன்றே ரன்ன கொடுமையோ டின்றே
யாமங் கொளவரிற் கனைஇக் காமங்
கடலினு மூரைஇக் கரைபொழி யும்மே
யெவன்கொல் வாழி தோழி மயங்கி
இன்ன மாகவும் நன்னர் நெஞ்சம்
என்னெஞ் நின்னெடுஞ் சூழாது கைம்மிக்
கிறும்புபட் டிருளிய இட்டருஞ் சிலம்பிற்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கானக நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப்புறத் தன்ன கன்மிசைச் சிறுநெறி
மாரி வானந் தலைஇ நீர்வார்பு
இட்டருங் கண்ண படுகுழி யியவின
இருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற நின்றே." (அகம்-கூஅ)

---

* இவ்வடியே மணிமேகலை நி-ஆவது காதையில் எடு-ஆவது அடியாக அமைந்துள்ளது.

இரவுக்குறிக்கட் சிறைப்புறமாகத் தோழிக்கு உரைப்பாளாக உரைத்தது. இது குறிஞ்சிக்குக் கூதிரும் யாமமும் வந்தது

நிலனும் பொழுதும் முதலென்றமையிற் கார் முதலாதல் வேண்டும்; வேண்டவே, அதற்கிடையின்றிக் கூறிய மாலையும் அதன் சினையாமாதலிற், கார்காலத்து மாலையென்பது பெற்றும். இது கூதிர்யாமம் என்பதற்கும் ஒக்கும். (கூ)

எ. பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி; முற்கூறிய குறிஞ்சிக்கு முன்பனியும் உரித்தென்றலின்.

(இ - ள்.) பனி எதிர் பருவமும் உரித்து என மொழிப— பனி முற்பட்ட பருவமுங் குறிஞ்சி யொன்றற்கு உரித்தென்று கூறுவார் ஆசிரியர் என்றவாறு.

எதிர்தலென்பது முன்னுதல்; எனவே, முன்பனியாயிற்று; அது ஞாயிறுபட்ட அந்திக்கண் வருதலின். உரித்தென்றதனாற் கூதிர்பெற்ற யாமமும் முன்பனி பெற்று வரும் எனக்கொள்க.

உதாரணம் :—

"* * * *
பனியடூ கின்ற பாஅட் கங்குல்
தமியோர் மதுகை தாக்காய் தண்ணென
முனிய அலைத்தி முரணில் காலை
* * * *
(அகம்-கஉஇ)

என முன்பனியாமங் குறிஞ்சிக் கண் வந்தது. (எ)

அ. வைகுறு விடியன் மருதம் எற்பாடு
நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்.

இனிச் சிறுபொழுதே பெறுவன கூறுகின்றது.

(இ - ள்.) வைகுறு விடியல் மருதம்—வைகறையும் விடியற்காலமும் மருதமாதலும்; எற்பாடு நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்—எற்படுகாலம் நெய்தலாதலும் பொருள்பெறத் தோன்றும் என்றவாறு.

வைகுறுதலும் விடியலும் என்னும் உம்மை தொக்கு நின்றது. செவியறிவுறுத்தலைச் செவியறிவுறூஉ என்றாற்போல வைகுறுதலை வைகுறு என்றார். அது மாலையாமமும் இடையாமமுங் கழியுந்துணை அக்கங்குல் வைகுறுதல்; அது கங்குல்

வைகிய அறுதியாதலேக்கி வைகறை யெனவுங் கூறுப. அது வும் பாடம். நாள் வெயிற் காலையை விடியலென்றார். "விடியல் வெங் கதிர்காயும் வேயம லகலறை"* என்ப. "விடியல் வைகறை யிடூஉ மூரன்"† என்றது, விடியற்கு முன்னர்த்தாகிய வைகறை யென உருபுதொக்கு முன்மொழி நிலையலாயிற்று. பரத்தையிற் பிரிந்த தலைவன் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டும் பொழுது கழிப்பிப் பிறர்க்குப் புலனுகாமல் மீளுங் காலம் அதுவாதலா னும், தலைவிக்குக் கங்குல் யாமங் கழியாது நெஞ்சழிந்து ஆற் றுமை மிகுதலான் ஊட லுணர்த்தற் கெளிதாவதோர் உபகார முடைத்தாதலானும் வைகறை கூறினர். இனித் தலைவி விடியற்காலஞ் சிறுவரைத்தாதலின் இதனும் பெறும் பயன் இன்றென முனிந்து வாயிலடைத்து ஊடனீட்டிப்பவே அவ் வைகறை வழித்தோன்றிய விடியற்கண்ணும் அவன் மெய்வேறு பாடு விளங்கக் கண்டு வாயில் புகுத்தல் பயத்தலின் விடியல் கூறினர்,

"வீங்குநீர்" என்னும் மருதக்கலியுள்,

"அணைமென்றோள் யாம்வாட அமர்துணைப் புணர்ந்துநீ
மணமனையா யெனவந்த மல்லலின் மாண்பன்றோ
பொதுக்கொண்ட கௌவையிற் பூவணைப் பொலிந்தநின்
வதுவையங் கமழ்ஞாற்றம் வைகறைப் பெற்றதை."(கலி-சுசு)

என மருதத்திற்கு வைகறை வந்தது.

"விரிகதிர் மண்டிலம்" என்னும் மருதக்கலியுள்,

"தணந்தனை யெனக்கேட்டுத் தவறோரா தெமக்குநின்
குணங்களைப் பாராட்டுந் தோழன்வந் தீயான்கொல்
கணங்குழை நல்லவர் கதுப்பற லணைத்துஞ்சி
யணங்குபோற் கமழுநின் னலர்மார்பு காணிய." (கலி-எக)

என மருதத்துக் காலை வந்தது.

"காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி"‡ என்பதும் அது.

இனி வெஞ்சுடர் வெப்பந் தீரத் தண்ணறுஞ் சோலை தாழ்ந்து நீழற் செய்யவுந், தண்பதம்பட்ட தெண்கழி மேய்ந்து பல் வேறு வகைப்பட்ட புள்ளெல்லாங் குடம்பை நோக்கி உடங்கு பெயரவும், புன்னை முதலிய பூவினுற்றம் முன்னின்று களுற்றவும், நெடுந்திரை யழுவத்து நிலாக்கதிர் பரப்பவுங் காதல் கைமிக்குக் கடற்கானலுங் கானற்கானலும் நிறைகடந்து வேட்கைபுலப்பட உரைத்தலின், ஆண்டுக் காமக்குறிப்பு

* கலித்தொகை. சஇ. † அகம். ககசு. ‡ குறுந்தொகை. சடு.

வெளிப்பட்டு இரங்கற்பொருள் சிறத்தலின் எற்பாடு நெய்தற்கு வந்தது,

உதாரணம் :—

"நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
செவ்வாய் வானந் தீண்டிமீன் அருந்தும்
பைங்காற் கொக்கின *நிரைபறை யுகப்ப
எல்லை பைப்பையக் கழிப்பிக் குடவயின்
கல்சேர்ந் தன்றே பல்கதிர் ஞாயிறு
மதரெழில் மழைக்கண் கலுழ இவளே
பெருநாண் அணிந்த சிறுமென் சாயல்
மாணலஞ் சிதைய எங்கி யாஞது
அழல்தொடங் கினளே பெரும அதனால்
கழிச்சுரு எறிந்த புட்டாள் அத்திரி
நெடுநீர் இருங்கழிப் பரிமெலிந் தசைஇ
வல்வில் இளையரொ டெல்லிச் செல்லாது
சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ
பெண்ணே ஒங்கிய வெண்மணற் படப்பை
அன்றில் அகவும் ஆங்கண்
சிறுகுரல் நெய்தலெம் பெருங்கழி நாட்டே." (அகம்-கஉ0)

பகற்குறிக்கண் இடத்துய்த்துத் தலைவனை எதிர்ப்பட்டு உரைத்தது. நெய்தற்கு எற்பாடு வந்தது.

'கானன் மாலைக் கழிப்பூக் கூம்ப'† என்பதனுண் மாலையும் வந்தது. கலியுண் மாலைக்காலம் நெய்தலின்கண் வந்தவாறு காண்க. இதுமேல் 'நிலனெருங்கு மயங்குத லின்று'‡ என்பதனுற் பெறுதும்.

இவற்றிற்கு அறுவகை இருதவும் உரிய வென்பதன்றிக் காரும் இளவேனிலும் வேனிலும் பெரும்பொழுதாகக் கொள்ப என்றற்குப் பொருள்பெறத் தோன்றும் என்றார்,

இனி நெய்தற்கு ஒழிந்த மூன்று காலமும் பற்றிவரச் சான்றோர் செய்யுட் செய்திலர்; அக்காலத்தித், தலைவி புறம் போந்து விளையாடாமையின். அங்ஙனம் வந்த செய்யுளுள வேல் அவற்றையுங் கொள்க.

"கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்மில் பெருமொழி கூறித் தம்மில்
கையுங் காலுங் தாககத் தாக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே." (குறு-அ)

(பாடம்) * கொக்கின். † அகம். சஉ. ‡ தொல், அகம். கஉ.

புறனுரைத்தாளெனக்கேட்ட பரத்தை தலைவனை நெருங்கித் தலைவன் பாங்காயினர் கேட்ப உரைத்தது. இது முதல் வேனில் வந்தது.

"அரிபெய் சிலம்பி னும்பலந் தொடலை
அரம்போ ழவ்வளைப் பொலிந்த முன்கை
இழையணி பணைத்தோ ளாயை தந்தை
மழைவளர் தருஉ மாவண் டித்தன்
பிண்ட நெல்லின் உறந்தை யாங்கண்
கழைநிலை பெருஅக் காவிரி நீத்தங்
குழைமா ணெள்ளிழை நீவெய் யோளொடு
வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயகா டியானையின் முகனமர்ந் தாஅங்
கேந்தெழி லாகத்துப் பூந்தார் குழைய
நெருநை லாடினை புனலே யின்றுவந்
தாக வனமுலை யரும்பிய சுணங்கின்
மாசில் கற்பிற் புதல்வன் தாயென
மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றியெம்
மூதூமை யெள்ளலஃ தமைகுந் தில்ல
சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்
தந்தூம்பு வள்ளை யாய்கொடி மயக்கி
வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்
பல்வேன் மத்தி கழாஅ ரன்னவெம்
இளமை சென்று தவத்தொல் லஃதே
இனியெவன் செய்வது பொய்ம்மொழி யெமக்கே."

(அகம்-சு)

பரத்தையொடு புனலாடி வந்தமைகேட்டுத் தலைவி புலந்தது. இது இளவேனில் வந்தது. ஏனைய வந்தவழிக் காண்க.

நாடகவழக்கானன்றி உலகியல் வழக்கானும் அச் சிறு பொழுதும் பெரும்பொழுதிற்குப் பொருந்து மென்றற்குத் தோன்று மென்றார். இதன் பயன் இவ்விரண்டு நிலத்துக்கு மற்றை மூன்று காலமும் பெரும்பான்மை வாராதென்றலாம்.

கூ. நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே.

இது நிலனுடைய நான்கற்குங் காலங் கூறி அந்நான்கிற்கும் பொதுவாகிய பாலைக்குக் காலங் கூறுகின்றது.

(இ - ள்.) நடுவுநிலைத்திணையே—பாலைத்திணை; நண்பகல் வேனிலொடு—எற்பாடுங் காலையும் என்னும் இரு கூற்றிற்கு நடுவணதாகிய ஒரு கூறு தான் கொண்டு வெம்மை செய்து

பெருகிய பெரும்பகலோடும் இளவேனிலும் வேனிலும் என்னும் இரண்டினையும்; முடிவு நிலை மருங்கின்—பிரிவெனப்படுதற்கு முடிவுடைத்தாகிய குறிஞ்சியும் முல்லையுமாகிய ஒரு மருங்கின் கண்ணே; முன்னிய நெறித்து—ஆசிரியன் மனங்கொள்ளப் படும் நெறிமைத்து என்றவாறு.

நிலை யென்றது நிலத்தினை. முடிவுநிலைப்பகுதிக்கண் முன்னப் படுமெனவே அத்தினை யாக்கமின்றி ஒழிந்த மருதமும் நெய்தலும் முடியாநிலமாய் அத்தினை முன்னப்படாதாயிற்று. இது பாலைக் கென்பதாம். பிரிவின்கண் முடிய வருவனவெல்லாம் இவ்விரண்டற்கும் முடியவருதலும் ஒழிந்த இரண்டற்கும் அவை குறுகி வருதலும் முறையாற் கொள்க. என்னை? சுரத்தருமை அறியின், இவள், ஆற்றுளாமெனத் தலைவன் செல வழுங்குதலுந் தணிந்துபோதலும், உடன்போவலெனத் தலைவி கூறுதலும், அதனை அவன் விலக்கலும், இருந்திரங்கலும் போல வன பலவும் முடியவரும் நிலங் குறிஞ்சியும் முல்லையுமாகலின் சுரத்தருமை முதலியன நிகழாமையின் மருதமும் நெய்தலும் அப்பொருண்முடிய வாராவாயின.

> "நன்றே காதலர் சென்ற ஆறே
> அணிநிற இரும்பொறை மீமிசை*
> மணிநிற வுருவின தோகையு† முடைத்தே." (ஐங்குறு-சுகக)

இது சுரத்தருமை நினைந்து வருந்தினேனென்ற தலைவிக்கு அவ் வருமை நீங்கக் கார்கால மாயிற்றென்று ஆற்றுவித்தது. இப்பாட்டு முதலிய பத்தும் முல்லையுட் பாலை.

> "கார்செய் காலையொடு கையறப் பிரிந்தோர்
> தேர்தரு விருந்தில் தவிர்குதல் யாவது
> மாற்றருந் தானை நோக்கி
> ஆற்றவும் இருத்தல் வேந்தனது தொழிலே.'' (ஐங்குறு-சுஙக)

இது பருவங்கண்டு ஆற்றுளாகிய தலைவி பாசறைச் செய்தி கேட்டு வருந்தியது.

மேற்கூறிய பருவங்கண்டு கிழத்தியுரைத்த இப்பத்தும் முல்லையுட் பாலை.

> "கருங்கால் வேங்கை மாத்தகட்டு ஒள்வீ
> இருங்கல் வியலறை வரிப்பத் தாஅம்
> நன்மலை நாடன் பிரிந்தென
> ஒண்ணுதல் பசப்பது எவன்கொல் அன்னாய்.''
> (ஐங்குறு-உகக)

(பாடம்) * 'இரும்புற மீமிசை' எனவும், 'அரும்பொறை மீமிசை.'
† 'உருவின்றோகை.'

இது வரைவிடைவைத்துப் பிரிந்துழித் தலைவி யாற்றுமை கண்டு தோழி கூறியது. இது குறிஞ்சியுட் பாலை.

"எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழத்
தவலைத் தண்டுளி வீசிப்
பசலை செய்தன பனிபடு துறையே." (ஐங்குறு-கசக)

இது வரைவிடைவைத்துப் பிரிந்துழி ஆற்றுவிக்குந் தோழிக்குத் துறை யின்பமுடைத்தாகலான் வருத்திற்றெனத் தலைவி கூறியது. இது சுரத்தருமை முதலியனவின்றி நெய்தற் குட் பாலை வந்தது. ஏனைய வந்துழிக் காண்க.

மூன்நீர் வழக்கஞ் சிறுபான்மையாகலின் நெய்தற்கு முடிய வாராதாயிற்று. இக்கருத்தானே பிரிவொழுக்கம் மருதத்திற் கும் நெய்தற்குஞ் சிறுபான்மையாகப் புலனெறிவழக்கஞ் செய் யப்படும்.

எற்பாட்டுக்கு முன்னர்த்தாகிய நண்பகலைப் பாலைக்குக் கூற வேண்டிப் பின் வைத்தாரேனும் பெரும்பொழுதிற்கு முற் கூறுதலின் ஒருவாற்றுற் சிறுபொழுதாறும் முறையே வைத்தா ராயிற்று. காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமைகூரச் சோலைதேம்பிக் கூவன் மாறி, நீரும் நிழலும் இன்றி, நிலம் பயந் தறந்து, புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெருகுவதொரு காலமாதலின், இன்பத்திற்கு இடையூறுகிய பிரிவிற்கு நண்பகலும் வேனிலுஞ் சிறப்புடைத்தாயிற்று.

தெள்ளறல் யாற்றுத் திரைமணல் அடைகரை
வண்டு வரிபாடத் தண்போ தலர்ந்து
தாதுந் தளிரு மேதகத் துவன்றிப்
பல்பூஞ் சோலைப் பன்மலர் நாற்றமொடு
செவ்விதிற் றென்றல் ஒவ்விதிற் ருகிக்
குயில்கூஉக் குரலும் பயில
அதன்மேலும்
நிலவுஞ் சாந்தும் பயில்வுறு முத்தும்
இன்பம் வீளைக்கு நன்பொருள் பிறவும்

பண்டைய போலாது, இன்பம் மிகத்தரும் இளவேனிற் காலத்துப், பொழில் விளையாடியும், புதுப்பூக் கொய்தும், அருவியாடியும் முன்னர் விளையாட்டு நிகழ்ந்தமைபற்றிப் பிரிந்த நிழத்தி மெலிந்துரைக்குங் கிளவி பயின்று வருதலானும், உடன்போக்கின்கண் அக்காலம் இன்பம் பயக்குமாதலானும், இளவேனிலோடு நண்பகல் சிறந்த தெனப்பட்டது. பிரிந்த நிழத்தி இருந்து கூறுவன கார்கால மன்மையின் முல்லையாகா.

உதாரணம் :—

" கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை
வறனுறல் அங்கோ டுதிர வலங்கடந்து
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை
இரவுக்குறும் பலற நூறி நிரைபகுத்
திருங்கல் முகிக்கர்த் திற்றி கெண்டும்
கொலைவில் ஆடவர் போலப் பலவுடன்
பெருந்தலை யெருவையொடு பருந்துவந் திறுக்கும்
அருஞ்சுரம் இறந்த கொடியோர்க் கல்கலும்
இருங்கழை இறும்பின் ஆய்ந்துகொண் டறுத்த
நுணங்குகண் சிறுகோல் வணங்கிறை மகளிரொ
டகவுநர்ப் புரந்த வன்பின் கழல்தொடி
நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர் அன்னநின்
அலர்முலை யாகம் புலம்பப் பலநினைந்
தாழ்ல் என்றி தோழி யாழவென்
கண்பனி நிறுத்தல் எளிதோ குரவுமலர்ந்
தற்சிர நீங்கிய வரும்பவிழ் வேனில்
அறலவிர் வார்மணல் அகல்யாற் றடைகரைத்
துறையணி மருதோ டிகல்கொள வோங்கிக்
கலிழ்தளிர் அணிந்த இருஞ்சினை மாஅத்
தினர்ததை புதுப்பூ நிரைத்த பொங்கர்ப்
புகைபுரை அம்மஞ் சூர
நுகர்குயில் அகவுங் குரல்கேட் போர்க்கே." (அகம்-கஎ)

இது வற்புறுத்துந் தோழிக்குத் தலைவி கூறியது.

இக் களிற்றியானை நிரையுள் இருவகை வேனிலும் பாலைக்கண் வந்தன. நண்பகலோடுவருவன வந்தழிக் காண்க. (கூ)

கo பின்பனி தானும் உரித்தென மொழிப.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ - ள்.) நடுவு நிலைத்திணைக்கு முற்கூறிய வேனிலன்றிப் பின்பனிக்காலமும் உரித்து என்றவாறு.

இது கூதிரை, முன்பனியாகிய மார்கழியுந் தையுந் தொடர்ந்தாற் போல, வேனிலாகிய சித்திரை முதலிய நான்கற்கு முன் பின்பனியாகிய மாசியும் பங்குனியுந் தொடர்ந்ததென்று கூறினர்.

உதாரணம் :—

" பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்
வகைகொண்ட செம்மனும் வனப்பார விடுவதோ
புகையெனப் புதல்சூழ்ந்து பூவங்கட் பொதிசெய்யா
முகைவெண்ப னுதிபொர முற்றிய கடும்பனி." (கலி-கூக)

இது தனித்தோர்க்குப் பின்பனி ஆற்றற்கு அரிது, இஃதெவர்க்கும் ஏதமாம் எனவும், இதனுன் இறந்துபடுவே னெனவுங் கூறிற்று.

" அம்ம வாழி தோழி காதலர்
நூலறு முத்திற் றண்சித ருறைப்பத்
தாளித் தண்பவர் நாளா மேயும்
பனிபடு நாளே பிரிந்தனர்
பிரியு நாளும் பலவா கவ்வே."
(குறு - ௧௦ச)

தலைவி தோழிக்கு உரைத்தது.

இதுவும் அது.

பின்பனிக்கு நண்பகல் தன்பஞ்செய்யா தென்பதூஉம் அதற்குச் சிறுபொழுது வரைவில வென்பதூஉங் கூறிற்று; என்னை? சூத்திரத்துத் தான் எனத் தனித்து வாங்கிக் கூறினமையின். (௧0)

௧௧. இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றினும் உரிய தாகும் என்மனார் புலவர்.

இது பாலைப் பகுதி இரண்டெனவும் அவ்விரண்டற்கும் பின்னி உரித்தெனவுங் கூறுகின்றது.

(இ - ள்.) இருவகைப்பிரிவும் நிலைபெறத் தோன்றினும்— நான்கு வருணத்தார்க்குங் காலிற் பிரிவும் வேளாளர்க்குக் கலத்திற் பிரிவுந் தத்தம் நிலைமைக்கேற்பத் தோன்றினும்; உரியது ஆகும் என்மனார் புலவர்—பின்பனிக்காலம் அவ்விரண்டற்கும் உரிமைபூண்டு நிற்குமென்று கூறுவர் புலவர் என்றவாறு.

கடலினே நிலமென்னுமையிற் கலத்திற் பிரிவு முன்பகுத்த நிலத்துள் அடங்காதென்று, அதுவும் அடங்குதற்கு, 'இரு வகைப் பிரிவும்' என்னும் முற்றும்மை கொடுத்துக், காலிற் பிரிவோடு கூட்டிக் கூறினார். கலத்திற் பிரிவு அந்தணர் முதலிய செந்தீவாழ்நர்க்கு ஆகாமையின் வேளாளர்க்கே உரித் தென்றார். வேத வணிகரல்லாதார் கலத்திற் பிரிவு வேதநெறி யன்மையின் ஆராய்ச்சியின்று. இக்கருத்தானே இருவகை வேனிலும் நண்பகலும் இருவகைப் பிரிவிற்கும் ஒப்ப உரிய வன்றிக், காலிற் பிரிவுக்குச் சிறத்தலுங், கலத்திற் பிரிவிற்கு இளவேனி லொன்றுங் காற்றுமிகாத முற்பக்கத்துச் சிறுவர விற்றாய் வருதலுங் கொள்க. ஒழிந்த உரிப்பொருள்களிலும் பாலை இடை நிகழுமென்றலிற் பிரியவேண்டியவழி அவற்றிற்கு ஒதிய காலங்கள் கலத்திற் பிரிவிற்கும் வந்தால் இழுக்கின்று.

என்னே ? கார்காலத்துக் கலத்திற்பிரிவும் உலகியலாய்ப் பாடலுட் பயின்று வருமாயினென்க தோன்றினும் என்ற உம்மை சிறப்புமை; இரண்டு பிரிவிற்கும் பின்பனி உரித்தென்றலின்.

இனிக் கலத்திற்பிரிவிற்கு உதாரணம் :—

"உலகு கிளர்ந்தன்ன வுருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ
இரவும் எல்லையும் அசைவின் றாகி
விரைசெல் லியற்கை வங்கூ ழாட்டக்
கோடுயர் திணிமண லகன்றுறை நீகான்
மாட வொள்ளெரி மருங்கறிந் தொய்ய
ஆள்வினைப் புரிந்த காதலர் நாள்பல
கழியா மையி னழிபட ரகல
வருவர் மன்னுற் றோழி தண்பணைப்
பொருபுனல் வைப்பின் நம்மூ ராங்கட்
கருவிளை முரணிய தண்புதற் பகன்றைப்
பெருவள மலர அல்லி தீண்டிப்
பலவுக்காய்ப் புறத்த பசும்பழப் பாகல்
கூதள மூதிலைக் கொடிநிரைத் தூங்க
அறனின் றலைக்கு மாஞ வாடை
கடிமனை மாடத்துக் கதுகுல் வீசத்
திருந்திழை நெகிழ்ந்து பெருங்கவின் சாய
நிரைவளை யூருந் தோளென
உரையொடு செல்லு மன்பினர்ப் பெறினே." (அகம்-உருகு)

இது தோழி தூதவிடுவது காரணமாக உரைத்தது. இம் மணிமிடைபவளத்துப் பின்பனி வந்தவாறும் நண்பகல் கூருமையும் அவர் குறித்தகாலம் இதுவென்பது தோன்றிய வாறுங் காண்க.

"குன்ற வெண்மணல் லேறி நின்றுநின்று
இன்னுங் காண்கம் வம்மோ தோழி
களிறுங் கந்தும் போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றுந்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே."

வருகின்றானெனக் கேட்ட தலைவி தோழிக்கு உரைத்தது. இது பின்பனிநின்றகாலம் வரைவின்றி வந்தது. கடலிடைக்கலத்தைச் செலுத்துதற்கு உரிய காற்றெடுபட்ட காலம் யாதானுங் கொள்க. ஆகுமென்றதனால் வேதவணிகரும் பொருளின்றி இல்லறம் நிகழாத காலத்தாயிற் செந்தீவழிபடுதற்கு உரியோரை நாட்டிக் கலத்திற் பிரிதற்கு உரியரென்று கொள்க. (கக)

கஉ. திணைமயக் குறுதலுங் கடிநிலை இலவே
நிலனொருங்கு மயங்குதல் இன்றென மொழிப
புலனன் குணர்ந்த புலமை யோரே.

இஃது உரிப்பொருள் மயங்கு மென்றலின் மேலனவற்றிற்குப் புறனடை.

(இ - ள்.) திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே- 'மாயோன்மேய' (நு) என்பதனுள் ஒரு நிலத்து ஒரொழுக்கம் நிகழுமென நிரனிறுத்துக் கூறிய ஒழுக்கம் அவ்வந்நிலத்திற்கே உரித்தா யொழுகாது தம்முண் மயங்கிவருதலும் நீக்கப்படா; நிலன் ஒருங்கு மயங்குதல் இன்று என மொழிப—அங்ஙனம் ஒருநிலத்து இரண்டொழுக்கந் தம்முண் மயங்குதலன்றி இரண்டுநிலம் ஒரோவொழுக்கத்தின்கண் மயங்குதலில்லை யென்று கூறுவர்; புலன் நன்கு உணர்ந்த புலமையோர்—அங்ஙனம் நிலனும் ஒழுக்கமும் இயைபுபடுத்துச் செய்யும் புலனெறி வழக்கத்திணை மெய்பெற உணர்ந்த அறிவினையுடையோர் என்றவாறு.

என்றது, ஒரு நிலத்தின்கண் இரண்டு உரிப்பொருள் மயங்கி வருமென்பதூஉம், நிலன் இரண்டு மயங்காதெனவே காலம் இரண்டுந் தம்முள் மயங்குமென்பதூஉங் கூறினராயிற்று. எனவே, ஒரு நிலமே மயங்குமாறுயிற்று. உரிப்பொருண் மயக்குறுதல் என்னுது திணை மயக்குறுதலும் என்றார், ஓர் உரிப்பொருளோடு ஓர் உரிப்பொருண் மயங்குதலும், ஓர் உரிப்பொருள் நிற்றற்கு உரிய இடத்து ஓர் உரிப்பொருள் வந்து மயங்குதலும், இவ்வாறே காலம் மயங்குதலும், கருப்பொருண் மயங்குதலும் பெறுமென்றற்கு; திணையென்றது அம்மூன்றினையுங் கொண்டே நிற்றலின்.

உதாரணம் :—

"அறியே மல்லே மறிந்தன மாதோ
பொறிவரிச் சிறைய வண்டின மொய்ப்பச்
சாந்த நாறு நறியோள்
கூந்த லுறுகின் *மார்பே தெய்யோ." (ஐங்குறு-உசo)

இது புறத்தொழுக்க மின்றென்றற்குத் தோழி கூறியது.

புலிகொல் பெண்பாற் பூவரிக் குருளை
வளைவெண் மருப்பிற் கேழல் புரக்குங்

(பாடம்) * 'மார்பெ.'

குன்றுகெழு நாடன் மன்றதன்
பொன்போல்புதல்வனெ டென்னீத் தோனே" (ஐங்குறு-உகடு)

இது வாயில்களுக்குத் தலைவி கூறியது.

"வன்கட் கானவன் மென்சொன் மடமகள்
புன்புல மயக்கத் தழுத வேனற்
பைம்புறச் சிறுகிளி கடியு நாட
பெரிய கூறி நீப்பினும்
பொய்வலைப் படுஉம் பெண்டுதவப் பலவே." (ஐங்குறு-உஅங)

இது தலைவன் ஆற்றுமை வாயிலாகப் புணர்ந்துழிப் பள்ளியிடத்துச் சென்ற தோழி கூறியது.

இவை குறிஞ்சிக்கண் மருதம் நிகழ்ந்தன ; இவை ஒரொழுக்கம் நிகழ்தற்கு உரியவிடத்தே ஒரொழுக்கம் நிகழ்ந்தன.

"அன்னுய் வாழிவேண் டன்னையென் றோழி
பசந்தனள் பெரிதெனச் சிவந்த கண்ணே
கொன்னே கடவுதி யாயி னென்னது உ
மறிய வாருமோ மற்றே
மூறியிணர்க் கோங்கம் பயந்த மாறே." (ஐங்குறு-நசுசு)

இஃது இவ் வேறுபாடென்னென்ற செவிலிக்குத் தோழி தூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.

இது பாலையிற் குறிஞ்சி. இஃது உரிப்பொருளோடு உரிப் பொருண் மயங்கிற்று. மேல் வருவனவற்றிற்கும் இவ்வாறு உய்த்துணர்ந்துகொள்க.

"வளமலர் தைதந்த வண்டுபடு நறும்பொழின்
மூளிரை முறுவ லொருத்தியொடு நெருநற்
குறிநீ செய்தனை யென்ப வலரே
குரவ நீள்சினை யுறையும்
பருவ மாக்குயிற் கௌவையிற் பெரிதே." (ஐங்குறு-நசுசு)

இது பொழிலிடத்து ஒருத்தியொடு தங்கிவந்தும் யான் பரத்தையை அறியேனென்றற்குத் தோழி கூறியது.

"வண்சினைக் கோங்கின் றண்கமழ் படலை
யிருஞ்சிறை வண்டின் பெருங்கிளை மொய்ப்ப
நீநயந் துறையப் பட்டோள்
யாவ ளோவெம் மறையா தீமே." (ஐங்குறு-நஎ0)

இது பரத்தையர்க்குப் பூவணிந்தமை கேட்ட தலைவி அஃதின்றென்றற்குக் கூறியது. இவை பாலைக்கண் மருதம் நிகழ்ந்தன. "அருந்தவ மாற்றியார்"* என்னும் பாலைக்கலியும் அது.

---

* கலித்தொகை-நஎ0.

"அன்னை வாழிவேண் டன்னை யுவக்கா
ணோர்கொடிப் பாசடம்பு பரியவூர் பிழியூஉ
நெய்தன் மயக்கிவந் தன்று நின்மகள
பூப்போ லுண்கண் மரீஇய
நோய்க்கு மருந்தாகிய கொண்கன் றேரே." (ஐங்குறு-கoக)

இஃது அறத்தொடுநின்றபின் வரைதற்குப்பிரிந்தான் வரைவொடு வந்தமை தோழி செவிலிக்குக் காட்டியது. இது நெய்தலிற் குறிஞ்சி.

"கண்டிகு மல்லமோ கொண்கனின் கேளை
யொள்ளிழை யுயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே." (ஐங்குறு-கஉஉ)

"கண்டிகு மல்லமோ கொண்கனின் கேளை
உருஅ வறுமூலை மடாஅ
வுண்ணுப் பாவை யூட்டு வோளே." (ஐங்குறு-கஉஅ)

இவை பெதும்பைப் பருவத்தாள் ஓர் தலைவியொடு வேட்கை நிகழ்ந்தமையைத் தலைவி கூறித் தலைவன் குறிப் புணர்ந்தது.

"யானெவன் செய்கோ பாண வானுது
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
புல்லென் றனவென் புரிவளைத் தோளே." (ஐங்குறு-கஙஙு)

இது தலைவன் புறத்துப்போன அத்தலைவிக்கு ஆற்றுயாகு தல் தகாதென்ற பாணற்குத் தலைவி கூறியது.

இப் பத்தும் நெய்தற்கண் மருதம்.

"வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
மிதிப்ப நெக்க கண்போ னெய்தல்
கட்கமழ்ந் தாளைத் துறைவற்கு
நெக்க நெஞ்ச நேர்கல் லேனே." (ஐங்குறு-கஙிக)

இது வாயில்வேண்டிய தோழிக்குத் தலைவி வாயின் மறுத் தது. இப் பத்தும் நெய்தற்கண் மருதம்.

"இலங்குவளை தெளிர்ப்ப வலவ னுட்டி
முகம்புதை கதுப்பின ளிறைஞ்சினின் றோளை
புலம்புகொண் மாலை மறைய
நலங்கே ழாக நல்குவ ளெனக்கே." (ஐங்குறு-ககஎ)

இடந்தலைப்பாட்டிற் றலைவி நிலைகண்டு கூறியது. இது நெய்தலிற் புணர்த னிமித்தம்.

"வேப்புநனை யன்ன நெடுங்கட் கள்வன்
றன்னக மண்ணளை நிறைய கெல்லி

நிரும்பூ வுறைக்கு மூரற்கிவள்
பெருங்கவி னிழப்ப தெவன்கொ லன்னுய்.” (ஐங்குறு-கூ0)

இது தோழி அறத்தொடு நின்றது.

“பழனக் கம்புள் பயிர்ப்பெடை யகவுங்
கழனி யூரன் மொழிவ லென்றுந்
துஞ்சுமனை நெடுநகர் வருதி
யஞ்சா யோவிவ டந்தைகை வேலே.” (ஐங்குறு-சு0)

இது தோழி இரவுக்குறி மறுத்தது.

“நெறிமருப் பெருமை நீலவிரும் போத்து
வெறிமலர்ப் பொய்கை யாம்பன் மயக்குங்
கழனி யூரன் மகளிவள்
பழன வெதிரின் கொடிப்பிணை யலளே.” (ஐங்குறு-கூக)

இஃது இளையள் விளைவில ளென்றது.

“கருங்கோட் டெருமைச் செங்கட் புனிற்றுக்
காதற் குழவிக் கூறுமூலை மடுக்கு
நுந்தை நும்மூர் வருது
மொண்டொடி மடந்தை நின்னையாம் பெறினே.” (ஐங்-கூஉ)

இது நின் தமர் வாராமையின் எமர் வரைவு நேர்ந்தில ரென்று தோழி கூறக் கேட்ட தலைவன் தலைவிக்குக் கூறியது.

இவை மருதத்துக் குறிஞ்சி நிகழ்ந்தன.

இக் காட்டியவெல்லாம் ஐங்குறுநூறு. “புனையிழை நோக்கியும்”* என்னும் மருதக் கலியும் அது.

“மூரசுடைச் செல்வர் புரவிச் சூட்டு
மூட்டுறு கவரி தூக்கி யன்ன
செழுஞ்செய் நெல்லின் சேயரிப் புனிற்றுக்கதிர்
மூதா தின்றல் அஞ்சிக் காவலர்
பாக லாய்கொடிப் பகன்றையொடு பரீஇக்
காஞ்சியி னகத்துக் கரும்பருத்தி யாக்குந்
தீம்புன லூர திறவ தாகக்
குவளை யுண்க ணிவளுந் யானுங்
கழுநீ ராமபல் மூழுநெறிப் பைந்தழை
காயா ஞாயிற் றூகத் தலைப்பப்
பொய்த லாடிப் பொலிகென வந்து
நின்னகாப் பிழைத்த தவறே பெரும
கள்ளுங் கண்ணியுங் கையுறை யாக
நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஅய்
நிலைத்துறைக் கடவுட் குளப்பட வோச்சித்
தணிமருங் கறியாள் யாயழ
மணிமருண் மேனி பொன்னிறங் கொளலே.” (அகம்-கஅசு)

* கலித்தொகை - எசு.

இது தலைவியைத் தோழியிடத்துய்த்துத் தலைவனை வரைவு கடாயது. இவ்வகப்பாட்டும் அது.

இன்னும், மயக்குறுதலும் என்றதனான் அவ்வந் நிலங்கட்கு உரிய முதலுங் கருவும் வந்து உரிப்பொருள் வேறுதலன்றி அவ் வந்நிலங்கட்கு உரியவல்லாத முதலுங் கருவும் வந்து உரிப் பொருண் மயங்குவனவுங் கொள்க அஃது ''அயந்திகழ் நறுங் கொன்றை''* என்னும் நெய்தற் கலியுட் காண்க இக்கருத் தானே நக்கீரரும் ஐந்திணையுள்ளுங் களவு நிகழுமென்று கொண்டவாறுணர்க.†

இனிக் காலம் ஒருங்கு மயங்குங்காற் பெரும்பொழுது இரண்டும் பெரும்பான்மையுஞ் சிறுபொழுதும் மயங்குதலுங் கொள்க.

"மழையில் வான மீனணிந் தன்ன
குழையமன் முசுண்டை வாலிய மலர
வரிவெண் கோடல் வாங்குகுலை வான்பூப்
பெரிய சூடிய கவர்கோற் கோவலர்
எல்லுப் பெயலுழந்த பல்லா நிரையொடு
நீர்திகழ் கண்ணியர் ஊர்வயிற் பெயர்தர
நளிசேட் பட்ட மாரி தளிசிறந்
தேர்தரு கடுநீர் தெருவுதொ றொழுகப்
பேரிசை முழக்கமொடு சிறந்துநனி மயங்கிக்
கூதிர்நின் றன்ஞாற் பொழுதே காதலர்
நங்நிலை யறியா ராயினுந் தங்நிலை
யறிந்தனர் கொல்லோ தாமே யோங்குநடைக்
காய்சின யானைக் கங்குற் சூழ
அஞ்சுவர விறுத்த தானை
வெஞ்சின வேந்தன் பாசறை யோரே." (அகம்-உசு)

இது தோழிக்குத் தலைவி கூறியது.

இம் மணிமிடை பவளத்துண் முல்லையுட் கூதிர் வந்தது.

"மங்குல் மாமழை விண்ணதிர்பு முழங்கித்
துள்ளுப்பெயல் கழிந்த பின்றைப் புகையுறப்
புள்ளிநுண் துவலை பூவகம் நிறையக்
காதலாப் பிரிந்த கையறு மகளிர்
நீர்வார் கண்ணிற் கருவிஏ மலரத்
தூய்த்தலைப் பூவின் புதலிவர் ஈங்கை
நெய்த்தோய்த் தன்ன நீர்நனை யந்தளிர்
இருவகிர் ஈருளின் ஈரிய துயல்வர
அவரைப் பைம்பூப் பயில அகல்வயற்
கதிர்வார் காய்நெல் கட்கினி திறைஞ்சச்

* 'கலித்தொகை - கஅ0. † 'ஐந்திணையுள்ளும் களவு வேறன்று' என்பது, இறையனாரகப்பொருள் க-ஆம் சூத்திரவுரை.

சிதர்சினைத் தூங்கும் அற்சிர அரைநாட்
காய்சின வேந்தன் பாசறை நீடி
நன்னோ யறியா அறனி லாளர்
இன்னிலை களைய வருகுவர் கொல்லென
ஆனெ தெறிதரும் வாடையொடு
நோனேன் தோழியென் தனிமை யானே." (அகம்-உகச)

இது பருவ வரவின்கண் வற்புறுத்துத் தோழிக்குத் தலைவி கூறியது.

இம் மணிமிடை பவளத்து முல்லையுண் முன்பனி வந்தது. நிலமும் கருவும் மயங்கிற்று.

"கருங்கால் வேங்கை வீயுகு துறுக
விரும்புலிக் குருளையிற் ரோன்றுங் காட்டிடை
யெல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே." (குறுந்-சஎ)

இஃது இராவந்து ஒழுகுங்காலை முன்னிலைப் புறமொழி யாக நிலாவிற்கு உரைப்பாளாய் உரைத்தது.

இக் குறுந்தொகையுட் குறிஞ்சியுள் வேனில் வந்தது.

*"விருந்தின் மன்னர் * * *."

என்பது கார்காலத்து மீள்கின்ரூன் முகிழ்நிலாத் திகழ் தற்குச் சிறந்த வேனிலிறுதிக்கண் தலைவிமாட்டு நிகழ்வன கூறி, அவை காண்டற்குக் கடிது தேரைச் செலுத்தென்றது.

இது முல்லைக்கண் வேனில் வந்தது.

"துஞ்சுவது போல விருளி வீண்பக
இமைப்பது போல மின்னி யுறைக்கொண்டு
ஏறுவது போலப் பாடுசிறந் துரைஇ
நிலம்நெஞ் சுட்க வொவாது சிலைத்தாங்
கார்தளி பொழிந்த வார்பெயற் கடைநாள்
ஈன்றுநா ளுலந்த வாலா வெண்மழை
வான்ரே யுயர்வரை யாடும் வைகறைப்
புதலொளி சிறந்த காண்பின் காலைத்
தண்ணறும் படுநீர் மாந்திப் பதவருந்து
வெண்புறக் குடைய திரிமருப் பிரலை
வார்மண லொருசிறைப் பிடவவிழ் கொழுநிழற்
காமர் துணையொ டேமுற வதிய
அரக்குநிற வுருவின் ஈயல் மூதாய்
பரப்பி யவைபோற் பாஅய்ப் பலவுடன்
நீர்வார் மருங்கி னீரணி திகழ
இன்னும் வாரா ராயின் நன்னுதல்

* அகம் - கிச. இச் செய்யுளை கள-ஆம் பக்கத்திற் காண்க.

யாதுகொல் மற்றவர் நிலையே காதலர்
கருவிக் காரிடி யிரீஇய
பருவ மன்னவர் வருதுமென் றதுவே.” (அகம்-கஉக)

இது பிரிவிடையாற்றாது தோழிக்கு உரைத்தது.

இம் மணிமிடை பவளத்துப் பாலைக்கண் மூன்பனீயும் வைகறையும் ஒருங்கு வந்தன.

“தொல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலி
னல்லாந்தா ரலவுற வீன்றவள் கிடக்கைபோற்
பல்பய முதவிய பசுமைதீ ரகன்ஞாலம்
புல்லிய புனிறெரீஇப் புதுநல மேர்தர
வஃயவர் வண்டல்போல் வார்மணல் வடுக்கொள
வீஃயவ ரைம்பால்போ லெக்கர்போழ்ந் தறல்வார
மாவீன்ற தளிர்மிசை மாயவ டிதலேபோ
லாயிதழ்ப் பன்மல ரையகொங் குறைத்தர
மேதக விளவேனி லிறுத்தந்த பொழுதின்கண் ;

இது தரவு.

சேயார்கட் சென்றவென் னெஞ்சினேச் சின்மொழி
கூறும் வரைத்தன்றி நிறப்பென்மன் னிறைநீவி
வாய்விரிபு பனியேற்ற விரவுப்பன் மலர்தீண்டி
நோய்சேர்ந்த வைகலான்வாடைவந் தலேத்தரூஉம் ;

போழ்துள்ளார் துறந்தார்கட் புரிவாடுங் கொள்கையைச்
சூழ்பாங்கே சுடரிழாய் கரப்பென்மற் கைநீவி
வீழ்கதிர் விடுத்தபூ விருந்துண்ணு மிருந்தும்பி
யாழ்கொண்ட விமிழிசை யியன்மாலே யலேத்தரூஉம் ;

தொடிநிலே நெகிழ்த்தார்கட் டோயுமென் ஞருயிர்
வடுநீங்கு கிளவியாய் வலிப்பென்மன் வலிப்பவு
நெடுநிலாத் திறந்துண்ண நிரையிதழ் வாய்விட்ட
கடிமலர் கமழ்தாற்றங் கங்குல்வந் தலேத்தரூஉம் ;

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

வருந்தினே வதிந்தனின் வஃநீங்கச் சேய்நாட்டுப்
பிரிந்துசெய் பொருட்பிணி பின்னேக்கா தேகுநம்
அருந்துயர் கஃளஞர் வந்தனர்
திருந்தெயி றிலங்குநின் றேமொழி படர்ந்தே.” (கலி-உக)

இது சுரிதகம்.

இஃது ஒத்தாழிசை.

வந்தாரென ஆற்றுவித்தது.

இதில் வேனிலும் வாடையுங் கங்குலும் மாலேயும் வந்தன.

"அம்ம வாழி தோழி சிறியிலைக்
குறுஞ்சினை வேம்பி னறும்பழ முணீஇய
வாவ லுகக்கு மாலையு
மின்றுகொல் காதலர் சென்ற நாட்டே." (ஐங்குறு-கூகக)

இவ் ஐங்குறுநூறு பாலைக்கண் மாலை வந்தது.

"தண்கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற்
கடும்பகல் வருதி கையறு மாலை
மாலை நெய்தலுங் கூம்பக்
காலை வரினுங் களைஞரோ விலரே." (ஐங்குறு-கஅங)

பருவ வரவின்கண் மாலைப்பொழுது கண்டு ஆற்றுளாய தலைவி தோழிக்குக் கூறியது.

இவ் ஐங்குறுநூறு நெய்தற்கண் மாலை வந்தது.

"தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தாற்
பல்வயி னுயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்போ
லெல்லுறு தெறுகதிர் மடங்கிதன் கதிர்மாய
நல்லற நெறிநிலீஇ யுலகாண்ட வரசன்பி
னல்லது மலைந்திருந் தறநெறி நிறுக்கல்லா
மெல்லியான் பருவம்போன் மயங்கிரு டலைவர
வெல்லைக்கு வரம்பாய விடும்பைகூர் மருண்மாலை
* * * *
பனியிருள் சூழ்தரப் பைதலஞ் சிறுகுழ
லினிவரி லுயருமற் பழியெனக் கலங்கிய
தனியவ னிடும்பைகண் டினைதியோ வெம்போல
வினியசெய் தகன்ரூரை யுடையை யோநீ." (கலி-கஉக)

என நெய்தற்கலியுட் கங்குலும மாலையும் முன்பனியும் வந்தன. ஒழிந்தனவும் மயங்குமாறு வந்தழிக் காண்க. (கஉ)

கஙு. உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே.

இஃது எய்தாத தெய்துவித்தது.

(இ - ள்.) உரிப்பொருள் அல்லன—உரிப்பொருளென்று ஓதப்படும் ஐந்திணையும் அல்லாதனவைக்கிளையும் பெருந்திணையும்; மயங்கவும் பெறும்—நால்வகை நிலத்தும் மயங்கவும் பெறும் என்றவாறு.

உம்மை, எச்சவும்மை யாதலின், உரிப்பொருளாக எடுத்த பாலையும் நால்வகை நிலத்தும் மயங்கவும் பெறும் என்றவாறும். பாலையென்பது ஒன்று பிரிந்து பலவாகிய கூற்றின் மேற்றாதலின், ஒற்றுமைப்பட்டு நிகழ்கின்றார் இருவர் பிரிந்துவரலும் பாலையாமன்றே? அதனால், அதுவுங் காரணமாய்ச் செம்பால் செம்பாலையாயினுற்போல நின்றது.

"ஊர்க்கா னிவந்த" என்னுங் குறிஞ்சிக்கலியுள்,

"ஆய்தூவி யனமென வணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் னெழிலின
மாதர்கொண் மாஞெக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉ மென்பதை யறிதியோ வறியாயோ." (கலி-நிசு)

என்பது நிலம்வரையாது வந்த கைக்கிளை. இதனைக் குறிஞ்சியுட் கோத்தார்; புணர்ச்சி யெதிர்ப்பாடாகலின்.

"கொல்லேற்றுக் கோடஞ்சு வானே மறுமையும்
புல்லாளே யாய மகள்." (கலி-கஉஉ)

"வளியா வறியா வுயிர்காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சு நெஞ்சினர் தோய்தற்
கெளியவோ வாயமக டோள்." (கலி-கoஉ)

".....முள்ளெயிற் றேளி னிவளைப் பெறுமிதோர்
வெள்ளேற் றெருத்த டங்குவான்;
ஒள்ளிழை, வாருறு கூந்தற் றுயில்பெறும் வைமருப்பிற்
காரி கதனஞ்சான் கொள்பவன்....." (கலி-கoச)

என்றாற்போல ஏறுதழுவினுற்கு உரியள் இவளென வந்த கைக்கிளைகளெல்லாம் முல்லைக்கலி பலவற்றுள்ளுங் காண்க.

'மூன்னிய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே'* என்பதனுன் அவை கைக்கிளையாயின.

இனி "எழின்மருப் பெழில்வேழம்"† என்றது முதலிய நாலு பாட்டும் ஏறிய மடற்றிறமான பெருந்திணை. என்னை?

"மாமேலே னென்று மடல்புணையா நீந்துவேன்
தேமொழி மாத ருருஅ துறீஇய
காமக் கடலகப் பட்டு." (கலி-கஉகூ)

என்றாற் போல்வன வருதலின்.

"புரிவுண்ட புணர்ச்சி"‡ என்றது முதலிய ஆறுபாட்டுந் தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமாகிய பெருந்திணை. இவற்றை நெய்தலுட் கோத்தார்; சாக்காடு குறித்த இரங்கற் பொருட்டாகலின். கூனுங் குறளும் மூகுஞ் செவிடும் உறழ்ந்து கூறும் பெருந்திணையும் ஊடற்பகுதியவாகலின் மருதத்துட் கோத்தார்.

"கல்லாப் பொதுவனே நீமாறு." (கலி-ககஉ)

எனப் பொதுவியர் கூறலும்,

---

* தொல்-பொருள்-கoஅ. † கலி-கஉஅ. ‡ கலி-கசஉ

"நடாஅக் கரும்பமன்ற தோளாரைக் காணின்
விடாஅலோம் பெண்ணு மெமர்." (கலி-கஙஉ)

எனப் பொதுவர் கூறலும் மிக்க காமத்து மிடலாகிய பெருந்திணையாகலின் முல்லையுட் கோத்தார்.

"நறவினே வரைந்தார்"* "ஈண்டு நீர்மிசை"† என்னுங் கலிகளுங் காமத்து மிகுதிறத்தான் அரசனே நோக்கிச் சென்றூர் கூறியவாகலின் மருதத்துக் கோத்தார்.

இனி,

"வானமூர்ந்த வயங்கொளி மண்டில
நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட்டு." (அகம்-கஙக)

எனக் காடுறை யுலகத்துப் பாலிவந்தது.

"தொடங்கற்கட் டோன்றி மூதியவன் மூதலாக
வடங்காதார் மிடல்சாய வமரர்வந் திரத்தலின்
மடங்கல்போற் சினேஇ மாயஞ்செ யவுணரைக்
கடந்தடு முன்பொடு முககண்ணுன் மூவெயிலு
முடன்றக்கான் முகம்போல வொண்கதிர் தெறுதலிற்
சீறருங் கணிச்சியோன் சினவலி னவ்வெயி
லேறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந் தியங்குஉ
ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை
மறப்பருங் காத லிவளீண் டொழிய
விறப்பத் துணிந்தனிர் கேண்மின்மற் றைஇய." (கலி-உ)

இது மைவரையுலகத்துப் பாலை வந்தது.

"மறந்தவ ணமையா ராயினும்"‡ என்னும் அகப்பாட்டுத் தீம்புனலுலகத்துப் பாலை வந்தது. "அருளிலாளர் பொருள் வயினகறல்"§ என்னும் பாட்டினுட் பெருமணலுலகத்துப் பாலை வந்தது.

இன்னும் பிறவுஞ் சான்றோர் செய்யுட்கண்ணே உரிப் பொருண் மயங்கியுங் காலங்கண் மயங்கியும் வருவனவெல்லாம் இதனுன் அமைத்துக் கொள்க. (கஙூ)

கசு. புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.

இதுவும் மேனிறுத்த முறையானன்றியும் அதிகாரப்பட்டமைகொண்டு உரிப்பொருள் கூறுகின்றது; உரிப்பொருள் உணர்ந்தல்லது உரிப்பொருளல்லன உணரலாகாமையின்.

---

* கலி-கூக. † கலி-கஂஂ. ‡ அகம்-கூஎ. § அகம்-கூஂடு.

(இ - ள்.) புணர்தலும் புணர்தனிமித்தமும்; பிரிதலும் பிரிதனிமித்தமும்; இருத்தலும் இருத்தனிமித்தமும; இரங்கலும் இரங்கனிமித்தமும்; ஊடலும் ஊடனிமித்தமும் என்ற பத்தும் ஆராயுங்காலே ஐந்திணைக்கும் உரிப்பொருளாம் என்றவாறு.

தேருங்காலே என்றதனாற் குறிஞ்சிக்குப் புணர்ச்சியும், பாலைக்குப் பிரிவும், முல்லைக்கு இருத்தலும், நெய்தற்கு இரங்கலும், மருதத்திற்கு ஊடலும், அவ்வந்நிமித்தங்களாலும் உரித்தென்று ஆராய்ந்துணர்க. இக்கருத்தே பற்றி 'மாயோன்மேய'* என்பதனுள் விரித்துரைத்தவாறுணர்க.

அகப்பொருளாவது புணர்ச்சியாகலானும் அஃது இருவர்க்கும் ஒப்ப நிகழ்தலானும் புணர்ச்சியை முற்கூறிப், புணர்ந்துழியல்லது பிரிவின்மையானும் அது தலைவன் கண்ணதாகிய சிறப்பானுந் தலைவி பிரிவிற்குப் புலனெறி வழக்கின்மையானும் பிரிவினை அதன் பிற்கூறிப், பிரிந்துழித் தலைவி ஆற்றியிருப்பது முல்லையாகலின் இருத்தலை அதன்பிற் கூறி, அங்ஙனம் ஆற்றியிராது தலைவனேவலிற் சிறிது வேறுபட்டிருந்து இரங்கல் பெரும்பான்மை தலைமகளதே யாதலின் அவ் விரங்கற்பொருளை அதன்பிற் கூறி, இந்நான்கு பொருட்கும் பொதுவாதலானுங் காமத்திற்குச் சிறத்தலானும் ஊடலை அதன்பிற் கூறி இங்ஙனம் முறைப்படுத்தினார்.

நான்கு நிலத்தும் புணர்ச்சி நிகழுமேனும் முற்பட்ட புணர்ச்சியே புணர்தற் சிறப்புடைமையிற் குறிஞ்சியென்று அதனை முற்கூறினார். அவை இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடும் பாங்கற் கூட்டமுந் தோழியிற்கூட்டமும் அதன் பகுதியாகிய இருவகைக் குறிக்கண் எதிர்ப்பாடும் போல்வன. தலைவன் தோழியைக் குறையுறும் பகுதியும் ஆண்டுத் தோழி கூறுவனவுங் குறைநேர்தலும் மறுத்தலும் முதலியன புணர்ச்சி நிமித்தம்.

இனி, ஓதலுந் தூதும் பகையும் அவற்றின் பகுதியும் பொருட்பிரிவும் உடன்போக்கும் பிரிவு. 'ஒன்றுதமரினும் பருவத்துஞ் சுரத்துந்'† தோழியொடு வலித்தன் முதலியன பிரிதனிமித்தம். பிரிந்தபின் தலைவி வருந்துவனவுந் தோழி யாற்றுவித்தனவும் பாலையாதலிற் பின்னைருகாற் பிரிதற்கும் நிமித்தமாம்; அவை பின்னர்ப் பிரியும் பிரிவிற்கு முன்னிகழ்தலின்.

இனித் தலைவி, பிரிவுணர்த்தியவழிப் பிரியாரென்றிருத்தலும், பிரிந்துழிக் குறித்தபருவ மன்றென்று தானே கூறு

* தொல்-பொருள்-இ. † தொல்-பொருள்-சக.

தலும், பருவம் வருந்துணையும் ஆற்றியிருந்தமை பின்னர்க் கூறுவனவும் போல்வன இருத்தல். அப் பருவம் வருவதற்கு முன்னர்க் கூறுவன முல்லைசான்ற கற்பன்மையிற் பாலையாம். இனிப் பருவங்கண்டு ஆற்றுது தோழி கூறுவனவும், பருவமன்றென்று வற்புறுத்தினவும், வருவரென்று வற்புறுத்தினவுந், தலைவன் பாசறைக்கண் இருந்து உரைத்தனவும், அவைபோல்வனவும் நிமித்தமாதலின் இருத்த னிமித்தமெனப்படும்.

இனிக் கடலுங் கானலுங் கழியுங் காண்டொறும் இரங்கலும், தலைவன் எதிர்ப்பட்டு நீங்கியவழி இரங்கலும், பொழுதும் புணர்துணைப் புள்ளுங் கண்டு இரங்கலும் போல்வன இரங்கல். அக்கடல் முதலியனவுந், தலைவன் நீங்குவனவு மெல்லாம் நிமித்தமாம்.

புலவி முதலியன ஊடலாம். பரத்தையும் பாணனும் முதலியோர் ஊடனிமித்தமாம்.

ஏனையவும் வழக்கியலான் நால்வகை நிலத்துஞ் சிறுபான்மை வருமேனும், பெரும்பான்மை இவை உரியவென்றற்குத் 'தினைக் குரிப் பொருளே' யென்றார்.

உரிமை குணமாதலின் உரிப்பொருள் பண்புத்தொகை.

உதாரணம் :—

"கோட லெதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிணர்க் குவளையோ டிடைப்பட விரைஇ
யைதெதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோண் மேனி
முறியினும் வாயது முயங்கற்கு மினிதே." (குறு-கூஉ)

இக் குறுந்தொகை புணர்ந்துழி மகிழ்ந்து கூறியது.

"அல்குபட ரூழ்ந்த வரிமதர் மழைக்கட்
பல்பூம் பகைத்தழை நுடங்கு மல்குற்
றிருமணி புரையு மேனி மடவோ
ளியார்மகள் கொல்லிவ டந்தை வாழியர்
துயர முறீஇயின ளெம்மே யகல்வய
லரிவன ரரிந்துந் தருவனர் பெற்றுந்
தண்சேறு தாய மதனுடை நோன்ருட்
கண்போ னெய்தல் போர்விற் பூக்குந்
திண்டேர்ப் பொறையன் றொண்டி
தன்றிறம் பெறுகவிவ ளீன்ற தாயே." (நற்றிணை-அ)

இந் நற்றிணையும், "முலையே முகிழ்முகிழ்த் தனவே"* என்னுங் குறுந்தொகையும் புணர்தனிமித்தம்.

* குறுந்தொகை-கூகூசு.

"அன்றவண் ஒழிந்தன்றும் இலையே வந்தணி
வருந்தினே வாழியெ னெஞ்சே பருந்திருந்
துயாவிளி பயிற்றும் யாவுயர் நனந்தலை
உருள்துடி மகுளியின் பொருள்தெரிந் திசைக்குங்
கடுங்குரற் குடிஞையு நெடும்பெருங் குன்றம்
எம்மொ டிறதலுஞ் செல்லாய் பின்னின்
ரொழியச் சூழ்ந்தனே யாயிற் றவிராது
செல்வினிச் சிறக்கநின் னுள்ளம் வல்லே
மறவல் ஓம்புமதி எம்மே நறவின்
சேயிதழ் அனைய வாகிக் குவளை
மாயிதழ் புரையு மலிகொள் ஈரிமை
உள்ளகங் கனல உள்ளுதொ றுலறிப்
பழங்கண் கொண்ட கதழ்ந்துவீழ் அவிரறல்
வெய்ய வுகுதர வெரீஇப் பையெனச்
சில்வளை சொரிந்த மெல்லிறை முன்கைப்
பூவீ கொடியிற் புல்லெனப் போகி
யடர்செய் ஆயகல் சுடர்துணை யாக
இயங்காது வதிந்தநங் காதலி
யுயங்குசாய் சிறுபுற முயங்கிய பின்னே." (அகம்-கக)

இது மறவலோம்புமதியெனப் பிரிவு கூறிற்று.

"அறியாய் வாழி தோழி யிருளற
விசும்புடன் விளங்கும் விரைசெலல் திங்கிரிக்
கடுங்கதி ரெறித்த வீடுவாய் நிறைய
நெடுங்கால் முருங்கை வெண்பூத் தாஅய்
நீர வறந்த நிரம்பா நீளிடை
வள்ளெயிற்றுச் செந்நாய் வருந்துபசிப் பிணவொடு
கள்ளியங் காட்ட கடத்திடை உழிஞ்சில்
உள்ளுநன் வாடிய சுரிமுக்கு நொள்ளை
பொரியரை புதைத்த புலம்புகொள் இயவின்
விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல் இன்னிழல் வதியும்
அருஞ்சுரக் கவலை நீந்தி யென்றும்
இல்லோர்க் கில்லென் றியைவது கரத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்
பொருளே காதலர் காதல்
அருளே காதல ரென்றி நீயே." (அகம்-கிஉ)

இது பிரிதனிமித்தம். வற்புறுத்துந் தோழிக்குத் தலைவி கூறியது.

"வண்டுபடத் தைதந்த கொடியிணர் நிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் ரேன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானங் காரெனக் கூறினும்
யாஞை தேறேனவர் பொய்வழங் கலரே." (குறு-உக)

இது பருவங்கண்டழியும் பொய் கூறுரென்று ஆற்றி யிருந்தது.

"அவரோ வாரார் மூல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத் தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை யிடைமகன் சென்னி
சூடிய வெல்லாஞ் சிறுபசு முகையே." (குறு-உஉக)

இது பருவங்கண்டாற்றாது கூறியது. இது முல்லைசான்ற கற்பாயிற்று; அவன் கூறிய பருவம் வருந்துணையும் ஆற்றியிருத்தலின்.

"மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா வளவை நெரிதரத்
கொம்புசேர் கொடியிண ரூழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே." (குறு-சுசு)

இது பருவமன்றென்று வற்புறுத்தலின் இருத்தனிமித்த மாயிற்று. "தேம்படு சிமய"* என்னுங் கலிற்றியானை நிரையும் இருத்தனிமித்தமாம்; இக்காலம் வருந்துணையும் ஆற்றினனெனத் தான் வருந்துதலின்.

"கானலுங் கழறுது கழியுங் கூறுது
தேனிமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியா
தொருநின் னல்லது பிறிதியாதும் இலனே
இருங்கழி மலர்ந்த கண்போ னெய்தல்
கமழிதழ் நாற்றம் அமிழ்தென நசைஇத்
தண்டா தூதிய வண்டினங் களிசிறந்து
பறையிய தளருந் துறைவனே நீயே
சொல்லல் வேண்டுமால் அலவ பல்காற்
கைதையம் படுசினை யெவ்வமொ டசாஅங்
கடற்சிறு காக்கை காமர் பெடையொடு
கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்
வெள்ளிரைக் கனவும் நள்ளென் யாமத்து
நின்னுறு விழுமங் களைந்தோள்
தன்னுறு விழுமம் நீந்துமோ வெனவே." (அகம்-கஎ0)

இவ் அகப்பாட்டு நெய்தல், இரங்கலுரிப்பொருட்டாயிற்று.

"ஞாயிறு பட்ட வகல்வாய் வானத்
தளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
யிறையுற வோங்கிய நெறியயன் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
விரைகொண் டவையும் விரையுமாற் செலவே." (குறு-கூஉ)

இஃது இரங்கனிமித்தம்.

"தருக்கேம் பெருமநின் னல்கல் விருப்புற்றுத்
தாழ்ந்தாய்போல் வந்து தகவில செய்யாது

* அகநானூறு-கூச.

சூழ்ந்தவை செய்தமற் றெம்மையு முள்ளுவாய்
வீழ்ந்தார் விருப்பற்றக் கால்." (கலி-சுக)

இஃது ஊடல்.

*"பரியுடை நன்மான் பொங்குளே யன்ன
வடைகரை வேழம் வெண்பூப் பகருந்
தண்டுரை யூரன் பெண்டிர்
† துஞ்சும் யாமத்துந் துயிலறி யலரே." (ஐங்குறு-கஉ)

இஃது ஊடனிமித்தம்.

பிறவும் வேறுபட வருவனவெல்லாம் அறிந்து இதன்கண் அடக்கிக்கொள்க. (கச)

கரு. கொண்டுதலைக் கழியினும் பிரிந்தவ ணிரங்கி
உண்டென மொழிப ஓரிடத் தான. [னும்

இது முற்கூறிய ஐந்தனுட் பாலைக்கட் குறிஞ்சி மயங்கு மாறும் நெய்தன்மயங்குமாறுங் கூறுகின்றது.

(இ - ள்.) கொண்டு தலைக்கழியினும்—தலைவன் தலைவியை உடன்கொண்டு அவள் தமரிடத்து நின்று பிரியினும்; பிரிந்து அவண் இரங்கினும்—தலைவன் உடன்கொண்டு போகாது தானே போதலில் தலைவி மனையின்கண் இருந்து இரங்கினும்; ஓரிடத்தான—இவ்விரண்டும் ஓரிடத்தின் கண்ணே ஒரொழுக்க மாயின; உண்டென மொழிப—இவ்வொழுக்கந்தான் நான்கு வருணத்திலும் வேளாண் வருணத்திற்கு உண்டென்று சொல்லு வர் ஆசிரியர் என்றவாறு.

கொண்டு தலைக்கழிதலால் இடையூறின்றிப் புணர்ச்சி நிகழு மெனினும், பிரிவு நிகழ்ந்தவா றென்னையெனின்,

"இடைச்சுர மருங்கி னவடம ரெய்திக்
கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞ ரெய்தி."
(தொல்-பொருள்-சக)

என மேலை கூறுவாராதலிற் றந்தையுந் தன்னையருந் தேடிப் பின் வந்து இவரொழுக்கத்திற்கு இடையூறுசெய்வரென் னுங் கருத்தே இருவருள்ளத்தும் பெரும்பான்மை நிகழ்தலிற் பிரிவுநிகழ்ந்த வாறுயிற்று. ஆகவே பாலைக்கண்ணே குறிஞ்சி நிகழ்ந்ததாயிற்று.

உதாரணம்:—

"வேனிற் பாதிரிக் கூனி மாமலர்
நறைவாய் வாடல் நாறு நாட்சுரம்

(பாடம்) * 'புரியுடை,' 'புரிவுடை.' † 'துஞ்சூர் யாமத்தும்.'

அரியார் சிலம்பிற் சீறடி சிவப்ப
எம்மொ டொராறு படீஇயர் யாழநின்
பொம்ம லோதி பொதுள வாரி
அரும்பற மலர்ந்த வாய்பூ மராஅத்துச்
சுரும்புசூ ழலரி தைஇ வேய்ந்தநின்
தேம்பாய் கூந்தற் குறும்பல மொசிக்கும்
வண்டுகடிந் தோம்பல் தேற்றாய் அணிகொள
நுண்கோ லெல்வளை தெளிர்க்கும் முன்கை
மெல்லிறைப் பணைத்தோள் விளங்க வீசி
வல்லுவை மன்னுல் நடையே கள்வர்
பகைமிகு கவலைச செஞ்னெறி காண்மார்
மிசைமரஞ் சேர்த்திய கவைமுறி யாஅத்து
நாரரை மருங்கின் நீர்வரப் பொளித்துக்
களிறு சுவைத்திட்ட கோதுடைத் ததரல்
கல்லா உமணர்க்குத் தீமூட் டாகுந்
துன்புறு தகுந ஆங்கண் புன்கோட்டு
அரிலிவர் புற்றத் தல்கிரை நசைஇ
வெள்ளரா மிளிர வாங்கும்
பிள்ளை யெண்கின் மலைவயி னுனே.” (அகம்-உகிஎ)

இது கொண்டு தலைக்கழிதற்கண் தலைவன் நடையை வியந்தது. இஃது அகம். “அழிவிலர் முயலும்”* என்பது பாலைக் கட் புணர்ச்சி நிகழ்ந்தது.

இனித் தலைவி பிரிந்திருந்த மிகவும் இரங்குதலின் இரங்கினுமெனச் சூத்திரஞ்செய்தான், அதனுனே பாலைப்பொருட்கண் இரங்கற்பொருள் நிகழுமென்றான்.

உதாரணம் :—

“ஓங்குமலைச் சிலம்பிற் பிடவுடன் மலர்ந்த
வேங்கை வெறித்தழை வேறுவகுத் தன்ன
ஊன்பொதி யவிழாக் கோட்டுகிர்க் குருளை
மூன்றுட னீன்ற மூடங்கர் நிழத்த
துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தெனப்
பொறிகிள ருழுவைப் பேழ்வா யேற்றை
யறுகோட் டுழைமான் ஆண்குர லோர்க்கும்
நெறிபடு கவலைய நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றுஞ்
செலவயர்ந் திகிஞல் யானே பலபுலந்
தண்ணு வுயக்கமொ டியிர்செலச் சாஅய்த்
தோளுந் தொல்கவின் றுலைய நாளும்
பிரிந்தோர் பெயர்வுக் கிரங்கி
மருந்துபிறி தின்மையின் இருந்துவினை யிலனே.”
(அகம்-கசஎ)

* கற்றிணை-கூ.

இதனுள் வெள்ளிவீதியைப்போலச் செல்லத்துணிந்தியான் பலவற்றிற்கும் புலந்திருந்து பிரிந்து ஒரிடத்தினின்றும் பிரிந்த பெயர்வுக்குத் தோணலந்தோலிய உயிர்செலச் சாஅய் இரங்கிப் பிறிது மருந்தின்மையிற் செயலற்றேனென மிகவும் இரங்கிய வாறு மெய்ப்பாடுபற்றி யுணர்க. இஃதும் அகம்.

"வானமூர்ந்த"* என்னும் அகப்பாட்டினுண் "மெய்புகு வன்ன கைகவர் முயக்க-மவரும் பெறுகுவர் மன்னே" எனக் கூறி, அழுதன் மேவாவாய்க் கண்ணுந் துயிலுமென இரக்கமீக் கூறியவாறு முணர்க "குன்றியன்ன"† என்னும் அகப்பாட்டும் அது. இவை பாலைக்கண் இரங்கல் நிகழ்ந்தன. இங்ஙனம் இச்சூத்திரவிதி உண்மையிற் சான்றோர் அகத்தினுங் கபியினும் ஐங்குறு நூற்றினும் பாலைக்கண்ணே உடன்போக்கு நிகழ்ந்த செய்யுட்களைக் கோத்தாரென் றுணர்க.

இல்லிருந்து செந்தீயோம்பல் வேளாளர்க்கு இன்மையிற் கொண்டுதலைக்கழிதல் அவர்க்கு உரியதாயிற்று. ஒழிந்த மூன்று வருணத்தோருந் தமக்கு உரிய பிரிவின்கட் செந்தீயோம்பு வாரை நாட்டிப் பிரிப; ஆகலான், அவர்க்கு ஏனைப் பிரிவுகள் அமைந்தன. இதனைக் "கொடுப்போ ரின்றியுங் கரணமுண்டே"‡ எனக் கற்பியலிற் கரணம் வேறுகக் கூறுமாறு ஆண்டுணர்க. "வேர் முழுதலறினின்ற"§ என்னும் மணிமிடைபவளத்துட் "கூழுடைத் தந்தையிடனுடை வரைப்பி, னூழடி யொதுங்கினு முயங்கும்" எனவுங் "கிளியும்பந்தும்"¶ என்னும் களிற்றியானை நிரையுள $"அல்குபத மிகுத்த கடியுடை வியனகர்" எனவும், நெல்லுடைமை கூறிய அதனனே வேளாண் வருணமென்பது பெற்றும். (கடு)

கசு. கலந்த பொழுதும் காட்சியும் அன்ன.

இதுவும் பாலைக்கட் குறிஞ்சி மயங்கு மென்கின்றது.

(இ - ள்.) கலந்த பொழுதும் காட்சியும் — இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த காலமும் அதன் முன்னர்த்தாகிய வழிநிலைக் காட்சி நிகழ்ந்த காலமும்; அன்ன — மூன்னர்ச்சூத்திரத்துட் கொண்டுதலைக் கழிந்த காலத்தை உடைய என்றவாறு.

என்றது, முன்னர்க் குறிஞ்சி பாலைக்குரிய இருவகை வேனிற்கண் நிகழ்ந்தாற்போல இவையும் இருவகை வேனிற் கண் நிகழுமென்றவாறு. மழைகூர் காலத்துப் புறம்போந்து

---

* அகம்-கக. † அகம்-கஙக. ‡ தொல்-பொருள்-கசஙக.
§ அகம்-கசடு. ¶ அகம்-சசு. $ (பாடம்) 'மல்குபதம்.'

விரோயாடதலின்மையின் எதிர்ப்பட்டுப் புணர்தல் அரிதாகலானும், அதுதான் இன்பஞ்செய்யாமையானும் இருவகை வேனிற் காலத்தும் இயற்கைப்புணர்ச்சி நிகழுமென்றது இச்சூத்திரம்.

முன்னர்க் கூதிரும் யாமமும் முன்பனியுஞ் சிறந்ததென்றது, இயற்கைப்புணர்ச்சிப் பின்னர்க் களவொழுக்கம் நிகழ்தற்குக் காலமென்றுணர்க.

அது,

"பூவொத் தலமருந் தகைய வேவொத்
தெல்லாரு மறிய நோய்செய் தனவே
தேமொழித் திரடாட மென்ரூண் மாமலைப்
பரீஇ வித்திய வேனற்
குரீஇ யோப்புவாள் பெருமழைக் கண்ணே." (குறு-எஉ)

என வரும்.

இக்குறுந்தொகையுட் குரீஇயோப்புவாள் கண்ணெனவழி நிலைக் காட்சியைப் பாங்கற்குக் கூறினமையின் அத்திணைக்கதிர் முற்றுதற்கு உரிய இளவேனிலும் பகற்பொழுதுங் காட்சிக்கண் வந்தன. "கொங்குதேர் வாழ்க்கை"* என்பதும் இளவேனிலாயிற்று; தும்பி கொங்கு தேருங் காலம் அதுவாகலின். கலத்தலுங் காட்சியும் உடனிகழுமென்றுணர்க; கலத்தலின்றிக் காட்சி நிகழ்ந்ததேல், உள்ளப் புணர்ச்சியேயாய் மெய்யுறு புணர்ச்சியின்றி வரைந்துகொள்ளுமென்றுணர்க. (கசு)

களவு. முதலெனப் படுவ தாயிரு வகைத்தே.

இது முற்கூறிய முதற்பகுதியைத் தொகுத்து எழுதிணையும் இவ்வாற்றானுரிய வென்கின்றது.

(இ - ள்.) முதல் எனப் படுவது—முதலென்று கூறப்படும் நிலனும் பொழுதும்; அ இரு வகைத்து—அக்கூறியவாற்றான் இருவகைப்படும் யாண்டும் என்றவாறு.

இது 'கூறிற்றென்ற'† லென்னும் உத்திவகை. இதன்பயன் முதல் இரண்டுவகை என்றவாறும். தமக்கென நிலனும் பொழுதும் இல்லாத கைக்கிளையும் பெருந்திணையும் நிலனில்லாத பாலையும் பிறமுதலோடு மயங்கிற்றேனும் அவை மயங்கிய நிலனும் பொழுதும் அவ்வத்திணைக்கு முதலெனப்படுமென்பதாம். இது முன்னின்ற சூத்திரத்திற்கும் ஒக்கும். (களவு)

* குறுந்தொகை-உ. † தொல்-பொருள்-சுசுடு.

கஅ. தெய்வம் உணவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப.

இது நிறுத்தமுறையானேயன்றி அதிகாரப்பட்டமையின் உரிப்பொருள் கூறி ஒழிந்த கருப்பொருள் கூறுதனுதலிற்று.

(இ - ள்.) தெய்வம் உணவே மா மரம் புள் பறை செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ—எல்லாத் திணைக்குந் தெய்வம் உண வினங்கு மரம் புள்ளுப் பறை தொழிலென்று இவற்றை யாழின் கூற்றோடே கூட்டி; அவ்வகை பிறவும் கரு என மொழிப—அவைபோல்வன பிறவுங் கருவென்று கூறுவா ஆசிரி யர் எ - று.

யாழின் பகுதி என்றதனன் மற்றையபோலாது பாலைக்குப் பாலை யாழென வேறு வருதல் கொள்க. 'அவ்வகை பிறவும்' என்றதனன் எடுத்தோதிய தெய்வம் ஒழிய அவற்று உட் பகுதியாகிய தெய்வமும் உள: அவை 'மாயோன்மேய'* என் புழிக் காட்டினும். இதனனே பாலைக்குத் தெய்வமும் இன்று யிற்று. இன்னும் 'அவ்வகை' என்றதனனே பாலைக்கு நிலம் பற்றாது காலம்பற்றிக் கருப்பொருள் வருங்காற் றம்மியல்பு திரியவருவனவும் வருமென்று கொள்க. 'எந்நில மருங்கிற் பூ' என்பதனுற் பூவும் புள்ளும் வரையின்றி மயங்குமெனவே ஒழிந்த கருவும் மயங்குமென்பது 'சூத்திரத்துப் பொருளன்றி யும்'† என்பதனன் உரையிற்கொள்க. அது "அலர்ந்திகழ் நறுங்கொன்றை"‡ என்னும் நெய்தற்கலியுட் காண்க.

முல்லைக்கு உணவு, வரகுஞ் சாமையும் முதிரையும்; மா, உழை யும் புல்வாயும் முயலும்; மரம், கொன்றையுங் குருந்தும்; புள், கானக்கோழியுஞ் சிவலும்; பறை, ஏறுகோட்பறை; செய்தி, கிரை மேய்த்தலும் வரகுமுதலியன கூளகட்டலும் கடாவிடுத லும்; யாழ், முல்லையாழ். பிறவுமென்றதனல், பூ, முல்லையும் பிடவுந் தளவுந் தோன்றியும்; நீர் கான்யாறு; ஊர், பாடியுஞ் சேரியும் பள்ளியும்.

குறிஞ்சிக்கு உணவு, ஐவனநெல்லுந் திணையும் மூங்கிலரிசியும்; மா, புலியும் யானையுங் கரடியும் பன்றியும்; மரம் அகிலும் ஆர மூந் தேக்குந் திமிசும் வேங்கையும்; புள் கிளியும் மயிலும்; பறை முருகியமுந் தொண்டகப்பறையும்; செய்தி, தேன் அழித்தலுங்

* தொல்-பொருள் - இ. † தொல்-பொருள் - சுஇஅ. ‡ கலித் தொகை - கஇ0.

கிழங்கு அகழ்தலுங் கிணைமுதலியன விளைத்தலுங் கிளிகடிதலும்; யாழ், குறிஞ்சியாழ். பிறவுமென்றதனால், பூ காத்தலும் வேங் கையுஞ் சுனைக்குவளையும்; நீர், அருவியுஞ் சுனையும்; ஊர், சிறு குடியுங் குறிச்சியும்.

மருதத்திற்கு உணு, செந்நெல்லும் வெண்ணெல்லும்; மா, எருமையும் நீர்நாயும்; மரம் வஞ்சியுங் காஞ்சியும் மருதமும்; புள் தாராவும் நீர்க்கோழியும்; பறை, மணமுழவும் நெல்லரிகிணை யுப; செய்தி, நடுதலுங் களைகட்டலும் அரிதலுங் கடாவிடுதலும்; யாழ், மருதயாழ் பிறவுமென்றதனால், பூ, தாமரையுங் கழுநீரும்; நீர், யாறுநீரும் மனைக்கிணறுமை பொய்கையும்; ஊர், ஊர்க ளென்பனவேயாம்.

நெய்தற்கு உணு, மீன்விலையும் உப்புவிலையும்; மா, உமண் பகடு போலவை; முதலையுஞ் சுறவும் மீனுதலின் மாவென்றல் மரபன்று. மரம், புன்னையும் ஞாழலுங் கண்டலும்; புள், அன்ன மும் அன்றிலும் முதலியன; பறை, மீன்கோட்பறை; செய்தி, மீன்படுத்தலும் உப்பு விளைத்தலும் அவை விற்றலும்; யாழ், நெய்தல்யாழ். பிறவுமென்றதனால், பூ, கைதையும் நெய்தலும்; நீர், மணற்கிணறும் உவர்க்குழியும்; ஊர், பட்டினமும் பாக்கமும்.

இனிப் பாலைக்கு உணு, ஆறலைத்தலுஞ் சூறைகொண்டன வும்; மா, வலியழிந்த யானையும் புலியுஞ் செந்நாயும்; மரம், வற்றின இருப்பையும் ஓமையும் உழிஞையும் ஞெமையும்; புள், கழுகும் பருந்தும் புறவும்; பறை, சூறைகோட்பறையும் நிரை கோட்பறையும்; செய்தி, ஆறலைத்தலுஞ் சூறைகோடலும்; யாழ், பாலையாழ். பிறவுமென்றதனால்; பூ, மராவும் குராவும் பாதிரியும்; நீர், அறுநீர்க்கூவலுஞ் சுனையும்; ஊர், பறந்தலை.

இன்னும் பிறவுமென்றதனானே இக் கூறியவற்றிற்குரிய மக்கள் பெயருந் தலைமக்கள் பெயருங் கொள்க. 'அவை பெய ரும் வினையும்'* என்னுஞ் சூத்திரத்துட் காட்டுதும். பிறவு மென்றதனாற் கொளவன, சிறுபான்மை திரிவுபடுதலிற், பிறவு மென்று அடக்கினார். (கஅ)

கக. எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்.

இது முற்கூறிய கருப்பொருட்குப் புறனடை.

---

* தொல்-பொருள்-உ0.

(இ - ள்.) எங்கில மருங்கிற் பூவும் புள்ளும்—எழுதிணை நிகழ்ச்சியவாகிய நால்வகை நிலத்துப் பயின்ற பூவும் புள்ளும்; அங்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்—தத்தமக்கு உரிய வாகக் கூறிய நிலத்தொடுங் காலத்தொடும் நடவாமற் பிற நிலத் தொடுங் காலத்தொடும் நடப்பினும்; வந்த நிலத்தின் பயத்த ஆகும்—அவை வந்த நிலத்திற்குக் கருப்பொருளாம எ - று.

ஒடு அதனோடியைந்த ஒருவினைக்கிளவியாதலின் உடன் சேறல் பெரும்பான்மையாயிற்று. 'வினைசெய் யிடத்தி னிலத் திற் காலத்தின்'* என்பதனுன் நிலத்தின் பயத்தவாமெனப் பொழுதினையும் நிலமென்று அடக்கினர் பூவைக் கருவென ஒகிற்றிலரேனும் முற்கூறிய மரத்திற்குச் சினையாய் அடங் கிற்று. ஒன்றென முடித்தலான் நீர்ப்பூ முதலியனவும் அடங் கும். இங்ஙனம் வருமிடஞ் செய்யுளிடமாயிற்று.

உதாரணம் :—

"தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள செய்குறி நீவரின்." (கலி-இஉ)

இது மருதத்துப்பூ, குறிஞ்சிக்கண் வந்தது.

"உடையிவ ளுயிர்வாழா ணீநீப்பி னெனைப்பல
விடைகொண்டி யாமிரப்பவு மெமகொள்ளா யாயினை
கடைஇய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
யடையொடு வாடிய வணிமலர் தகைப்பன." (கலி-ஈ)

இது மருதத்துப்பூ, பாலைக்கண் வந்தது.

"கன்மிசை மயிலாலக் கறங்கியூ ரலர்தூற்றத்
தொன்னல நனிசாய நம்மையோ மறந்தைக்க
வொன்னுதார்க் கடந்தடூ முரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல்விளையாட்டும் விரும்பார்கொல்"
(கலி-உஎ)

இது குறிஞ்சிக்குப் பயின்ற மயில் பாலைக்கண் இளவேனிற் கண் வருதலிற் பொழுதொடு புள்ளு மயங்கிற்று. கபிலர் பாடிய பெருங்குறிஞ்சியில் (பத்-குறிஞ்சிபபாட்டு) வரைவின்றிப் பூமயங் கியவாறு காண்க. பிறவும் இவ்வாறு மயங்குதல் காண்க. ஒன்றென முடித்தலாற் பிற கருப்பொருண் மயங்குவன உள வேனுங்கொள்க. (கக)

உ0. பெயரும் வினையுமென் றுயிரு வகைய
திணைதொறு மரீஇய திணை நிலைப் பெயரே.

* தொல்-சொல்-அக.

இது 'பிறவு'* மென்றதனைத் தழுவிய பெயர்ப்பகுதி கூறுகின்றது.

(இ - ள்.) திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயர்—நால்வகை நிலத்தும் மரீஇப்போந்த குலப்பெயருந் திணைநிலைப் பெயரும் உரிப்பொருளிலே நிற்றலையுடைய பெயரும்; பெயரும் வினையுமென்று அ இருவகைய—பெயர்ப்பெயரும் வினைப்பெயரு மென்று அவ்விரண்டு கூற்றையுடையவாம் எ - று.

நால்வகை நிலத்தும் மருவிய குலப்பெயராவன :—குறிஞ்சிக்குக் கானவர் வேட்டுவர் இறவுளர் குன்றுவர் வேட்டுவித்தியர் குறத்தியர் குன்றுவித்தியர்; ஏனைப் பெண்பெயர் வருமேனும் உணர்க. முல்லைக்குக் கோவலர் இடையர் ஆயர் பொதுவர் இடைச்சியர் கோவித்தியர் ஆய்ச்சியர் பொதுவியர். நெய்தற்கு நுளையர் திமிலர் பரதவர் நுளைத்தியர் பரத்தியர்; ஏனைப் பெண் பெயர் வருமேனும் உணர்க. மருதத்திற்குக் களமர் உழவர் கடையர் உழத்தியர் கடைச்சியர்; ஏனைப் பெண்பெயர் வருமேனும் உணர்க.

மூன்னர் 'வந்த நிலத்தின்பயத்த'† என்புழிக் காலத்தையும் உடன்கோடலின் ஈண்டுந் திணைதொறு மருவுதலும் பொழுதொடு மருவுதலும் பெறப்படுதலிற் பொழுது முதலாக வரும் பாலைக்குத் திணைதொறு மரீஇய பெயருந் திணைநிலைப்பெயருங் கொள்க. எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர் எனவும் மீளிவிடலை காளை எனவும் வரும்.

இனி உரிப்பொருட்குரிய தலைமக்கள் பெயராவன, பெயர்ப் பெயரும் நாடாட்சிபற்றிவரும் பெயருமாம். குறிஞ்சிக்கு வெற்பன் சிலம்பன் பொருப்பன், கொடிச்சி; இஃது ஆண்பாற் கேலாத பெயராயினும் நிலை யென்றதனைக் கொள்க. முல்லைக்கு அண்ணல் தோன்றல் குறும்பொறைநாடன், மனைவி. நெய்தற்குக் கொண்கன் துறைவன் சேர்ப்பன் மெல்லம்புலம்பன். தலைவிபெயர் வந்துழிக் காண்க. மருதத்திற்கு மகிழ்நன் ஊரன், மனையோள் எனவரும். இக் காட்டிய இருவகையினும் பெயர்ப் பெயரும் வினைப்பெயரும் பாடலுட் பயின்ற வகையாற் பொருளுணர்க்கியுணர்க.

ஈண்டுக் கூறிய திணைநிலைப்பெயரை 'ஏவன் மரபின்'‡ என்னுஞ் சூத்திரத்து அறுவகையெனப் பகுக்குமாறு ஆண்டுணர்க. (உ0)

* தொல்-பொருள்-கக. † தொல்-பொருள்-உச.
‡ தொல்-பொருள்-கஅ.

உக. ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வருஉங் கிழவரும் உளரே.

இது முன்னர்த் திணைதொறுமரீஇய பெயருடையோரினும் திணைநிலைப்பெயராகிய தலைமக்களாய் வழங்குவாரும் உளரென முல்லைக்குங் குறிஞ்சிக்கும் எய்தாததெய்துவித்தது.

(இ - ள்.) ஆடூஉத் திணைப்பெயர்—முற்கூறிய ஆண்மக்களாகிய திணைதொறு மரீஇய பெயர்களுள்; ஆயர் வேட்டுவர் வருஉங் கிழவரும் உளர்—ஆயரிலும் வேட்டுவரிலும் வருங் கிழவரும் உளர்; ஆ வயின் (வருஉங் கிழவியரும் உளர்)—அவ்விடத்து வருந் தலைவியரும் உளர் எ - று.

ஆயர் வேட்டுவரென்னும் இரண்டு பெயரே எடுத்தோதினரேனும் ஒன்றென முடித்தலான் அந்நிலங்கட்கு உரிய ஏனைப் பெயர்களான் வருவனவுங் கொள்க.

"தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாந்
தாம்பிற் பிணித்து மனைநிறீஇ யாய்தந்த
பூங்கரை நீலம் புடைதாழ மெய்யசைஇப் பாங்கரு
முல்லையுந் தாய பாட்டங்காற் றேழிரும்
புல்லினத் தாயர் மகளிரோ டெல்லா
மொருங்கு விளையாட வவ்வழி வந்த
குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன் மற்றென்னை
முற்றிழை யேஎர் மடநல்லாய் நீயோடுஞ்
சிற்றில் புனைகோ சிறிதென்ற னெல்லாநீ
பெற்றேம்யா மென்று பிறர்செய்த வில்லிருப்பாய்
கற்ற திலமன்ற காணென்றேன் முற்றிழாய்
தாதுசூழ் கூந்த றகைபெறத் தையல
கோதை புனைகோ நினக்கென்ற னெல்லாநீ
யேதிலார் தந்தபூக் கொள்வாய் *நனிமிகப்
பேதையை மன்ற பெரிதென்றேன் மாதரா
யைய பிதிர்ந்த சுணங்கணி மென்முலைமேற்
றெய்யி லெழுதுகோ மற்றென்றான் யாம்பிறர்
செய்புற நோக்கி யிருத்துமோ நீபெரிது
மையலை மாதோ விடுகென்றேன் றையலாய்
சொல்லிய வாறெல்லா மாறுமா றியான்பெயர்ப்ப
வல்லாந்தான் போலப் பெயர்ந்தா னவனோநீ
யாயர் மகளி ரியல்புரைத் தெந்தையும்
யாயு மறிய வுரைத்தீயின் யானுற்ற
நோயுங் களைகுவை மன்."
(கலி-கக௯)

"ஆயர் மகனையுங் காதலை கைம்மிக
ஞாயையு மஞ்சுதி யாயி னரிதரோ
நீயுற்ற நோய்க்கு மருந்து."
(கலி-க0எ)

(பாடம்) * 'இனிமிக.'

"தோழிநாம்
காணுமை யுண்ட கடுங்கள்ளே மெய்கூர
நாணுது சென்று நடுங்க வுரைத்தாங்குக்
கரந்ததூஉங் கையொடு கோட்பட்டாங் கண்டாய்நம்
புல்லினத் தாயர் மகன்." (கலி-ககஎ)

என்றாற் போல்வன பிறவும் வருவன கொள்க.

இன்னும் "ஏனலு மிறங்குகதி ரிறுத்தன"* என்னும் அகப் பாட்டினுள் "வானிணப் புகவிற் கானவர் தங்கை" எனவும், "மெய்யிற்றீரா"† என்பதனுள் "வேட்டுவற் பெறலோ டமைந்தீன" எனவும் வருவனவும் பிறவுங் கொள்க; வேட்டு என்னுந் தொழிலுடையானே வேட்டுவனென்றலிற் குறிப்பு வினைப் பெயர்.

"குன்றக் குறவன் காதன் மடமகள்
வண்டுபடு கூந்தற் றண்டழைக் கொடிச்சி
வளையண் ‡முளைவா ளெயிற்ற
ளிளைய ளாயினு §மாரணங் கினளே." (ஐங்குறு-உருசு)

இது வருத்தம் பருவதத்தளல்லள என்ற தோழிக்குக் கூறியது. இப்பத்தினுட் 'குறவன மகள்" எனக் கூறுவன பல பாட்டுக்கள் உள; அவையுங் கொள்க. இவ்வாற்றான் இந்நிலத்து மக்கள்பெயரும் பெற்றும். ஏனைய பெயர்களில் வந்தன வுளவேற் கொள்க. (உக)

உஉ. ஏனோர் பாங்கினும் எண்ணுங் காலை
ஆறு வகைய திணைநிலைப் பெயரே.

இது மூல்லையுங் குறிஞ்சியும் ஒழிந்தவற்றுள் திணைதொறு மரீஇய பெயருடையோரினுந் திணைநிலைப் பெயராகிய தலைமக்களாய் வழங்குவாரும் உளரென எய்தாத தெய்துவித்தது.

(இ - ள்.) ஏனோர் பாங்கினுந் திணைநிலைப்பெயர் எண்ணுங் காலை—ஒழிந்த பாலைக்கும் நெய்தற்கும் உரியராகக் கூறிய மக்கள் கூற்றினும் வருந் தலைமக்கள் பெயரை ஆராயுங்காலத்து; ஆறு வகைய—அவை பெரும்பான்மையாகிய கூறுபாட்டினையுடைய என்றவாறு.

உதாரணம் :—

"நிலவிற் பகழிச் செந்துவ ராடைக்
¶கொலைவி லெயினர் தங்கைகின் மூலைய

(பாடம்) * அகம்-கஉக. 'ஏனலு மிறங்கு குரலிறுத்தன.'
† அகம்—உஅ. ‡ 'மூளைவாய் வாளெயிற் றிளையள்' எனவும் 'மூளைவா யெயிற்றள்.' § 'மன்னணங் கினளே.'
¶ 'கொலைவல் லெயினர்.'

சுணங்கென *நினைதி நீயே
யணங்கென நினையுமென் னணங்குறு நெஞ்சே.”
(ஐங்குறு-ரூசுரூ)

இவ் வைங்குறுநூறு உடன்போகின்றான் நலம்பாராட்டிய கூற்றும்.

“முளவுமா வல்சி யெயினர் தங்கை
யிளமா வெயிற்றிக்கு †நின்னிலை யறியச்
சொல்லினே னிரக்கு மளவை
வெண்வேல் விடலை விசையா தீமே.” (ஐங்குறு-ரூசுச)

இவ் வைங்குறுநூறு கொண்டுபோங் காலத்திற்குக் கொண்டு டன்போக் கொருப்படுத்தவ லென்றது.

“கணமா தொலைச்சித் தன்னெயர் தந்த
‡நிணவூன் வல்சிப் படுபுள் ளோப்பு
§நலமா ணெயிற்றி போலப் பலமிக
நன்னல நயவர வுடையை
யென்னெற் றணையோ மாவின் றளிரே.” (ஐங்குறு-ரூசுஞ)

இவ் வைங்குறுநூறு வரைவிடைவைத்துப்போகின்றான் மாவினை நோக்கிக் கூறியது. ¶ஏனைப்பெயர்களில் வருவன வந்தழிக் காண்க.

“முற்ற மஞ்சட் பசும்புறங் கடுப்பச்
சுற்றிய பிணர சூழ்கழி யிறவின்
கணங்கொள் குப்பை யுணங்குதிற நோக்கிப்
புன்னெயங் கொழுநிழன் முன்னுய்த்துப் பரப்புந்
துறைநனி யிருந்த பாக்கமு முறைநனி
யினிதும னளிதோ தானே துனிதீர்ந்
தகன்ற வல்கு லேதமை நுசுப்பின்
மீனெறி பரதவர் மடமகண்
மானோர் நோக்கங் காணு வுங்கே.” (நற்றிணை-கூக)

இது வரைதற் பொருட்டுத் தலைவி வேறுபாட்டிற்கு ஆற்றுத தோழி சிறைப்புறமாகக் கூறியது.

“அறிகரி பொய்த்த லான்றேர்க் கில்லை
குறுக லோம்புமின் சிறுகுடிச் செலவே
யிதற்கிது மாண்ட தென்னு ததற்பட்
டாண்டொழிந் தன்றே மாண்டகை நெஞ்ச
மயிற்க ணன்ன மாண்முடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉங் கான லானே.” (குறுந்-கஅச)

(பாடம்) * ‘நினைத்தி.’ † ‘மிகநிலை.’ ‡ ‘நிணவூண்வல்சி.’
§ ‘அலமர லெயிற்றி போல நலமிக.’
¶ ‘ஏனைப் பெயர்க்கண்.’

இது கழறிய பாங்கற்குக் கூறியது.

"கடுந்தே ரேறியுங் காலிற் சென்றும்
* *
என்னென நினையுங்கொல் பரதவர் மகளே." (நற்றிணை-கூசஉ)

என வரும். இது நற்றிணை.

"இவளே. கான நண்ணிய"* என்னும் நற்றிணைப் பாட்டினுட் "கடுந்தேர்ச் செல்வர் காதன் மகனே." † என்று அவனருமை செய்தயர்த்தலின் அவனை இகழ்ச்சிக்குறிப்பாற் றலைமையாகக் கூறினள். ‡ஏனைப் பெண்பெயர்க்கண் வருவனவும் வந்துழிக் காண்க.

"ஏனோர் பாங்கினும்" எனப் பொதுப்படக்கூறிய அதனான் மருத நிலத்து மக்களுட் டலைமக்கள் உளராகப் புலனெறி வழக்கஞ் செய்த செய்யுட்கள் வந்தன வுளவேற் கண்டு கொள்க. (உஉ)

உங. அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினுங் கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்.

இது மேல் நால்வகை நிலத்து மக்களுந் தலைமக்களாகப் பெறுவரென்றார், அவரேயன்றி இவருந் தலைமக்களாகுக கைக்கிளை பெருந்திணைக்க ணென்கின்றது.

(இ - ள்.) அடியோர் பாங்கினும் — பிறர்க்குக் குற்றேவல் செய்வோரிடத்தும்; வினைவல பாங்கினும்— பிறர் ஏவிய தொழிலைச் செய்தல் வல்லோரிடத்தும்; கடி வரையில புறத்து என்மனார் புலவர்—தலைமக்களாக நாட்டிச் செய்யுட்செய்தல் நீக்கப்படாத நடுவணைந்திணைப் புறத்தது நின்ற கைக்கிளை பெருந்திணைகளுள் என்றவாறு.

கூன்பாட்டினுள்,

"நம்மு ணகுதற் றொடீஇயர் நம்முணை
முசாவுவங் கோனடி தொட்டேன்." (கலி-கூச)

எனவும்,

"பேயும் பேயுந் துள்ள லுறுமெனக்
கோயிலுட் கண்டோர் நகாமை வேண்டுவல்." (கலி-கூச)

(பாடம்) * நற்றிணை—சஙி. † 'என்றது அருமைசெய் தயர்த்தலின்.' ‡ 'ஏனைப் பெயர்க்கண்.'

எனவும் பெருந்திணைக்கண் அடியோர் தலைவராக வந்தது. என்னை? கோன் அடிதொட்டேன் என்றமையானும் கோயில் என்றமையானும் இவர்கள் குற்றேவன்மாக்க ளாயிற்று.

"ஏஎயிஃதொத்தன்" என்னும் குறிஞ்சிக்கலியுள்,

"போற்றுய் களைநின் முதுக்குறைமை போற்றிக்கேள்
வேட்டார்க் கினிதாயி னல்லது நீர்க்கினிதென்
றுண்பவோ நீருண் பவர்." (கலி-சுஉ)

தீயகாமம் இழிந்தோர்க்குரிமையின், இதுவும் அடியோர் தலைவராக வந்த கைக்கிளை. அடியோரெனவே இருபாற் றலைமக்களும் அடங்கிற்று. கடிவரையில என்றதனான் அவருட் பரத்தையரும் உளரென்று கொள்க.

"இகல்வேந்தன்" என்னும் முல்லைக்கலியுள்,

"மேயு நிரைமுன்னர்க் கோலூன்றி நின்றூயோ
ராயினை யல்லை *பிறவோ வமரருண்
ஞாயிற்றுப் புத்தேண் மகன்." (கலி-கoஅ)

என்பதனாற் றலைவன் விணைவல † பாங்கனையினவாறு காண்க. இதனுள்,

"புனத்துளா னெந்தைக்குப் புகாவுய்த்துக் கொடுப்பதோ
வினத்துளா ‡னெந்தைக்குக் கலத்தொடு செல்வதோ
தினைக்காலுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ." (கலி-கoஅ)

என்றவழி எமரேவலான் யாஞ் செய்வதன்றி யாங்கள் ஏவ நின்னெஞ்சம் இத்தொழில்கள் செய்கின்றனவில்லை என்றலின் விணைவல பாங்கினளாய தலைவிகூற்றாயிற்று.

"யாரிவன்" என்னும் முல்லைக்கலியுள்,

"வழங்காப் பொழுதுநீ கன்றுமேய்ப் பாய்போல்
வழங்க லறிவா ருரையாரே லெம்மை
யிகழ்ந்தாரே யன்றே வெமர்." (கலி-கஉஉ)

இதுவும் விணைவலபாங்கினளாய தலைவியை நோக்கி அத் தலைவன் கூறினது.

"நலமிக நந்திய" என்னும் முல்லைக்கலியுள்,

"பல்கால்யாங் கான்யாற் றவிர்மணற் றண்பொழி
லல்க லகலறை யாயமொ டாடி
முல்லை குருந்தொடு முச்சிவேய்ந் தெல்லை
யிரவுற்ற தின்னுங் கழிப்பி

(பாடம்) * பிறவோரமரருள். † 'பாங்காயினவாறு.'
‡ 'என்னைக்கு.'

யரவுற்றருமி னதிருங் குரல்போற் பொருமுர
ணல்லேறு நாகுட னின்றன
பல்லா னினநிரை நாமுடன் செலற்கே.'' (கலி-ககங)

இது தாழ்த்துப் போதற்குத் தலைமையின்றிக் கடிதிற் போகல் வேண்டுமென்றமையானும், நல்லேறும் நாகும்போல் நாமுங் கூடப் போகல் வேண்டுமென்றமையானுங், தலைவன் வினைவல பாங்கினனுயிற்றென்க. வினைவல்லானென்னுது பாங்கினென்றதனுற் றமரேவல் செய்வது பெறுதும். இஃது அவ்வந் நிலத்து இழிந்தோர்க்கு எஞ்ஞான்றுந் தொழிலேயாய் நிகழுமென்றும், புனங்காவலும் படுபுள்ளோப்புதலும் இவ்வாறன்றி உயர்ந்தோர் விளையாட்டாகி இயற்கைப்புணர்ச்சிப்பின்னர்ச் சின்னாளிற் றவிர்வரென்றும் வேறுபாடுணர்க. இக்கூறிய இருதிறத்தோருந் தமக்கு உரியரன்மையான் அறம்பொருளின்பம் வழாமை நிகழ்த்துதல் அவர்க்கரிதென்பது பற்றி இவற்றை அகப்புறமென்றார். (உங)

உசு. ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை யவரும் அன்னர்.

இது முன்னர்ப் 'பெயரும்வினையும்' என்பதனுள் தினை தொறுமரீஇய பெயருந் தினைநிலைப்பெயருமெனப் பகுத்த இரண்டனுள் தினைதொறுமரீஇய பெயருட் டலைவராதற்குரியாரை அதிகாரப்பட்டமையிற் கூறி, அங்ஙனந் தலைவராதற்குரிமையின் அடியோரையும் வினைவலபாங்கினோரையும் அதன்பிற்கூறிப், பின்னர்நின்ற தினைநிலைப்பெயராதற்குச் சிறந்தார் அறுவகையரெனப் பகுக்கின்றது.

(இ-ள்.) மரபின்—வேதநூலுட்கூறிய இலக்கணத்தானே; ஏவல் ஆகிய நிலைமையவரும்—பிறரை ஏவிக்கொள்ளுந் தொழில் தமக்குளதாகிய தன்மையையுடைய அந்தணர் அரசர் வாணிகரும்; அன்னர் ஆகிய அவரும்—அம்மூவரையும்போற் பிறரை ஏவிக்கொள்ளுந் தன்மையராகிய குறுநிலமன்னரும் அரசராற் சிறப்புப்பெற்றோரும்; ஏனோரும்—நால்வகை வருணமென்று *எண்ணிய வகையினுள் ஒழிந்து நின்ற வேளாளரும்; உரியர்—உரிப்பொருட் டலைவராதற்கு உரியர் என்றவாறு.

ஆகிய என்பதனை ஏவலொடும் அன்னரொடுங் கூட்டுக.

எனவே, தினைநிலைப்பெயர் அறுவகையாயிற்று. †வேந்துவிடு தொழிலிற்.....பொருள்' என்பதனுன் வேளாளரே அரசராற் சிறப்புச்செய்யப் பெறுவரென்றுணர்க. இனி ‡வில்

(பாடம்) * 'எண்ணி யொழிந்து நின்ற.' † தொல்-பொருள்-மர-அக.
‡ தொல்-பொருள்-மர-அக.

னும் வேலுங் கழலு.....முரிய' என்பதனுன் ஏனைருஞ் சிறு பான்மை சிறப்புப் பெறுவரென்றுணர்க. உரிப்பொருட்டலைவர் இவரேயாதலைத் தான் மேற் பிரிவிற்குக் கூறுகின்றவாற்றானும் உணர்க.

"தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉ
மணங்கென வஞ்சுவர் சிறுகுடி யோரே ;
ஈர்ந்த ணுடையை யெல்லி மாலையை." (கலி-நிஉ)

என வரும்.

"மூளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாக
னினிதெனக் கணவ னுண்டலி
னுண்ணிதின் மகிழ்ந்தன் றெண்ணுதன் முகனே." (குறுந்-கசுஎ)

இது குறுந்தொகை. இது பார்ப்பானையும் பார்ப்பனியையுந் தலைவராகக் கூறியது, கடிமனைச் சென்ற செவிலி கூற்று. வாயினோர்வித்தலுமாம்.

"வருதும் என்ற நாளும் பொய்த்தன
அரியே ருண்கண் நீரும் நில்லா
தண்கார்க் கீன்ற பைங்கொடி முல்லை
வைவாய் வான்முகை அவிழ்ந்த கோதை
பெய்வனப் பிழந்த கதுப்பும் உள்ளார்
அருள்கண் மாறலோ மாறுக அந்தில்
அறனஞ் சலரே ஆயிழை நமரெனச்
சிறிய சொல்லிப் பெரிய புலம்பினும்
பனிபடு நறுந்தார் குழைய நம்மொடு
துனிதீர் முயக்கம் பெற்றோள் போல
உவக்குவள் வாழிய நெஞ்சே விசும்பின்
ஏறெழுந்து முழங்கினு மாறெழுந்து சிலைக்கும்
கடாஅ யானை கொட்கும் பாசறைப்
போர்வேட் டெழுந்த மன்னர் கையதை
கூர்வாட் குவிமுகஞ் சிதைய நூறி
மானடி மருங்கிற் பெயர்த்த குருதி
வான மீனின் வயின்வயின் இமைப்ப
அமரோர்த்* தட்ட செல்வம்
தமர்விரைந் துரைப்பக் கேட்கும் ஞான்றே." (அகம்-கசச)

மீண்டவன் நெஞ்சிற்கு உரைப்பானுய்ப் பாகற்கு உரைத்தது. இம் மணிமிடைபவளத்து வேந்தன் தலைவனுயினவாறுந் தான் அமரகத்து அட்ட செல்வத்தையே மிக்க செல்வமாகக்

(பாடம்) * 'அமரொறுத்தட்ட.' 'அமரோர்த்தட்ட.'

கருதுதற்குரியாள் அரசவருணத்திற் றலைவியே என்பதூஉம் உணர்க.

"பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்
வகைகொண்ட செம்மலும் வனப்பார விடுவதோ." (கலி-கக)

இதனுள் வேந்தன் தலைவனுயினவாறும் பகைகொண்ட தலைமையின் அழகை நுகரவிரும்பினுள் என்றலிற் றலைவியும் அவ்வருணத்தாளாயவாறும் உணர்க. "உலகுகிளர்ந்தன்ன"* என்னும் அகப்பாட்டுள் வாணிகன் தலைவனுகவும் கொள்ளக் கிடத்தலிற் றலைவியும் அவ்வருணத் தலைவியா மென்றுணர்க.

"தடமருப் பெருமை மடநடைக் குழவி
தூண்டொறும் யாத்த காண்டகு நல்லிற்
கொடுங்குழை பெய்த †செழுஞ்செய் பேதை
சிறுதாட் செறித்த மெல்விரல் சேப்ப
வாழை‡ யீர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண் டமர்த்த கண்ண டகைபெறப்
பிறைநுதற் பொறித்த சிறுநுண் பல்லிய
ரந்துகிற் றலையிற் றுடையின ணப்புலந்
தட்டிலோளே யம்மா வரிவை
யெமக்கே வருகதில் விருந்தே சிவப்பான்று
சிறியமுள் ளெயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே." (நற்றிணை-கஉ0)

விருந்தொடு புக்கோன் கூற்று. செவிலிகூற்றுமாம். இந் நற்றிணை வாழைஸ்யீர்ந்தடிவகைஇ என்றலின் வேளாண்வருண மாயிற்று.

"மலைமிசைக் குலைஇய உருகெழு திருவில்
பணைமுழங் கெழிலி பெளவம் வாங்கித்
தாழ்பெயற் பெருநீர் வலனேர்பு வளைஇ
மாதிரம் புதைப்பப் பொழிதலின் காண்வர
இருநிலங் கவினிய வேமுறு காலை
நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி
அயிர்க்கண் படாஅர்த் துஞ்சுபுறம் புதைய
நறுவீ முல்லை நாண்மலர் உதிரும்
புறவடைந் திருந்த அருமுனை இயவில்
சீறூர் மோளே ஒண்ணுதல் யாமே
எரிபுரை பன்மலர் பிறழ வாங்கி
அரிஞர் யாத்த வலங்குதலைப் பெருஞ்சூடு
கள்ளார் வினைஞர் களந்தொறும் மறுகும்
தண்ணடை தழீஇய கொடிநுடங் காரெயில்
அருந்திறை கொடுப்பவுங் கொள்ளான் சினஞ்சிறந்து
வினைவயிற் பெயர்க்குந் தானைப்
புனைதார் வேந்தன் பாசறை யேமே." (அகம்-அச)

---

* அகம்-உடுடு. (பாடம்) † 'கொழுஞ்செம்பேழை.'
‡ வாளை. § வாளை.

இது தூதுகண்டு வருந்திக் கூறியது. இக் கலித்தொகை நிரையுட் டன்னூரும் அருமுனையியலிற் சீறூர் என்றலிற் மூன்குறுநில மன்னனென்பது பெற்றும்.

"அகலிருவிசும்பகம்" * என்னும் அகப்பாட்டும் பொருணோக்கினால் இதுவேயாமா றுணர்க.

"இருபெரு வேந்தர் மாறுகொள் வியன்களத்
தொருபடை கொண்டு வருபடை பெயர்க்குஞ்
செல்வ முடையோர்க்கு நின்றன்று விறலெனப்
பூக்கோள் எய தண்ணுமை விலக்கிச்
செல்வே மாதல் அறியாள் முல்லை
நேர்கால் முதுகொடி குழைப்ப நீர்சொரிந்து
காலை வானத்துக் கடுங்குரற் கொண்மூ
முழங்குதொறுங் கையற் றொடுங்கிநப் புலந்து
பழங்கண் கொண்ட பசலை மேனியள்
யாங்கா குவள்கொ ருனே வேங்கை
ஊழுறு நறுவீ கடுப்பக் கேழ்கொள
ஆகத் தரும்பிய மாசறு சுணங்கினள்
நன்மணல் வியலிடை நடந்த
சின்மெல் லொதுக்கின் மாஅ யோளே." (அகம் - களச)

இது மீள்வான் நெஞ்சிற் குரைத்தது.

இதனுட் "பூக்கோளேய தண்ணுமை விலக்கிச் செல்வே" மென்றலின் அரசனுற் சிறப்புப்பெற்ற தலைவனுயிற்று, இன்னுஞ் சான்றோர் செய்யுட்களுள் இங்ஙனம் வருவனவற்றை அவற்றின் பொருணோக்கி உணர்க. (உச)

உரு. ஓதல் பகையே தூதிவை பிரிவே.

இத் துணையும் அகத்திற்குப் பொதுவாகிய முதல் கரு வுரிப் பொருளே கூறி இனி இருவகைக் கைகோளுக்கும் பொதுவாகிய பாலைத்திணை கூறிய † எழுதியது.

(இ - ன்.) பிரிவே—பாலையென்னும் பிரிதற் பொருண்மை; ஓதல் பகையே தூது இவை—ஓதற் பிரிதலும், பகைமேற் பிரிதலும், பகைவரைச் சந்துசெய்தன் முதலிய தூதுற்றுப் பிரிதலுமென மூன்றுவகைப்படும் என்றவாறு.

ஒரோவொன்றே அறமுந் துறக்கமும் பொருளும் பயத்தற் சிறப்புநோக்கி இவற்றை இவையென விதந்தோதினர். இவை யென்றதனை எடுத்தலோசையாற் கூறவே அறங்கருதாது அரசரேவலால் தூதிற்பிரிதலும் ‡ போர்த்தொழில் புரியாது

* அகம்-உகச. (பாடம்) † 'எழுந்தார்.'
‡ 'போர்த்தொழிற்குப் பிரியாது.'

நிறைகோடற்கு இடைநிலத்துப் பிரிதலுஞ் சிறப்பின்மை பெறுதும். அறங் கருதாது பொருள் ஈட்டுதற்குப் பிரிதலும் பொருள்வயிற் பிரிவிற்கு உண்மையின் இவற்றொடு ஒதாது பிற் கூறினர். அந்தணர்க்குரிய ஒதலுந் தூதும் உடன்கூறிற்றிலர், பகைபிறந்தவழித் தூதுநிகழ்தலின். (உடு)

உசு. அவற்றுள்
ஒதலுந் தூதும் உயர்ந்தோர் மேன.

இது முற்கூறியவற்றுள் அந்தணர் முதலிய மூவர்க்கும் இரண்டு பிரிவு *உரித்தென்கிறது.

(இ - ள்.) அவற்றுள்—அம்மூன்றனுள் ; ஒதலும் தூதும் உயர்ந்தோர் மேன—ஒதற்பிரிவுந் தூதிற்பிரிவும் அந்தணர் முதலிய மூவரிடத்தன என்றவாறு.

எனவே ஒழிந்த பகைவயிற்பிரிவு அரசர்க்கே உரித்தென மேலே கூறுப. உயர்ந்தோரெனக் கூறலின் வேளாளரை ஒழித்தாரென்றுணர்க.

உதாரணம் :—

“அரம்போ ழவ்வளை தோணிலை நெகிழ
நிரம்பா வாழ்க்கை நேர்தல் வேண்டி
இரங்கா முன்ன அரும்புமுதி ரீங்கை
ஆலி யன்ன வால்வீ தாஅய்
வைவா லோதி மையணல் எய்ப்பத்
தாதுறு குவளைப் போது பிணியவிழப்
படாஅப் பைங்கட் பாவடிக் கயவாய்க்
கடாஅம் மாறிய யானை போலப்
பெய்துவறி தாகிய பொங்குசெலற் கொண்மூ
மைதோய் விசும்பின் மாதிரத் தழிதரப்
பனியடூ நின்ற பாஅட் கங்குல்
தமியோர் மதுகை தூக்காய் தண்ணென
முனிய அலைத்தி முரணில் காலைக்
கைதொழு மரபிற் கடவுள் சான்ற
செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின்
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை ஆடுபெற
ஒன்பது குடையு நன்பக லொழித்த
பீடில் மன்னர் போல
ஓடுவை மன்னுல் வாடைநீ யெமக்கே.” (அகம்-கஉடு)

(பாடம்) * ‘உணர்த்துகின்றது.’

இதனுட் பலருங் கைதொழும் மரபினையுடைய கடவுட் டன்மை யமைந்த செய்தியெனவே ஒதற்பிரிதலென்பது பெற்றும். "சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே" * என்பதனுற் கிழவனுங் கிழத்தியும் இல்லறத்திற் சிறந்தது பயிற்றுக் கால் இறந்ததனாற் பயனின்றுதலின், இல்லறம் நிரமபாதென்றற்கு நிரம்பாவாழ்க்கை யென்றார். இல்லறம் நிகழ்கின்ற காலத்தே மேல்வருந் துறவறம் நிகழ்த்துதற்காக அவற்றைக் கூறும் நூல் களையும் †கற்று அவற்றின் பின்னர்த் தத்துவங்களையுமுணர்ந்து மெய்யுணர்தல் அந்தணர் முதலிய மூவர்க்கும் வேண்டுதலின் ஒதற்பிரிவு அந்தணர் முதலியோர்க்கே சிறந்ததென்றார்.

"பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப் படர்ந்துநீ
மையற்ற படிவத்தான் மறுத்தர லொல்வதோ." (கலி-கடு)

என்பதும் அது; மையற்ற படிவம் அந்தணர் முதலியோர் கண்ணதாதலின். "விருந்திண்மன்னர்" ‡என்னும் அகப்பாட் டில் வேந்தன் பகைமையைத் தான் தணிவித்தமை கூறலின் அந்தணன் தூதிற் பிரிந்தமை பெற்றாம். "வயலைக்கொடியின் வாடியமருங்குல்" § என்னும் புறப்பாட்டில் அந்தணன் தூது சென்றவாறுணர்க ¶ அரசன் தூதுசேறல் பாரதத்து வாசு தேவன் தூதுசென்றவாற்றானுணர்க.

அது,

"படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானே யேத்தாத நாவென்ன நாவே."
(சிலப் - ஆய்ச்சியர்குரவை)

என்பதனானுணர்க. வாணிகன்சென்ற தூதும் வந்துழிக் காண்க. (உசு)

உஎ. தானே சேறலும் தன்னெடு சிவணிய ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே.

இது பகைவயிற் பிரிவு அரசர்க்கே உரித்தென்கின்றது.

(இ - ள்.) தானே சேறலும்—தன்பகைக்குத் தானே செல்லுதலும்; தன்னெடு சிவணிய ஏனோர் சேறலும்—அவ னெடு நட்புக்கொண்ட ஒழிந்தோர் அவற்குத் துணையாகிச் செல்லுதலுமாகிய இருபகுதியும்; வேந்தன் மேற்று—அரசன் கண்ணது என்றவாறு.

(பாடம்) * தொல்-பொருள-கற்பி-டுக. † 'கற்றபின்னர்.'
‡ அகம். டுசை. § புறம்-உ0டு. ¶ 'காண்க.'

எனவே, வாணிகர்க்கு உரித்தன்றியிற்று. தானேயென்று ஒருமை கூறிய அதனானே முடியுடைவேந்தர் தாமே சேறலும் ஏனோரெனப் பன்மைகூறிய அதனானே *பெரும்பான்மையுங் குறுநிலமன்னர் அவர்க்காகச் சேறலும், முடியுடைவேந்தர் அவர்க்காகச் சிறுபான்மை சேறலும் உணர்க. முடியுடை வேந்தர் உள்வழிக் குறுநில மன்னர் தாமே செல்லாமையுணர்க. இதனை "வேந்தற்குற்றுழி"† யென்ப ஏனையார். அவ்வேந்தர் இல்வழிக் குறுநிலமன்னருந் தாமே சேறல் "வேந்து வினையியற்கை"‡ என்பதன்கட் கூறுப இதனானே தன்பகைமேலும் பிறர் பகைமேலும் ஒருகாலத்திற் சேறலின்றென்றார்.

"கடும்புனல் கால்பட்டு" என்னும் பாலைக்கலியுண்,

"மயங்கமர் மாறட்டு மண்வெளவி வருபவர்
தயங்கிய களிற்றின்மேற் றகைகாண விடுவதோ." (கலி-கூக)

எனவும்,

"பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்."
(கலி-கூக)

எனவும் மண்கோடலுந் திறைகோடலும் அரசர்க்கே உரித்தாகக் கூறியது.

"நீளுயர் கூட னெடுங்கொடி யெழவே." (கலி-கூக)

எனச் சுரிதகத்துக் கூறியவாற்றானுணர்க.

"பொருபெரு வேந்தர்க்குப் போர்ப்புணை யாகி
யொருபெருங் காதலர் சென்றார்—வருவது
காணிய வம்மோ கனங்குழை கண்ணோக்கா
னீணகர் முன்றின்மே னின்று."

இது வேந்தர்க்குற்றுழி வேந்தன் பிரிந்தது.

"கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட் டியானைப் §பேஎர் கிழவோன்
பழையன் வேல்வாய்த் தன்னனின்
பிழையா நன்மொழி தேறிய விவட்கே." (சற்றிணை-கo)

(பாடம்) * 'குறுநில மன்னர் அவர்க்காகச் சேறல் பெரும்பான்மையும் முடியுடை வேந்தர் அவர்க்காகச் சேறல் சிறுபான்மையு மென வுணர்க.'

† இறையனாரகப்பொருள் சூத்திரம் கூக: "வேந்தர்க் குற்றுழிப் பொருட்பிணிப் பிரிவென், றூங்க விரண்டு மிழிந்தோர்க் குரிய."

‡ தொல்-பொருள்-அகத்-கூஉ

§ 'பழையன் காவிரி வைப்பிற் போஎர் அன்ன' என்றார் அகப் பாட்டினும் (கஅசு.)

இது குறுநிலமன்னர் போல்வார் சென்றமை தோன்றக் கூறியது. "மலைமிசைக் குலைஇய"* என்பதும் அது.

இனி வேட்டைமேற் சேறலும நாடுகாணச் சேறன்முதலியனவும் பாலையாகப் புலனெறி வழக்கஞ் செய்யாமை உணர்க. வேந்தனென்று ஒருமையாற் கூறினர், "மெய்ந்நிலை மயக்கிலு அ குநவும்"† என்னும் விதிபற்றி. சிவணிய வென்பதனை இனையெச்சமாக்கி நட்பாடல் வேண்டியென்றுமாம். (உள)

உஅ. மேவிய சிறப்பி னேனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே.

இது முறையானே தன் பகைமேற்சென்ற அரசன் திறை பெற்ற நாடுகாத்து அதன்கண் ‡தன்னெறிமுறை அடிப்படுத்துதற்குப் பிரிதலும் ஏனை வணிகர்பொருட்குப் பிரிதலுங் கூறுகின்றது.

(இ - ள்.) முல்லை முதலாச் சொல்லிய மேவிய சிறப்பின்-தானே சென்ற வேந்தன் தனக்கு முல்லை முதலாக முற்கூறப்பட்ட நால்வகைநிலனுந் திறையாக வந்துபொருந்திய தலைமையானே; பிழைத்தது—முன்னர் 'ஆள்பவர் கலக்குறுத்த அலை பெற்று'§ நெறிமுறைமை தப்பிய அந்நாடு; முறையாற் பிழையாதாகல் வேண்டியும், பிரிவே—தனது பழையநாடுகளை ஆளும் நெறிமுறைமையினுலே தப்பாமல ஆக்கமபெறக் காத்தலை விரும்பிப் பிரிதலும பிரிவே; ஏனோர் படிமைய இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே—முறைகூறிய அந்தணர் அரசரை ஒழிந்த வணிகர் தமக்கு விரதங்களுடையவாக வேதநூலிற் கூறிய ஒள்ளிய பொருள் தேடி முடியும்படி பிரிதலும் பிரிவே என்றவாறு.

பிரிவை இரண்டற்குங் கூட்டுக சிறப்பிற் பிரிதலும் எனச் சேர்க்க. சொல்லியவென்பதும் பிழைத்ததென்பதுந் தொழிற்பெயர். முறையாற் காக்கவென முடிக்க. விரதமாவன 'கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம் குறைகொடாது பல்பண்டம் பகர்ந்து வீசன்'¶ முதலியன.

---

* அகம்-அசு. † தொல்-சொல்-சூசுக.

(பாடம்) ‡ 'தன்னெறி முறைப்படுத்துதற்கு.'

§ "ஆள்பவர் கலக்குற வலைபெற்ற நாடு என்பது, கலித்தொகை, நி-ஆம் பாட்டில் வருவது. ¶ பட்டினப்பாலை அடி-உகo-உகக.

உதாரணம் :—

"ஒருகுழை யொருவன்போ லிணர்சேர்ந்த மராஅமும்
பருதியஞ் செல்வன்போ னனைபூழ்த்த செருந்தியு
மீனேற்றுக் கொடியோன்போன் மிஞிறுரற்குங் காஞ்சியு
மேனோன்போ னிறங்கிளர்பு களுலிய ஞாழலு
மானேற்றுக் கொடியோன்போ லெதிரிய விலவமும்
ஆங்கத்
தீதுதீர் சிறப்பி னேவர்க ணிலைபோலப்
போதவிழ் மரத்தோடு பொருகரை கவின்பெற
நோதக வந்தன்று விளவேனின் மேதக ;
பல்வரி யினவண்டு புதிதுண்ணும் பருவத்துத்
தொல்கவின் றொலைந்தவென் றடமென்றோ ளுள்ளுவா
ரொல்குபு நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
வெல்புக முலகேத்த விருந்துநாட் டுறைபவர் ;
திசைதிசை தேனுர்க்குந் திருமருத மூன்றுறை
வசைதீர்ந்த வென்னலம் வாடுவ தருளுவார்
நசைகொண்டு தந்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்த
மிசைபரந் துலகேத்த வேதிலுட் டுறைபவர் ;
அறல்சாயப் பொழுதோடெம் மணிறுதல் வேறுகித்
திறல்சான்ற பெருவனப் பிழப்பதை யருளுவா
ரூறஞ்சி நிழல்சோந்தார்க் குலையாது காத்தோம்பி
யாறின்றிப் பொருள்வெஃகி யகன்றநாட் டுறைபவர் ;
எனநீ,
தெருமரல் வாழி தோழிநங் காதலர்
பொருமுரண் யானையர் போர்மலைந் தெழுந்தவர்
செருமேம் பட்ட வென்றியர்
வருமென வந்தன்றவர் வாய்மொழித் தூதே." (கலி-உசு)

இதனுள் 'ஒல்குபு நிழல்சேர்ந்தார்க்கு' எனவே, முன்னர் ஆள்பவர் கலக்குறுத்த அலைபெற்றுப் பின் தன்னை நிழலாகச் சேர்ந்தாரென்பதூஉம், அவர்க்குப் பின்னர் உலைவு பிறவாமற் பேணிக் காத்தானென்பதூஉம், 'விருந்துநாட்டு' என்பதனால் திறைபெற்ற புதிய நாடென்பதூஉம் பெற்றும். ஏனையவற்றிற்கும் இவ்வாறே கூறிக்கொள்க

ஏதிலூடு—புதிய நாடு. ஆறின்றிப் பகைவர் பொருளை விரும்பினை நாட்டென்றும் அவரை யகன்ற நாட்டென்றும் பொருள் கூறுக. செருவின் மேம்பட்ட என்றது நாடுகளை. அதனைப் பெற்ற வென்றியெனவே நாடு திறைபெற்றமை கூறிற்று.

"படைபண்ணிப் புனையவும்"* என்னும் பாலைக்கலியுள் "வல்வினை வயக்குதல் வலித்திமன்" என்பதற்கு வலிய போர் செய்து அப்பகைவர் தந்த நாட்டை விளக்குதற்கு வலித்தி

* கலி-கஎ.

யெனவுங், "தோற்றஞ்சா ரூருகுபொருள்" என்பதற்குத் தோற்றம் அமைந்த திரண்ட பொருளாவன அந் நாடுகாத்துப் பெற்ற அறம்பொருளின்பம் எனவும், "பகையறு பயவினை" என்பதற்குப் பகையறுதற்குக் காரணமாகிய நாடாகிய பயனைத் தரும் வினையெனவும், "வேட்டபொருள்" என்பதற்கு அறம் பொருளின்பமெனவும் பொருளுரைத்துக்கொள்க.

பிறவும் இவ்வாறு வருவன உய்த்துணர்ந்து பொருள் கூறுக.

இனிக்,

"கேள்கே டின்றவங் கிளைஞ ராரவுங்
கேளல் கேளிர் கெழீஇயின ரொழுகவு
மாள்வினைக் கெதிரிய வூக்கமொடு புகல்சிறந்து."
(அகம்-கூஉ)

என வாணிகர் பொருள்வயிற் பிரிந்தவா றுணர்க.*

"நட்டோ ராக்கம் வேண்டியு மொட்டிய
நின்றே ளணிபெற வரற்கு
மன்றே தோழியவர் சென்ற திறமே." (நற்றிணை-உஅசு)

என்பதனுள் அணியென்றது பூணினை.

பிறவும் இவ்வாறு வருவன உய்த்துணர்ந்துகொள்க. (உ அ)

உகூ. மேலோர் முறைமை நால்வர்க்கு மூரித்தே.

இஃது எய்தாத தெய்துவித்தது.

(இ - ள்.) மேலோர் முறைமை—மேல் அதிகாரப்பட்டு நின்ற வாணிகர்க்கு ஓதிய அறந்தலைப் பிரியாப் பொருள் செயல் வகை; நால்வர்க்குமா உரித்து—அந்தணர்க்கும் அரசர்க்கும் இருவகை வேளாளர்க்கும் உரித்து என்றவாறு.

இதற்கு வாணிகர்க்கு வேதநூலுள் இழைதத பொருண் முடிவானே இந்நால்வரும் பொருண்முடிப்பரெனிற் பிரிவொன் றுகி மயங்கக் கூறலென்னுங் குற்றந் தங்குமாகலின் அது கருத் தன்று; இந்நால்வருள் அந்தணர் ஓதலுந் தூதும்பற்றிப் பொருண்முடித்தலும், அரசர் பகைவயிற் பிரிவு பற்றிப் பொருண்முடித்தலும், உயர்ந்த வேளாளர் பகைவயிற் பிரிவு பற்றிப் பொருண்முடித்தலும் உழுதுண்பார் வாணிகத்தாற் பொருண்முடித்தலுங் கருத்து.

(பாடம்) * 'காண்க.'

இற்றுள் வேள்விக்குப் பிரிந்து சடங்கிற்கு உறுப்பாகியும் அதற்குக் *குரவனுகியும் நிற்றல் உரிமையின் ஆண்டு வேள்வி செய்தான் கொடுத்த பொருள்கோடல் வேண்டுதலானும் அறங் கருதித் தூதிற்பிரியினும் அவர் செய்த பூசனை கோடல்வேண்டு மாகலானும் அவை அந்தணர்க்குப் †பொருள் வருவாயாயிற்று. வேள்விக்குப் பிரிதல் ஒதற்பிரிவின் பகுதியாயிற்று.

உதாரணம் :—

"நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்துந்தா
மஞ்சிய தாங்கே யணங்காகு மென்னுஞ்சொ
லின்றீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள்
புதுவது பன்னூலும் பாராட்ட யானு
மிதுவொன் றுடைத்தென வெண்ணி யதுதேர
மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுட்
பாயல்கொண் டென்றோட் கனவுவா ராய்கோற்
றொடிநிரை மூன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ
வீடுமருப் பியானை யிலங்குதேர்க் கோடு
நெடுமலை ‡வெஞ்சுரம் போகி நடுநின்றெஞ்
செய்பொருண் முற்று மளவென்ற ராயிழாய்
தாமிடை கொண்ட தவுவாயிற் றம்மின்றி
யாமுயிர் வாழு மதுகை யிலமாயிற்
றொய்யி றுறந்தா ரவரெனத் தம்வயி
னெய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று சொல்லென் னுயிர்." (கலி-உச)

இதனுள் 'நடுநின்' றென்றதனுன் இரு பெரு வேந்தரையுஞ் சந்து செய்வித்தற்கு யான நடுவே நிற்பலென்றும், 'எஞ் செய் பொருள் முற்றுமள' வென்றதனுன் அது முடித்தபின்னர் யாம் பெறுதற்குரியவாய் அவர் செய்யும் பூசனையாகிய பொருண் முடியு மளவுமென்றும், அந்தணன் பொருள்வயிற் பிரியக் கருதிக் கூறிய கூற்றினை அவன் தலைவி கூறியவாறுணர்க. இதனுட் 'கடிமனை காத்' தென்றதனை இல்லறமாகவும்' 'ஓம்ப' வென்றதனைச் செந்தீயோம்பவென்றுங் கொள்க.

" நன்கலங் களிற்றொடு நண்ணு சேந்தி
வந்து திறைகொடுத்து வணங்கினர் வழிமொழிந்து "
(அகம் - கஉச)

என்புழி, நன்கலந் திறைகொடுத்தோ ரென்றலிற் பகை வயிற் பிரிவே பொருள்வருவாயாயிற்று. ஒழிந்தனவும் இவ் வாறே உய்த்துணர்க.

(பாடம்) * 'களவனுகியும்.' † 'பொருள் வரவாயிற்று.'
‡ 'அத்தம்.'

மேலோர் முறைமை ஏனோர்க்கு முரித்தே என்னுது நால்வர்க்கு முரித்தே என்றது முற்கூறிய வணிகரையொழிந்த இருவகை வேளாளரையுங் கூட்டியென் றுணர்க. அவர் பொருள்வயிற் பிரிந்தனவுஞ் சான்றோர் செய்யுட்களோ நோக்கி உய்த்துணர்ந்துகொள்க அவர்களுள் உழுதுண்பார்க்குக் கலத்திற்பிரிவும் உரித்து. ஏனையோர்க்குக் காலிற்பிரிவே உரித்தென்றுணர்க. (உசு)

சுஉ. மன்னர் பாங்கிற் பின்னே ராகுப.

இஃது இறுதிநின்ற வேளாளர்க்கு இன்னுமோர் பிரிவு விகற்பங் கூறுகின்றது.

(இ - ள்.) மன்னர் பாங்கின் - அரசரைச் சார்ந்து வாழும் பக்கத்தராகி நிற்றல் காரணமாக; பின்னோர் ஆகுப - பின்னோரெனப்பட்ட வேளாளர் வரையறையின்றி வேந்தன் ஏவிய *திறமெல்லாவற்றினும் பிரிதற்கு ஆக்கமுடையராகுப என்றவாறு.

மன்னர் பின்னோரென்ற பன்மையான் முடியுடையோரும், முடியில்லாதோரும், உழவித்து உண்போரும், உழுது உண்போருமென மன்னரும் வேளாளரும் பலரென்றார். †'வேளாண் மாந்தர்க்கு' ‡'வேந்துவிடுதொழிலில்' என்னும் மரபியற் சூத்திரங்களான் வேளாளர் இருவகையரென்ப. அரசரேவுந் திறமாவன பகைவர்மேலும் நாடுகாத்தன்மேலுஞ் சந்து செய்வித்தன்மேலும் பொருள்வருவாய் மேலுமாம்.

அவருள் உழுவித்துண்போர் மண்டிலமாக்களுந் தண்டத்தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும் அழுந்தூரும் நாங்கூரும் நாவூரும் ஆலஞ்சேரியும் பெருஞ்சிக்கலுமவல்லமுங் கிழாரும் முதலிய பதியிற்றோன்றி வேளனவும் அரசனவும் உரிமையெய்தினோரும், பாண்டிநாட்டுக் காவிதிப்பட்ட மெய்கினோருங், குறுமுடிக் குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடைவேந்தர்க்கு மகட்கொடைக்கு உரிய வேளாளராகுப. §"இருங்கோ வேண்மா னருங்கடிப் பிடவூர்" எனவும் ¶"ஆலஞ்

(பாடம்) * 'நிலமெல்லாவற்றினும்.' † தொல்-பொ-மர-அ0.
‡ தொல்-பொ-மர-அக. § புறநானூறு-உகந.
¶ "காலே ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
வேலேயுங் குளனும் வெடிபடச் சுவறித்
தந்தையர் மக்கண் முகங்கா ணுமல்
வெந்த சாகம் வேறுவே றருந்திக்
குணனுள தனேயுங் கொடுத்து வாழ்ந்த

சேரி மயிந்த னூருண்கேணீ ரொப்போன்" எனவுஞ் சான்றோர் செய்யுட்செய்தார். உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி அழுந்தூர்வேளிடை மகட்கோடலும் அவன் மகனாகிய கரிகாற் பெருவளத்தான் நாங்கூர்வேளிடை மகட்கோடலுங் கூறுவார்.

இதனானே,

"பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயின்" (புறநா-கூடி)

எனவும்,

ஞாலத்துக், கூலம் பகர்நர் குடிபுறந் தராஅக்
குடிபுறந் தருநர் பார மோம்பி" (பதிற்று-கக)

எனவுஞ் சான்றோர் கூறியவாறுணர்க.

உதாரணம் :—

"வேந்தன் குறைமொழிந்து வேண்டத் தலைப்பிரிந்தார்
தாந்தங் குறிப்பின ரல்லரா;லேந்திழாய்
கண்பனி வாரக் கலங்கல் பிரிவரோ
தண்பனி நாளே தனித்து." (கூ0)

எனவரும்.

நக. உயர்ந்தோர்க் குரிய வோத்தி னானை.

இது நான்கு வருணத்தோர்க்கும் எய்தாத தெய்துவித்தது.

(இ - ள்.) ஒத்தின் ஆன-வேதத்திறற் பிறந்த வட நூல்களுந் தமிழ் நூல்களும்; உயர்ந்தோர்க்கு உரிய-அந்தணர்

கணவனே மகளிர் கண்பா ராமல்
விழித்தவிழி யெல்லாம் வேற்றுவிழி யாகி
யறவுரை யின்றி மறவுரை பெருகி
யுறைமறந் தொழிந்த வூழிக் காலத்துத்
தாயில் லவர்க்குத் தாயே யாகவுந்
தந்தையில் லவர்க்குத் தந்தையே யாகவும்
இந்த ஞாலத் திடுக்கண் தீர
வந்து தோன்றினன் மாநிதிக் கிழவன்
நீலஞ் சேரு மெடுமால் போல்வான்
ஆலஞ் சேரி மயிந்த னேன்பான்
னூருண் கேணி நீரொப் போனே
தன்குறை சொல்லான் பிறன்பழி யுரையான்
மறந்தும் பொய்யான் வாய்மையுங் குன்றான்
வருந்த வேண்டா வழுதி
இருந்தன னிருந்த னிடர்கெடுத் தனமே."

இது தமிழ் நாவலர் சரிதையிற் கண்டது.

(சோழமண்டல சதகம் - கூ0 மேற்கோள்)

அரசர் வணிகர்க்கும், உயர்ந்த வேளாளர்க்கும் உரிய என்ற வாறு.

அவை சமயநூல்களும் ஒன்றற்கொன்று மாறுபாடுகூறுந் தருக்கநூல்களுந் தருமநூல்களும் சோதிடமும் வியாகரணம் முதலியனவும் அகத்தியம் முதலாகத் தோன்றிய தமிழ்நூல் களுமாம். வேதந்தோன்றிய பின்னர் அது கூறியபொருள்களே இவையும் ஆராய்தலின் ஒத்திலனவென்று அவற்றிற்குப் பெயர் கூறினர்; ஒத்தென்பது வேதத்தையே யாதலின். (கூக)

கூஉ. வேந்துவினை யியற்கை வேந்தனி லொரீஇய ஏனோர் மருங்கினு மெய்திட னுடைத்தே.

இது மலயமாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்க்கும் வேந்தன்றொழில் உரித்தென்கிறது.

(இ - ள்.) வேந்து வினை இயற்கை-முடியுடைவேந்தர்க் குரிய தொழிலாகிய இலக்கணங்கள்; வேந்தனின் ஒரீஇய ஏனோர் மருங்கினும் எய்து இடன் உடைத்து-அம்முடியுடை வேந்தரை யொழிந்த குறுநிலமன்னரிடத்தும் பொருந்தும் இடனுடையது என்றவாறு.

அவர்க்குரிய இலக்கணமாவன, தன்பகைவயிற் றூனே சேறலுந் தான் திறைபெற்ற நாடுகாக்கப் பிரிதலும் மன்னர் பாங்கிற் பின்னேரெனப்பட்ட வேளாளரை ஏவிக்கொள்ளுஞ் சிறப்புமாம்.

உதாரணம்:—

> "விலங்கிருஞ் சிமயக் குன்றத் தும்பர்
> வேறுபன் மொழிய தேய முன்னி
> வினைநசைஇப் பரிக்கும் உரன்மலி நெஞ்சமொடு
> புனைமா ணெஃகம் வலவயி னேந்திச்
> செலன்மாண் புற்ற."
>
> (அகம்-உகஅ)

என்புழி வேறு பன்மொழிய தேயத்தைக் கொள்ளக் கருதிப் போர்த்தொழிலேச் செலுத்தும் உரன்மிக்க நெஞ்ச மென்றலின், இது குறுநிலமன்னன் தன்பகைவயின் நாடு கொள்ளச் சென்றதாம்; *வேந்தனெனப் பெயர் கூறுமையின். †"பசைபடு பச்சை நெய்தோய்த்து" என்னும் அகப்பாட்டி னுள் "மூடிந்தன் றம்மகா முன்னிய வினையே" என்றலிற்

(பாடம்) * 'வேந்தன் பகை கூறுமையின்.' † அகம்-உசச.

ரூனே குறுநிலமன்னன் சென்றதாம். ஏனைய வந்துழிக் காண்க. (கூஉ)

கூகூ. பொருள்வயிற் பிரிதலும் அவர்வயின் உரித்தே
உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத் தான.

இஃது அக் குறுநிலமன்னர்க்குப் பொருள்வயிற் பிரிதலும் ஒதற் பிரிதலும் உரிய வென்கின்றது.

(இ - ள்.) பொருள் வயினும்-தமக்குரிய திறையாகப் பெறும் பொருளிடத்தும்; உயர்ந்தோர் ஒழுக்கத்துக்கு ஆன பொருள் வயினும்-உயர்ந்த நால்வகை வருணத்தார்க்குரிய ஒழுக்கத்திலேயான ஒத்திடத்தும்; பிரிதல் அவர்வயின் உரித்து-பிரிந்துசேறல் அக் குறுநிலமன்னரிடத்து உரித்து என்றவாறு.

பொருள்வயிற்பிரிதல் பொருள்தேடுகின்ற இடத்தின்கண் ணென வினைசெய்யிடமாய் நின்றது *'உயர்ந்தோர்க் குரிய வோத்தினை' என்று அவ்வோத்தினை அவரொழுக்கத்திலேயான பொருளென்றார். அச் சூத்திரத்திற் கூறிய ஒதற்பிரிவே இவர்க்கும் உரித்தென்று கொள்க. இவற்றுக்குச் சான்றோர் செய்யுட்க ளுளவழிப் பொருள்படுமாறு உய்த்துணர்ந்துகொள்க. ()

கூசு. முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை.

இது முற்கூறிய ஒதல் பகை தூது காவல் பொருள் என்ற ஐந்தனுட் பகையுங் காவலும் ஒழிந்தவற்றிற்கு ஓரிலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்) ஒதலுந் தூதும் பொருளுமாகிய மூன்று ரீர்மை யாற் செல்லுஞ் செலவு தலைவியோடு கூடச் சேறலின்று என்றவாறு.

தலைவியை உடன்கொண்டு செல்லாமை முற்கூறிய உதார ணங்களிலும் ஒழிந்த சான்றோர் செய்யுட்களுள்ளுங் காண்க. இதுவே ஆசிரியர்க்குக் கருத்தாதல் தலைவியோடுகூடச் சென்றாராகச் சான்றோர் புலனெறிவழக்கஞ் செய்யாமையான் உணர்க.

இனித், தலைவி கற்பினுட் பிரிவாற்றாது எம்மையும் உடன் கொண்டு சென்மினெனக் கூறுவனவுந் தோழி கூறுவனவுஞ் செலவழுங்குவித்தற்குக் கூறுவனவென்று உணர்க. அக்கூற் றுத் தலைவன் மரபு அன்றென்று மறுப்பன †'மரபுநிலை திரியா' என்பதனுள் அமைந்தது.

* தொல்-பொரு-அகத்-கூக. † தொல்-பொரு-அகத்-சஞ.

இனி, இச் சூத்திரத்திற்குப், 'பொருள்வயிற் பிரிவின்கட் கலத்திற்பிரிவு தலைவியுடன் சேறலில்லை ; எனவே, காலிற் பிரிவு தலைவியுடன் சேறல் உண்டு' என்று பொருள் கூறுவார்க்குச் சான்றோர் செய்த புலனெறிவழக்கம் இன்மை உணர்க. இனி, உடன்கொண்டு போகுழிக் கலத்திற் பிரிவின்று ; காலிற்பிரிவே யுளதென்பாரும் உளர். (௩௮)

௩௫. எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்
பொற்புடை நெறிமை இன்மை யான.

இஃது இத்திணையும் *பாலுக்கு உரிய இலக்கணங் கூறி, மகடூஉ அதிகாரப்படுதலிற் பெருந்திணைக்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்) எத்திணை மருங்கினும் - கைக்கிளைமுதற் பெருந்திணையிறுவாய் ஏழன்கண்ணும் ; மகடூஉ மடல்மேல் நெறிமை - தலைவி மடலேறினாளாகக் கூறும் புலனெறிவழக்கம் ; பொற்புடைமை இன்மையான - பொலிவுடைமையின்று ; ஆதலான் அது கூறப்படாது எ - று.

"கடலன்ன காம முழந்து மடலேறுப்
பெண்ணிற் பெருந்தக்க தில்."
(குறள்-௧௧௩௬)

என வரும்.

"கடலன்ன காமத்த ராயினும் பெண்டிர்
மடலூரார் மைந்தர்மே லென்ப—மடலூர்தல்
காட்டுகேன் வம்மின் கலிவஞ்சி யார்கோமான்
வேட்டமா மேல்கொண்ட போழ்து."

எனின், இது மடலேற்றன்று ; ஏறுவ லெனக் கூறியதனையேயாம். (௩௭)

௩௬. தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி
மன்னு நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை யச்சஞ் சார்தலென்
றன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய காலம் மூன்றுடன் விளக்கித்
தோழி தேளத்துங் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய இளவியும் அவ்வழி யுரிய.

(பாடம்) * 'ஐம்பாற்குமுரிய.'

இது பிரிவிலக்கணம் அதிகாரப்பட்டு வருதலிற் கொண்டு தலைக்கழிந்தழி வருந்துவோர் தாயரென்பதூஉம் அதனது பகுதியுங் கூறுகின்றது.

(இ - ள்.) போகிய திறத்து நற்றாய் - தலைவியுந் தலைவனும் உடன்போய காலத்து அம்மகட் பயந்த நற்றாய், தன்னும் அவனும் அவளுஞ் சுட்டிக் காலம் மூன்றுடன் மன்னும் நன்மை தீமை முன்னிய விளக்கிப் புலம்பலும் - தன்னையுந் தலைவனையுந் தன் மகளையுங் குறித்துக் காலம் மூன்றுடன் நிலைபெற்று வரும் *நல்வினை தீவினைக்குரிய காரியங்களைத் தன் நெஞ்சிற்கு விளக்கி வருந்திக் கூறுதலும்; அச்சஞ் சார்தல் என்று அன்ன பிறவும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம் அவற்றோடு தொகைஇப் புலம்பலும் - அச்சஞ் சார்தலென்று கூறப்பட்டவற்றையும் அவைபோல்வன பிறவற்றையும் பல்லி முதலியசொல் நற்சொல் தெய்வங் கட்டினுங் கழங்கினும் இட்டு உரைக்கும் அத்தெய்வப் பகுதியென்றவற்றோடு கூட்டி வருந்திக் கூறலும்; தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும் புலம்பலும் - தோழியது ஆற்றுமையைக் கண்டுழியுந் தலைவியைத் தேடிப்போய்க் காணுது வந்தாரைக் கண்டுழியும் வருந்திக் கூறலும்; அவ்வழி ஆகிய கிளவியும் - அவ்வுடன்போக்கிடத்துச் சான்றோர் புலனெறி வழக்கஞ் செய்தற்குரியவாய் வருங் கிளவிகளும்; உரிய-உடன் போகிய திறத்து உரிய எ - று.

நற்றாய் புலம்பலுங் கிளவியும் போகியதிறத்து உரிய வென முடிக்க. என்றென்பதனையும் புலம்பலென்பதனையும் யாண்டுங் கூட்டுக. இங்ஙனம் உடன்போக்கி வருந்துதல் நோக்கித் தாயை மூற்கூறித் தலைவன் கொண்டுபோயினமை நோக்கித் தலைவிமுனைநர் அவனைக் கூறினர். அவளும் அவனும் 'என்று பாடம் ஓதுவாருமுளர்.

உதாரணம்:—

"மள்ளர் †கொட்டின் மஞ்ஞை யாலும்
உயர்நெடுங் குன்றம் படுமழை தலைஇச்
சுரநனி யினிய வாகுக தில்ல
அறநெறி யிதுவெனத் தெளிந்தவென்
பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே." (ஐங்-கஎக)

இதனுள் 'அறநெறி இதுவெனத் தெளிந்த என்மக'ளென்று தாய் கூறவே உடன்போக்குத் தருமமென்று மகிழ்ந்து கூறி அங்ஙனங் கூட்டிய நல்வினையைத் தன் நெஞ்சிற்கு விளக்கிப் புலம்பியவாறு காண்க.

(பாடம்) * 'நல்வினை தீவினை கருதிய.' † 'கொட்டு மஞ்ஞை.'

"காடொறுங் கலுழு மென்னினு மிடைநின்று
காடுபடு தீயிற் கனலியர் மாதோ
நல்வினை நெடுநகர் கல்லெனக் கலங்கப்
பூப்புரை யுண்கண் மடவரற்
போக்கிய புணர்ந்த வறனில் பாலே." (ஐங்-கஎக)

இது தீவினையை வெகுண்டு புலம்பியவாறு காண்க. பால், பழவினை. இவை ஐங்குறுநூறு.

இனி அச்சம் இருவகைத்து; தலைவி ஆண்டை விலங்கும் புள்ளும் ஆறலைப்போரும் முதலிய கண்டு அஞ்சும் அச்சமும், தந்தை தன்னையர் பின்சென்றவர் இஃதறமென்னாது தீங்கு செய்கின்றாரோ என்று அஞ்சும் அச்சமுமென.

"கினைத்தொறுங் கலுழு மிடும்பை யெய்துக
புலிக்கோட் பிழைத்த கவைக்கோட்டு மூதாகலை
மான்பிணை யணைதர வாண்குரல் விளிக்கும்
வெஞ்சுர மென்மக ளுய்த்த
வம்பமை வல்வில் விடலை தாயே." (ஐங்-கஎக)

இதுவும் ஐங்குறுநூறு.

"கேளாய் வாழியோ மகளிரின் தோழி
திருநகர் வரைப்பகம் புலம்ப அவணெடு
பெருமலை இறந்தது நோவேன் நோவல்
கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி
மூடங்குதாள் உதைத்த பொலங்கெழு பூழி
பெரும்புலர் விடியல் விரிந்துவெயில் எறிப்பக்
கருந்தார் மிடற்ற செம்பூழ்ச் சேவல்
சிறுபுன் பெடையொடு குடையும் ஆங்கண்
அஞ்சுவரத் தகுக கானம் நீந்திக்
கனறுகா ணுதுபுன் கண்ண செவிசாய்த்து
மன்றுநிறை பைதல் கூரப் பலவுடன்
கறவை தந்த கடுங்கான் மறவர்
கல்லென் சீறூர் எல்லியின் அசைஇ
முதுவாய்ப் பெண்டின் செதுகால் குரம்பை
மடமயி லன்னளென் நடைமெலி பேதை
தோள்துணை யாகத் துயிற்றத் துஞ்சாள்
வேட்டக் கள்வர் விசியுறு கடுங்கண்
சேக்கோள் அறையுந் தண்ணுமை
கேட்குநள் கொல்லெனக் கலுழுமென் னெஞ்சே."
(அகம்-கக)

இவை அச்சங் கூறின.

தந்தை தன்னையர் சென்றாரென்று சான்றோர் செய்யுட் செய்திலர்; அது புலனெறிவழக்கம் அன்மையின்.

இனிச் சார்தலும் இருவகைத்து: தலைவி சென்று சாரும் இடனும், மீண்டு வந்து சாரும் இடனுமென.

உதாரணம் :—

"எம்வெங் காமம் இயைவ தாயின்
மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசா
கொம்மையம் பசுங்காய்க் குடுமி வீளைந்த
பாக லார்கைப் பறைக்கட் பீலித்
தோகைக் காவின் துளுநா டன்ன
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பிற்
செறிந்த சேரிச் செம்மல் மூதூர்
அறிந்த மாக்கட் டாகுக தில்ல
தோழி மாரும் யானும் புலம்பச்
சூழி யானைச் சுடர்ப்பூண் நன்னன்
பாழி யன்ன கடியுடை வியன் நகர்ச்
செறிந்த காப்பிகந் தவலெடு போகி
அத்த இருப்பை ஆர்கழல் புதுப்பூத்
தித்த வாய தகள்நிலம் பரப்பக்
கொன்றை யஞ்சினைக் குழற்பழங் கொழுதி
வன்கை யெண்கின் வயநிரை பரக்கும்
இன்றுணைப் பிரிந்த கொள்கையொ டொராங்குக்
குன்ற வேயில் திரண்டஎன்
மென்றோள் அஞ்ஞை சென்ற ஆறே" (அகம்-கஙி)

"அருஞ்சுரம் இறந்தவென் பெருந்தோட் குறுமகள்
திருந்துவேல் விடலையொடு வருமெனத் தாயே
புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி
மனைமணல் அடுத்து மாலை நாற்றி
உவந்தினி தயரு மென்ப யானு
மான்பிணை நோக்கின் மடநல் லாளை
யீன்ற நட்பிற் கருளான் ஆயினும்
இன்னகை முறுவல் ஏழையைப் பன்னுட்
கூந்தல் வாரி நுசுப்பிவர்ந் தோம்பிய
நலம்புனை *யுதவியும் உடையன் மன்னே
அஃதறி †கிற்பிலை நன்றுமற் றில்ல
அறுவை தோயும் ஒருபெருங் குடுமிச்
சிறுபை நாற்றிய பஃறலைக் கொடுங்கோல்
ஆகுவ தறியும் முதுவாய் வேல
கூறுக மாதோ நின் கழங்கின் றிட்பம்
மாறுது வருபனி கலுழுங் கங்குலின்
ஆனாது துயருமென் கண்ணினிது படீஇயர்
எம்மனை முந்துறத் தருமோ
தன்மனை உய்க்குமோ யாதவன் குறிப்பே." (அகம்-கசுஙி)

இவ் வகப்பாட்டு இரண்டும் தெய்வத்தொடு படித்துப் புலம்பியது.

"இல்லெழும் வயலை யிலையு மூழ்த்தன
செல்வ மாக்களிற் செல்லு மஃதின

(பாடம்) * 'உதவியோ.' † கற்பினன்று.

மயிலடி யிலைய மாக்குரல் நொச்சிப்
பயிலிணர் நறும்பொழிற் பாவையுந் தமியள்
ஏதி லாளன் பொய்ப்பப் பொய்மருண்டு
பேதை போயினள் பிறங்குமலை யிறந்தென
மான்ற மாலை மனையொடு புலம்ப
ஈன்ற தாயு மிடும்பைய ளெனநினைந்து
அங்கண் வானத் தகடூர்ந்து திரிதரும்
திங்களங் கடவுள் தெளித்துநீ பெயர்த்தரிற்
கடிமலர்க் கொன்றைக் காவலன் சூடிய
குடியுஞ் செல்வங் குன்றினுங் குன்றாய்
தண்பொழில் கவித்த தமனிய வெண்குடை
ஒண்புகழ்த் தந்தைக் குறுதி வேண்டித்
தயங்குநடை மூதுமை தாங்கித் தான்றனி
யியங்குநடை யிளமை யின்புற் றீந்த
மான்றே ரண்ண லுரன்றுபுகழ் போலத்
துளக்கிரு ளிரவினு மன்றி
விளங்குவை மன்னுலவி வியலிடத் தானே."

(தகடூர் யாத்திரை.)

இது தெய்வத்தை நோக்கிக் கூறியது.

"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
யன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த *பைந்தினை வல்சி
பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ
வெஞ்சின †விறல்வேல் விடலையோ
டஞ்சி லோதியை ‡வரக்கரைந் தீமே." (ஐங்குறு-கூகக)

இவ் வைங்குறு நூறு நிரனித்தத்தொடுபடுத்துப் புலம்பியது. நற்சொல்லொடுபடுத்தன வந்துழிக் காண்க

இனி 'அன்ன பிறவுமென்றதனால்'

"ஈன்று புறந்தந்த எம்மும் உள்ளாள்
வான்தோய் இஞ்சி நன்னகர் புலம்பத்
தனிமணி இரட்டுந் தாளுடைக் கடிகை
நுழைநுதி நெடுஞ்வற் குறும்படை மழவர்
மூனையாத் தந்து முரம்பின் வீழ்த்த
வில்லோர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் §துடிபடுத்துத்
தோப்பிக் களளொடு தூஉப்பலி கொடுக்கும்
போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரந்
தணிந்துபிறள் ஆயினள் ஆயினும் அணிந்தணிந்
தார்வ நெஞ்சமொ டாய்நலன் அஃதித்தன்
மார்பு தணையாகத் துயிற்றுக தில்ல

(பாடம்) * 'பைந்திணை வல்சி.' † 'விறல்வேற் காளையோ.'
‡ 'வரக்கரைந் திடுமே.' § 'துடிப்படத்.'

துஞ்சா முழவிற் கோவற் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப்
பெண்ணேயம் பேரியாற்று நுண்ணறல் கடுக்கு
நெறியிருங் கதுப்பினென் பேதைக்
கறியாத் தேஎத் தாற்றிய துணையே" (அகம்-கூகி)

இவ்வகம் தலைவன் மிகவும் அன்புசெய்கவென்று தெய்வத் திற்குப் பராவுவது.

"நீர்நசைக் கூக்கிய வுயவல் யானை
யியம்புணர் தும்பி னுயிர்க்கு மத்தஞ்
சென்றணண் மன்றவென் மகளே
*பந்தும் பாவையுங் கழங்குமெமக் கொழித்தே."
(ஐங்குறு-கூஎஎ)

இவ் வைங்குறுநூறு யாம் இவற்றைக்கண்டு வருந்த இவற்றை எமக்கு ஒழித்துத் தான் நீரிலா ஆரிடைப் போயி னளென்றது.

"என்னு முள்ளினள் கொல்லோ தன்னை
நெஞ்சுணத் தேற்றிய வஞ்சினக் காளையோ
†டழுங்கன் மூது ரலரெழச்
செழும்பல் குன்ற மிறந்தவென் மகளே." (ஐங்குறு-கூஎஉ)

இஃது என்னை நினைப்பாளோவென்றது

இன்னும் இதனுனே செய்யுட்களுள் இவற்றின் வேறுபட வருவனவெல்லாம் அமைத்துக் கொள்க.

"செல்லிய ‡முயலிற் பாஅய சிறகர்
வாவ §லுகக்கு மாலையாம் புலம்பப்
போகிய வவட்கோ நோவேன் றேமொழித்
துணையிலள் கலுழு நெஞ்சின்
இணைபே ருண்க ணிவட்குநோ வதுவே." (ஐங்குறு-கூஎஅ)

இது தோழி தேஎத்துப் புலம்பல். இஃது ஐங்குறுநூறு. தோழி தேஎத்துமெனப் பொதுப்படக் கூறியவதனால் தோழியை வெகுண்டு கூறுவனவுங் கொள்க.

"வரியணி பந்தும் வாடிய வயலையு
மயிலடி யன்ன மாக்குர லெருச்சியுங்
கடியுடை வியனகர்க் காண்வரத் தோன்றத்
தமியேன் கண்டதண் டலையுந் தெறுவர
நோயா கின்றே மகளை நின்றோழி
யெரிசினந் ¶தணிந்த இலையி லஞ்சினை
வரிப்புறப் புறவின் புலம்புகொ டெள்ளினி

(பாடம்) * 'பந்து பாவையும்.' † 'அழுங்கின் மூனர்.'
‡ 'மூயலின்.' § 'உவக்குமாலை.' ¶ 'தவிர்ந்த.'

யுருப்பவி ரமையத் தமர்ப்பன ணேக்கி
யிலங்கிலை வெள்வேல் விடலையை
விலங்குமலை யாரிடை நலியுங்கொ லெனவே."
(நற்றிணை-கூ0கி)

என வரும்.

*"இதுவென் பாவைக் கினியதன் பாவை
யிதுவென் பைங்கிளி யெடுத்த பைங்கிளி
யிதுவென் பூவைக் கினியசொற் பூவையென்
றலம்வரு நோக்கி னலம்வருஞ் சுடர்நுதல்
காண்டொறுங் காண்டொறுங் கலங்க
நீங்கின ளோவென் பூங்க ணேளே." (ஐங்குறு-கூஎகி)

இவ்வைங்குறுநூறு தேடிக்காணுது வந்தாரைக்கண்டு புலம்பியது.

இனி அவ்வழியாகிய கிளவிகளுட்சில வருமாறு :—

"ஒருமக ளுடையேன் மன்னே யவளுஞ்
செருமிகு மொய்ம்பிற் கூர்வேற் காளையொடு
பெருமலை யருஞ்சுர நெருநற் சென்றனள்
இனியே,
தாங்குநி னவல மென்றனி ரதுமற்
றியாங்கன மொல்லுமோ வறிவுடை யீரே
யுள்ளி னுள்ளம் வேமே யுண்கண்
மணிவாழ் பாவை நடைகற் றன்னவென்
அணியியற் குறுமக ளாடிய
மணியோ சொசியுந் தெற்றியுங் கண்டே." (நற்றிணை-கஅச)

இந் நற்றிணை தெருட்டும் அயலில்லாட்டியர்க் குரைத்தது.

"கயந்தலை மடப்பிடி பயம்பிற் பட்டெனக்
களிறுவிளிப் படுத்த கம்பலை வெரீஇ
ஒய்யென வெழுந்த செவ்வாய்க் குழவி
தாதெரு மறுகின் மூதூ ராங்கண்
எருமை நல்லான் பெருமூலை மாந்தும்
நாடுபல இறந்த நன்ன ராட்டிக்கு
ஆயமும் அணியிழந் தழுங்கின்று தாயும்
இன்றேள் தாராய் இறீஇயரென் னுயிரெனக்
கண்ணு நுதலு நீவித் தண்ணெனத்
தடவுநிலை நொச்சி வரிநிழ லசைஇத்
தாழிக் குவளை வாடுமலர் சூடித்
தருமணற் கிடந்த பாவையென்
அருமக ளேயென முயங்கின ளழுமே." (அகம்-ககூகி)

(பாடம்) *"இதுவென் பாவை பாவை யிதுவென்
னலமரு நோக்கி னலம்வரு சுடர்நுதற்
பைங்களி யெடுத்த பைங்கிளி யென்றிவை
காண்டொறுங் காண்டொறுங் கலங்க
நீங்கின ளோவென் பூங்க ணேளே.'

இம் மணிமிடை பவளத்தைத் தாய் நிலையும் ஆயத்து நிலையுங் கண்டோர் கூறியவா றுணர்க.

"மாண்பில் கொள்கையொடு மயங்குதுயர் செய்த
வன்பி லறனு *மருளிற்று மன்ற
வெஞ்சுர மிறந்த அஞ்சி லோதி
பெருமட மான்பிணை யலைத்த
சிறுநுதற் குறுமகட் காட்டிய வம்மே." (ஐங்குறு-கூகூ)

இவ் வைங்குறுநூறு தலைவி மீண்டு வந்துழித் தாய் சுற்றத் தார்க்குக் காட்டியது.

"நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினு
மெம்மனை வதுவை நன்மணங் கழிகெனச்
சொல்லி னெவனே †மற்றே வென்வேன்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை யீன்ற தாய்க்கே" (ஐங்குறு-கூகூ)

இவ் வைங்குறுநூறு தலைவன் மீண்டு தலைவியைத் தன் மனைக்கட் கொண்டுவந்துழி அவன் தாய் சிலம்புகழி நோன்பு செய்கின்றுளெனக் கேட்ட நற்றாய் ஆண்டுநின்றும் வந்தார்க் குக் கூறியது.

இன்னுஞ் சான்றோர் செய்யுட்களுள் வேறுபட வருவன வெல்லாம் இதனுள் அமைக்க. (கூசு)

கூஎ. ஏமப் பேரூர்ச் சேரியுஞ் சுரத்துந்
தாமே செல்லுந் தாயரும் உளரே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ - ள்.) ஏமப்பேர்ஊர்ச்சேரியும் சுரத்தும்—பதியெழு வறியாப் பேரூரிற் றெருவின்கண்ணும் அருவழிக்கண்ணும்; தாமே செல்லும் தாயரும் உளர்—தந்தையுந் தன்னையரும் உணரா முன்னம் எதிர்ப்பட்டு மீட்டற்குத் தாமே போகுந் தாயரும் உளர் என்றவாறு.

உம்மை எண்ணும்மை. தாயரெனப் பன்மை கூறித் தாமே யெனப் பிரித்ததனாற் சேரிக்கு நற்றாய் சேறலுஞ், சுரத்திற்குச் செவிலித்தாய் சேறலும் புலனெறி வழக்கிற்குச் சிறந்ததென் றுணர்க.

உதாரணம் :—

* * *

"வெம்மலை யருஞ்சுர நம்மிவ ணெழிய
விருநில முயிர்க்கு மின்னுக் கான

(பாடம்) * 'அருளின்று.' † 'தோழி.'

நெருநற் போகிய பெருமடத் தகுவி
யைதக லல்குற் றழையணிக் கூட்டுங்
கூழை நொச்சிக் கீழ தென்மகள்
செம்புடைச் சிறுவிரல் வரித்த
வண்டலுங் *காணிரோ கண்ணுடை யீரே.” (அகம்-உஎடி)

வண்டலிடத்தைக் காணுநர் தேடத்து நின்று காணில் ஆற்றி ரெனக் கூறினமையின் ஆயத்திணையகன்று இற்புறஞ் சென்று சேரியோர்க்கு உரைத்ததாயிற்று.

“நிலந்தொட்டுப் புகாஅர் வான மேறார்
பிறங்கிரு முந்நீர்க் காலிற் செல்லார்
காட்டி னுட்டி னூரி னூரிற்
குடிமுறை குடிமுறை தேரிற்
கெடுநரு மூளரோ நங் காத லோரே.” (குறு-கஉ0)

இது செவிலி தேடத் துணிந்தது. இக் குறுந்தொகையுள் நம்மாற் காதலிக்கப்பட்டா ரென்றது அவ்விருவரையும் தாயரு மூளரென்றதனாற் றந்தையுந் தன்னையரும் வந்தால் இன்னது செய்வலென்றலும் உளவென்று கொள்க.

“நுமர்வரி னெஞ்சிற்பி னல்ல தமர்வரின்
முந்நீர் மண்டில மூழுவது மாற்றாது.”

என்றாற் போல்வன. அடி புறதிடாதாள் புறம்போதலும் பிரிவென்றற்குச் சேரியுங் கூறினார்; அஃது †ஏம இல் இருக்கை யன்றாதலின். (உஎ)

உஅ. அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே.

இதுவும் பாலைக்கு ஓர் வேறுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) அயலோர் ஆயினும்—முற்கூறிய சேரியினுஞ் சுரத்தினுமன்றித் தம் மனைக்கு அயலே பிரிந்தாராயினும்; அகற்சிமேற்று—அதுவும் பிரிவின்கண்ணதாம் என்றவாறு.

எனவே நற்றாய் தலைவியைத் தேர்ந்து ‡இல்லிற் கூறுவன வுஞ் சேரியிற் கூறுவனவும் பிரிந்தாரைப் பின் சென்றதே யாயிற்று. இக் கருத்தான் “ஏமப்பேரூர்” என்றார். இதனையே மனையயற்கட் பாத்தையிற் பிரிவும் பாலையென்று உய்த்துணர்க.

உக. தலைவரும் விழுமம் நிலையெடுத் துரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்

(பாடம்) * ‘காண்டிரோ.’ † ‘ஏமமிலிருக்கை யென்றாகலின்.’
‡ ‘இல்லறங் கூறுவனவும்.’

வாய்மையும் பொய்ம்மையுங் கண்டோர்ச் சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்
நோய்மிகப் பெருகித்தன் னெஞ்சுகலுழ்ந் தோளை
யழிந்தது களைஇய வொழிந்தது கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் றிறத்தோ
டென்றிவை யெல்லா மியல்புற நாடின்
ஒன்றித் தோன்றுந் தோழி மேன.

தாயர்க்கு உரியனகூறி இது தோழிக்குக் கூற்று நிகழுமாறு கூறுகின்றது.

(இ - ள்) தலைவரும் விழுமம் நிலை எடுத்து உரைப்பினும்—தலைவன் கொண்டுதலைக்கழியாவிடிற் றலைவிக்கட்டோன்றுந் தன்பநிலையைத் தலைவற்குந் தலைவிக்கும் விளங்கக் கூறினும்; போக்கற் கண்ணும்—அதுகேட்டு இருவரும் * போக்கொருப் பட்டுழித் தலைவியைப் போகவிடும் இடத்தும்; விடுத்தற்கண் ணும்—தலைவியை அவளோடு கூட்டி விடுக்குங்காற் றலைவற்குப் பாதுகாவலாகக் கூறும் இடத்தும்; நீக்கலின் வந்த தம் உறு விழுமமும்—† தாயரை நீக்குதலாற் றமக்குற்ற வருத்தத்திடத் தும்; வாய்மையும பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித் தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்—மெய்யும் பொய்யும் உணர்ந்த அறிவரது தருமநூற் றுணிபும் இதுவெனக் கூறிப் பின் சென்று அவரை மீட்டற்கு நிற்கின்ற தாயரது நிலைமை அறிந்து அவரை மீளாதபடி அவள் மீட்டுக்கொளினும்; நோய் மிகப் பெருகித தன் நெஞ்சு கலுழ்ந்தோளை அழிந்தது களைஇய ஒழிந்தது கூறி வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோடு—தலைவி போக்கு நிற்கின்று நெஞ்சு மிகப் புண்ணுற்றுத் தடுமாறுந் தாயை அவ் வருத்தந் தீர்த்தல்வேண்டி உழுவலன்பு காரணத் தாற் பிரிந்தாளென்பது உணரக் கூறி அவளை நெருங்கிவந்து ஆற்றுவித்தற் கூற்றேடே; என்று இவை யெல்லாம் இயல்புற நாடின் ஒன்றித் தோன்றும் தோழி மேன—என்று இச் சொல் லப்பட்டன எல்லாவற்றுக்கண்ணும் இலக்கண வகையான் ஆராயுங் காலத்துத் தான் அவள் என்னும் வேற்றுமையின்றி ஒன்றுபடத் தோன்றும் தோழி மேன கிளவி என்றவாறு.

உதாரணம்:—

"வெல்போர்க் குரிசினீ வியன்சுர னிறப்பிற்
பல்காழல்கு லவ்வரி வாடக்

* 'போகற் கொருப்பட்டழி.' † 'தமரை.'

குழலினு மினைகுவள் பெரிதே
* விழவொலி கூந்தனின் மாஅ யோளே.” (ஐங்குறு-உ0உ)

இவ் வைங்குறு நூற்றுட் குழலினும் இரங்குவளென்று பிரிந்த வள் இரங்குதற் பொருள்படத் தோழி தலைவரும் விழுமர் தலை வற்குக் கூறினள்.

“உன்னங் கொள்கையோ ளெங்கரங் துறையும்
அன்னே சொல்லும் உய்கம் என்னதூஉம்
ஈரஞ் சேரா இயல்பின் பொய்ம்மொழிச்
சேரியம் பெண்டிர் கௌவையும் ஒழிகம
நாடுகண் அகற்றிய உதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உவவினீ வாழி தோழி யவரே
பொம்மல் ஓதி நம்மொ டொராங்குச்
செலவயர்ந் தனரால் இன்றே மலிதொறும்
மால்கழை பிசைந்த கால்வாய் கூரெரி
மீன்கொள் பரதவர் கொடுந்திமி னளிசுடர்
வான்தோய் புணரி மிசைக்கண் டாங்கு
மேவரத் தோன்றும் யாஉயிர் நனந்தலை
உயவல் யானை வெரிநுச்சென் றன்ன
கல்லூர் பிழிதரும் புலைசாய் சிறுநெறிக்
காடுமீக் கூறுங் கோடேந் தொருத்தல்
ஆறுகடி கொள்ளு மருஞ்சுரம் பணைத்தோள்
நாறைங் கூந்தற் கொம்மை வரிமுலை
நிறையிதழ் உண்கண் மகளிர்க்கு
அரிய வாலென அழுங்கிய செலவே.” (அகம்-சுஇ)

இதனுள் அன்னேசொல்லும் பெண்டிர் கௌவையுந் தலை வரும் விழுமமென்று தலைவிக்குக் கூறினள்.

இனிப் போக்கற்கட் கூறுவன பலவுமுள.

“இலங்குவீங் கெல்வளே யாய்நுதல் †கவின்பெறப்
பொலந்தேர்க் ‡கொண்கனும் வந்தன னினியே
யிலங்கரி §நெடுங்க ணனந்த நீர்மதி
¶நலங்கவர் பசலையை $நகுகம் யாமே.” (ஐங்குறு-உ00)

இவ் வைங்குறு நூற்றில், கண் அனந்தநீர் என்றதனையே உடன்கொண்டு போதற்கு வந்தானெனப் பாயலுணர்த்திக் கூறிற்று.

“வேலும் விளங்கின **வினைஞரு மியன்றனர்
தாருந் தையின தழையுந் தொடுத்தன
நிலநீ ரற்ற வெம்மை நீங்கப்

(பாடம்) * ‘அவிழொலி.’ † ‘கவின.’ ‡ ‘கொண்கன்.’
§ ‘நெடுங்கண் ணெநிழ்மதி.’ ¶ ‘நலங்கிளர்.’
$ ‘நகுக நாமே.’ ** ‘வினையரும் பயின்றனர்.’

பெயனீர் தலைஇ உலவையிலை நீத்துக்
குறுமுறி யீன்றன மரனே நறுமலர்
வேய்ந்தன போலத் தோன்றிப் பலவுடன்
தேம்படப் பொதுளின பொழிலே கானமும்
நனிநன் றுகிய பனிநீங்கு வழிநாட்
பாலெனப் பரத்தரு நிலவின் மாலைப்
போது வந்தன்று தூதே நீயும்
கலங்கா மனத்தை யாகி யென்சொல்
நயந்தனை கொண்மோ நெஞ்சமர் தகுவி
தெற்றி யுலறினும் வயலை வாடினும்
நொச்சி மென்சினை வணர்குரல் சாயினும்
நின்னினும் மடவள் நனிநின் னயந்த
அன்னை யல்லல் தாங்கினின் னையர்
புலிமருள் செம்மல் நோக்கி
வலியாய் இன்னுந் தோய்கநின் முலையே." (அகம்-உஉக)

இவ் வகம் போக்குதற்கண் முயங்கிக் கூறியது.

" அண்ணற் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் றுழ்ந்த
நன்னெடுங் கூந்த னரையொடு முடிப்பினு
நீத்த லோம்புமதி பூக்கே ழூர
வின்கடுங் கள்ளி னிழையணி *கொடித்தேர்க்
கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட் டியானைப் பேஎர் கிழவோன்
பழையன் வேல்வாய்த் தன்னகின்
பிழையா நன்மொழி தேறிய விவட்கே." (நற்றிணை-கo)

இந் நற்றிணை தலைவியைப் பாதுகாக்கவெனத் தோழி கைப் படுத்துவித்தது.

" புதல்வனீன்ற " (நற்றிணை-கூருரு.) என்பதும் அது.

" இவளே நின்னல திலளே யாயுங்
குவளே யுண்க ணிவளல திலளே
யானு மாயிடை யேனே
மாமலை நாட மறவா தீமே."

இதுவும் அது.

" விளம்பழங் கமழுங் கமஞ்சூற் குழிசி
பாசந் தின்ற தேய்கான் மத்த
நெய்தெரி யியக்கம் வெளின்முதன் முழங்கும்
வைகுபுலர் விடியன் மெய்கரந்து தன்கா
லரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்
†வரிபுனை பந்தொடு வைஇய செல்வோ
ளிவைகாண் டோறு நோவர் மாதோ
வளியரோ வளியரென் னுயத் தோரென

(பாடம்) * 'நெடுந்தேர்.' † 'வரிப்புனை.'

நும்மொடு வரவுதா னயரவுக்
தன்வரைத் தன்றியுங் கலுழ்ந்தன கண்ணே." (நற்றிணை-கூ).

இந் நற்றிணை *போக்குதல் தவிர்ந்ததாம்.

" அவளே, யுடனம ராயமொ டோரை வேண்டாது
மடமான் பிணையின் மதர்த்த நோக்கமொ
டென்னினு நின்னினுஞ் சிறந்த மென்மொழி
யேதி லாளன் †காதலி னுறுது
பால்பாற் படுப்பச் சென்றன ளதனன்
முழவிமிழ் பந்தர் வீனபுனை நல்லில்
விழவயர்ந் திருப்பி னல்லதை யினியே
நீயெவ னிரங்குதி யன்னை
யாயினுஞ் சிறந்த நோய்முந் துறுத்தே."

என்னினும் நின்னினுஞ் சிறந்தோன் தலைவ ‡னென்று தவிர்தல் தருமநூல்விதி என்பது. இனி விழவயர்ந்திருப்பினல்லதை எனவே மீட்டற்குச் சேறல் அறனன் றென்று மீட்டாளாயிற்று.

" அன்னை வாழியோ வன்னை நின்ம
னென்னினும் யாயினு நின்னினுஞ் சிறந்த
தன்னம ரிளந்தினை மருட்டலின் முனுது
வென்வேற் புல்லி வேங்கட நெடுவரை
மழையொடு மிடைந்த வயக்களிற் றருஞ்சுரம்
விழைவுடை யுள்ளமொ டெழைவ பிற் பிரியாது
வன்கண் செய்து சென்றனள்
புன்கண் §செய்தல் புரைவதோ வன்றே."

இது தாயை வற்புறுத்தியது,

¶ இயல்புற என்றதனனே தலைவன் $கரணவகையால் வரைந்தாணுக எதிர்சென்ற தோழிக்கு யான்வரைந்தமை நுமர்கருணர்த்தல் வேண்டுமென்றற்கு அவள் உணர்த்தினே னென்றலுந் தலைவி மீண்டு வந்தழி **ஊரது நிலைமை கூறுதலுங் கொள்க.

" கருவிரன் மந்திக் கல்லா விளம்பார்ப்பு
இருவெதி ரீர்ங்கழை யேறிச் சிறுகோன்
மதிபுடைப் பதுபோற் றோன்று நாட
வரைந்தனே நீயெனக் கேட்டியா
னுரைத்தனெ னல்லனெ வஃதென் யாய்க்கே." (ஐங்குறு-உ அ0)

(பாடம்) * 'போக்குத் தவிர்ந்ததாம்.' † 'காதலிற் றனுஅது.'
‡ 'என்றுதவிர்த நருமநூல்.'
§ 'செய்து புரையில் புறவே.'
¶ 'சூத்திரத்து இயல்புற என்றதனனே' என்க.
$ 'காண வகையால் வரைந்தாணுக வென்று.'
** 'தலைவி ஆற்றுமை.'

"புள்ளு மறியாப் பல்பழம் பழுனி
மடமா னறியாத் தடநீர் நிலைஇச்
சுரநனி யினிய வாகுக வென்று
நினைத்தொறுங் கலுழு மென்னினு
மிகப்பெரிது கலங்கின்று தோழிநம் மூரே." (ஐங்குறு-கூகூஅ)

இன்னும் இதனானே செய்யுட்கண் வேறுபட வருவன வெல்லாம் அமைத்துக்கொள்க.

"ஊஉ ரலரெழச் சேரி கல்லென
ஆஞ தலைக்கு மறனி லன்னை
தானே யிருக்கதன் மனையே யானே
நெல்லி தின்ற முள்ளெயிறு தயங்க
உணலாய்ந் திலஞ லவரொடு சேய்நாட்டு
வீண்டொட நிவந்த விலக்குமலைக் கவாஅற்
கரும்புநடு பாத்தி யன்ன
பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே." (குறுந்-உகூஉ)

இது போக்கு *நேர்ந்தமை தோழி கூறியது.

பிறவுமன்ன. (கூகூ)

சஅ. பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவி னகிய குற்றங் காட்டலும்
ஊரது †சார்வுஞ் செல்லுந் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய கிளவியும்
புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு
அழிந்தெதிர் கூறி விடுப்பினு மாங்கத்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினுஞ்
சேய்நிலைக் ககன்றூர் செலவினும் வரவினுங்
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப.

இது, கொண்டதலைக்கழிந்தழி இடைச்சுரத்துக் கண்டோர் கூறுவன கூறுகின்றது.

(இ - ள்) பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்—உடன்போயவழி மாலைக் காலமுஞ் சேறற்கரிய வழியும் அஞ்சுவரக் கூறி அவற்றது நீங்கு காரணமாகப் போகின்றூர்க்கு வரும் ஏதம் அறிவித்தலும்; ஊரது சார்வும் செல்லும் தேயமும் ஆர்வநெஞ்சமொடு செப்பிய கிளவியும்—எம்மூர் அணித்தெனவும் நீர் செல்லுமூர் சேய்த்தெனவும் அன்புடை நெஞ்சத்தாற் கூறுங் கூற்றுக்களும்;

(பாடம்) * 'நேரத் தோழி கூறியது.' † 'சார்பும்.'

புணர்ந்தோர் பாங்கில் புணர்ந்த நெஞ்சமொடு அழிந்து எதிர் கூறி விடுப்பினும்—புணர்ந்து உடன்போய இருவர் கண்ணுங் தணவா நெஞ்சினராகி ஆற்றுமை மீதூர ஏற்றுக்கொண்டு நின்று இனி இதின் ஊங்குப் *போதற்கரிது நும் பதிவயிற் பெயர்தல் வேண்டுமென்று உரைத்து மீட்டனும்; ஆங்கு அத் தாய்நிலைகண்டு தடுப்பினும் விடுப்பினும்—அவ்விடத்துத் தேடிச் சென்ற அச்செவிலியது நிலைகண்டு அவளைத் தடுத்து மீட்பினும் அவர் இன்னுழிச் செல்வரென விடுத்துப் போகினும்; சேய் நிலைக்கு அகன்றோர் செலவினும்—சேய்த்தாகிய நிலைமைக் கண்ணே நீங்கின அவ்விருவருடைய போக்கிடத்தும்; வரவினும் —செவிலியது வரவிடத்தும்; கண்டோர் மொழிதல் கண்டது என்ப—இடைச்சுரத்துக் கண்டோர் கூறுதல் உலகியல் வழக்கினுட் காணப்பட்டதென்று கூறுவர் புலவர் என்றவாறு.

“ †எம்மூ ரல்ல ‡னூர்நணித் தில்லை
வெம்மூரட் செல்வன் கதிரு மூழ்த்தனன்
சேந்தனை சென்மோ பூந்தார் மார்ப
இனையண் மெல்லியண் மடந்தை
அரிய சேய பெருங்க லாறே.” (சிற்றெட்டகம்)

இதனுட் கதிரும் ஊழ்த்தனனெனவே பொழுதுசேறலும் பெருங்க லாறெனவே ஆற்றதருமையும் பற்றிக் குற்றங் காட்டிய வாறு காண்க “எல்லுமெல்லின்று” என்னுங் குறுந்தொகைப் (கூகo) பாட்டும் அது.

“ நல்லோண் மெல்லடி நடையு மாற்றுள்
பல்கதிர்ச் செல்வன் கதிரு மூழ்த்தனன்
அணித்தாத் தோன்றுவ தெம்மூர்
§மணித்தார் மார்ப சேந்தனை சென்மே.”

இஃது எம்மூர் அணித்தென்றதனுற் சார்வும் அதனனே செல்லுங் தேயஞ் சேய்த்தெனவுங் கூறிற்று. மகட்பயந்து வாழ்வோர்க்கு இவளைக் கண்டு அருள் வருதலின் ஆர்வநெஞ்ச மென்றார்.

“ இதனும் மூரே யாவருங் கேளிர்
பொதுவறு சிறப்பின் வதுவையுங் காண்டு
மீன்றரு செய்தாச் செய்தவம்
யாம்பெற் றனமான் மீண்டனை சென்மே.”

(பாடம்) * ‘போக்கரிது.’

† இச்செய்யுள் இறையனு ரகப்பொருள் உகூ-ஆவது சூத்திரவுரையுள் மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளது.

‡ ‘ஊரணித்தில்லை.’ § ‘மணத்தார்.’

இஃது அழிந்தெதிர் கூறி விடுத்தது. இது 'கொடுப்போ ரின்றிக் கரண முண்மை'* கூறிற்று. மீட்டுழி இன்னுழிச் சென்று இன்னது செய்ப என்றல் புலனெறிவழக்கன்று.

"பெயர்ந்து போகுதி பெருமூ தாட்டி
சிலம்புகெழு சீறடி சிவப்ப
விலங்குவேற் காளையோ† டிறந்தனள் சுரனே."

"சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதா மென்செய்யுங்
தேருங்கா னும்மக னுமக்குமாங் கனையளே." (கலி-கூ)

"கடன்மேய சங்கங் கழியடைந்த பெண்ணை
மடன்மேய வாழ்குர லன்றில்—கெடலருஞ்சீர்
வாமா னெடுங்கோதை வான்றீண்டு கொல்லிமேற்
றேமாவின் மேய கனி."

இவை செவிலியைத் தடுத்தன.

"சிலம்புஞ் சிறுநுதலுஞ் சில்குழலும் பல்வளையு
மொருபாற் ரோன்ற
அலங்கலந் திண்டோளும் ஆடெருத்தும் ஒண்குழையு
மொருபாற் ரோன்ற
விலங்க லருஞ்சுரத்து வேறுருவின் ஓருடம்பாய்
வருவார்க் கண்டே
அலங்கல் அவிர்சடையெம் அண்ணல் விளையாட்டென்
றகன்றேம் ‡பாவம்."

இது (ா)தய்வமென யாங்கள் போந்தேம், நுமக்கெய்தச் சேறலாமென்று விடுத்தது.

"நெருப்பவிர் கனலி யுருப்புச்சினந் தணியக்
கருங்கால் §யாத்த வரிநிழ லசைஇச்
சிறுவரை யிறப்பிற் ¶காண்டி செறிதளிர்ப்
பொன்னேர் மேனி மடந்தையொடு
$வென்வே லண்ணல் முன்னிய சுரனே." (ஐங்குறு-கூஅஅ)

இவ் வைங்குறுநூறும் அது.

"அஞ்சுடர்நீள் வாண்முகத் தாயிழையு மாறிலா
வெஞ்சுடர்நீள் வேலானும் போதரக்கண்—டஞ்சி
யொருசுடரு மின்றி யுலகுபா ழாக
விருசுடரும் போந்தனவென் ரூர்." (திணைமாலை நூற்--எக)

இஃது இடைச்சுரத்துக் கண்டோர் கூறிய வார்த்தையைக் கேட்டோராகச் சிலர் கூறியது.

---

* தொல்-பொ-கற்-உ. (பாடம்) † 'இறந்தன டானே.'
‡ 'அற்றேம்.' § 'யாத்துவரி நிழல்.' ¶ 'காண்குவை செறிதொடி.'
$ 'வெள்வேல் விடலை.'

"அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றத்
தொலிவ லீந்தி னுலவை யங்காட்
டாறுசென் மாக்கள் சென்னி யெறிந்த
செம்மறுத் தலைய நெய்த்தோர் வாய
வல்லியம் பெருந்தலைக் குருளை மாலை
மரனெக்கு மீண்டிவ ரீங்கைய சுரனே
வையெயிற் றையண் மடந்தை *முன்னேற்
றெல்லிடை நீங்கு மிளையோ னுள்ளங்
காலொடு பட்ட மாரி
மால்வரை மிளிர்க்கு முருமினுங் கொடிதே." (நற்றிணை-உ)

"காண்பா னவாவினுற் காதலன் காதலிபின் னடவாகிற்ப
நாண்பால னாதலா னண்ணுதல் கேள்வன்பின் னடவா கிற்ப
வாண்பான்மை குன்ற வயில்வே லவன்றனக்கு மஞ்சொ லாட்கும்
பாண்பாலை வண்டினமும் பாட வருஞ்சுரமும் †பதிபோன் றன்றே."

"மடக்கண் டகரக் கூந்தற் பணைத்தோள்
வார்ந்த வாலெயிற்றுச் சேர்ந்துதெறி குறங்கிற்
பிணைய லந்தழை தைஇத் துணையிலள்
விழவுக்களம் பொலிய வந்துநின் றோளே
யெழுமிளே வெழு தினங் கொழுநர்க் காக்கம்
ஆரியர் துவ ன்றிய பேரிசை முள்ளூர்ப்
பலருடன் கழித்த வொள்வாண் மலையன
தொருவேற் கோடி யாங்குநம்
பன்மைய தெவனெவிவ ணன்மைதலைப் படினே."
(நற்றிணை-கஎ0)

இஃது இடைச்சுரத்துக் குறும்பினுள்ளோர் இவரைக் கண்டு கோள்இழைப்புற்றார்க்கு அவர்பெண்டிர் கூறியது. இவை செலவின்கட் கூறியன.

"வில்லோன் காலன கழலே தொடியோண்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றெலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே." (குறுந்-எ)

என்பதும் அது.

"கடியான் கதிரெறிப்பக் கல்லளையில் வெம்பியவக்
கலங்கற் சின்னீர்
ரடியா னுலகளந்த வாழியா னுக்கிய
வமிர்தென் றெண்ணிக்
கொடியான் கொடுப்பக் குடங்கையிடங் கொண்டிருந்து
குடித்துச் சென்ற
வடியேர் தடங்கணவ் வஞ்சிக்கொம் பீன்றாரிவ்
வருவார் போலும்."

(பாடம்) * 'முன்னுற்று.' † 'பதியொன் றன்றே.'

"நமரே யவரெனி னண்ணினீர் சொன்மி
னமர்வி லொராவவதி யாய்கின்—றமரோ
விளக்கி னனையாளைத் தான்கண்டாள் கண்டேன்
களக்கனி வண்ணனே யான்."

"அறம்புரி யருமறை நவின்ற நாவிற்
றிறம்புரி கொள்கை யந்தணீர் தொழுவலென்
ரெண்டொடி வினவும் பேதையம் பெண்டே
கண்டனெ மம்ம சுரத்திடை *யவளை
யின்றுணை யினிதுபா ராட்டக்
குன்றுயர் பிறங்கன் †மலையிறந் தோளே." (ஐங்குறு-கூஅஎ)

இவை செவிலி வரவின்கட் கூறின.

"எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேரோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைதடை யந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மக ளொருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னு நிருவரைக் காணிரோ பெரும
காணை மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவர ருயிர்நீர் போறிர் ;

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா மென்செய்யு
நினையுங்கா னும்மக ணுமக்குமாங் கனையளே ;

சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென் செய்யுந்
தேருங்கா னும்மக ணுமக்குமாங் கனையளே ;

ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
சூழுங்கா னும்மக ணுமக்குமாங் கனையளே ;

எனவாங்கு, இறந்த கற்பிழைட் கெவ்வம் படரன்மின்
னிறந்தானை வழிபடஇச் சென்றன
ளறந்தலை பிரியா வாறு மற்றதுவே." (கலி-கூ)

என்னும் பாலைக்கலியும் அது. இக்கூறியவாறன்றி இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இச்சூத்திரத்தான் அமைக்க. (சo)

சூக. ஒன்றுத் தமரினும் பருவத்துஞ் சுரத்தும்
ஒன்றிய தோழியொடு வலிப்பினும் விடுப்பினும்
இடைச்சுர மருங்கின் அவள்தம ரெய்திக்

(பாடம்) * 'அவளே.' † 'மலையிறந் தோரே.'

கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞ ரெய்
கற்பொடு புணர்ந்த கௌவை யுளப்பட [திக்
அப்பாற் பட்ட ஒருதிறத் தானும்
நாளது சின்மையு மிளமைய தருமையுந்
தாளாண் பக்கமுந் தகுதிய தமைதியும்
இன்மையது *இளிவு முடைமைய துயர்ச்சியும்
அன்பின தகலமு மகற்சிய தருமையும்
ஒன்றுப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
வாயினுங் கையினும் வகுத்த பக்கமொடு
ஊதியங் கருதிய வொருதிறத் தானும்
புகழு மானமு மெடுத்துவற் புறுத்தலுந்
தூதிடை யிட்ட வகையி னானும்
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினு
மூன்றன் பகுதியு மண்டிலத் தருமையுந்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலு முடிந்த காலத்துப்
பாகலெடு விரும்பிய வினைத்திற வகையினுங்
காவற் பாங்கி னுங்கோர் பக்கமும்
பரத்தையி னகற்சியிற் பரிந்தோட் குறுகி
இரத்தலுந் தெளித்தலு மெனவிரு வகையோடு
உரைத்திற நாட்டங் கிழவோன் மேன.

இஃது உடன்போக்கினுள் நற்றாயுந் தோழியுங் கண்டோ ருங் கூறுவன கூறித் தலைவன் ஆண்டும் பிறண்டுங் கூறுங் கூற் றுங் கூறுகின்றது. †தமர் பருவஞ் சுரமென்னும் மூன்றற்கும் ஒன்று வென்பதனையும் ஒன்றியவென்பதனையுங் கூட்டி ஏழ னுருபு விரித்துப் பொருளுரைக்க.

(இ - ள்.) ஒன்றுத் தமரினும்—உடன்போக்கிற்கு ஒன் றுத் தாயர் முதலியோர்க்கண்ணும்; பருவத்தும்—இற்செறிப் பாற் புறம்போகற்கு ஒன்றுமையானுந் தலைவனெடு கூட்டம் பெறாது ஆற்றியிருக்கும் பருவம் ‡ஒன்றுதானும் ஒன்றுப்

(பாடம்) * 'இழிவும்.' † 'தமரினும் பருவத்துஞ் சுரத்தும்.'
‡ 'அன்றுகலானும்.'

பருவத்தின் கண்ணும்; சுரத்தும்—அரிய சேய கல்லதர் ஆகலிற் போதற்கு ஒன்றுச் சுரத்தின்கண்ணும்; ஒன்றிய தோழியொடு வலிப்பினும்—தலைவி வேண்டியதே தான் வேண்டுதலிற் பின் தமர் கூறுங் கடுஞ்சொற் கேட்டற்கும் ஒருப்பட்டு நொதுமலர் வரைவிற்காற்றாது உடன் போக்கிற்கேலாத கடுங்கோடை யெனக் கருதாது கொண்டுதலைக்கழிதற்கு ஒன்றிய தோழி யொடு தலைவன் ஆராய்ந்து உடன் போக்கினைத் துணியினும்; விடுப்பினும்—தலைவியை ஆற்றி யிருப்பளெனக் கருதி உடன் கொண்டு போகாது தலைவன் விடுப்பினும்; இடைச்சுர மருங்கின் அவள் தமர்எய்திக் கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கு அஞர் எய்திக் கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட அப் பால் பட்ட ஒரு திறத்தானும்—தந்தையுந் தன்னையரும் இடைச் சுரத்திடத்தே பின்சென்று பொருந்தித் தலைவியைப் *பெயர்த் தல் வேண்டுதலிற் றலைவி மிகவருந்தித் தமர்பாற்பட்டு உரை யாடாது தலைவன்பாற்படுதலின் அவள் கற்பொடு புணர்ந் தமை சுற்றத்தாருஞ் சுரத்திடைக்கண்டோரும் உணர்ந்த வெளிப்பாடு உளப்படக் கொண்டுதலைக்கழிதற் கூற்றின்கட் பட்ட பகுதிக் கண்ணும்.

கடைக்கொண் டெய்தியென்க. கடை—பின். தமரெனவே, தந்தை தன்னையரை உணர்த்திற்று. "முன்னர்த் தாய்நிலை கண்டு தடுப்பினு" மென்றலின், தாயர்தாமே சென்றமை முன் னத்தாற் றமர் உணர்ந்து வலிதிற்கொண்டு அகன்றுளே வென்று கருதியும் அவ்வரைவு மாட்சிமைப் படுத்தற்கும் பின் சென்று அவள் பெயராமற் கற்பொடு புணர்ந்தமை †கண்டு தலைவன் எடுத்துக்கொண்ட விணைமுடித்தலும் ஒருதலையென் றுணர்ந்து பின்னர் அவரும் போக்குடன்பட்டு மீள்பவென்று கொள்க. அவ்வெளிப்பாடு கற்பாதலிற் கற்பென்றார் ‡உளப் படவென்றதனால் வலித்தலும் விடுத்தலும் அகப்பட வென்று ராயிற்று.

நாளது சின்மையும் இளமையது அருமையும் தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும் இன்மையது இளிவும் உடை மையது உயர்ச்சியும் அன்பினது அகலமும் அகற்சியது அரு மையும் ஒன்றுப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்—வாழ்க்கை நாள் சிலவாதல் ஏதுவாகப் பொருள்செய்தல் குறித்தாரை இளமையது அருமை இன்பத்தின் கண்ணே ஈர்த்து ஒன்றுமை

(பாடம்) * 'பெயர்த்தலின்.' † 'உணர்ந்து.'

‡ 'உளப்பட வென்றது வலித்தலும் விடுத்தலும் அகப் பட என்றவாறு.'

யும், மடியின்மை ஏதுவாகப் பொருள்செயல் குறித்தாரை யாதானும் ஓர் ஆற்றுற் பொருள் செய்யலாகாது தத்த நிலைமைக்கேற்பச் செயல்வேண்டு மென்னுந் தகுதியதமைதி ஒன்றுமையும், இன்மையான் வரும் இளிவரவு நினைத்துப் பொருள்செய்ய நினைந்தாரைப் பொருளுடைமைக் காலத்து நிகழும் உயர்ச்சி அதற்கு இடையூறுகிப் பொருணசை யுள்ளத் தைதத் தடுத்து ஒன்றுமையும், பிரிந்தழி நிகழும் அன்பினது அகலங்காரணமாகப் பொருள்செய்யக் குறித்தாரைப் பிரிவாற் றுமை யிடைநின்று தடுத்து ஒன்றுமையுமாய், ஒன்று ஒன்ற னோடு ஒன்றுது வரும் பொருட்டிறத்துப் பிரிதற்குத் தலைவன் உள்ளம் எடுத்த பகுதிக்கண்ணும்;

எனவே, நாளது சின்மையுந் தாளாண்பக்கமும் இன்மையதி ளிவும் அன்பினதகலமும் பொருள் செயல்வகைப்பால ஆதலும் இளமையதருமையுந் தகுதிய தமைதியும் உடைமைய துயர்ச்சி யும் அகற்சிய தருமையும் இன்பத்தின்பால ஆதலுங் கூறினர். இவ்வெட்டும் பொருள்செயற்கு ஒன்றுவென்னுமோ எனின், வாழ்நாள் சிறிதென்று உணர்ந்து அதற்குள்ளே பொருள் செய்து அறமும் இன்பமும் பெறுதற்குக் கருதியவழி ஆண்டு முயற்சியும் இன்மையால்வரும் இளிவரவும் அதற்கு ஒருப்படுத் துங் கருவியாதலானும், பொருள் பின்பு அன்பிற்குப் பெருக்கந் தருமாதலானும், இந்நான்கும் பொருள்செய்தற்கு வேண்டு மென மறுக்க. இவ்வெட்டற்குந் தலைவன் கூற்றுக உதாரணம் வருவன உளவேற் கண்டுகொள்க

> "ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்
> செயவினை கைம்மிக வெண்ணுதி யவ்வினைக்
> கம்மா வரிவையும் வருமோ
> வெம்மை யுய்த்தியோ வுரைத்திசி னெஞ்சே." (குறு-சுஉ)

இக் குறுந்தொகையுள் இன்மையதிளிவு நெஞ்சிற்குக் கூறியவாறு காண்க. பகுதியென்றதனானே, தலைவன் பிரிவ லெனக் கூறுவனவும் பிறவுங் கொள்க.

> "இன்றே சென்று வருது நாளைக்
> குன்றிழி யருவியின்....." (குறு-கஅசு)

என வரும்.

இது குறுந்தொகை.

இவை வாணிகர்க்கே உரியன.

இனித்தலைவன் கூற்றினைத் தலைவியுந் தோழியுங் கொண்டு கூறுவன பெரும்பான்மை. அவையெல்லாம் 'நிகழ்ந்தது கூறி

நிலையுங் திணையே' (தொல்-பொ-அக-சசு.) என மேல்வருஞ் சூத்திரத்துட் காட்டுதும்.

வாயினுங் கையினும் வகுத்த பக்கமொடு ஊதியம் கருதிய ஒரு திறத்தானும்—உண்மைப் பொருளிடத்தும் அதற்கேற்ற ஒழுக்கத்திடத்துங் கூறுபடுத்துக் கூறிய நூல்களாற் பெறும் பயனைக் கருதிய ஒரு கூற்றின்கண்ணும்;

என்றது, வீடுபேற்றிற்கு *உதவியாகிய நூல்களை ஒதற்குப் பிரிவுழியு மென்றதாம். இதற்குத் தலைவன் கூற்றாக உதாரணம் வருவன உளவேற் கொள்க.

புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும்—போகம்வேண்டிப் பொதுச்சொற் †பொறுத்தல் அரசியலன்றாதலிற் றமக்கேற்ற புகழும் பெருமையும் எடுத்துக்காட்டி இதனைப் பிரிதுமெனத் தலைவியையுந் தோழியையும் வற்புறுத்தற்கண்ணும்;

இதற்குத் தலைவன் கூற்று வந்துழிக் காண்க.

தூது இடையிட்ட வகையிலுழும்—இருபெரு வேந்தர் பொருவது குறித்துழி இருவரையுஞ் சந்து செய்வித்தற் பொருட்டுக் கூட்டத்திற்கு இடையிட்ட பிரிதற் பகுதிக்கண்ணும்;

‡ஒருவனுழை ஒருவன் மாற்றங்கொண்டுரைத்தலிற் றூதாயிற்று. வகையென்றார், வாணிகரில் அரசர்க்கும் அரசரில் அந்தணர்க்குந் தூது சிறந்ததென்றற்கு, குறுநிலமன்னர்க்குப் பெரும்பான்மை யென்றற்கும், வேந்தர் தமமின் இழிந்தாருழைத் தூதுசேறல் உரித்தென்றற்கும். இதற்குத் தலைவன் கூற்று வந்துழிக் காண்க.

ஆகித்தோன்றும் பாங்கோர் பாங்கினும் — §தனக்கு ஆக்கஞ் சிறந்த நட்புடையோராகித் தோன்றும் நட்புடையோர்க்கு உற்றுழி உதவச் சேறற்கண்ணும்;

இதற்கு "மலிநிசைக் குலிய" (அகம்-அசு) என்பதூஉம் "இருபெரு வேந்தர் மாறுகொள்" (அகம்-களசு) என்பதூஉம் ¶முன்னர்க் காட்டினும். அவற்றை உதாரணமாகக் கூறிக் கொள்க.

(பாடம்) * 'உதவியாக நூல்களையோத.' † 'போற்றுதல்.'
‡ 'ஒருவனிடை.' § 'தனக்காக்கஞ் சிறந்த நட்புடையோர்க்கு.' ¶ 'தொல்-பொ-அக-உசு ஆம் சூத்திர வுரையிற் காண்க.

மூன்றன் பகுதியும்—அறத்தினாற் பொருளாக்கி அப் பொருளாற் காமநுகர்வலென்று பிரிதற்கண்ணும்; மண்டிலத்து அருமையும்—அங்ஙனம் பொருள்வருவாய்க்கு ஏதுவாகிய வேற்றுப் புலங்களின் அருமைகூறிப் பிரிதற்கண்ணும்;

இதற்குத் தலைவன்கூற்று வந்துழிக் காண்க.

தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்—தோற்றஞ் சான்ற புகழினராகிய வேற்று வேந்தர் தமது மீக்கூற்றங் கருதிப் பிரிதற்கண்ணும்;

இதற்குத் தலைவன்கூற்று வந்துழிக் காண்க.

தோன்றல் சான்ற என்றதனாற் றெவ்வர் தன்னின் மிக்கா ரெனக் கேட்டுழி அழுக்காறு தோன்றலின் அதுவும் பிரிதற்கு ஏதுவா மென்றுணர்க. இஃது அரசர்க்கேயுரித்து.

பாசறைப் புலம்பலும்—தலைவன் பாசறைக்கண் இருந்து தனக்கு வெற்றி தோன்றிய காலத்துந் தான் அவட்குக் கூறிப் போந்த பருவம் வந்துழியுந் தூது கண்டுழியும் அவள் வருந்து வளென நினைத்துத் தனிமை கூறும் இடத்தும்;

இதனைக் *'கிழவிநிலையே' (தொல்-பொ-கற்-சூரி) என்னுஞ் சூத்திரத்தான் விலக்குவரெனின், அதற்கு †உம்மைவிரித்துக் கிழவி நிலையை வினைசெய்யாநிற்றலாகிய இடத்து நினைந்து கூறினானெக் கூறுர்; வெற்றி நிகழுமிடத்துந் தான் குறித்த பருவம் வந்துழியுந் தூது கண்டுழியும் வருத்தம் விளங்கிக் கூற்றுத் தோன்றுமென்று பொருளாமென்றுணர்க.

முடிந்த காலத்துப் பாகனெடு விரும்பிய வினைத்திற வகையினும்—வகையின் வினைத்திறமுமென மாற்றுக: வேந்தன் எடுத்துகொண்ட வினை முடிந்தகாலத்துத் தான் போக் கொருப்பட்டு நின்று பாகனெடு விரும்பிக் கூறிய வகையின்கட் டோன்றிய வேறோர் வினைத்திறத்திடத்தும்;

என்றது, அரசனுக்குப் பின்னும் ஓர் பகைமேற் சேறல் உளதாதலை.

காவற்பாங்கின் பக்கமும்—வேந்தன் றன்னைக் காக்கப்படு வன வாகிய பகுதிகளின் கூற்றிற் பிரியுமிடத்தும்;

---

*'கிழவி நிலையே வினையிடத் தரையார், வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்' என்பது. இதன் பொருளே ஈண்டுக் கூறினர். இதன்கட் காலத்தும் என்னும் எச்சவும்மை தொக்கு நின்றது. இது கருதியே உம்மை விரித்தென்றுரைக்க.

(பாடம்) † 'உம்மை கொடுத்.'

பகுதி ஆகுபெயர்; அவை யானை குதிரை முதலியவற்றைக் காத்தலும் அரசர்க்குத் தருமமாகிய வேட்டையிற் சென்று கடுமா கொன்று ஏனையவற்றைக் காத்தலும் முதலியன.

ஆங்கோர் பக்கமும்—அவன் காத்தற்குரிய பகுதிக் கண்ணே நிற்பார் கூற்றிற் பிரியுமிடத்தும்;

அவர் தாபதர் முதலியோர் பலருமாம்.

பரத்தையின் அகற்சியிற் பரிந்தோட்குறுகி இரத்தலும் தெளித்தலும் என இருவகையோடு—பரத்தையிற் பிரிதல் காரணத்தாற் பரிபுலம்பெய்திய தலைவியை எய்தி இரத்தலும் இரந்தபின்னர் ஊடலுணர்த்தலும் என்ற இருபகுதியோடே; உரைத்திற நாட்டம் கிழவோன் மேன—முற்கூறிய இடங்களிற் கூற்று நிகழுங் கூறுபாட்டை நிலைபெறுத்துதல் தலைமகனிடத் தனவாம் என்றவாறு.

உதாரணம்:—

"ஆறுசெலல் வருத்தவுஞ் சேறடி சிவப்பவுஞ்
சினைநீங்கு தளிரின் வண்ணம் வாடவுந்
தான்வர றுணிந்த விவளினு மிவளுடன்
வேய்பயி லழுவ முவக்கும
பேதை நெஞ்சம் பெருந்தக வுடைத்தே."

இது தோழியொடு வலித்தது.

அப்பாற்பட்ட ஒருதிறத்தானும் என்றதனானே, தலைவியிடத்துத் தலைவன் கூறுவன பலவுங் கொள்க.

உதாரணம்:—

"வாள்வரி வயமான் கோளுகிர் அன்ன
செம்முகை யவிழ்ந்த முண்முதிர் முருக்கின்
சிதரார் செம்மல் தாஅய் மதரெழின்
மாணிழை மகளிர் பூணுடை முலையின்
முகைபிணி அவிழ்ந்த கோங்கமொ டுசைஇனை
அதிரல் பரந்த அந்தண் பாதிரி
உதிர்வீ அஞ்சினை தாஅய் எதிர்வீ
மராஅ மலரொடு விராஅய்ப் பராஅம்
அணங்குடை நகரின் மணந்த பூவின்
நன்றே கானம் நயவரும் அம்ம
கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை
அடுகளம் பாய்ந்த தொடிசிதை மருப்பிற்
பிடிமிடை களிற்றில் தோன்றுங்
குறுநெடுந் தூணைய குன்றமும் உடைத்தே." (அகம்-கக)

இவ் வகப்பாட்டு தலைவியை மருட்டிக் கூறியது.

"*உயர்கரைக் கானியாற் றவிரற லகன்றுறை
வேனிற் பாதிரி விரைமலர் குவைஇத்
தொடலை தைஇய மடவரன் மகளே
கண்ணினுங் கதவின் முலையே
முலையினுங் கதவின் றடமென் றோளே." (ஐங்குறு-நகூக)

இவ் வைங்குறுநூறு உடன்போயவழித் தலைவன் புகழ்ச்சிக்கு காணித் தலைவி கண்புதைத்தழி அவன் கூறியது.

" அழிவிலர் முயலு மார்வ மாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்
கலமரல் வருத்தந் தீர யாழநின்
னலமென் பணைத்தோ ளெய்தின மாகலிற்
பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திகிரி
நிழல்காண் டோறு நெடிது வைகி
மணல்காண் டோறும் வண்ட றைஇ
வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே
மாநனை கொழுதி மகிழ்குயி லாலு
நறுந்தண் பொழில கானங்
குறும்பல் லூரயாஞ் செல்லு மாறே." (நற்றிணை-கூ)

எனவரும். இது புணர்ச்சி மகிழ்ந்தபின் வழிவந்த நன்மை கூறி வருந்தாது ஏகென்றது. இது நற்றிணை.

பிறவும் வேறுபட வருவனவெல்லாம் இதனுள் அமைக்க.

" இரும்புலிக் கிரிந்த கருங்கட் செந்நாகு
நாட்டியிர் கடைகூரல் †கேட்டொறும் வெரூஉ
மாரிலைப் பள்ளி யல்க நம்மொடு
மானுண் கண்ணியும் வருமெனின்
வாரார் யாரோ பெருங்க லாறே."

இது விடுத்தற்கட் கூறியது.

" வினையமை பாவையி னியலி நுந்தை
மனைவரை யிறந்து வந்தனை யாயிற்
றலைநாட் கெதிரிய ‡தண்பத வெழிலி
யணிமிகு கானத் தகன்புறம் பரந்த
கடுஞ்செம் மூதாய் கண்டுங் கொண்டு
நீவிலை யாடுக சிறிதே யானே
மழகளி றுரிஞ்சிய பராரை வேங்கை
மணலிடு மருங்கி னிரும்புறம் பொருந்தி

(பாடம்) * 'உயரறற் கான்யாற் றவிரறல்,' 'விரிபுனற் கான்யாற் றவிர் மணல்.' † 'மீட்டொறும்.' ‡ 'தண்பெயல்.'

யமர்வரி னஞ்சேன் பெயர்க்குவ
னுமர்வரின் மறைகுவன் மாஅ யோளே.” (நற்றிணை-கூசுஉ)

இது நற்றிணை.

“ நுமர்வரி னுேர்ப்பி னல்ல தமர்வரின்
மூங்நீர் மண்டில முழுது மாற்ரு
தெரிகணே விடுத்தலோ விலனே
யரிமதர் மழைகணண் கலுழ்வகை யெவனே.”

இவை தமர் வருவரென ஐயுற்றுக் கூறியன. அவர் வந்து கற்பொடு புணர்ந்தன வந்தழிக் காண்க.

“ அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் *பெயர்ந்தநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேஎளினி.”
(கலி-கக)

இதனுள் எனவென்றதனுற் றலைவன் கூற்றுப் பெற்றும். இது †மூன்றன் பகுதி.

“ புகல்சால் சிறப்பிற் காதலி புலம்பத்
துறந்துவந் தோயே யருந்தொழிற் கட்டேர்
நல்லேறு ‡தழீஇ நாகுபெயர் காலை
யுள்ளுதொறுங் கலிழு நெஞ்சம்
வல்லே யெம்மையும் §வரவிழைத் தனேயே.” (ஐங்குறு-சசஅ)

இது பகைவயிற் பிரிந்தோன் பருவங்கண்டு தலைவியை நினைந்து நெஞ்சொடு புலம்பியது.

“ முல்லே நாறுங் கூந்தல் கமழ்கொள
நல்ல காண்குவ மாஅ யோயே
பாசறை யருந்தொழி லுதவிநங்
காதனன் ஞட்டுப் போதரும் பொழுதே.” (ஐங்குறு-சசசு)

இது வேந்தற்குற்றுழிப் பிரிந்தோன் பருவவரவின்கண் உருவு வெளிப் பட்டுழிப் புலம்பியது. உதவியென்றலின் வேந்தற்குற்றுழி யாயிற்று.

“ வந்தாற்ருன் செல்லாமோ வாரிடையாய் வார்கதிரால்
வெந்தாற்போற் ருேன்றுநீள் வேயத்தங்—தந்தார்

(பாடம்) * ‘சென்ற.’

† ‘மூன்றன் பகுதி கூறுதலாவது அறத்தினுற் பொருளாக்கி அப் பொருளாற் காமம் நுகர்வே னென்றலாம்’ என்று இக்கலித்தொகை யுரையிற் கூறியதனுன் இதனைத் தெளிக. (கலி-பாலை-கக)

(பாடம்) ‡ ‘தழீஇய.’ § ‘வரவழைத்தனேயே.’

தகரக் *குழல்புரளத் தாழ்துகில்கை யேந்தி
மகரக் குழைமறித்த தோக்கு.” (திணைமாலை நூற்-எஎ)

இஃது உருவு வெளிப்பாடு. நின்னெடு போதுவே னென்ற வளை ஆற்றுவித்தது. திணைமாலையிற்பாலை.

“ நனிசேய்த் தென்னது நற்றே ரேறிச்சென்
றிலங்கு நிலவி னிளம்பிறை போலக்
காணுவெந் தில்லவவள் கவின்பெறு சுடர்நுதல்
விண்ணுய ரரண்பல வெளவிய
மண்ணுறு முரசின் வேந்துதொழில் விடினே.”
(ஐங்குறு-சசகூ(

இது வேந்தற்குற்றுழிப் பிரிந்தோன் தான் குறித்த பருவத்து வினை முடியாமையிற் புலம்பியது.

“†முழங்குகுரன் முரசங் காலை யியம்பக்
கடுஞ்சின வேந்தன் ரெழிலெதிர்ந் தனனே
மெல்லவன் மருகின் முல்லை பூப்பப்
டொங்குபெயற் கனைதுளி காரெதிர்ந் தன்றே
யஞ்சி லோதியை யுளளுதொறும்
துஞ்சா தலமர ஞமெதிர்ந் தனமே.” (ஐங்குறு-சசஅ)

இது வேந்தற்குற்றுழிப் பிரிந்தோன் பருவம்வந்துழி மீளப்பெறுது அரசன்செய்தியும் பருவத்தின் செயதியுந் தன் செய்தியுங் கூறிப் புலம்பியது. இப் பாசறைப் புலமபல் பத்தினுள்ளுமை வேறுபாடு காண்க. தூதிற்பிரிந்துழிப் புலம்பினவந்துழிக் காண்க.

“ நீடின மென்று கொடுமை தூற்றிய
வாடிய நுதல ளாகிப் ‡பிறிதுநினைந்
தியாமவெங் காதலி னெய்மிகச் சாஅய்ச்
சொல்லிய துரைமதி நீயே
முல்லை நல்யாழ்ப் பாணமற் றெமக்கே.” (ஐங்குறு-சஎஅ)

இது தூதுகண்டு அவள கூறிய திறங்கூறெனக் கேட்டது.

“ பனிமலர் நெடுங்கண் பசலை பாயத்
துனிமலி துயரமொ டரும்பட ருழப்போள்
கையறு §நெஞ்சத் துயவுத்துணை யாகச்
சிறுவரைத் தங்குவை யாயிற்
¶காண்குவை மன்னுற் பாணவெந் தேரே.” (ஐங்குறு-சஎஎ)

இது தலைவிமாட்டுப் பாணனைத் தூதாக விடுந் தலைவன் கூறியது.

(பாடம்) * ‘குழலனைய.’ † ‘தழங்குரன்,’ ‘தழங்குகுரன்.’
‡ ‘பெரிது நினைத்து.’ ‘பெரிது நினைந்து.’
§ ‘நெஞ்சிற் குயவுத்துணையாக.’ ¶ ‘காண்குமன்றே.

"படுந்தடங்கட் பல்பிணைபோல் வான்முழங்கன் மேலுங்
கொடுந்தடங்கட் கூற்றமின் னுக—நெடுந்தடங்க
ணீர்நின்ற நோக்கி னெடும்பிணைமென் றோளாட்குத்
தேர்நின்ற *தென்னுய் திரிந்து." (திணைமாலை நூற்-ககஎ)

இஃது இளையோரைத் தூதுவிட்டது.

"ஐய வாயின செய்யோள் இளவி
கார்நா ளருமொடு கையறப் பிரிந்தென
நோய்ஈன் தது †செய்தன் றறமக்கே
யாமுறு துயரமவ ளறியிலெ னன்றே." (ஐங்குறு-சசக)

இது விளைமுடியாமையிற் பருவங்கண்டு மீளப்பெறுத லிலை வன் தூதர் வார்த்தை கேட்டு வருந்தியது. பிறவும் வேறுபட வருவன கொள்க

"மூரம்புகண் ணுடையத் திரியுந் திகிரியொடு
பிணைநிலை மூனெடிய வயமாப் புணர்ந்து
திண்ணிதின் மாண்டன்று தேரே
யொண்ணுதற் காண்குவம் ‡வேந்துவினை விடினே."
(ஐங்குறு-சசக)

இது வேந்தன் திறைகொண்டு மீள்வுழிக் தானுஞ் சமைந்த தேரை அழைத்துக்கண்டு 'திண்ணிதின் மாண்டன்று தே'ரெனப் பாகனெடு கூறியவழி அவ்வேந்தன் திறைவாங்காது விளைமேற் சென்றுளகப் பாகனை நோக்கிக் கூறியது. இவை ஐங்குறு நூறு. "மலைமிசைக் குலைய" என்னும் (அசை) அகப் பாட்டும் அது. கலித்தொகையுட் "புத்தியாளை வந்தது காண் பான்யான் றங்கினேன்" (மருதக்கலி-நஉ) என்பன முதலியவற் றுன் யானைமுதலியவற்றையுங், கடவுட் பாட்டால் (மருதக் கலி-உஅ) தாபதரையுங் காத்தற்குப் பிரிந்தே னெனக் கூறினு னென்பது பெற்றும்.

"ஒருஉக், கொடியிய னல்லார் குரலுற்றத் தற்ற
மூடியுதிர் பூந்தா தமொய்ப்பின வாகத்
தொடிய வெமக்குநீ யாரை பெரியார்க்
கடியரோ வாற்று தவர்;

கடியர்தமக், கியார்சொல்லத் தக்கார் மற்று;
வினைக்கெட்டு, வாயல்லா வெண்மை யுரையாது கூறுகின்
மாய மருள்வா ரகத்து;

ஆயிழாய், நின்கண் பெறினல்லா லின்னுயிர் வாழ்கல்லா
வென்க ணெவலெ தவறு;

இஃதொத்தன், புள்ளிக் கள்வன் புனல்சேர்பொதுக்கம்போல்
வள்ளுகிர் போழ்ந்தனவும் வாளெயி றுற்றனவு
மொள்ளிதழ் சோர்ந்தநின் கண்ணியு நல்லார்

(பாடம்) * 'தென்னுய் நீ சென்று.' † 'செய்தன வெமக்கே.'
‡ 'வேந்தன் வினை.'

சிறுபு சிறச் சிவந்தநின் மார்புந்
தவறுதல் சாலாவோ கூறு ;

அதுதக்கது, வேற்றுமை யென்கண்ணே வோராதி தீதின்மை
தேற்றக்கண் டீயாய் தெளிக்கு ;

இனித் தேற்றேம் யாந்
தேர்மயங்கி வந்த தெரிகோதை யங்ஙல்லார்
தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி
நீயுறும் பொய்ச்சூ ளணங்காயின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு.” (கலி-அஅ)

இதனுள் இரத்தலுந் தெளித்தலும் வந்தவாறு காண்க. பிறவும் இவ்வாறு வருவன கொள்க. (சக)

சஉ. எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே.

இது முன்னர்க் கூற்றிற்கு உரியரெனக் கூறுதோர்க்குங் கூற்று விதித்தலின் எய்தாத தெய்துவித்தது.

(இ - ள்.) எஞ்சியோர்க்கும்—முன்னர்க் கூறுது நின்ற செவிலிக்குந் தலைவிக்கும் ஆயத்தோர்க்கும் அயலோர்க்கும் ; எஞ்சுதல் இலவே—கூற்றெழுதல் இல என்றவாறு.

செவிலிக்குக் கூற்று நிகழுமாறு :—

“ இளியும் பந்துங் கழங்கும் வெய்யோள்
அளியும் அணிபுஞ் சாயலும் இயல்பும்
மூன்னுள் போலாள் இறீஇய ரென் உயிரெனக்
கொடுந்தொடைக் குழவியொடு வயின்மரத் தியாத்த
கடுங்கட் கறவையிற் சிறுபுற நோக்கிக்
குறுக வந்து குவவுநுதல் நீவி
மெல்லெனத் தழீஇயினே னுக என்மகள்
நன்னர் ஆகத் திடைமுலை வியர்ப்பப்
பல்கால் முயங்கினள் மன்னே அன்னோ
விறன்மிகு நெடுந்தகை பலபா ராட்டி
வறனிழல் அசைஇ வான்புலந்து வருந்திய
மடமான் அசாவினந் * திரங்குமரல் சுவைக்குங்
காடுடன் கழிதல் அறியின் தந்தை
அல்குபதி குத்த கடியுடை வியனகர்ச்
செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போலக்
கோதை யாயமோ டோரை தழீஇத்
தோடமை அரிசிலம் பொலிப்ப அவள்
ஆடுவழி ஆடுவழி அகலேன் மன்னே.” (அகம்-சக)

இவ் வகப்பாட்டு உடன்போன தலைவியை நினைந்து செவிலி மனையின்கண் மயங்கியது.

(பாடம்) * ‘மடமான் சாயினம்.’

"அத்த நீளிடை யவலெடு போகிய
முத்தேர் வெண்பன் முகிழ்நகை மடவர
*ரூய ரென்னும் பெயரே வல்லா
றெடுத்தேன் மன்ற யானே
கொடுததோர் மன்றவவ ளாயத் தோரே." (ஐங்குறு-சுஅ0)

இவ் வைங்குறு நூறு செவிலி தெருட்டுவார்க்குக் கூறியது. "முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின" என்னும் அகப் பாட்டு (எ) மகட்போக்கிய செவிலித்தாய் சுரத்திடைப் பின் சென்று நவ்விப்பிணையைக் கண்டு சொற்றது. செவிலி கான வர் மகளைக்கண்டு கூறியதுமாம்

"காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
யகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே." (குறுந்-சச)

இது குறுந்தொகை. செவிலி கடத்திடைத் தன் நெஞ்சிற் குச் சொல்லியது.

"இடிதுடிக் கம்பலையு மின்னுத வோசையு மிசையி னூராக்
கடவினே யாளர் †கடத்திடைப் பைங்குரவே கவன்று நின்றாய்
நெடுவினை மேற்செய்த வெம்மேபோ னீயும்
படிசினைப் பாவை பறித்துக்கோட் பட்டாயோ பையக் கூறாய்."

இது செவிலி குரவொடு புலம்பியது.

"தான்றாயாக் கோங்கந் தளர்ந்து மூலைகொடுப்ப
வீன்றாய்நீ பாவை யிருங்குரவே—யீன்றண்
மொழிகாட்டா யாயினு முள்ளெயிற்றுள் சென்ற
வழிகாட்டா யீதென்று வந்து." (திணைமாலை நூற்-சுஇ)

இது குரவே வழிகாட்டென்றது.

"குடம்புகாக் கூவல் குடிகாக்குஞ் சின்னீ
ரிடம்பெரு மாதிரியு ‡மேற்றீ ரத்த
மூடம்புணர் காத லுவப்ப விறந்த
தடம்பெருங் கண்ணிக்கு யான்றாயை கண்டீர்."

இது நீ யாரென்று வினையினர்க்குச் செவிலி கூறியது. இன் னும் வேறுபட வருவனவெல்லாம் இதனுள் அமைத்துக் கொள்க.

இனித் தலைவிகூற்று நிகழுமாறு:—

"பையப் பசந்தன்று நுதலுஞ் சாஅய்
ஐதா கின்றென் தளிர்புரை மேனியும்

(பாடம்) * 'தாய ரென்னும் பெயரே னல்லாறு.'
† 'கடற்றிடை.' ‡ 'வேற்று ரீளத்தம்.'

பலரும் அறியத் திகழ்தரும் அவலமும்
உயிர்கொடு கழியின் அல்லதை தினையின்
எவனே வாழி தோழி பொரிகால்
பொகுட்டரை யிருப்பைக் *குவிகுலைக் கழன்ற
ஆலி யொப்பின் தம்புடைத் திரள்வீ
ஆறுசெல் வம்பலர் நீளிடை யழுங்க
ஈனல் எண்கின் இருங்கிளை கவரும்
சுரம்பல †கடந்தோர்க் கிரங்குப வென்னுர்
கௌவை மேவல ராகி இவ்வூர்
நிரையப் பெண்டிர் இன்னு கூறுவ
புரையா அல்லஎன் மகட்கெனப் பரைஇ
நம்முணர்ந் தாறிய கொள்கை
யன்னை முன்னர்யாம் என்னிதற் படலே." (அகம்-கூஇ)

இது போக்குடன்பட்ட‡ தலைவி தோழிக் குரைத்தது.

அகம்.

" அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னெங்குமணற் சிறுசிறை
தீம்புன னெரிதர வீந்துக் காங்குத்
தாங்கு மளவை தாங்கிக்
காம நெரிதரக் கைநில் லாதே." (குறுந்-கசக)

இக் குறுந்தொகை நாண் நீங்கினமை கூறியது.

" சிலரும் பலருங் கடைக்க ணேக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டி ரம்ப றூற்றச்
சிறுகோல் வலத்த ளன்னை யிலப்ப
வலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தின்டிய பூநாறு குரூஉச்சுவற்
கடுமான் பூண்ட நெடுந்தேர் கடைஇ§
நடுநாள் வருஉ மியறேர்க் கொண்கனெடு
செலவயர்ந் திசினுல் யானே
யலர்சுமந் தொழிகவிவ் வழுங்க வூரே." (நற்றிணை-கசக)

இந் நற்றிணை அலர் அச்சம் நீங்கினமை கூறியது.

" சேட்புல முன்னிய ¶வசைநடை யந்தணீர்
நும்மொன் றிரந்தனென் மொழிவ லெம்மூர்த்
தாய்கயந் தெடுத்த$ வாய்கலங் கவின்பெற**
வாரிடை யிறந்த ளென்மி
னேரிறை முன்கையென் னுயத் தேர்க்கே." (ஐங்குறு-கூஅச)

(பாடம்) * 'குவிதலைக் கழன்ற.' † 'கழிந்தோர்க்.'
‡ 'போக்குடன் பட்டமை.'
§ 'கடுமாண் பரீஇய கதழ்பரி கடைஇ.'
¶ 'விரைநடை.' $ 'ஆய்கயந் தெடுத்த.'
** 'வாய்கலங் கவின.'

இவ் வைங்குறுநூறு 'யான் போகின்றமை ஆயத்திற்கு உரைமின்' என்றது.

"கடுங்கட் காளையொடு நெடுந்தே ரேறிக்
கோள்வல் வேங்கை மலை*பிறக் கொழிய
வேறுபல் லருஞ்சர மிறந்தன ளவளெனக்†
கூறுமின் வாழியோ வாறுசென் மாக்க
ணற்றே ணயந்துபா ராட்டி
யெற்கெடுத் திருந்த வறனில் யாய்க்கே." (ஐங்குறு-நஅடு)

இவ் வைங்குறுநூறு இன்று யான் தேரேறி வருத்தமின்றிப் போகின்றமை யாய்க்கு உரைமின் என்றது.

"கவிழ்மயி ரெருத்திற் செந்நா யேற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியுஞ்
சுரநனி வாரா நின்றன ளென்பது
முன்னுற விரைந்தனி ருரைமி‡
னின்னகை முறுவலென் னுயத் தோர்க்கே."
(ஐங்குறு-நகள)

இவ் வைங்குறுநூறு மீள்கின்றுளென்று என் வரவு ஆயத் தார்க்குக் கூறுமின என்றது.

"வேய்வனப் பிழந்த தோளும் வெயிறெற
வாய்கவின் றொலைந்த நுதலு நோக்கிப்
பரியல் வாழி§ தோழி பரியி¶
னெல்லையி லிடும்பை தரூஉ
நல்வரை நாடனொடு வந்த வாறே." (ஐங்குறு-நகஉ)

இவ் வைங்குறுநூறு மீண்டு வந்த தலைவி வழிவரல் வருத்தங் கண்டு வருந்திய தோழிக்குக் கூறியது.

"அன்னாய் வாழிவேண் டன்னை நம் படப்பைத்
தேன்மயங்கு பாலினு மினிய வவர்நாட்
டெவலெக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலுழி நீரே." (ஐங்குறு-உ0ங)

இஃது உடன்போய் மீண்ட தலைவி 'நீ சென்ற நாட்டு நீர் இனியவல்ல; எங்ஙனம் நுகர்ந்தாயென்ற' தோழிக்குக் கூறியது.

"அறஞ்சா லியரோ வறஞ்சா லியரோ
வறனுண் டாயினு மறஞ்சா லியரோ$

(பாடம்) * 'வேங்கையமலை.'
† 'வேரன் மலருஞ் சுரமிறந் தனளென.'
‡ 'முன்னுறச் செல்வீ ருரைமின்,' 'முன்னுற விரைந் தனி ரன்ன சென் றுரைமின்.'
§ 'பிரியல்வாழி.' ¶ 'பிரியின்.'
$ 'அறனு முண்டாயி னறஞ்சா லியரோ.'

வாள்வனப் புற்ற வருவிக்
*கோள்வரு மென்னையை மறைத்த குன்றே.”

(ஐங்குறு-கஉஉ)

இவ் வைங்குறுநூறு நின் ஐயன்மார் வந்துழி நிகழ்ந்தது என்னென்ற தோழிக்குத் தலைவி தலைவனை மறைத்த மலையை வாழ்த்தியது. பிறவும் வேறுபட வருவன வெல்லாம் இதனுன் அமைக்க.

இனி ஆயத்தார் கூற்று நிகழுமாறு:—

“மானதர் மயங்கிய மலைமுதற் சிறுநெறி
தான்வரு மென்ப தடமென் றோளி
யஞ்சின ளஞ்சின ளொதுங்கிப்
பஞ்சி மெல்லடி† பரல்வடுக் கொளவே ”

இனி அயலோர் கூற்று நிகழுமாறு:—

“துரந்ததற் கொண்டுந்‡ துயரடச் சாஅ
யறம்புலந்து பழிக்கு மங்க ணுட்டி§
யெவ்வ நெஞ்சிற் கேம மாக
வந்தன ளோநின் மடமகள்
வெஞ்சின வெள்வேல்¶ விடலைமுந் துறவே.”

(ஐங்குறு-நகூஉ)

செய்யுளியலுட் ‘பார்ப்பான் பாங்கன்’ (தொ-பொ-செய்-ககூ0.) ‘பாணன் கூத்தன்’ (தொ-பொ-செய்-ககூக) என்னுஞ் சூத்திரங்களாற் பார்ப்பான் முதலியோர் கூற்றுக் கூறுமாறு உணர்க. (சஉ)

சஙு. நிகழ்ந்தது நினைத்தற் கேதுவும் ஆகும்.

இதுவும் பாலியாவதோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) முன்னர் நிகழ்ந்ததோர் நிகழ்ச்சி பின்னர் நினைத்தற்குரிய நிமித்தமாமஃ என்றவாறு.

என்றது, முன்னர்த் தலைவன்கண் நிகழ்ந்ததோர் நிகழ்ச்சி பின்னர்த் தலைவி நினைத்தற்கும் ஏதுவுமாம். முன்னர்த் தலைவி கண் நிகழ்ந்ததோர் நிகழ்ச்சி பின்னர்த் தலைவன் நினைத்தற்கும் ஏதுவுமா மென்றவாறும்.

உம்மை எச்சவும்மையாதலிற் கூறுதற்குமாம் என்று கொள்க.

(பாடம்) * ‘கோள்வ லென்னையை.’ † ‘பஞ்சின் மெல்லடி.’
‡ ‘துறந்ததற்கொண்டு.’ § ‘உண்கணுட்டி.’
¶ ‘வெந்திறல் வெள்வேல்.’ $ ‘நினைத்தற்கு நிமித்தம்.’

உதாரணம்:—

"துண்ணெழின் மாமைச் சுணங்கணி யாகந்தங்
கண்ணெடு தொடுத்தென நோக்கியு மமையாரென்
ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவ
ரெண்ணுவ தெவன்கொ லறியே னென்னும்." (கலி-ச)

இது, தலைவன்கண் நிகழ்ந்த மிகுதித் தலையளி வஞ்ச மென்று தலைவி உட்கொண்டு பிரியுங்கொல் லென நினைத்தற்கு நிமித்தமாயிற்று. இதனானே தலைவன் செய்திகளாய்ப் பின் னர்த் தலைவி கூறுவனவற்றிற் கெல்லாம் இதுவே ஒத்தாக அமைத் துக் கொள்க.

இனி,

"அளிநிலை பொரூஅ* தமரிய முகத்தள்
விளிநிலை கேளாள் தமியள் மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்
கண்ணிய துணரா அளவை யொண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
மூளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநினை தோற்றிப்
பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்
விரனுதி சிதைக்கு நிரைநிலை அதர
பரன்முரம் பாகிய பயமில் கானம்
இறப்ப வெண்ணுதி ராயி னறத்தா
றன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன வாக என்னுநள் போல
முன்னங் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தேற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொ
டாகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயின ஞயிர்த்த காலை மாமலர்
மணியுரு விழுந்த அணியழி† தோற்றம்
கண்டே கடிந்தனஞ் செலவே ஒண்தொடி
யுழையம் ஆகவும் இனையோள்‡
பிழையலள் மாதோ பிரிதுநாம் எனினே." (அகம்-டு)

"இருங்கழி முதலை மேந்தோ லன்ன.....ஞான்றே." (அகம்-கூ)

(பாடம்) * 'பெரூஅது.' † 'அணியிழை.' ‡ 'இனையோள்.'

இவை அகம்.

"வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரலிசை
கந்துபிணி யானை யயாவுயிர்த் தாஅங்
கென்றூழ் நீடிய வேய்பயி லழுவத்துக்
குன்றூர் மதிய நோக்கி நின்றுநினைந்
துள்ளினெ னல்லனோ யானே முள்ளெயிற்றுத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுத
லெமது முண்டோர் மதிநாட் டிங்க
ளூரறுகூரல் வெவ்வளி யெடுப்ப நிழல்தப
வுலவை யாகிய மரத்த
கல்பிறங்கு மாமலை யும்பரஃ தெனவே." (நற்றிணை-சுஉ)

இது நற்றிணை. இவை தலைவிகண் நிகழ்ந்தனவும் அவடன்மையும் பின்னர்த் தலைவன் நினைந்து செலவழுங்குதற்கு நிமித்த மாயவாறு காண்க. "அறியாய் வாழி தோழி யிருளற" (அகம்-திஉ) என்பது தலைவன்கண் நிகழ்ந்தது தலைவி நினைந்து தோழிக்குக் கூறியது "நெஞ்சு நடுக்குற" என்னும் (உஉ) பாலைக்கலியும் அது.

"உறலியா மொலிவாட வுயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரொடும் விளையாடு வான்மன்னே
பெறலரும் பொழுதொடு பிறங்கிணர்த் துருத்திசூழ்ந்
தறலாரும் வையையென் றறைகுவ ருளராயின்." (கலி-நஉ)

இதுவும் அது.

"ஈன்பருந் துயவும் வான்பெரு நெடுஞ்சினை
பொரியரை வேம்பின் புள்ளி நீழற்
கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துத்
கல்லாச் சிறுஅர் நெல்லிவட் டாடும்
வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர்ச்
சுரன்முதல் வந்த வுரன்மாய் மாலை
யுள்ளினெ னல்லனோ யானே யுள்ளிய
வினைமுடித் தன்ன வினியோண்
மனைமாண் சுடரொடு படர்பொழு தெனவே."
(நற்றிணை-கூ)

என்னும் நற்றிணையும் (கூ) அது. இவ்வாறன்றி வேறுபட வருவனவெல்லாம் இதனுள் அமைக்க. (சஙூ)

சசு. நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே.

இஃது 'ஒன்றுதமரினும்' (தொல்-பொ-அகத்-சக) என்னுஞ் சூத்திரத்திற்கோர் புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) நிகழ்ந்தது கூறி-ஒன்றுதமரினும் என்னுஞ் சூத்திரத்துத் தலைவன்கண் நிகழ்ந்த கூற்றினைத் தலைவியுந்

தோழியுங் கூறி, நிலையலுந் திணையே-அதன்கண் நிலைபெற்று நிற்றலும் பாலைத்திணையாம் என்றவாறு.

உதாரணம் :—

"அரும்பொருள் வேட்கையி னுள்ளந் துரப்பப்
பிரிந்துறை சூழாதி பைய விரும்பிநீ
யென்றே ளெழுதிய தொய்யிலு ; யாழநின்
மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக்காண்
சென்றூர் முகப்பப் பொருளுங் கிடவா
தொழிந்தவ ரெல்லாரு முண்ணுதுஞ் செல்லா
ரிளமையுங் காமமு மோராங்குப் பெற்றூர்
வளமை விழைதக்க துண்டோ வுளநா
ளொரோவொகை தம்மூட் டழீஇ யொரோவொகை
யொன்றன்கூ ருடை யுடுப்பவரே யாயினு
மொன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை யரிதரோ
சென்ற விளமை தரற்கு." (கலி-கஅ)

இதனுள் 'உளநாள்' என்றது *நாளது சின்மை ; 'அரி தரோசென்ற இளமை தரற்கு' என்றது இளமையதருமை ; 'உள்ளந் துரப்ப' என்றது உள்ளத்தான் உஞற்றுதலால் தாளாண் பக்கம் ; 'சென்றூர் முகப்பப் பொருளுங கிடவாது' என்றது தகுதியது அமைதி; தத்த நிலைமைக்கேற்பப் பொருள் செய்ய வேண்டுதலின் ; அது பாணிக்கு மென்றலின் 'ஒரோவொகை தம்மூட் டழீஇ ஒரோவொகை - ஒன்றன்கூ ருடை உடுப்பவரேயாயினும்' என்றது இன்மைய தினிவு; 'வளமை விழை தக்க துண்டோ' என்றது உடைமைய துயர்ச்சி ; 'பிரிந்துறை சூழாதி ஐய' என்றது அன்பினதகலம், 'பிரிந்துறைந் தன்பு பெருக்கல் வேண்டா தம்மூளொன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை' என்றலின் ; 'தொய்யிலுஞ் சுணங்கு நினைத்துக்காண்' என்றது அகற்சிய தருமை. இவ் வெட்டுந் தாமேகூறல் வேண் டினமையின் முன்னொருகால் தலைவன் கூறக்கேட்டுத் தோழியுந் தலைவியும் உணர்ந்தமை கூறியவாறு காண்க.

"பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப் படர்ந்துநீ
மையற்ற படிவத்தான் மறுத்தர லொல்வதோ." (கலி-கஙி)

என்பது ஒதற்குப் பிரிவலெனத் தலைவன் கூறியது கேட்ட தோழி கூறியது.

"நோற்றூர் மன்ற தாமே கூற்றம்
கோளுற விளியார்பிறர் கொளவிளிந் தோரெனத்
தாள்வலம் படுப்பச் சேட்புலம் படர்ந்தோர்

* இது முதலாக அகற்சியதருமை யிறுதியாக வந்துள்ள எட்டும் முன்னர் 'ஒன்றுதமரினும்' என்னுஞ் சூத்திரத்துக் கூறியன.

காளிழை நெடுஞ்சுவர் நோக்கி நோயுழந்து
ஆழல் வாழி தோழி தாழாஅது
உருமெனச் சிலைக்கும் ஊக்கமொடு பைங்கால்
வரிமாண் நோன்ஞாண் வன்சிலைக்* கொளீஇ
அருஞ்சிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயருங்
கழல்புனை திருந்தடிக் கள்வர்† கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்
பழகுவ ராதலோ வரிதே முனாஅது
முழவுறழ் திணிதோ ணெடுவே ளாவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி அன்னநின்
ஒண்கேழ் வனமுலைப் பொலிந்த
நுண்பூண் ஆகம் பொருந்துதன் மறந்தே.” (அகம்-சுக)

இவ் வகப்பாட்டின் மூப்பினும் பிணியினும் இறவாது அமர்க்களத்து‡ வீழ்ந்தாரே துறக்கம் பெறுவரெனத் தன் சாதிக்கேற்பத் தலைவன் புகழும் மானமும் எடுத்து வற்புறுத் தலைத் தோழி கூறினாள்.

“வேந்தன் குறைமொழிந்து வேண்டத் தலைப்பிரிந்தார்
சாந்தங் குறிப்பின ரல்லரா—லேந்திழாய்
கண்பனி வாரக் கலங்கல் பிரிவரோ
தண்பனி நாளே தனித்து.”

இது குறைமொழிந்து வேண்டினமை தலைவன் கூறக்கேட்ட தோழி கூறியது. “அரிதாய வறனெய்தி” (பாலைக்கலி-கo) என்றது மூன்றன்பகுதி§ தலைவன் கூறக்கேட்ட தலைவி கூறியது.

“யானெவன் செய்கோ தோழி பொறிவரி
வானம் வாழ்த்தி பாடவும் அருளாது
உறைதுறந்¶ தெழிலி நீங்கலிற் பறையுடன்
மரம்புல் லென்ற முரம்புயர் நனந்தலை
அரம்போழ நுந்திய வாளி அம்பின்
நிரம்பா நோக்கின் நிரையங் கொண்மார்
நெல்லி நீளிடை எல்லி மண்டி
நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடு மெழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய$ பிறங்குநிலை நடுகல்
வேலுன்று பலகை வேற்றுமுனை கடிக்கும்**

(பாடம்) * ‘வார்சிலை.’ † ‘கானவர்.’ ‡ ‘மறக்களத்து.’

§ ‘அறத்தினூற் பொருளாக்கி அப்பொருளாற் காமம் நுகர்வ லென்று பிரிவது’ (தொல்-பொருள்-அகத்-சக) இக் கலித்தொகை உரையினும் இது கூறினர்.

¶ ‘உரையிறந்.’ $ ‘சூடிய.’ ** ‘கடந்து.’

மொழிபெயர் தேஎந் தருமார் மன்னர்
கழிப்பிணிக் கறைத்தோல் நிரைகண் டன்ன
உவலிடு பதுக்கை* ஆளுகு பறந்தலை
உருவில் பேஎய் ஊராத் தேரொடு
நிலம்படு மின்மினி போலப் பலவுடன்
இலங்குபரல் இமைக்கும்† என்பநம்
நலந்துறந் துறைநர் சென்ற ஆறே." (அகம்-சுஎ)

இது மண்டிலத்தருமை தலைவன் கூறக்கேட்ட தோழி கூறியது.

"நம்நிலை யறியா ராயினுந் தம்நிலை
அறிந்தனர் கொல்லோ தாமே யோங்குநடைக்
காய்சின யானை கங்குல் சூழ
அஞ்சுவர விறுத்த தானை
வெஞ்சின வேந்தன் பாசறை யோரே." (அகம்-உசச)

இது தலைவன் பாசறைப் புலம்பினமை கூறக்கேட்ட தலைவி நம்நிலை அறியாராயினும் எனக் கூறினள். "திசை திசை தேனுர்க்குந் திருமருத முன்றுறை" என்பது (பாலைக்கலி-உநி.) காவற் பாங்கின்கட் டலைவன் கூறியது கேட்ட தலைவி கூறியது. பிறவும் வருவனவெல்லாம் இதனுன்‡ அமைக்க. (சச)

சநு. மரபுநிலை திரியா மாட்சிய வாகி விரவும் பொருளும் விரவும் என்ப.

இது மரபியலுட் கூறப்படும் மரபன்றி அகத்திணைக்கு உரிய மரபுகள் கூறுகின்றது.

(இ - ள்.) மரபுநிலை திரியா மாட்சிய ஆகி—புலனெறி வழக்கஞ் செய்துவருகின்ற வரலாற்றுமுறைமை திரியாத மாட்சியவாய்; விரவும் பொருளும் விரவும் என்ப—பாலைத் திணைக்குங் கைக்கிளை பெருந்திணைக்கும் உரியவாய் விரவும் பொருளும் ஏனைத் திணைக்கு உரியவாய் விரவும் பொருளும் விரவி வருமென்று கூறுவர் புலவர் எ - று.

அவை தலைவி ஆற்றுமை கண்டுழிப் பிரிந்த தலைவன் மீண்டுவந்தானெனத் தோழி கூறுவனவும், வரைவிடை வைத்துப் பிரிந்தோன் தலைவியை நினைந்து வருந்திக் கூறுவனவும், உடன் போயவழி இடைச்சுரத்து நிகழ்ந்ததனை மீண்டு வந்தழித் தலைவன் றோழிக்குக் கூறுவனவும், யானினைத்த வெல்லி யெல்லாம் பொருள்முடித்து வாராது நின்னல நயந்து வந்தே னெனத் தலைவன் கூறலும், பொருள்வயிற் பிரிந்தோன்

(பாடம்) * 'அழிதகு பதுக்கை.' † 'இலங்கு புலி யுறைக்கும்.'
‡ 'இதன்கண்.'

தலைவியை நினைந்து வருந்துவனவும், இடைச்சுரத்துத் தலைவன் செலவு கண்டோர் கூறுவனவும், மீட்சிகண்டோர் கூறுவனவும், ஊரின்கட் கண்டோர் கூறுவனவும் பிறவுமாம். அவை பாலைத் திணைக்கு விரவும் பொருளாமென்றுணர்க.

உதாரணம் :—

"கோடுயர் பன்மலை யிறந்தன ராயினு
நீட விடுமோ மற்றே நீநினைந்து
துடைத்தொறுந் துடைத்தொறுங் கலங்கி
யுடைத்தரும் வெள்ள* மாகிய கண்ணே." (ஐங்குறு-நடுஅ)

இவ் வைங்குறுநூறு தலைவன் மீண்டானென்றது. "பாடின் றிப் பசந்தகண்" (பாலைக்கலி—கடை.) என்பதும் அது.

"வளைபடு முத்தம் பரதவர் பகருங்
கடல்கெழு கொண்கன் காதன் மடமகள்
கெடலரும் துயர நல்கிப்
படலின் பாயல் வெளவி யோளே."† (ஐங்குறு-ககூடி)

இவ் வைங்குறுநூறு வரைவிடைவைத்துப் பிரிந்தோன் தனிமைக்கு வருந்திக் கூறியது.

"புறந்தாழ் பிருண்ட கூந்தற் போதி
னிறம்பெறு மீரிதழ்ப் பொலிந்த வுண்க
ணுள்ளம் பிணிக்கொண் டோள்வயி னெஞ்சஞ்
செல்ல நீர்க்குஞ் செல்வா மென்னுஞ்
செய்வினை முடியா தெவ்வஞ் செய்த
லெய்யா மையோ டிளிவுதலைத் தருமென
வுறுதி தாக்கத் தாங்கி யறிவே
சிறிதுநனி‡ விரைய லென்னு மாயிடை
யொளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு§ போல
வீவது கொல்லென் வருந்திய வுடம்பே." (நற்றிணை-உஅச)

இந் நற்றிணையும் அது.

"கானப் பாதிரிக் கருந்தகட் டோள்வீ
வேனில் அதிரலொடு விரைஇக் காண்வரச்
சில்லென் கூந்த லழுத்தி மெல்லிணர்த்
தேம்பாய் மராஅம் அடைச்சி வான்கோல்
இலங்குவளை தெளிர்ப்ப வீசிச் சிலம்புநகச்
சின்மெல் லொதுக்கமொடு மென்மெல இயலினின்
அணிமாண் சிறுபுறங் காண்கம்¶ சிறுநனி
ஏகென ஏகல் நாணி ஒய்யென

(பாடம்) * 'உடைத்தெழு வெள்ளம்.' † 'வறுவி யோளோ.'
‡ 'சிறு நனி.' § 'பருங்கயிறு.'
¶ 'காண்குதும் காண்டும்.'

மாகொல் நோக்கமொடு* மடங்கொளச் சாஅய
நின்றுதலை யிறைஞ்சி யோளே அதுகண்டு
யாமுந் துறுதல் செல்லேம் ஆயிடை
அருஞ்சுரத் தல்கி யேமே இரும்புலி
களிறட்டுக் குழுமும் ஓசையுங் களிபட்டு
வில்லோர் குறும்பிற் றதும்பும்
வல்வாய்க் கடுந்துடிப் பாணியுங் கேட்டே.” (அகம்-உசுக)

இது மீண்டுவந்தோன் தோழிக்கு உரைத்தது.

“திருந்திழை யரிவை நின்னல முள்ளி
யருஞ்செயற் பொருட்பிணி பெருந்திரு வுறுகெனச்
†சொல்லாது பெயர்தந் தேனே பல்பொறிச்
சிறுகண் யானை திரிதரு
நெறிவிலங் கதர கானத் தானே.”‡ (ஐங்குறு-சுடுஙி)

இவ் வைங்குறுநூறு பெற்ற பொருள்கொண்டு நின்னலம் நயந்து வந்தேன் என்றது.

“அளிதோ தானே நாணே யாள்வினை
யெளிதென லோம்பன்மி னறிவுடை யீரே
கான்கெழு செலவின் னெஞ்சுபின் வாங்கத்
தான்சென் றனனே தமிய னதஅன்
றென்னு வதுகொ ருனே பொன்னுடை
மனைமாண் டடங்கிய கற்பிற்
புனைமீ ரோதி புலம்புறு நிலையே.”

இது செலவுகண்டோர் கூறியது.

“மரந்தலை மணந்த நனந்தலைக் கானத்
தலந்தலை§ ஞெமையத் திருந்த குடிஞை
பொன்செய் கொல்லனி னினிய தெளிர்ப்பப்
பெய்ம்மணி யார்க்கு மிழைநிலைர் நெடுந்தேர்
வன்பான் மூரம்பி னேமி யதிரச்
சென்றிசின் வாழியோ பனிக்கடு நாளே¶
யிடைச்சுரத் தெழிலி யுறைத்தென மார்பிற்
குறும்பொறிக் கொண்ட சாந்தமொடு
நறுங்கண் ணியன்கொ ஞெகோ யானே.” (நற்றிணை-உகூச)

இந் நற்றிணை வரவுகண்டோர் கூறியது.

“இனந்துஞ்சுநர்$ தழுதன ணினைந்துநீ யெயிர்த்தன
ளெல்லையு மிரவுங் கழிந்தன வென்றெண்ணி யெல்லிரா
நல்லிய கேள்வ னிவன்மன்ற மெல்ல
மணியிற் பிறந்தநீர் போலத் துணிவாய்

(பாடம்) * ‘மாதோ ணேக்கமொடு.’ † ‘செல்லாது.’
‡ ‘கானந்தானே.’ § ‘கானத்து வலந்தலை.’
¶ ‘பனிகடி கேளே.’ $ ‘இனந்து ஞைந்.’

கலஞ்சிதை யில்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போற் றெளிந்து நலம்பெற்ரு
ணல்லெழின் மார்பனைச் சார்ந்து." (கலி-கசஉ)

இது பெருந்திணைக்கட் கண்டோர் கூறியது.

"குரவை தழீஇயர் மரபுளி பாடித்
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுது
மாசில்வான் மூங்கீர் வளைஇய தொன்னிலம்
ஆளுங் கிழமையொடு புணர்ந்த
வெங்கோ வாழியரிம் மலர்தலை யுலகே." (கலி-கoங)

இச் சுரிதகத்துக் குரவையாடல் ஏறுகோடற் கைக்கிளை யுள் விராய்வந்தவாறுங் குரவைக்குரிய தெய்வத்தையன்றி அரசனை வாழ்த்திய வாழ்த்து விராய்வந்தவாறுங் கொள்க. 'விரவும் பொருளும் விரவு' மெனவே ஆய்ச்சியர் குரவைக்கூத் தல்லது வேட்டுவவரிக்குரிய வெறியாடல்* விரவாதென் றுணர்க. இஃது எண்வகைச் சுவையான் வரும் மெய்ப்பாடுங் கூத்தோடும் படுதலின் அச்சுவை பற்றிவரும் மெய்ப்பாட்டிற் கும் உரித்தாயிற்று.

இனிக் 'காவற்பாங்கின் ஆங்கோர் பக்கத்'திற் (தொல்-பொ-அக-சக) தலைவன் கூறியவற்றைக் கற்பியலுள், 'தலைவன் பகுதியினீங்கிய தகுதிக்கட்' (தொல்-பொ-கற்-சு) டலைவி பரத் தையராகக் கூறுவனவும் இச்சூத்திரத்தான் அமைக்க. அவை மருதக்கலியுட் கடவுட்பாட்டு† முதலியன. அவற்றை ஆண்டுக் காட்டுதும்; கண்டுணர்க.

இனித் தலைவி கற்பினுட் பிரிவாற்றாது எம்மையும் உடன் கொண்டு சென்றினென்பனவும அவன் அவட்கு மறுத்துக் கூறுவனவும் இதனுள் அமைக்க.

உதாரணம் :—

"மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்த
மூண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறூஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்ரு
லென்னீ ரறியாதீர் போல விவைகூறி
னின்னீர வல்ல நெடுந்தகா யெம்மையு
மன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடி னதுவல்ல
தின்பமு முண்டோ வெமக்கு" (கலி-சு)

* 'வெறியாட்டு.' † மருதக்கலி—உஅ ஆவது செய்புள்.

இக்கலி எம்மையும் உடன்கொண்டு சென்மினென்றது.

"செருமிகு சினவேந்தன்" என்னும் பாலைக்கலியுள்,

"எல்வளே யெம்மொடு நீவரின் யாழநின்
மெல்லியன் மேவந்த சீறடித் தாமரை
யல்லிசே ராயித ழரக்குதோய்ந தவைபோலக்
கல்லுறி னவ்வடி கறுக்குமவ் வல்லவோ." (கலி-கஉ)

இது தலைவிக்குத் தலைவன் உடன் போக்கு மறுத்துக் கூறியது. இதன் சுரிதகத்து,

"அனையவை காதலர் கூறலின் வினைவயிற்
பிரிகுவ ரெனப்பெரி தழியாதி." (கலி-கஉ)

என வினைவயிற்பிரிவு கூறலின் இது கற்பிற் கூறியதாயிற்று.

இன்னும் இச் சூத்திரத்தான் அமைத்தற்குரிய இளமைகளாய் வருவனவெல்லாம் அமைத்துக்கொள்க. (சஞ்)

சஊ. உள்ளுறை உவமம் ஏனை உவமமெனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே.

இஃது உவமவியலுள் அகத்திணைக் கைகோள்* இரண்டற்கும் பொதுவகையான் உரியதொன்று கூறுகின்றது.

(இ - ள்.) உள்ளுறை உவமம் ஏனை உவமம் என—மேற் கூறும் உள்ளுறையுவமந்தான் ஏனைய உவமமென்று கூறும் படி; உவமையும் உவமிக்கப்படும் பொருளுமாய் நின்றது: திணை உணர் வகை தள்ளாது ஆகும்—அகத்திணை உணர்தற்குக் கருவியாகிய உள்ளுறை உவமம்போல எல்லாத் திணையையும் உணருங் கூற்றைத் தள்ளாதாய் வரும்; நல்லிசைப்† புலவர் செய்யுட்செய்யின் என்றவாறு.

எனவே ஏனையோர் செய்யிற் றானுணரும் வகைத்தாய் நிற்கும் என்றவாறும்.

உதாரணம் :—

"விரிகதிர் மண்டிலம் வியல்விசும் பூர்தரப்
புரிதலை தளையவிழ்ந்த பூவங்கட் புணர்ந்தாடி
வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கையுட்
டெனிசிறந் திழிதரும் கண்ணினீ ரறல்வார

---

* கைகோள்-ஒழுகலாறு: களவு கற்பு எனக் கைகோளிரண்டு.

† தொல்-பொ-செய்-க.

வினிதமர் காதல னிறைஞ்சித்தன் னடிசேர்பு
நனிவிரைந் தளித்தலி னகுபவண் முகம்போலப்
பனியொரு திறம்வாரப் பாசடைத் தாமரைத்
தனிமலர் தலைவிமேற் றண்டுறை நல்லூர.'' (கலி-எக)

என்பது விரியுங் கதிரையுடைய இளஞாயிறு விசும்பிலே பரவாநிற்க, விடியற்காலத்தே இதழ்கண் மூறுக்குண்ட தலைகள் அம்மூறுக்கு நெகிழ்ந்த செவ்விப்பூவிடத்துக், கள்ளை வண்டு நுகர்ந்து விளையாடி, அதனானும் அமையாது பின்னும் நுகர் தற்கு அவ்விடத்தைச் சூழ்ந்து திரியும் அச்செல்வமிக்க பொய் கையுட், பசிய இலைகளுடனின்ற தாமரைத்தனிமலர், தனக்கு வருத்தஞ் செய்யும் பனி ஒரு கூற்றிலே வடியாநிற்கத், தான் மிகச்செவ்வியின்றி அலருந் தறையினையுடைய ஊர என்ற வாறு.

இதனுள் வைகறைக்காலத்து மனைவயிற் செல்லாது, இளைய செவ்வியையுடைய பரத்தையரைப் புணர்ந்து விளையாடி, அதனானும் அமையாது, பின்னும் அவரைப் புணர்தற்குச் சூழ்ந்து திரிகின்ற இவ்வூரிடத்தே நின்னைப்பெறுது, சுற்றத் திடத்தேயிருந்து கண்ணீர் வாராநிற்க, நீ ஒருகால் அளித்தலிற், சிறிது செவ்விபெற்றாளாயிருக்கும்படி வைத்த தலைவியைப் போலே, எம்மையும் வைக்கின்றியென்று, காமக்கிழத்தி உள்ளு றையுவமங் கூறினள். தனிமிகுதலாலே பெருக்கு மாறாது வீழ்கின்ற கண்ணீர் காமத்தீயாற் சுவறி அறுதலை உடைத்தா யொழுக, அவ் வருத்தத்தைக் கண்டு விலைந்து கணவன் அரு ளுதலிற் சிறிது மகிழ்பவள் முகம்போல என்ற ஏனையுவமம், தாமரைமலர் பனிவாரத் தலைவிடுமென்ற உள்ளுறையுவமத் தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்து நின்றது.

இஃது,

''உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே.''
(தொ-பொ-பொருளியல்-உஅ)

என்ற பொருளியற் சூத்திரத்திற் சிறப்பென்ற உள்ளுறை, இவ் வேனையுவமம் உள்ளுறையுவமத்திற்குச் சிறப்புக்கொடுத்து உள்ளுறையுவமமபோலத் தினையுணர்தலைத் தள்ளாது நின்ற வாறு காண்க.

இஃது,

'' இனிதுறு கிளவியுந் தனியுறு கிளவிய
முவம மருங்கிற் றோன்று மென்ப.'' (தொல்-பொ-உவ-உஅ)

என உவமப்போலிக்குக் கூறுதலின் அவ்விரண்டுந் தோன்றி நின்றது.

"ஏனோர்க் கெல்லா மிடம்வரை வின்றே."
(தொ-பொ-உவ-உஎ)

என்று உவமப்போலியிற் கூறுதலாற் காமக்கிழத்தியும் உள்ளுறையுவமங் கூறினள்.

குறிஞ்சியிலும் மருதத்திலும் நெய்தலிலும் இவ்வாறு வரும் கலிகளும்,

"யானே ஈண்டை யேனே யென்னலனே
யேனல் காவலர் கவணெடு வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலி னிவக்கும்
கானக நாடனெ டாண்டொழிந் தன்றே." (குறுந்-டுச)

என்னும் இக் குறுந்தொகைபோல வருவனவும் இச் சூத்திரத்தான் அமைக்க. பேராசிரியரும் இப்பாட்டின் 'மீனெறி தூண்டி' லென்றதனை ஏனையுவமமென்றார்.

இனித் தள்ளாதென்றதனானே, "பாஅ லஞ்சுவி" என்னும் பாலைக்கலியுட் (சு) டாழிசை மூன்றும் ஏனையுவமமாய் நின்று கருப்பொருளொடு கூடிச் சிறப்பியாது தானே திணைப் பொருள் தோன்றுவித்து நிற்பன போல்வனவுங், "கரைசேர் வேழங் கரும்பிற் பூக்குந் துறைகே ழூரன்" (ஐங்கு—கஉ.) என்றாற் போலக் கருப்பொருள் தானே உவமமாய் நின்று உள்ளுறைப் பொருள் தருவனவும், பிறவும் வேறுபட வருவனவும் இதனுள் அமைக்க. இது புறத்திற்கும் பொது. இதனுள் உள்ளுறையுவமமும், ஏனையுவமமுமென உவமம் இரண்டே யென்பது கூறினார். (சசு)

சூஎ. உள்ளுறை தெய்வ மொழிந்ததை நிலனெனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே.

இது முறையே உள்ளுறையுவமங் கூறுகின்றது.

(இ - ள்.) உள்ளுறை—உள்ளுறை யெனப்பட்ட உவமம்; தெய்வம் ஒழிந்ததை நிலன் எனக் கொள்ளும் என்ப—தெய்வ முதலிய கருப்பொருளுட் டெய்வத்தை ஒழித்து ஒழிந்த கருப்பொருள்களே தனக்குத் தோன்றும் நிலனாகக் கொண்டு புலப்படுமென்று கூறுப; குறி அறிந்தோரே—இலக்கணம் அறிந்தோர் என்றவாறு.

எனவே உணவு முதலிய பற்றிய அப்பொருணிகழ்ச்சி பிறிதொன்றற்கு உவமையாகச் செய்தல் உள்ளுறையுவமமாயிற்று.

உதாரணம் :—

"ஒன்றே னல்லே னொன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரு நாடனெ
டொன்றேன் றோழிமற் றொன்றி னானே." (குறுந்-௨ ௦அ)

இக் குறுந்தொகை பிறிதான்றின் பொருட்டுப் பொருகின்ற யானையான் மிதிப்புண்ட வேங்கை நசையற உணங்காது மலர்கொய்வார்க்கு எளிதாகி நின்று பூக்கும் நாடனென்றதனானே தலைவன் நுகருங் காரணத்தானன்றி வந்து எதிர்ப்பட்டுப் புணர்ந்து நீங்குவான் நம்மை இறந்துபாடு செய்வியாது* ஆற்றுவித்துப் போயினனெனவும், அதனானே நாமும் உயிர்தாங்கியிருந்து பலராலும் அலைப்புண்ணுகின்றனம் வேங்கை மரம் போல எனவும், உள்ளத்தான் உவமங்கொள்ள வைத்தவாறு காண்க.

ஒழிந்தனவும் வந்துழிக் காண்க.

இனி அஃது உள்ளத்தான் உய்த்துணரவேண்டுமென மேற்கூறுகின்றார். (சள)

சூ அ. உள்ளுறுத் திதனை டொத்துப்பொருண் முடிகென
உள்ளுறுத் திறுவதை யுள்ளுறை யுவமம்.

இதுவும் அங்ஙனம் பிறந்த உள்ளுறையுவமத்தினைப்† பொருட்கு உபகாரம்பட உவமங்கொள்ளுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) இதனோடு ஒத்துப் பொருள் முடிகென உள்ளுறுத்து—யான் புலப்படக் கூறுகின்ற இவ்வுவமத்தோடே புலப்படக் கூறுத உவமிக்கப்படும் பொருள் ஒத்து முடிவதாகவென்று புலவன் தன் உள்ளத்தே‡ கருதி; உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்—தான் அங்ஙனங் கருதும் மாத்திரையேயன்றியுங் கேட்டோர் மனத்தின்கண்ணும் அவ்வாறே நிகழ்த்துவித்து அங்ஙனம் உணர்த்துதற்கு உறுப்பாகிய சொல்லெல்லாம் நிறையக்கொண்டு முடிவது உள்ளுறையுவமம் என்றவாறு.

இதனானே புலவன் தான் கருதியது கூறுதவழியுங் கேட்டோர் இவன் கருதிய பொருள் ஈதென்றாராய்ந்து கோடற்குக்

(பாடம்) * 'செய்யாது.' † 'உள்ளுறையுவமம் ஐந்தினை.'
‡ 'உள்ளே.'

கருவியாகிய சிலசொற் கிடப்பச் செய்தல் வேண்டுமென்பது கருத்தாயிற்று.

அது,

"வீங்குநீ ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தக் தூர்புகுந்த வரிவண்
டோங்குய லெழில் யானைக் கணைகடாங் கமழ்காற்ற
மாங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்
வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினு ளரும்பவிழ் நறுமுல்லை
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதா மீதிய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர!" (கலி-சுசு)

இதனுள், வீங்குநீர் பரத்தையர் சேரியாகவும், அதன்கண் அவிழ்ந்த நீலப்பூக் காமச்செவ்வி நிகழும் பரத்தையராகவும், பகர்பவர் பரத்தையரைத் தேரேற்றிக்கொண்டு வரும் பாணன் முதலிய வாயில்களாகவும், அம்மலரைச் சூழ்ந்த வண்டு தலை வனாகவும், யானையின் கடாத்தை ஆண்டுறைந்த வண்டுகள் வந்த வண்டுக்கு விருந்தாற்றுதல் பகற்பொழுது புணர்கின்ற சேரிப் பரத்தையர் தமது நலத்தை அத் தலைவனே நுகர்வித்தலாகவும், கங்குலின் வண்டு முல்லையை ஊதுதல் இற்பரத்தையருடன் இரவு துயிலுறுத லாகவும், பண்டு மருவிய பொய்கையை மறத் தல் தலைவியை மறத்தலாகவும், பொருள் தந்து ஆண்டுப் புலப் படக் கூறிய கருப்பொருள்கள் புலப்படக் கூறுத மருதத்திணைப் பொருட்கு உவமமாய்க் கேட்டோனுள்ளத்தே விளக்கி நின்ற வாறு காண்க.

பிறவும் இவ்வாறு வருவனவெல்லாம் இதனுள் அமைக்க. இங்ஙனங் கோடலருமைநோக்கித் 'தணிவொடு வருஉந் தணி விலோர் கொளினே'. (தொல்-பொ-உவ-உசு.) என்றார். (சஅ)

சகூ. ஏனை யுவமந் தானுணர் வகைத்தே.

இஃது ஒழிந்த உவமங் கூறுகின்றது.

(இ - ள்) ஒழிந்த உவமம் உள்ளத்தான் உணரவேண் டுது சொல்லிய சொற்றொடரே பற்றுக்கோடாகத்தானே உணரநிற்குங் கூறுபாட்டிற்று என்றவாறு.

*பவளம்போலும் வாய் என்றவழிப் பவளமே கூறி வாய் கூறுவிடின் உள்ளுறையுவமமாம். †அவ்வாறின்றி உவமிக்கப் படும் பொருளாகிய வாயினையும் புலப்படக் கூறலின் ஏனையுவம மாயிற்று. அகத்திணைக்கு உரித்தல்லாத இதனையும் உடன்

(பாடம்) * 'பவழம்.' † 'மற்றன்றி.'

கூறினர்; உவமம் இரண்டல்லதில்லையென வரையறுத்தற்கும், இதுதான் உள்ளுறை தழீஇ அகத்திணைக்குப் பயம்பட்டு வருமென்றற்கும். (சசு)

நி ஒ. காமஞ் சாலா விளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையுந் தீமையும் என்றிரு திறத்தால்
தன்னெடும் அவளொடுந் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறுஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே.

இது முன்னர் அகத்திணை ஏழென நிறீஇ, அவற்றுள் நான்கற்கு நிலங்கூறிப், பாலையும் நான்கு நிலத்தும் வருமென்று கூறி, உரிப்பொருளல்லாக் கைக்கிளை பெருந்திணையும் அந்நிலத்து மயங்கும் மயக்கமுங் கூறிக், கருப்பொருட்பகுதியுங் கூறிப், பின்னும் பாலைப்பொருளாகிய பிரிவெல்லாங் கூறி, அப்பகுதியாகிய கொண்டுதலைக்கழிவின்கட் கண்ட கூற்றுப்பகுதியுங் கூறி, அதனோடொத்த இலக்கணம்பற்றி முல்லைமுதலியவற்றிற்கு மரபுகூறி, எல்லாத்திணைக்கும் உவமம்பற்றிப் பொருள் அறியப்படுதலின் அவ்வுவமப்பகுதியுங் கூறி, இனிக் கைக்கிளையும் பெருந்திணையும் இப்பெற்றிய வென்பார், இச்சூத்திரத்தானே கைக்கிளைக்குச் சிறந்த பொருள் இது வென்பது உணர்த்துகின்றார்.

(இ - ள்.) காமம் சாலா இளமையோள் வயின்—காமக்குறிப்பிற்கு அமைதியில்லாத* இளமைப்பிராயத்தாள்† ஒருத்திகண்ணே; ஏமஞ்சாலா இடும்பை எய்தி—ஒருதலைவன் இவள் எனக்கு மணைக்கிழத்தியாக யான் கோடல் வேண்டுமெனக் கருதி மருந்து பிறிதில்லாப் பெருந்துய ரெய்தி; நன்மையும் தீமையும் என்று இருதிறத்தால் தன்னெடும் அவளொடும் தருக்கிய புணர்த்து—தனது நன்மையும் அவளது தீங்கையுமென்கின்ற இரண்டு கூற்றுந் மிகப்பெருக்கிய சொற்களைத் தன்னெடும் அவளோடுங் கூட்டிச்சொல்லி; சொல் லெதிர்பெறுஅன் சொல்லி இன்புறல்—அச்சொல்லுதற்கு எதிர்மொழி பெறுதே பின்னுந் தானே சொல்லி இன்புறுதல்; புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே—பொருந்தித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பு என்றவாறு.

அவளுந் தமருந் தீங்குசெய்தாராக அவளோடு தீங்கைப் புணர்த்துந், தான் ஏதஞ்செய்யாது தீங்குபட்டானைத்

(பாடம்) * 'காமக்குறிப்பினமைதி.' † 'இளமைப் பருவத்தாள்.'

தன்னெடு நன்மையைப் புணர்த்தும் என நிரனிறையாக உரைக்க. இருதிறத்தாற் றருக்கிய எனக் கூட்டுக.

உதாரணம் :—

"வாருறு வணரைம்பால் வணங்கிறை நெடுமென்றோட்
பேரெழின் மலருண்கட் பிணையெழின் மாலைக்கிற்
காரெதிர் தளிர்மேனிக் கவின்பெறு சுடர்நுதற்
கூரெயிற்று மூகைவெண்பற் கொடிபுரை நுசுப்பினாய்
நேர்சிலம் பரியார்ப்ப நிரைதொடி விசிஇனே
யாருயிர் வெளவிக்கொண் டறிந்தீயா திறப்பாய்கேள் ;
உளனுவென் னுயிரையுண் டுயவுநோய் கைம்மிக
விளமையா னுணராதாய் நின்றவ றில்லானுங்
களைகரி னெய்செய்யுங் கவினறிந் தணிந்ததம்
வளமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய் ;
நடைமெலிந் தயர்வுறீஇ நாளுமென் னலியுநோய்
மடமையா னுணராதாய் நின்றவ றில்லானு
மிடைநில்லா தெய்க்குநின் னுருவறிந் தணிந்ததம்
உடைமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய் ;
அல்லல்கூர்ந் தழிபுக வணங்காகி யடருநோய்
சொல்லினு மறியாதாய் நின்றவ றில்லானு
மொல்லையே யுயிர்வெளவு முருவறிந் தணிந்ததஞ்
செல்வத்தாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய் ;
எனவாங்கு,
ஒறுப்பின்யா னெறுப்பது நுமரையான் மற்றிந்நோய்
பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயிற் புனையிழாய்
மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி
நிறுக்குவென் போல்வல்யா னீபடு பழியே." (கலி-இஅ)

எனத் தான் உயிர்கொடுத்தாளெனத் தனது நன்மைகூறி அவளது தீங்கெல்லாங் கூறுவான் மடலேறுவேன்போலு மென்று ஐயுற்றுக் கூறியவாறு காண்க. அவளைச் சொல்லுதலே தனக்கின்பமாதலிற் சொல்லி யின்புறலென்றார். இது புல்லித்தான்றுங் கைக்கிளை யெனவே காமஞ்சான்ற இளமை யோள்கண் நிகழுங் கைக்கிளை இத்துணைச் சிறப்பின்றாயிற்று.

அஃது, "எல்லா விஃதொத்தன்" என்னுங் குறிஞ்சிக் கலியுள்,

"இவடந்தை,
காதலின் யார்க்குங் கொடுக்கும் விழுப்பொருள்
யாதுநீ வேண்டியது ;
பேதாய்,
பொருள்வேண்டும் புன்கண்மை யீண்டில்லை யாழ
மருளின் மடநோக்கி நின்றோழி யென்னை
யருளியல் வேண்டுவல் யான்." (கலி-கக)

என வரும்.

இது கைகோளிரண்டினுங் கூறத்தகாத வாய்பாட்டாற் கூறலிற் கைக்கிளையென்றார். குறிப்பென்றதனாற் சொல்லியின்புறினுந் தலைவன்றன் குறிப்பின் நிகழ்ந்தது புறத்தார்க்குப் புலனாகாதென்பதூஉம் அகத்து நிகழ்ச்சி அறியும் மனைவியர்க் காயின் அது புலனுமென்பதூஉங் கொள்க. அது "கிழவோள் பிறள் குணம்" (தொல்-பொ-பொரு-சூ0) என்னும் பொருளியற் சூத்திரத்து ஓதுதும்.*

காமஞ் சாலா இளமையோள்வயினெனப் பொதுப்படக் கூறிய அதனால் வினை வல பாங்காயினார்† கண்ணும் இவ்விதி கொள்க. இதனைக் 'காராரப் பெய்த கடிகொள் வியன்புலத்து" என்னும் (சூ) முல்லைக்கலியான் உணர்க. (நு0)

நிக. ஏறிய மடற்றிற மிளமை தீர்திறந்
தேறுத லொழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.

இது முறையானே இறுதிநின்ற பெருந்திணை யிலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) ஏறிய மடற்றிறம் — மடன்மா கூறுதலன்றி மடலேறுதலும்; இளமை தீர் திறம்—தலைவற்கு இளையளாகாது ஒத்த பருவத்தாளாதலும்; தேறுதல் ஒழிந்த காமத்து மிகு திறம்—இருபத்து நான்காம் மெய்ப்பாட்டில் நிகழ்ந்து ஏழாம் அவதிமுதலாக வரும அறிவழிகுணன் உடையளாதலும்; மிக்க காமத்து மிடலொடு தொகைஇ—காமமிகுதியானே எதிர்ப் பட்டழி வலிதிற் புணர்ந்த இன்பத்தோடே கூட்டப்பட்டு; செப்பிய நான்கும்—கந்தருவத்துட்பட்டு வழீஇயிற்றாகச் செப்பிய இந்நான்கும்; பெருந்திணைக் குறிப்பே—பெருந்திணைக் கருத்து என்றவாறு.

மடன்மா கூறுதல் கைக்கிளையாம். மடற்றிறமென்றதனான் அதன் திறமாகிய வரைபாய்தலுங் கொள்க. இளமைதீர்திறம் என்றதனாற் றலைவன் முதிர்ச்சியும், இருவரும் முதிர்ந்த பருவத்துந் துறவின்பாற் சேறலின்றிக் காமநுகர்தலுங் கொள்க. காமத்து மிகுதிறம் என்றதனாற் சிறிது தேறப்படுதலுங் கொள்க.

இவை கந்தருவத்துட்படாஅ வழீஇயின, இவற்றுள் ஏறிய மடற்றிறமுங் காமத்துமிகுதிறமும் புணர்ச்சிப்பின் நிகழ்வன

(பாடம்) * 'ஓதுப.' † 'பாங்கினோர்.'

வாம்; அது, "மடன்மா கூறு மிடனுமா ருண்டே" (தொல்-பொ-கள-கக) என்பதனுல் ஏறுவலெனக் கூறிவிடாதே ஏறு தலாம்.

உதாரணம்:—

"சான்றவிர் வாழியோ சான்றவி ரென்றும்
பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி யறனறிதல்
சான்றவர்க் கெல்லாங் கடனுனு லிவ்விருந்த
சான்றீர் நுமக்கொன் றறிவுறுப்பென் மான்ற
துளியிடை மின்னுப்போற் ரோன்றி யொருத்தி
யொளியோ. ருருவெண்ணெக் காட்டி யளியளென்
னெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டு துஞ்சே
னணியலங் காவிரைப் பூவோ டெருக்கின்
பிணையலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப
வோங்கிரும் பெண்ணே மடலூர்ந்தெ னெவ்வநோய்
தாங்குத றேற்ரு விடும்பைக் குயிர்ப்பாக
வீங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது
பாடுவென் பாய்மா நிறுத்து;

யாமத்து மெல்லியு மெவ்வத் திரையலைப்ப
மாமேலே னென்று மடல்புணையா நீந்துவேன்
றேமொழி மாத ருரூஅ துநீஇய
காமக் கடலகப் பட்டு;

உய்யா வருநோய்க் குயவாகு மைய
லுநீஇயா னீத்தவிம் மா;

காணுந ரெள்ளக் கலங்கித் தலைவந்தெ
ஞணைழின் மூற்றி யுடைத்துள் ளழித்தரு
மாணிழை மாதரா ளேஎரெனக் காமன
தாணையால் வந்த படை;

காமக் கடும்பகையிற் ரோன்றினேற் கேம
மெழினுத லீத்தவிம் மா;

அகையெறி யாஞதென் ஞருயி ரெஞ்சும்
வகையினு ளுள்ளஞ் சுடுதரு மன்ஞ
மூகையே நிலங்கெயிற் றின்னகை மாதர்
தகையாற் றலைக்கொண்ட நெஞ்சு;

அழன்மன்ற காம வருநோய் நிழன்மன்ற
நேரிழை யீத்தவிம் மா;

ஆங்கதை,
யறிந்தனி ராயிற் சான்றவிர் தான்றவ
மொரீஇத் துறக்கத்தின் வழீஇ யான்ரோ
ருள்ளிடப் பட்ட வரசனைப் பெயர்த்தவ
ருயர்நிலை யுலக முநீஇ யாங்கென்
றுயர்நிலை தீர்த்த னுந்தலைக் கடனே." (கலி-கஉக)

இஃது ஏறிய மடற் றிறம்.

"உக்கத்து மேலு நடுவுயர்ந்து வாள்வாய
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்

புக்ககலம் புல்லினெஞ் ஞான்றும் புறம்புல்லி
னக்குளுத்துப் புல்லலு மாற்றே னருளீமோ
பக்கத்துப் புல்லல் சிறிது.” (கலி-கச)

இதனுட், கொக்குரித்தன்ன வென்பதனுற் ரோல் திரைந் தமை கூறலின் இளமைதீர் திறமாயிற்று.

“ உளைத்தவர் கூறு முரையெல்லா நிற்க
முளைத்த முறுவலார்க் கெல்லாம்—விளைத்த
பழங்கள் ளனைத்தாய்ப் பகைளி செய்யு
முழங்கு புனலூரன் மூப்பு.”

“ அரும்பிற்கு முண்டோ வலரது நாற்றம்
பெருந்தோள் விறலி பிணங்கல்—சுரும்போ
டதிரும் புனலூரற் காரமிர்த மன்ரோ
முதிரு முலையாண் முயக்கு.”

என்பனவும் அது.

“ புரிவுண்ட புணர்ச்சி ” என்னும் (உரு) நெய்தற்பாட்டுக் காமத்து மிகுதிறம். இதனைப் *பொருளியலுட் காட்டுதும். ஆண்டோதும் இலக்கணங்களுந் தோன்ற இதனுட் டெளிந்து கூறுவனவும் ஆண்டுக் காண்க.

“ ஏ யிஃதொத்த ஞனிலன் றன்னெடு
மேவேமென் பாரையு மேவினன் கைப்பற்று
மேவினு மேவாக் கடையு மவையெல்லா
நீயறி தியானஃ தறிகல்லேன் பூவமன்ற
மெலவிணர் செல்லாக் கொடியன்னுய் நின்னையான்
புல்லினி தாகலிற் புல்லினெ னெல்லா
தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னு
செய்வது நன்ரூமோ மற்று.” (கலி-கூஉ)

இது மிக்க காமத்துமிடல்.

செப்பிய நான்கெனவே செப்பாதனவாய் அத்திணைக் கந்தருவமாகக் கூறுகின்ற “ பின்னர் நான்கும் பெருந்திணை பெறும் ” (தொல்-பொ-கள-கச) என்ற பெருந்திணையும் நான்கு உளதென்று உணர்க. குறிப்பென்றதனுன் அந்நான்கும் பெருந் திணைக்குச் சிறந்தன வெனவும், ஈண்டுக் கூறியன கைக்கிளைக் குச் சிறந்தனவெனவுங் கொள்க. (நிக)

நஉ. முன்னைய நான்கும் முன்னதற் கென்ப.

இது ‘முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே’ (தொல்-பொ-கள-கச.) எனக் களவியலுட் கூறுஞ் சிறப்பில்லாக்

* தொல்-பொ-பொருளியல்-சஉ.

கைக்கிளைபோ லன்றிக் காமஞ்சாலா இளமையோள்வயிற் கைக் கிளைபோல் இவையுஞ் சிறந்தன எனவே, எய்தாத தெய்து வித்தது.

(இ - ள்.) இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னிகழ்ந்த காட்சி யும் ஐயமுந் தெரிதலுந் தேறலுமென்ற குறிப்பு நான்கும் நற் காமத்துக்கு இன்றியமையாது வருதலின், முற்கூறிய சிறப் புடைக் கைக்கிளையாதற்கு உரியவென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

களவியலுட் கூறுங் கைக்கிளை சிறப்பின்மையின் முன்னதற் குரியவெனச் சிறப்பெய்துவித்தார். களவியலுள் 'ஒத்த கிழ வனுங் கிழத்தியுங் காண்ப' (தொல்-பொ-கள-உ) என்றது முதலாக இந்நான்குங் கூறுமாறு ஆண்டுணர்க. இவை தலைவி வேட்கைக் குறிப்புத் தன்மே னிகழ்வதனைத் தலைவன் அறிதற்கு முன்னே தன் காதன்மிகுதியாற் கூறுவனவாதலிற் கைக்கிளை யாயிற்று. இவை தலைவற்கே உரியவென்பது, 'சிறந்தழி யையஞ் சிறந்த தென்ப' (தொல்-பொ-கள-ங) என்னும் சூத்திரத்திற் கூறுதும். இவையும் புணர்ச்சி நிமித்தமாய்க் குறிஞ்சியாகாவோ வெனின், காட்சிப்பின் தோன்றிய ஐயமும் ஆராய்ச்சியுந் துணி வும் நன்றெனக் கோடற்கும் அன்றெனக் கோடற்கும் பொது வாகலின், அவை ஒருதலையாக நிமித்தமாகா ; வழிநிலைக் காட்சியே நிமித்தமா மென்றுணர்க. (நிஉ)

நிங. நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கங்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரிய தாகு மென்மனார் புலவர்.

இது புலனெறிவழக்கம் இன்னதென்பதூஉம், அது நடுவ ணைந்திணைக்கு உரிமையுடைத்தென்பதூஉம், இன்ன செய்யுட்கு உரித்தென்பதூஉம் உணர்த்துத னுதலிற்று.

(இ - ள்) நாடகவழக்கினும் உலகியல் வழக்கினும்—புனைந் துரைவகையானும், உலகவழக்கத்தானும்; பாடல் சான்ற புல னெறி வழக்கம்—புலவராற் பாடுதற்கமைந்த புலவராற்று வழக்கம்; கலியே பரிபாட்டு அ இரு பாங்கினும் உரியது ஆகும் என்மனார் புலவர்—கலியும் பரிபாடலுமென்கின்ற அவ்விரண்டு கூற்றுச் செய்யுளிடத்தும் நடத்தற்கு உரியதாமென்று கூறுவர் புலவர் என்றவாறு.

இவற்றிற்கு உரித்தெனவே, அங்ஙனம் உரித்தன்றிப் புலனெறி வழக்கம் ஒழிந்த பாட்டிற்கும் வருதலும், புலனெறி வழக்கம் அல்லாத பொருள் இவ்விரண்டிற்கும் வாராமையுங் கூறிற்று. இவை தேவபாணிக்கு வருதலுங கொச்சகக் கலிப் பொருள்வேறுபடுதலுஞ் செய்யுளியலுள் வரைந்து ஓதுதும்.* 'மக்கணுதலிய அகனைந்திணையு' மென (தொல்-பொ-அகத்-நூசூ.) மேல்வரும் அதிகாரத்தானும், இதனை அகத்திணை யியலுள் வைத்தமையானும் அக னைந்திணையாகிய காமப்பொருளே புலனெறி வழக்கத்திற்குப் பொருளென் றுணர்க.

பாடல் சான்ற என்றதனாற் பாடலுள் அமைந்தனவெனவே, பாடலுள் அமையாதனவும் உளவென்று கொள்ளவைத்தமையிற், கைக்கிளையும் பெருந்திணையும்பெரும்பான்மையும் உலகியல் பற்றிய புலனெறி வழக்காய்ச் சிறுபான்மை வருமென்றுகொள்க. செய்யுளியலுட் கூறிய முறைமையின்றி நாண்டுக் கலியை முன்னேகியது, கலியெல்லாம் ஐந்திணைப்பொருளாய புலனெறி வழக்கிற் காமமும், கைக்கிளை பெருந்திணையாகிய உலகியலே பற்றிய புலனெறி வழக்கிற் காமமும்பற்றி வருமென்றற்கும், பரிபாடல் தெய்வ வாழ்த்து உட்படக் காமப்பொருள் குறித்து உலகியலே பற்றி வருமென்றற்கும என்றுணர்க.

ஆசிரியமும் வெண்பாவும் வஞ்சியும் அகம் புறமென்னும் இரண்டிற்கும் பொதுவாய் வருமாறு †நெடுந்தொகையும் புறமுங் கீழ்க்கணக்கும் மதுரைக்காஞ்சியும் பட்டினப்பாலையும் என்பனவற்றுட் காண்க. மருட்பாத் 'தானிதுவென்னுந் தனிநிலை' (தொ-பொ-செய்-அடு) இன்மையின் வரைநிலையின்று.

> "மனைநெடு வயலை வேழஞ் சுற்றுந்
> துறைகே ழூரன் கொடுமை நாணி
> நல்ல னென்னும் யாமே
> யல்ல னென்னுமென் றடமென் றோளே." (ஐங்குறு-கக)

இதனுள் முதல் கரு வுரிப்பொருளென்ற மூன்றுங் கூறலின் நாடக வழக்குந், தலைவனைத் தலைவி கொடுமைகூறல் உலகியலாகலின் உலகியல் வழக்கும் உடன்கூறிற்று. இவ்விரண்டுங் கூடிவருதலே பாடலுட் பயின்ற புலனெறி வழக்கமெனப்படும். இவ்விரண்டினும் உலகியல் சிறத்தல் 'உயர்ந்தோர்கிளவி' (தொ-பொ-பொரு-உசூ) என்னும் பொருளியற் சூத்திரத்தானும் மரபியலானும் பெறுதும்.

> "முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
> கழுவுறு கலிங்கங் கழாஅ தலைஇ‡

(பாடம்) * 'ஓதுப.' † 'நெடுந்தொகை.' என்பது அகநானூறு.
‡ 'கழாஅ தமீஇ.'

குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றழந் தட்ட நீம்புளிப் பாக
ரினிதெனக் கணவ னுண்டலி
னுண்ணிதின் மகிழ்ந்தன் ரொண்ணுதன் முகனே."
(குறுந்-கசுஎ)

இஃது உலகியலே வந்தது.

இனி அவ்வந் நிலத்து மக்களே தலைவராயக்கால் அவை உலகியலேயாம்.

இனிக் கைக்கிளையுள் அசுரமாகிய ஏறுகோடற் கைக்கிளை, காமப்பொருளாகிய புலனெறிவழக்கில் வருங்கான், முல்லை நிலத்து ஆயரும் ஆய்ச்சியருங் கந்தருவமாகிய களவொழுக்கம் ஒழுகி வரையுங்காலத்து, அந்நிலத்தியல்பு பற்றி ஏறுதழுவி வரைந்துகொள்வரெனப் புலனெறி வழக்காகச்செய்தல் இக்களிக் குரித்தென்று கோடலும் பாடலுள் அமையாதன என்றதனாற் கொள்க. அது "மலிதிரையூர்ந்து" என்னும் (ச) முல்லைக்கலி யுள் "ஆங்கணயர்வர் தழூஉ" என்னுந்துணையும் ஏறுதழுவிய வாற்றைத் தோழி தலைவிக்குக்காட்டிக் கூறிப், "பாடுகம் வம்மின்" என்பதனாற் றலைவனைப் பாடுகம் வாவென்றூட்கு, அவளும் "நெற்றிச் சிவலை***மகள்" "ஒருக்குநாமாடு***மகன்" என்பனவற்றான் அலரச்சம் நீங்கினவாறும், அவன்றான் வருத் தியவாறுங் கூறிப் பாடியபின்னர்த், தோழி,

"கோளரி தாக நிறுத்த கொலையேற்றுக்
காரி கதனஞ்சான் பாய்ந்த பொதுவற்கே
யார்வற் றெமர்கொடை நேர்ந்தா ரலரெடுத்த
ஆரா யுச்சி மிதித்து."
(கலி-கoச)

என எமர்* கொடைநேர்ந்தாரெனக் கூறியவாறுங் காண்க.

இவ்வாறே இம்முல்லை நிலத்து அகப்பொருளோடு கலந்து வருங் கைக்கிளை பிறவுமுள; அவையெல்லாம் இதனான் அமைத் துக்கொள்க. புணர்ந்துரைவகையாற் கூறுபவென்றலிற் புல வர் இல்லனவுங் கூறுபவாலோவெனின், உலகத்தோர்க்குநன்மை பயத்தற்கு நல்லோர்க்குள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந் தொழுகுதல் அறமெனக்கருதி, அந்நல்லோர்க்குள்ளனவற்றிற் சிறிது இல்லனவுங் கூறுதலன்றி, யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறுரென்றற்கன்றே நாடகமென்னுது வழக்கென்பா ராயிற்றென்பது.

இவ்வதிகாரத்து நாடகவழக்கென்பன, புணர்ச்சி உலகிற் குப் பொதுவாயினும் மலைசார்ந்து நிகழுமென்றுங், காலம்

(பாடம்) * 'கமர்.'

வரைந்தும், உயர்ந்தோர் காமத்திற் குரியன வரைந்தும், மெய்ப் பாடுதோன்றப் பிறவாறுங் கூறுஞ் செய்யுள் வழக்கம். இக்கருத் தானே 'முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே—நுவலுங் காலை' (தொல்-பொ-அகத்-ங) என்று புகுந்தார் இவ்வாசிரியர்.

இப் புலநெறிவழக்கினை இல்ல தினியது, புலவரா னுட்டப் பட்ட தென்னுமோவெனின், இல்லதென்று கேட்டோர்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பஞ்செய்யா தாகலானும், உடன்கூறிய உலகியல் வழக்கத்தினை ஒழித்தல்வேண்டு மாகலானும், அது பொருந்தாது. அல்லதூஉம் அங்ஙனங்கொண்ட இறையனார் களவியலுள்ளும்,

"வேந்துவினை யியற்கை பார்ப்பார்க் குரித்தே."
(இறையனார்-ஙஎ)

"அரச ரல்லா வேனை யோர்க்கும்
புரைவ தென்ப வோரிடத் தான."
(இறையனார்-ஙஅ)

எனவும்,

"வேந்தற் குற்றுழிப் பொருட்பிணிப் பிரிவென்
றாங்கவ் விரண்டு மிழிந்தோர்க் குரிய."
(இறையனார்-ஙக)

எனவும் நான்கு வருணமுங் கூறி, நால்வகைத் தலைமக்களை யும் உணர்த்தலின் இல்லதென்பது தொல்லாசிரியர் தமிழ் வழக்கன்றென* மறுக்க. இக்கருத்தானே மேலும் 'மக்கணுத லிய வகணைந்திணையும்' (தொல்-பொ-அகத்-ஙச) என்பர். (ஙங)

ஙஃ. மக்கள் நுதலிய அகனைந் திணையுஞ் சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறுஅர்.

இது முற்கூறிய புலநெறிவழக்கிற்குச் சிறந்த ஐந்திணைக் காவதோர் வரையறை கூறுகின்றது.

(இ-ள்.) மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்—மக்களை தலைமக்களாகக் கருதுதற்குரிய நடுவ ணைந்திணைக்கண்ணும்; சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறுஅர்—திணைப்பெயராற் கூறி னன்றி ஒருவனையும் ஒருத்தியையும் விதந்துகூறி, அவரது இயற் பெயர் கொள்ளப்பெறுஅர் என்றவாறு.

இது நாடக வழக்குப்பற்றி விலக்கியது. அவை வெற்பன் துறைவன் கொடிச்சி கிழத்தி யெனவரும். மக்கள் நுதலிய என்பதனானே மக்களல்லாத தேவரும் நரகரும் தலைவராகக் கூறப்படாரெனவும், அகனைந்திணையும் என்றதனானே கைக்கிளை

(பாடம்) * 'தமிழ் வழக்கன்று.'

யும் பெருந்திணையுஞ் சுட்டி ஒருவர் பெயர்கொண்டுங் கொள்ளாதும் வருமெனவுங் கொள்க. அகனைந்திணையெனவே அகமென்பது நடுவுகின்ற ஐந்திணையாதலிற், கைக்கிளையும் பெருந்திணையும் அவற்றின் புறத்தநிற்றலின் அகப்புறமென்றும் பெயர் பெறுதலும் பெற்றும்.

இனி, அவை வரையறையுடைமை மேலைச் சூத்திரத்தான் அறிக. "கன்று முண்ணுது கலத்தினும் படாது—நல்லான் றீம்பா னிலத்துக் *** கவினே." இது (குறுந்-உள) வெள்ளி வீதியார் பாட்டு. "மள்ளர் சூழ்இய விழவினும் *** மகனே." (குறுந்-கூக) இது காதலற் கெடுத்த ஆதிமந்தி* பாட்டு. இவை தத்தம் பெயர்கூறிற் புறமாமென் றஞ்சி வாளாது கூறினர். ஆதிமந்தி தன்பெயராலுங், காதலனுகிய ஆட்டனத்தி பெயராலுங் கூறிற் காஞ்சிப்பாற்படும்.

"**ஆதி மந்தி** போல
ஏதஞ் சொல்லிப் பேதுபெரி துறலே." (அகம்-உருசு)

எனவும்,

"**வேள்ளி வீதி**யைப் போல நன்றுஞ்
செலவயர்ந் திசினுல் யானே." (அகம்-கசஎ)

எனவும், அகத்திணைக்கட் சார்த்துவகையான் வந்தன அன்றித் தலைமைவகையாக† வந்தில என்பது.

வருகின்ற (நிரு) சூத்திரத்துப் 'பொருந்தின்' என்னும் இலேசானே இச் சார்த்துவகை கோடும். இது பெயரெனப் பட்ட கருப்பொருளாதலிற் கூற்றிற்கு உரிய தோழியும் பாங்கனும் முதலிய வாயிலோரையும் பொதுப்பெயரானன்றி இயற் பெயர்த்தொடக்கத்தன கூறப்பெறுரென்று கொள்க.

உதாரணம் :—

"முகிழ்முகிழ்த் தேவர வாயினு முலையே
யரவெயிற் றெடுக்கமொ டஞ்சுதக் கனவே
களவறி வாரா வாயினுங் கண்ணே
நுழைநுதி வேலி னெக்கரி யவ்வே
யியைய ளாயினு மணங்குதக் கிவளே
முளையிள நெருப்பின் முதுக்குறைத் தனளே
யதனு. னெயில ளாகுக தில்ல
சாயிறைப் பணைத்தோ ளீன்ற தாயே."

இது சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாக் கைக்கிளை.

(பாடம்) * கலுழ்ந்த கண்ணன் காதலற் கெடுத்த, வாதி மந்தி போல' என்பது அகம்-உகச. † 'தலைவியாக.'

"ஆள்வினை முடித்த வருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய விராம னவலொடு
மிதிலை மூதூ ரெய்திய ஞான்றை
மதியுடம் பட்ட மடக்கட் சீதை
கடுவிசை வின்ஞா ணிடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்ட மெய்தித்
துயிலெழுந்து மயங்கின ளதா அன்று மயிலென
மகிழ்....."

இது சுட்டி ஒருவர் பெயர்கொண்ட கைக்கிளை.

இஃது அசுரமாகளின், முன்னைய மூன்றுங் கைக்கிளை யென்றதனைத் கோடும். "யாமத்து மெல்லியும்" (நெய்தற் கலி-உஉ) என்றது சுட்டி ஒருவர் பெயர்கொள்ளாப் பெருந் திணை.

"பூண்டாழ் மார்பிற் பொருப்பிற் கோமான்
பாண்டியன் மடமகள் பணைமுலைச் சாந்தம்
வேறு தொடங்கிய விசய னெஞ்சத்
தாரழ லாற்ற தை* .....
பொதியிற் சாந்த மெல்லாம் பொருதிரை
முத்தினு முழங்கழற் செந்தீப்
பொத்துவது போலும் புலம்புமுந் துறுத்தே."

இது சுட்டி ஒருவர் பெயர்கொண்ட பெருந்திணை.

இவை சான்றோர் செய்யுளுட் பெருவரவிற்றின்மை யினன்றே முற்சூத்திரத்து முன்னும் பின்னும் இவற்றை வைத்த தென்பது.

"மூட்காற் காரை முதுகளி யேய்ப்பத்
தெறிப்ப விளைந்த தீங்கட் டாரை
நிறுத்த வாயந் தலைச்செல வுண்டு
பசுநுன் றின்று பைந்நிணம் பெருத்த
வெச்சி லீர்ங்கை விற்புறந் திமிரிப்
புலம்புக் கனனே புல்லணற் காளை
யொருமுறை யுண்ணு வளவைப் பெருநிரை
யூர்ப்புற நிறையத் தருகுவன் யார்க்குந்
தொடுத்த லோம்புமதி முதுகுட் சாடி
யாதரக் கழுமிய துகளன்
காய்தலு முண்டக் கள்வெய் யோனே.' (புறம்-உஅ)

இது வெட்சித்திணை பெயர்கொள்ளாது வந்தது.

"முலைபொழி தீம்பான் மண்சேறு படுப்ப
மலர்தலை யுலக மோம்பு மென்ப

---

* முன் அச்சுப் புத்தகத்திலுள்ள 'யோகியின்' என்பது ஏடுகளி லில்லை.

பரிசிலைத் தொண்டைப் பல்லவ ஞாணையின்
வெட்சித் தாயத்து வில்லே ருழவர்
பொருந்தா வடுகர் மூனேச்சுரங்
கடந்து கொண்ட பல்லா னிரையே.”

இது வேந்துவிடு தொழிற்கண் வேந்தனேப் பெயர் கூறிற்று. ஒழிந்தனவும் புறத்திணையியலுட் காண்க. (நிச)

நிநி. புறத்திணை மருங்கிற் பொருந்தின் அல்லது அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே.

இது புறத்திணைக்குத் தலைவர் ஒருவராதலும், பலராதலும் உரிப்பொருட்குத் தலைவர் பலராகாமையுங் கூறலின், எய்தாத தெய்வித்து எய்தியது விலக்கிற்று.

(இ - ள்.) அகத்திணை மருங்கிற் பொருந்தின்—ஒருவனேயும் ஒருத்தியையுமே விதந்து கூறும் இயற்பெயர் அகத்திணைக் கண்ணே வந்து பொருந்துமாயின்; புறத்திணை அளவுதல் மருங்கின் அல்லது இல—ஆண்டும் புறத்திணை கலந்த லிடத்தின் அல்லது வருதலில்லை என்றவாறு.

எனவே, புறத்திணை கருப்பொருளாயும், அதுதான் உவமமாயும் அகத்திணையுட் கலக்குமென்பதூஉம் இதனுனே விரித்தாராயிற்று. அளவுமெனவே ஒருசெய்யுட்கண்ணும் அப்புறத்திணையாகிய இயற்பெயர்களுஞ் சிறப்புப்பெயர்களும் ஒன்றேயன்றிப் பலவும் வருதலுங் கொள்க. ஒருவரென்பது அதிகாரப்பட்டமையின், அகத்திற்குவரும் உரிப்பொருட் பெயர் ஒன்றுதல் கொள்க.

உதாரணம்:—“வண்டுபடத் ததைந்த என்னும் (க) அகப்பாட்டினுள் “முருக னற்போர் நெடுவே ளாவி *** யாங்கண்” எனவே புறத்திணைத்தலைவன் இயற்பெயர் ஒன்றே வந்தவாறும், அவன் நிலக் கருப்பொருளாய் அகத்திற்கு வந்தவாறும், உரிப்பொருட் டலைவன் ஒருவனேயானவாறுங் காண்க. “எவ்வி யிழந்த வறுமையர் பாணர், பூவில் வறுந்தலைபோலப் புல்லென்று” (குறுந்—ககூ) என்பது கருப்பொருளுவமமாய் வந்தது.

“கேள்கே டின்றவும்” என்னும் (கூஉ) அகப்பாட்டுப் புறத்திணைத் தலைவர் பலராய் அகத்திணைக்கண் அளவிவந்தது. புறத்திணைக்கண் இயற்பெயர் அளவிவரும் என்பதனுனே, “முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்” என்னும் (கநி அ) புறப்பாட்டு “எழுவர் மாய்ந்த பின்றை” எனப் புறத்

திணைத் தலைவர் பலராய் வந்தது. பிறவும் இவ்வாறு வருவன இதனுள் அமைக்க.

இன்னும் இதனுளே அகப்புறமாகிய கைக்கிளைபெருந்திணைக்கும் இப்பண்மை* சிறுபான்மை கொள்க.

உதாரணம்:—

"ஏறும் வருந்தின வாயரும் புண்கூர்ந்தார்
நாறிருங் கூந்தற் பொதுமகளி ரெல்லாரு
மூல்லையந் தண்பொழில் புக்கார் பொதுவரோ
டெல்லாம் புணர்குறிக் கொண்டு." (கலி-கூக)

பொருந்தின்† எனவே, தானுந் தன்னெடு பொருந்துவதூஉம் என இரண்டாக்கிச், சார்த்துவகையான் வரும் பெயர்க்குங்கொள்க. நாடகவழக்கினுளதை முன்னர்ச் சூத்திரத்துட் காட்டினும்.‡ பெயர்கள் பலவாதலின்§ இல வெனப் பன்மை கூறினார். (நிகி)

முதலாவது அகத்திணையியற்கு,

ஆசிரியர் பாரத்துவாசி நச்சிஞர்க்கினியார் செய்த காண்டிகை

முடிந்தது.

(பாடம்) * 'இப்பான்மை.' † 'பொருந்ததுல்.'

‡ "அகத்திணைக்கட் சார்த்துவகையான் வந்தனவன்றித் தலைமை வகையாக வந்தில வென்பது. வருகின்ற சூத்திரத்துப் பொருந்தின் என்ற இலேசானே இச்சார்த்துவகை கோடும்" என்ஞர். (தொல்-பொ-அகத்-நிகி). § 'பலவென்பது பற்றி.'

இரண்டாவது
புறத்திணையியல்

நகூ. அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணந் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே.

இவ்வோத்து முற்கூறிய அகத்திணை ஏழற்கும் புறமாகிய புறத்திணையிலக்கணம் உணர்த்தினமையிற் புறத்திணையிய லென்னும் பெயர்த்தாயிற்று. புறமாகிய திணையெனப் பண்புத் தொகையாம். அதனை 'முற்படக் கிளந்த' (தொல்-பொ-அகத்-க.) என்புழிப் பிற்படக் கிளந்தனவும் உளவெனத் தோற்றுவாய் செய்து போந்து, அவற்றது இலக்கணங்களும் பெயரும் முறையுந் தொகையும் வருகின்ற சூத்திரங்களால் திறப்படக் கூறுவல் என்றலின், மேலதனோடு இயைபுடைத்தாயிற்று. இச் சூத்திரம் முற்கூறிய குறிஞ்சித்திணைக்குப் புறன் வெட்சித்திணை என்பதூஉம், அதுதான் இப்பகுதித்தென்பதூஉம் உணர்த்து தலுதலிற்று.

(இ - ள்.) அகத்திணை மருங்கின் அரிதல்தப உணர்ந்தோர் புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்—அகத்திணை யென்னும் பொருட்கட் பிணக்கற அறிந்தோர் கூறிய புறத்திணை யது இலக்கணத்தைக் கூறுபட ஆராய்ந்து கூறின்; வெட்சி தானே குறிஞ்சியது புறனே—வெட்சியெனப்பட்ட புறத்திணை குறிஞ்சி யெனப்பட்ட அகத்திணைக்குப் புறனும்; உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே — அதுதான் அஞ்சுதகத் தோன்றும் பதினான்கு துறையினையுடைத்து எ - று.

அகத்திணைக்கண் முதல் கரு வுரிப் பொருள் கூறிய குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்பனவற்றிற்கு வெட்சி வஞ்சி உழிஞை தும்பை யென்பன அவ்வவ் விலக்கணங்களோடு ஒரு புடை யொப்புமைபற்றிச் சார்புடையவாதலும் நிலமில்லாத பாலை பெருந்திணை கைக்கிளை யென்பனவற்றிற்கு வாகையுங் காஞ்சியும் பாடாண்டிணையும் பெற்ற இலக்கணத்தோடு ஒருபுடை யொப்புமைபற்றிச் சார்புடைய வாதலுங் கூறுதற்கு 'அரில்தப வுணர்ந்தோ'ரென்றார். ஒன்று ஒன்றற்குச் சார்பாமாறு

அவ்வச் சூத்திரங்களுட் கூறுதும். தானே யென்றார், புறத்திணை பலவற்றுள் ஒன்றை வாங்குதலின் பாடாண்டிணை ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும் களவொழுக்கமுங் கற்புங் காலமுங் காவலர் கடுகினுந் தான் கருதிய பொருளே இரவின்கண் முடித்து மீடலும்* போல்வன ஒத்தலின் வெட்சி குறிஞ்சிக்குப் புறனென்றார். வெட்சித்திணையாவது களவின்கண் நிரைகொள்ளும் ஒழுக்கம்: இதற்கு அப்பூச் சூடுதலும் உரித்தென்று கொள்க. வேற்றுப்புலத்து வாழும் பார்ப்பார் முதலியோர் அஞ்சி அரண் சேர்வதோர் உபாயமாதலின் உட்குவரத் தோன்றுமென்றார். மக்களும் மாவும் முதலியன சென்று நீருண்ணுந் துறைபோலப் பலவகைப்பட்ட பொருளும் ஒருவகைப்பட்டு இயங்குதலாகு மார்க்கமாதலிற் றுறையென்றார்; எல்லாவழியு மென்பதனை எல்லாத் துறையுங் காவல்போற்றினர் என்பவாகலின். எனவே, திணையுந் துறையுங் கொண்டாராயிற்று. அகத்திணைக்குத் துறையுட் பகுதிகளெல்லாம் விரித்துக்கூறிப் பின்னும் பன்முறையாற் பரந்துபட்டு† வரம்பிகந்தனவற்றையுந் தொகுத்துத் துறைப்படுத்துக் கிளவி கூறுக என்றற்குச் செய்யுளியலுள் துறை யென்பது உறுப்பாகக் கூறினர். புறத்திணைக்கு அங்ஙனம் பரந்துபட விரித்தோதாது தொகுத்து இலக்கணஞ் செய்தாராயினும் அவையும் அவ்வாறே பலபொருட்பகுதியும் உடைய வென்பது உணர்த்துதற்குத் துறையெனப் பெயராகக் கொடுத்தார். இதனானே அகப்பொருட்பகுதி பலவாயினும் ஒருசெய்யுட் பலபொருள் விராஅய் வரினும், ஒரு துறையாயினற்போலப் புறத்திணைக்கும் அவ்வப்பொருட் பகுதியும் ஒரு துறையாதலும், ஒரு செய்யுட் பலதுறை ஒருங்குவந்தும் ஒரு துறைப்படுதலுங் கொள்க. இன்னும் இதனானே அகத்திணைக்கு உரியனவெல்லாம் புறத்திணைக்குங் கொள்க. (க)

நிள. வேந்துவிடு மூனைஞர் வேற்றுப்புலக் களவின் ஆதந் தோம்பல் மேவற் றாகும்.

இது வெட்சியெனக் கூறிய புறத்திணைக்குப் பொது இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) வேந்து விடு மூனைஞர்—வேந்தனால் விடப்பட்டு மூனைப்புலங் காத்திருந்த தண்டத்தலைவர்;‡ வேற்றுப் புலக்களவின்—பகைநிலத்தே சென்று களவினாலே; ஆ தந்தோம்பல்

(பாடம்) * 'மீட்டலும்.' † 'பரந்தனவாய்.'

‡ 'தண்டலைத்தலைவர்' என்ற பாடமே பல எட்டுப் பிரதிகளில் உள்ளது.

மேவற்றாகும்—ஆகிரையைக் கொண்டுபோந்து பாதுகாத்தலைப் பொருந்துதலை யுடைத்தாகும் வெட்சித்திணை எ - று.

களவுநிகழ்கின்ற குறிஞ்சிப்பொருளாகிய கந்தருவமணம் வேத விதியானே இல்லறமாயினற்போல இருபெருவேந்தர் பொருவது கருதியக்கால் ஒருவர் ஒருவர் நாட்டு வாழும் அந் தணரும் ஆவும் முதலியன தீங்குசெய்யத் தகாத சாதிகளை ஆண்டு நின்றும் அகற்றல் வேண்டிப் போதருகவெனப் புகற லும், அங்ஙனம் போதருதற்கு அறிவில்லாத ஆவினைக் களவி னற் றாமே கொண்டுவந்து பாதுகாத்தலுங் தீதெனப்படாது அறமேயாம் என்றற்கு ஆதந்தோம்ப லென்றார்.

அது,

"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறுஅ தீரு
மெம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
வறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்." (புறம்-கூ)

எனச் சான்றோர் கூறியவாற்றா னுணர்க. மன்னுயிர் காக்கும் அன்புடை வேந்தற்கு மறத்தினையினும் அறமே நிகழும் என்றற்கு மேவற்றாகுமென்றார். அகநாட்டன்றிப் புறஞ்சிறைப் பாடியில் ஆகிரை காசகுங் காவலரைக் கொன்றே நிரைகொளள வேண்டுதலின் ஊர் கொலையுங்* கூறினர். வேந்தவிடு விணைஞர் என்னுது மூனைஞர் என்றதனானே மூனைப்புலங் காத்திருதோர்† தாமே சென்று நிரை கோடலுங், குறுநிலமன்னர் நிரைகோட லும், ஏனைமறவர் முதலியோர் நிரைகோடலுமாகிய வேத்தியல் அல்லாத பொதுவியலுங் கொள்க. முன்னர் (தொல்-பொ-புறத்-க) வெட்சி குறிஞ்சிக்குப் புறனெனக் களவுகூறிய அத னானே, அகத்திற்கு ஏனைத் திணைக்கண்ணுங் களவு நிகழ்ந்தாற் போலப் புறத்திணை யேழற்குங் களவுநிகழுங்கொ லென்று ஐயுற்ற மாணாக்கற்கு வெட்சிக்கே களவு உள்ளதென்று துணி வுறுத்தற்கு மீட்டுங் களவினென்று இத்திணைக்கே களவு உள தாக வரைந்தோதினார். வேந்தவிடு மூனைஞர் என்றமையான், இருபெருவேந்தருந் தண்டத்தலைவரை ஏவி விடுவரென்றும்,

* 'ஊர்கொலையாகோள் பூசன்மாற்றே' என்புழிக் காண்க. (தொல்-புறத்-கூ.) ஊர்கொலை:—
"விரைபரி கடவி வில்லுடை மறவர்
குரையழ னடப்பக் குறும்பெறிந் தன்று."
என்பது புறப்பொருள் வெண்பாமாலை, வெட்சி—கூ.

(பாடம்) † 'மூனை பார்த்திருந்தோர்.'

ஆ தந்தோம்பும் என்றதனாற் களவின்கட் கொண்ட ஆவினை மீட்டுத் தந்தோம்புமென்றும், பொருள் கூறுமாறு சூத்திரஞ் செய்தாராகலின், இருபெருவேந்தர் தண்டத்தலைவரும் அவரேவலான் நிரைகோடற்கும் மீட்டற்கும் உரியராயினர்; ஆகவே இருவர்க்குங் கோடற்றொழில் உளதாயிற்றுதலின் அடித்துக் கோடலும் மீட்டுக் கோடலும் வெட்சியாயின. ஆயின் 'மீட்டல் கரந்தை'* என்பரால் எனின், அதனையும் இச் சூத்திரத்தானும் வருகின்ற சூத்திரத்தானும் வெட்சியென்றே ஆசிரியர் கொண்டார். மீட்டலை வெட்சிக்கரந்தை என்பாரும் உளர். மீட்டலைக் கரந்தை யென்பார்க்கு அது திணையாயிற் குறிஞ்சிக்குப் புறனாகாமை உணர்க. களவி னெண்பதற்குக் களவினனெனவும், களவின்கணெனவும் இருபொருட்டாகக் கூறுதல் உய்த்துக் கொண்டுணர்தலென்னும் உத்தியாம். புறப்பொருட்குரிய அறனும் பொருளுங் கூறத்தொடங்கி, ஈண்டு அறத்தாற் பொருவீட்டுமாறுங் கூறினர். (உ)

நி.அ. படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்திறை முற்றிய
ஊர்கொலை யாகோள் பூசன் மாற்றே
நோயின் றுய்த்த னுவலுழித் தோற்றந்
தந்து நிறைபா தீடுண்டாட்டுக் கொடையென
வந்த ஈரேழ் வகையிற் றாகும்.

இது முன் ஈரேழாமென்ற துறை, இருவகைப்பட்டு இருபத்தெட்டாமென்கின்றது.

(இ - ள்) படை இயங்கு அரவம்—நிரைகோடற்கு எழுந்த படை பாடிப்புறத்துப் பொருந்தும் அரவமும், நிரைமீட்டற்கு எழுந்த படை நிரைந்து செல்லும் அரவமும்;

---

*"வெட்சி நிரைகவர்தன் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்லுதல் வஞ்சியா-முட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்த னொச்சி
யதுவளைத்த லாகு முழிஞை-யதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்தி லொன்னார்
செருவென் றதுவாகை யாம்." என்பது.

உதாரணம் :—

"வெவ்வாய்* மறவர் மிலேச்சிய வெட்சியாற்
செவ்வானஞ் செல்வதுபோற் செல்கின்ரு—ரெவ்வாபு
மார்க்குங் கழலொலி யாங்கட் படாலியரோ
போர்க்குந் துடியொடு புக்கு."
(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-எருஉ-நிரைகோடல்)

"அடியதி† ராரப்பின ராபெயர்த்தற் கன்ஞய்
கடிய மறவர் கதழ்ந்தார்—மடிநிரை
மீளாது மீளார் விறல்வெய்யோர் யாதாங்கொல்
வாளார் துடியர்‡ வளம்." (எசுரு.)

இவை கண்டோர் கூற்று.

பாக்கத்து விரிச்சி—நிரைகோடற்கு எழுந்தோர் போந்து விட்ட பாக்கத்தைக் கங்குலின் நல்வாய்ப்புட்§ கேட்டலும், நிரை மீட்டற்கு எழுந்தோர் இடைப்புலத்துப் புறமபோந்தோர் கூறிய வற்றை வாய்ப்புள்ளாகக் கேட்டலும் ;

உதாரணம் :—

"திரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி
நரைமூதியோ னின்றுரைத்த நற்சொ—னிரையன்றி
யெல்லீர் வைய மிறையோர்க் களிக்குமால்¶
வல்லீர்$ சென்மின் வழி"
(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-எருஉ)

"வந்தீர் காண்மினென் ரூபெயர்ப்போர் மாட்டிசைத்த
பைந்தொடியார் கூறும் பறவாப்பு—ளுய்ந்த
நிரையளவைத் தன்றியு நீர்சூழ் கிடக்கை
வரையளவைத் தாவதா மண்."

இவை விரிச்சியை வியந்தன.

புடைகெடப் போகிய செலவே—நிரைகோடற்கு எழுந் தோர் ஆண்டுநின்று மீண்டுபோய்ப் பற்ரூர் புலத்து ஒற்றர் உணராமற் பிற்றைஞான்று சேறலும், நிரைமீட்டற்கு எழுந் தோர் ஆண்டு ஒற்றபபடாமற் சேறலும் ;

உதாரணம் :—

"பிறர்புல மென்னுர்தாந் தம்புல மென்னுர்
விறல்வெய்யோ ராயிருட்கட்** சென்ரூர்—நிறையுங்

(பாடம்) * 'வெவ்வாள்.' † 'அடியெதர்.'
‡ 'வாளா துடியர்.' § கங்குலின் வாய்ப்புள்.'
¶ 'இறையோர்க் களித்தகுமால்.' $ 'வல்லுயே.'
** 'விறல் வெய்யோர் வீங்கிருட்கண்.'

கடாஅஞ் செருக்குங் கடுங்களி யானைப்
படாஅ முகம்படுத் தாங்கு.”
(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-எஇஎ-நிரைகோடல்)

“கங்கை பரந்தாங்குக் கானப் பெருங்கவலை
யெங்கு மறவ ரிரைத்தெழுந்தார்—தங்கிளைக்கண்
மன்றுகாண் வேட்கை மடிசுரப்ப* வேதோன்றும்
கன்றுகாண் மெய்குளிர்ப்பீர் கண்டு.” (எசுச)

இவை கண்டோர் கூற்று.

புடைகெட ஒற்றின் ஆகிய வேயே—நிரைகோடற்கு எழுந்தோர் பகைப்புலத்து ஒற்றர் உணராமற் சென்று ஒற்றி அவ்வொற்றுவகையான் அவர் உணர்த்திய குறிஞ்சிச்சொல்லும், நிரைமீட்டற்கு எழுந்தோர் அங்ஙனம் ஒற்றிய ஒற்றுவகையான் வந்து ஓதிய குறிஞ்சி† சொல்லும்;

உதாரணம்:—

“ஒருவ ரொருவ ருணராமற் சென்றுங்
கிருவரு மொப்ப விசைந்தார்—வெருவர
வீக்குங் கழற்கால் விறல்வெய்யோர் வில்லோடு
கோக்குஞ் சரந்தெரிந்து கொண்டு.”

“நெடிலியா யத்து நிரைசுவ டொற்றிப்
படுமணி யாயம் பகர்ந்தோய்—நெடிது
மனக்குரிய காதல் வயவேந்த னென்று
நினக்குரிய வாக நிரை.”

இவை கண்டோர் கூற்று.

வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்திறை—நிரைகோடற்கு எழுந்தோர் வேயுரைத்தோரிடத்துச் செய்யுஞ் சிறப்புக்கள் முடிந்தபின்னர் உளதாகிய நிரைப்புறத்து ஒடுங்கிய இருக்கைப் பகுதியும், நிரைமீட்டற்கு எழுந்தோர் தமது நிரைப்புறத்துச் சென்று விரைவொழிந்து இருக்கின்ற இருக்கையும்;

உதாரணம்:—

“கரந்தியல் காட்டுத்தீப் போலப் பெரிதும்
பரந்துசென் மள்ளர் பதிந்தா—ரரந்தை
விரிந்தவியு‡ மாறுபோல் விண்டோயத் தோன்றி
யெரிந்தவியும்§ போலுமிவ் வூர்.”

இது கண்டோர் கூற்று.

“இருநில மருங்கி னெப்பிறப் பாயினு
மருவின் மாலையோ வினிதே யிரவி

(பாடம்) * ‘மடிசுரப்பத்.’ † ‘வந்தோதிய குறிஞ்சி.’
‡ ‘விரித்தவியும்.’ § ‘எரித்தவியும்.’

ஞகோண் மள்ளரு மருள்வரக் கானத்து
நாம்புறத் திறுத்தென மாகத் தாந்தங்
கன்றுகுரல் கேட்டன போல
நின்றுசெவி யோர்த்தன* சென்றுபடு நிரையே.”
(தகடூர் யாத்திரை, புறத்திரட்டு-எசுஙு-நிரைமீட்சி)

இது மறவர் கூற்று.

மூற்றிய ஊர்கொலை—நிரைகோடற்கு எழுந்தோர் அவர் புறஞ்சேரியை வளைத்துக்கொண்டு ஆண்டுநின்ற நிரைகாவலரைக் கொன்று பகையறுத்தலும், நிரைமீட்டற்கு எழுந்தோர் அவ்வூரை விட்டுச் சிற்றாரைக் காத்துக்கோறலும்;

உதாரணம் :—

“அரவூர் மதியிற் கரிதூர வீம
விரவு ரொளிகொளீஇக் கொன்று—நிரைநின்ற
பல்லான் ரெழுவும் பகற்காண்மார் போர்கண்டோர்
கொல்வார்ப் பெருஅர் கொதிதித்து.”

“சென்ற நிரைப்புறத்துச் சீறூர்த் தொடைகொண்டு
நின்ற மறவர் நிலஞ்சேர்ந்தார்—கொன்ரூண்
டிகலுழந்த வல்வில் லிளையோர்புண் டூரத†
துகளெழுங்கொல் பல்லான் ரெழு.”

இவை கண்டோர் கூற்று.

ஆகோள்—நிரைகோடற்கு எழுந்தோர் எதிர்விலக்குவோர் இலராக‡ நிரையகப்படுத்தி மீட்டலும், நிரைமீட்டற்கு எழுந்தோர் தமது நிரையை அற்றமின்றி மீட்டலும்;

உதாரணம் :—

“கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தா
னெடுவரை நீள்வேய் நரலு—நடுவூர்க்
கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற
நிணநிரை வேலார் நிலை.” (புற-வெ-மாலை-வெட்சி-கூ)

“கடல்புக்கு மண்ணெடுத்த காரேனக் கோட்டின்
மிடல்பெரி தெய்தின மாதோ—தொடலைக்
கரந்தை மறவர்க் கருதார் குழாஅந்
தரந்து நிரைமீட்ட தோள்.”
(பெரும்பொருள் விளக்கம். புறத்திரட்டு எசுஎ-நிரைமீட்சி)

இவை கண்டோர் கூற்று.

(பாடம்) * ‘ஏற்றின’, ‘ஏற்றன.’ † ‘புண்டூர்ந்து.’
‡ ‘இலராக்கி.’

தொடலைக் கரந்தையெனக் கரந்தை சூடினமை கூறினர், தன்னுறுதொழிலான் நிரைமீட்டலின்; இது *பொதுவியற் கரந்தையிற் கூறுதும்.

பூசன்மாற்று—நிரை கொண்டுபோகின்றூர் தம்பின்னே உளைத்தற்குரலோடு தொடர்ந்து சென்று ஆற்றிடைப் போர் செய்தோரை மீண்டு பூசலைமாற்றுதலும், நிரையை மீட்டுக் கொண்டு போகின்றோர் தம் பின்னர்வந்து போர்செய்தோரை மீண்டு நின்று பூசலை மாற்றுதலும் ;

உதாரணம் :—

"ஒத்த வயவ ரொருங்கவிய நாண்படரத்
தத்த மொலியுந் தவிர்ந்தன—வைத்தகன்றூர்
தம்பூசன் மாற்றி நிரைகொள்வான் றூக்கினூர்
வெம்பூசன் மாற்றிய வில்."

"†ஆவு நெறிந்து நிரையொடு பெயர்ந்த
வெட்சி மறவர் வீழவு மூட்காது
கயிறியல் பாவை போல வயிறிரித்
தூளைக்குரற் குணர்ந்த வூளைப்புலி போல
மூற்படு பூசல் கேட்டனர் பிற்பட
நிணமிசை யிழுக்காது தமர்பிண மிடறி
லிலங்கெடக் கிடந்த கருந்தலை நடுவண்
‡மாக்கட னெருப்புப் போல நோக்குபு
வெஞ்சிலை விடலை வீழ்ந்தன
னஞ்சுதக் கன்றூற் செஞ்சோற்று நிலையே."

இவை கண்டோர் கூற்று.

வெட்சிமறவர் வீழ்ந்தமை கேட்டு விடாது பின்வந்தோன் பாடு கூறினமையிற் பூசன்மாற்றுயிற்று.

நோய் இன்று உய்த்தல்—நிரைகொண்டோர் அங்ஙனம் நின்று நின்று சிலர் பூசன்மாற்றத் தாங்கொண்ட நிரையினை இன்புறுத்திக் கொண்டுபோதலும், மீட்டோரும் அங்ஙனம் நின்று நின்று சிலர் பூசன்மாற்றத் தாம் மீட்ட நிரையினை இன்புறுத்திக்கொண்டு போதலும் ;

உதாரணம் :—

"புன்மேய்ந் தசைஇப் புணர்ந்துடன் செல்கென்னும்
வின்மே லசைஇயகை வெல்கழலான்—றன்மேற்
கடுவரை நீரிற் கடுத்துவரக் கண்டு
நெடுவரை நீழ னிரை." (புற-வெ-மாலை-வெட்சி-கக)

---

* 'அனைக்குரி மாபினது கரந்தை யன்றியும்' என்புழிக் காண்க. (தொல்-பொ-புறத்-ஙூ.)

(பாடம்) † 'இரவு' ‡ 'மாக்கடை நெருப்பு.'

"கல்கெழு சீறூர்க் கடைகாண் விருப்பிஞன்
மெல்ல நடவா விரையுநிரை—யொல்லெனத்
தெள்ளறற் கான்யாற்றுத் தீநீர் பருகவு
மள்ளர் நடவா வகை."

(பெரும்பொருள் விளக்கம். புறத்திரட்டு-எசுகூ நிரைமீட்சி)

இவை கண்டோர்கூற்று.

நுவலுழித் தோற்றம்—பாடிவீட்டுள்ளோர் மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரைகொண்டோர் வரவும், ஊரிலுள்ளோர் கண்டு மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரைமீட்டோர் வரவும்;

உதாரணம் :—

"மொய்யண லானிரை முன்செல்லப் பின்செல்லு
மையணற் காளை மகிழ்துடி—கையணல்
வைத்த வெயிற்றியர் வாட்க ணிடைஞட
வுய்த்தன் றுவகை யொருங்கு."

(புற. வெ. மாலை-வெட்சி-கஉ)

"காட்டகஞ் சென்றுயிர் போற்றுன் கடுஞ்சுரையா
மீட்ட மகனே வினவுறு—ஞேட்டந்து
தன்னெதிர் தோன்றும் புனிற்றுத் தழீஇக்கலுழு
மென்னெதிர்ப் பட்டாயோ* வென்று."

(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-எசுக நிரைமீட்சி)

இவை கண்டோர் கூற்று.

தந்து நிறை—நிரைகொண்டோர் தாங்கொண்ட நிரையைத் தம் மூர்ப்புறத்துத் தந்துநிறுத்தலும், நிரைமீட்டோர் தாம் மீட்ட நிரையினைத் தந்துநிறுத்தலும்;

உதாரணம் :—

"குளிறு குரன்முரசங் கொட்டின் வெரூஉங்
களிறுடுதேர் காண்டலு மாற்று—களிமணி
நல்லா னினநிரை நம்மூர்ப் புறங்கான
மெல்லாம் பெறுக விடம்."

"கழுவொடு பாகர் கலங்காமல் யாத்துத்†
தொழுவிடை யாயந் தொகுமி—னெழுவொழித்தாற்
போமே யிவையிவற்றைப் போற்றுமின் புல்லொடுநீர்
தாமேய் புலம்போலத் தந்து."

இவை கண்டோர் கூற்று.

(பாடம்) * 'என்னது பட்டாயோ என்று."
† 'கவங்கன்பல் யாத்து.'

பாதீடு—ஈத்தலும் ஈதலும் போலப் பாத்தலும் பாதலும் ஒன்றுதலிற் பாதீடாயிற்று: வேந்தனேவலாற் றுங்கொண்ட நிரையைப் பகுத்துக்கோடலும், மீட்டோருந் தத்தநிரையைப் பகுத்துக்கோடலும் நிரையை இழந்தோர்க்குப் பகுத்துக் கொடுத்தலும்;

உதாரணம் :—

"ஒள்வாண் மலைந்தார்க்கு மொற்றுய்ந் துரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும்—விள்வாரை
மாறட்ட வென்றி மறவர்தஞ் சீறூரிற்
கூறிட்டார் கொண்ட நிரை." (புற. வெ. மாலை, வெட்சி-கசு)

"யாமே பகுத்திடல்* வேண்டா வினநிரை
தாமே தமரை யறிந்தனகொ—லேமுற
வன்றீன்ற தம்மை யறிந்துகொள் கன்றேய்ப்பச்
சென்றீண்டு மாங்கவர்பாற் சேர்ந்து."
(பெரும்பொருள் விளக்கம். புறத்திரட்டு-எஎ0 நிரைமீட்சி)

உதாரணம் :—

இவற்றுள் முன்னையது கண்டோர் கூற்று; ஏனையது மறவர் கூற்று.

உண்டாட்டு—நிரைகொண்டார் தாங்கொண்ட நிரையைப் பாத்துத் தாங்கொண்ட மகிழ்ச்சியாற் சுற்றத்தொடுகள் ளுண்டு மகிழ்ந்து விளையாடுதலும், நிரைமீட்டார் வென்று நிரை மீட்ட கொற்றத்தான் உண்டாடுதலும்;

உதாரணம் :—

"நறவுந் தொடுமின் விடையும் வீழ்மின்
பாசுவ லிட்ட புன்காற் பந்தர்ப்
புனறரு மிளமண னிறையப் பெய்ம்மி
னொன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று
நிரையொடு வரூஉ மென்னுங்
குழையோர் தன்னினும் பெருஞ்சா யலரே." (புறம்-உசுஉ)

இது புறம்.

"பகைவர் கொண்ட படுமணி யாய
மீட்டிவட் டந்த வாட்டிறற் குரிசின்
மூழவுத் துயின்மறந்த மூதா ராங்கண்
விழவுத் தலைக்கொண்ட விளையாட் டாயத்
தூன்சுடு கொழும்புகைக் கருங்கொடி யும்பர்
மீன்சுடு புகையின் விசும்புவாய்த் தன்றே

(பாடம்) * 'பகர்ந்திடல்.'

கைவல் கம்மியர் பலகூட் டாரமொடு
நெய்பிழி நறுவிரை நிலம்பரந் தன்றே
காவிற் காவிற் கணங்கொள் வண்டெனப்
பூவிலை மகளிர் புலம்படர்ந் தனரே
சந்தியுஞ் சதுக்கமும் பந்தர் போகிய
வாடுறு நறவின் சாடி தோறுங்
கொள்வினை மாற்றுக் கொடையொடு
கள்விலை யாட்டியுங் கைதை வாளே.''

இவை கண்டோர் கூற்று.

கொடை—தாங்கொண்ட நிரையை இரவலர்க்கு வரையாது கொடுத்து மனமகிழ்தலும், நிரைமீட்டோர்க்கு வென்றிப் பொருட்டு விளைந்த கொடைப்பகுதியும்;

உதாரணம்:—

''இளமா வெயிற்றி யிவைகாணின் னெயர்
தலைநாள் வேட்டத்துத் தந்த நிரைகள்
கொல்லன் றுடியன் கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர்த முன்றி னிறைந்தன.''
(சிலப்-வேட்டுவவரி)

''கொடைத்தொழி லெல்லாங் குறைவின்றிப் பண்டே
முடித்தன னென்றிருந்த மூத்தோன்—கொடைக்கு
வரம்பில னென்றே மருண்டா னிரைகோட்
கரந்தையங் கண்ணியாற் கண்டு.''

இவை கண்டோர் கூற்று.

என நேரேழ் வந்த வகையிற்றாகும்—என்று கூறப்பட்ட பதினைங்கும் மீட்டுமொருகால் விதந்த* இருகூற்றையுடைத்தாகும் வெட்சித்திணை என்றவாறு.

எனவே ஒன்று இரண்டாய் இருபத்தெட்டாயிற்று.

இனித் துறையென முற்கூறினமையின், இது காரியமாக இதற்குக் காரணமாயினவெல்லாம் படையியங்கரவமெனவே படும்; அவை இருபெருவேந்தரும் போர்தொடங்குங்காற் பூக்கோளெவி நிரைகோடல் குறித்தோன் படைத்தலைவரைத் தருக வென்றலும், அவர் வருதலும், அவர் வந்தழி இன்னது செய்க வென்றலும், அவர் வேந்தர்க்கு உரைத்தலும், அவர் படையைக் கூஉய் அறிவித்தலும், படைச்செருக்கும், அதனைக் கண்டோர் கூறலும், அவர் பகைப்புலக் கேட்டிற்கு இரங்கி வருந்தலும், நாட்கோடலும், அவர் கொற்றவைக்குப் பரவுக்கடன்

(பாடம்) * 'வந்த.'

பூண்டலும், பிறவுமாம். களவிற் செல்வோர்க்கும் அரவங்கூறினர், அவர் பாக்கத்தே தங்கி விரிச்சிபெற்றுப் போதலின்.

அவற்றுட் சில வருமாறு :—

"கடிமனைச் சீறூர்க் கடுங்கட் கறவை
வடிநவில் வேலோன் மறுத்தோம்ப லொட்டா
னடிபுனை தோலி னரண்சேர்ந்து மள்ளர்
வருகமன் வாயிற் கடை."

இது பட்டத்தலைவர் படையாளரைக் கூயினது.

"வாள்வலம் பெற்ற வயவேந்த னேவலாற்
றூள்வ லிளையவர் தாஞ்செல்லி—ஞாலக்
கனைகுர னல்லாத்தன் கன்றுள்ளப் பாலா
னனைவது போலுநம் மூர்."
(பெரும்பொருள் விளக்கம். புறத்திரட்டு-எஉங, நிரைமீட்சி)

இது படைச்செருக்கு; கண்டோர் கூறியது.

"வந்த நிரையி னிருப்பு மணியுட
னெந்தலை நின்றலை யாந்தருது—முந்துநீ
மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக்
கொற்றவை கொற்றங் கொடு."
(பெரும்பொருள் விளக்கம். புறத்திரட்டு-எடுச, நிரைகோடல்)

இது தெய்வத்திற்குப் பராஅயது; பிறவும் வருவனவெல்லாம் இதனுள் அடக்குக.

இனிப் பாக்கத்து விரிச்சிக்குக் காரணங்களாவன, பாக்கத்துச் சென்றுழி இருப்புவகுத்தலும், பண்டத்தொடு வல்சி ஏற்றிச் சென்றோரை விடுத்தலும், விரிச்சி வேண்டாவென விலக்கிய வீரக்குறிப்பும் விரிச்சிக்கு வேண்டும் நெல்லும் மலரும் முதலியன தருதலும், பிற நிமித்தப் பகுதிகளும், அவை அறிந்தோர்க்குச் சிறப்புச் செய்தலும், பிறவுமாம்.

உதாரணம் :—

"நாளும் புள்ளுங் கேளா வூக்கமொ
டெங்கோ னேயின னுதலின் யாமத்துச்
செங்கால்* வெட்சியுந் தினையுந் தூஉய்
மறிக்குரற் குருதி மன்றுதொ ளவிப்ப
விரிச்சி யோர்த்தல் வேண்டா
வெயிற்புறந் தருதும்யாம் பகைப்புல நிரையே."
(தகடூர்யாத்திரை. புறத்திரட்டு-எடுடு, நிரைகோடல்)

(பாடம்) * 'செங்கோல்.'

இது விரிச்சி விலக்கிய வீரக்குறிப்பு; பிறவும் வந்துழிக் காண்க.

அரசன் ஏவலாற் போந்தோரும் விரிச்சி கேட்டார், இன்ன ஞான்று வினைவாய்க்குமென்று அறிதற்கு.

இனி வேய்க்குக் காரணங்களாவன; வேய்கூறினர்க்குச் சிறப்புச் செய்தல் போல்வன.

உதாரணம் :—

"மாற்றரும் தப்பின் வயவேந்த னல்லனே
யேற்ற பெருஞ்சிறப் பின்றீதும்—வேற்றாரிற்
புல்வேய் குரம்பைப் புறஞ்சிறைவாய் நின்றெற்றி*
நல்வே யுரைத்தார்க்கு நாம்."

என வரும்.

இனி ஏனைய ஒன்று பலவாய்த் தொகைப்பாற் படுவன† வந்துழிக் காண்க.

இங்ஙனம் புறத்திணைக்குச் சிறுவரவிற்றாதலின் அன்றே 'பாடல் சான்ற புலனெறி வழக்க.'மென்று (தொல்-பொ-அகத்-நூசு) அகத்திற்குக் கூறியது. நிரைமீட்குங்கால் அறிந்தார் அறிந்தவாற்றானே விரைந்து சென்று மீட்பாராதலின் அரசனை உணர்த்தாதே மீட்டல் பெறுதும்: இவற்றிற்குந் தொகைப்பகுதி கொள்க. (சூ)

நுகூ. மறங்கடைக் கூட்டிய தொடி நிலை சிறந்த
கொற்றவை நிலையு மத்திணைப் புறனே.

இவையும் வெட்சித்திணையா மென்கின்றது.

(இ-ள்.) மறங்கடைக் கூட்டிய தொடிநிலை—போர்க்களத்து மறவரது மறத்தினைக் கடைக்கூட்டிய தொடிநிலையும்; சிறந்த கொற்றவை நிலையும்—அத்தொழிற்குச் சிறந்த கொற்றவைக் குப்பரவுக்கடன் கொடுக்குங்கால் அவளது நிலைமை கூறுதலும்; அத்திணைப்புறனே—அவ்விருவகை வெட்சிக்கும் புறனடையாம் என்றவாறு.

"நித்திலஞ்செய் பட்டமு நெற்றித் திலதமு
மொத்திலங்க மெய்பூசி யோர்த்துடுத்—தத்தந்
தொடியரோ சேர்ப்புறஞ் சூழ்ந்தார் மறவர்
குடிநிரை பாராட்டக் கொண்டு."

(பாடம்) * 'நின்றெற்றி னல்வேய்.' † 'படுமாறு.'

இஃது இருவகை வெட்சிக்கும் பொது; நிரைகொண்டோர்க்கும் மீட்டோர்க்குந் துடிகொட்டிச் சேறலொத்தலின்.

"அருமைத் தலைத்தரு* மானிரையு ளேயை
யெருமைப் பலிகோ† ளியைந்தா—ளரசனும்
வேந்தன்மேற் செல்வான் விறல்வஞ்சி சூடானென்
றியாந்தன்மேற் சீரும லின்று."

இதனுனே வருகின்ற வஞ்சித்திணைக்குங் கொற்றவைநிலை காரணமாயிற்று; தோற்றோர்க்குக் கொற்றம் வேண்டியும் வென்றோர்க்கும்‡ மேற்செல்லுங்காற் கொற்றம் வேண்டியும் வழிபடுவராதலின்.

இனிக் கொற்றவைநிலைப் பகுதியுட் சில வருமாறு :—

"நச்சிலேவேற் காளைக்கு நாளையே கொற்றவை
கைச்சிலேயு நல்கும்யாங் காணேங்கொன்—மிச்சில்கூர்§
வாளின்வாய்த் தீண்டாத வார்குருதி மெய்சாய்ப்பத்
தாளின்வாய் வீழ்த்தான் றலை."

இஃது உயிர்ப்பலி. இது பொதுவகையான் இருவகை வெட்சிக்கும் வஞ்சிக்கும் பொது.

"ஆடிப்பண்¶ பாடி யளவின்றிக் கொற்றவை
பாடினி பாடற் படித்துவந்தா—ணுடிய
தோளுழலே யாடுவோன் ரோளினுந் தூக்கமைத்த
தாளுழலே யாடுவோன் ரூன்."

இது குருதிப்பலி; பொதுவகையான் இருவகை வெட்சிக்கும் வஞ்சிக்கும் பொது. (ச)

கூ0. வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளுங் உறுபகை
வேந்திடை தொிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே யாரென வரூஉ
மாபெருந் தானையர் மலைந்த பூவும்
வாடா வள்ளி வயவ ரேத்திய
ஓடாக் கழனிலே உளப்பட ஓடா
உடல்வேந் தடுக்கிய வுன்ன நிலையும்
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
ரூவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்

(பாடம்) * 'அருமை தலைத்தரு.' † 'எருமைத் தலைக்கோள்.'
‡ 'வேண்டாதார்க்கும்.' § 'மிசசிலைகூர்.'
¶ 'ஆடினிப்பாடி.'

ஆரமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலுஞ்
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத் துரைத்தலுந்
தலைத்தா ணெடுமொழி தன்னெடு புணர்த்தலும்
அனைக்குரி மரபினது கரந்தை யன்றியும்
வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்
றிருவகைப் பட்ட பிள்ளை நிலையும்
வாள்மலைந் தெழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடவற் கருளிய பிள்ளை யாட்டுங்
காட்சி கால்கோ ணீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட வெழுமூன்று* துறைத்தே.

இது முன் இருபெருவேந்தர்க்கும் போர்செயத் தொடங்குதற்குரிய பொதுநிலைமை கூறிய அதிகாரததானே புறத்திணைக்கெல்லாம் பொதுவாகிய வழுவேழும் உணர்த்துத லுதலிற்று; இவை வேத்தியலின் வழீஇத் தன்னுறு தொழிலாய் வருதலின் வழுவாயின. இவை அகத்திற்கும் புறத்திற்கும் உரியவாய் வருவனவும் புறத்திற்கெல்லாம் பொதுவாய் வருவனவுமாதலிற் பொதுவியலுமாயின.

(இ - ள்.) வெறி அறி சிறப்பின்—தெய்வத்திற்குச் செய்யுங் கடன்களை அறியுஞ் சிறப்பினையும்; வெவ்வாய் வேலன்—உயிர்க்கொலை கூறலின் வெவ்வாயினையும் உடையனாகிய வேலன்; வெறியாட்டு அயர்ந்த காந்தளும்—தெய்வமேறியாடுதலைச் செய்த காந்தளும்;

செவ்வேள்வேலைத் தான் ஏந்திநிற்றலின் வேலனென்றார். காந்தள் சூடி ஆடுதலிற் காந்தளென்றார் வேலனைக் கூறின மையிற் கணிகாரியையுந்† கொள்க. காந்தளையுடைமையானும்‡ பனந்தோடுடைமையானும§ மகளிரை வருத்துதலானும்

(பாடம்) * 'மூவேழ் துறைத்தே.' † 'கணிக்காரி.'
‡ 'தானையுடைமையானும்.'
§ 'வேண்போழ் கடம்பொடு சூடி யின்சீ
ரைதமை பாணி யிரீஇக்கை பெயராச்
செல்வன் பெரும்பெய ரேத்தி வேலன்
வெறியயர் வியன்களம்.' (அகம்-கஅ)

என வருதலாற் பனந்தோ டுடைமையறிக. வெண்போழ்-பனந்தோடு.

வேலன் வெறியாட்டயர்ந்த என்றதனானும் வேலன் ஆடுதலே பெரும்பான்மை. ஒழிந்தோர் ஆடுதல் சிறுபான்மை யென்றுணர்க.

உதாரணம் :—

"அமரகத்துத் தன்னே மறந்தாடி யாங்குத்
தமரகத்துத் தன்மறந் தாடுங்—குமரன்முன்
கார்க்காடு நாறுங் களனிழைத்துக் காரிகையா
ரேர்க்காடுங்* காளே யிவன்."

இது சிறப்பறியா மகளிராடுதலிற் புறனாயிற்று. வேலனுடைதல் அகத்திணைக்குச் சிறந்தது.

உதாரணம் :—

"அணங்குடை நெடுவரை யுச்சியின் இழிதருங்
கணங்கொள் அருவிக் கான்கெழு நாடன்
மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்
இதுவென அறியா மறுவரற் பொழுதில்
படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
நெடுவேட் பேணத் தணிகுவள் இவளென
முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூறக்
களனன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்
தருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுநாள்
ஆர நாற வருவிடர்த் தகைந்த
சாரற் பல்பூ வண்டுபடச் சூடிக்
களிற்றிரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல
நன்மனை நெடுநகர்க் காவலர் அறியாமைத்
தன்னசை யுள்ளதது நன்னசை வாய்ப்ப
இன்னுயிர் குழைய முயங்குதொறு மெய்ம்மலிந்து
நக்கனெ னல்லெஞ் யானே யெய்த்த
நோய்தணி காதலர் வரவீண
டேதில் வேலற் குலந்தமை† கண்டே."
(அகம்-உஉ)

"பனிவரை நிவந்த" என்னும் (அகம்-கூஅ) பாட்டும் அது.

இவற்றுட் சேயோன் கருப்பொருளாக மைவரை யுலகத்துக் கூதிர்யாமம பொழுதாகச் சிறப்பறியும் வேலன் ஆடுதலின் வெறியாடிய காந்தள் அகத்திற்கு வந்தது, இது வேத்தியற் கூத்தன்றிக் கருங்கூதாதலின் வழுவுமாய் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாதலிற் பொதுவியலுமாயிற்று. "வேலன் றைஇய வெறியயர் களனும்" (பத்து-திருமுரு-உஉஉ.) என்றுந்

)பாடம்) * 'காரிகை யார்க்காடும்.' † 'உலந்தமை.'

போலச் சிறப்பறியும் வேலன் தானே ஆடதலுஞ் சிறுபான்மை புறத்திற்குங் கொள்க.

மா வரும் புகழ் ஏந்தும் பெருந் தானையர்—மா முதலியன வற்றூல் தமக்கு வரும் புகழைத் தாங்கும் மூவேந்தருடைய பெரும்படையாளர்; உறு பகை வேந்திடை தெரிதல் வேண்டிப் போந்தை வேம்பே ஆர் என மலைந்த பூவும் — அப்புகழ்தான் உறும்பகையிடத்து இன்ன வேந்தன் படையாளர் வென்றூர் என்பதற்கு ஓர் அறிகுறி வேண்டிப் போந்தை வேம்பு ஆரென்று கூறிச் சூடின பூவும்;

இதன் கருத்து: ஏழகத்தகரும் யானையும் கோழியும்* பூழும் வட்டும் வல்லுஞ் சொல்லும் முதலியவாற்றூல் தமக்குவரும் புகழைத் தாம் எய்துதற்குத் தததம் வேந்தர் அறியாமற் படைத்தலைவர் தம்மூண் மாறுய் வென்று ஆடுங்கால் இன்ன அரசன் படையாளர் வென்றூரென்றற்கு அவரவர் பூச்சூடி ஆடுவர் என்பதூஉம், அக்கூத்தும் வேத்தியற் கூத்தின் வழீஇயின கருங்கூத் தென்பதூஉம், அது தன்னுறு தொழிலென்பதூஉம் உணர்த்தியதாம். இதனை இங்ஙனந் தன்னுறுதொழிலாக்காமல் வேந்தறு தொழிலாக்கின் அது தும்பையாம். புகழ்ந்து கூறிற்றெனிற் பாடாண்டிணையாம். ஆசிரியர் வெறிக்கூத்திற்கும் வள்ளிக்கூத்திற்கும் இடையே இதனை வைத்தார் இக்கருத்தானே யென்றுணர்க.

உதாரணம்:—

"ஏழக மேற்கொண் டிளையோ னிகல்வென்றூன்
வேழ மிவனேற வேந்துளவோ—வேழுலகுந்
தாந்தயங்கு நாகந் தலைதயங்க வாடாமோ
போந்தையங் கண்ணி புனைந்து."

இது போந்தை மலைந்தாடியது.

"குறும்பூழ்ப்போர் கையெறிந்து கொற்றம் பெறுத
லிறும்பூதென் றியாமாடல் வேண்டா—செறுங்கோன்
குலமதிக்கு மாறறியிற் கொற்றவன் வேம்பு
தலைமலையற் பாலதூஉ மன்று."

இது வேம்பு மலைந்தாடியது.

"ஆர்வேய்ந்த கோலத்தோ டாடுவர் பாடுவர்
போர்வேந்தர் பெற்றநாள் போன்றுவப்பர்—சீர்சால்

(பாடம்) * 'யானையும் நாயுங் கோழியும்' முன் அச்சுப்பிரதியில் உள்ளது.

பறைகெழு வாரணப்போர் பண்டிகழ்ந்தோ* ரின்று
சிறைகெழு வாரணப்போர் செய்து."

இஃது ஆர்மலைந்தாடியது.

இவை தன்னுறுதொழிலாயவாறு காண்க.

வாடாவள்ளி—வாடுங் கொடியல்லாத வள்ளிக்கூத்தும்;

அஃது† இழிந்தோர் காணுங் கூத்து.

உதாரணம்:—

"மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக்
கண்ட முருகனுங் கண்களித்தான்—பண்டே
குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப்
பிறமக ணோற்றுள் பெரிது."

இது பெண்பாற்குப் பெருவரவிற்று. இதனைப் பிற்கூறினார், வெறியறி சிறப்பன்மையானும் ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொதுவாவதல்லது அகத்திணைக்கண் வந்து பொதுவாகாமையும் பற்றி.

வயவர் ஏத்திய ஓடாக் கழனிலை உளப்பட — முன்பு கழல் கால் யாத்த வீரர் மழலைப்‡ பருவத்தானெருவன் களத்திடை ஓடாது நின்றமைகண்டு அவனைப்புகழ்ந்து அவற்குக் கட்டிய கழனிலைக் கூத்து;

ஓடாமையாற் கட்டின கழல், ஏத்திய நிலையாற் கட்டின கழல். இது வள்ளிப்பின் வைத்தலின் இருபாலாரும் ஆடுதல் கொள்க. கொடி முதலியன அவனை வியந்து கொடுத்தல் அத்துறைப் பகுதியாம்.

உதாரணம்.—

"மீளாது பெற்ற விறற்கழலோன் வாளாட்டின்
வாளாடு கூத்திவர் தாடிளுள்—வாளாட்டின்
மண்ணுளு மன்னரே பெண்ணுவார் வண்மைக்குப்
பெண்ணுடின் யாதாம் பிற."

ஓடா உடல் வேந்து அடுக்கிய உன்னநிலையும் — பிறக்கடியிடா உடன்ற வேந்தனை உன்னமரத்திடன் அடுக்கிக் கூறப்பட்ட உன்னநிலையும்;

என்றது, வேந்தன் கருத்தானன்றி அவன் மறவன் வேந்தற்கு நீ வெற்றிகொடுத்தால் யான் நினக்கு இன்னது செய்வலெனப் பரவுதலும், எம்வேந்தற்கு ஆக்கம் உளதெனின் அக்

(பாடம்) * 'பண்டிழந்தோர்.' † 'அதுவும்.' ‡ 'இளமை.'

கோடு பொதுளுக எனவும பகைவேந்தற்குக் கேடு உளதெனில் அக்கோடு படுவதாக எனவும் நிமித்தங்கோடலும் என விரு வகைத் தெய்வத்தன்மை; அஃதுடைமையான்* அடுக்கிய உன்ன நிலையுமென்றார்.

உதாரணம்:—

"துயிலின் கூந்தற் ரூளிணைப் பேதை
வெயினிழ லொழிய வெஞ்சுரம் படர்ந்து
செய்பொருட் டிறவீ ராகிய நும்வயி
னெனைக்கொன்று மொழியின ளாகத் தனக்கே
யருநகை தோன்றிய வழுகுரற் கிளவியள்
கலுழ்கண் கரந்தன† டானே யினியே
மன்னவற் பராஅய் மூன்னியது மூடித்தோ
ருன்னஞ் சிறக்கு மொள்வினை நினைஇத்
தலைசாய்த் திருந்த சிலைவலம் போற்றி
வேந்து வழக்கறுத்த கான
நீந்த லொல்லுமோ பூந்தொடி யொழிந்தே."

இதனுள்,

"மன்னவற் பராஅய் மூன்னியது மூடித்தோ
ருன்னஞ் சிறக்கு மொள்வினை நினைஇ."

என்றது, வேந்தனைப் பரவுக்கடனுக அடுக்கிய உன்ன நிலை.

"மூன்னங் குழையவுங் கோடெலா மொய்தளிரீன்
றுன்னங் குழையெலித் தோங்குவாய்—மன்னரைக்
கொன்று களங்கொள்ளுங் கொல்யானை வேந்தனை
வென்றுகளங் கொள்ளுமேல் வேந்து."

இவை மறவர் செய்தலிற் றன்னுறு தொழிலாம்.

"பொன்னன்ன பூவிற் சிறிய வினைப்புன்கா
‡லுன்னப் பகைவனெங் கோன்."

என்பதும் அது.

இரண்டு நிலையாற் பொதுவுமாயிற்று மன்னவன் வெற்றியே கருதாது இங்ஙனம் இருநிலைமையுங் கருதலின் வழுவுமாயிற்று.

மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற் ரூவா விழுப்புகழ்ப் பூவைநிலையும் என்றது: மாயோன் விழுப்புகழ் - மாயனுடைய காத்தற் புகழையும்; மேய பெருஞ் சிறப்பிற் ரூவா விழுப்புகழ்—ஏனோர்க்கு உரியவாய் மேவிய பெரிய தலைமையிற் கெடாத

(பாடம்) * 'என இருவகைத்தே அத்தன்மை யஃதுடைமை யான்.' † 'கலுழ் கணமர்ந்தன.'
‡ உன்னத்தகைய னென்கோ.

படைத்தல் அழித்த லென்னும் புகழ்களையும்; மன்பூவைநிலையும் —மன்னர் தொழிலுக்கு உவமையாகக் கூறும் பூவைநிலையும்;

என்றது ஒன்றனை ஒன்றுபோற்கூறுந் துறை. மன் எனப் பொதுப்படக் கூறியவதனால் நெடுநிலமன்னர்க்குங் குறுநில மன்னர் முதலியோர்க்குங் கொள்க. பெருஞ்சிறப்பு என்றதனால் படைத்தலுங் காத்தலும் அழித்தலுமன்றி அவரவர் தாமாகக் கூறலும், முருகன் இந்திரன் முதலியோராகக் கூறலுங் கொள்க.

உதாரணம்:—

"ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனுங்
கடல்வளர் புரிவளை புரையு மேனி
யடல்வெங் காஞ்சிற் பனைக்கொடி யோனு
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனு
மணிமயி லுயரிய மாரு வென்றிப்
பிணிமுக வூர்தி யொண்செய் யோனுமென
ஞாலங் காக்குங் கால முன்பிற்
றோலா நல்லிசை நால்வ ருள்ளுங்
கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே யிகழுந ரடுநனை
முருகொத் தீயே முன்னிய தமுடித்தலி
னுங்காங் கவரவ ரொத்தலின் யாங்கு
மரியவு முளவோ நினக்கே....." (புறம்-நிசு)

என இதனுள் *அங்ஙனம் உவமித்தவாறு காண்க.

"குருந்த மொசித்தருள் முண்டா லதனைக்
கரந்த படியெமக்குக் காட்டாய்—மரம்பெரூப்
போரிற் குருகுறங்கும் பூம்புனனீர் நாட
மார்பிற் கிடந்த மறு."

இது சோழனை மாயோனைக் கூறிற்று.

"ஏற்றூர்தி யானு மிகல்வெம்போர் வானவனு
மாற்றலு மாள்வினையு மொத்தொன்றி னெவ்வாசே
கூற்றக் கணிச்சியோன் கண்மூன் றிரண்டேயா
மாற்றல்சால் வானவன் கண்."

இது சேரனை அரனைக் கூறிற்று.

"இந்திர னென்னி னிரண்டேக ணேறூர்ந்த
வந்தரத்தா னென்னிற் பிறையில்லை—யந்தரத்துக்

(பாடம்) * 'என்பதன்கண்.'

கோழியா னென்னின் முகனென்றே கோதையை
யாழியா னென்றுணரற் பாற்று."

இது சேரனைப் பலதேவராகக் கூறிற்று.

"கோவா மலையாரங் கோத்த....." (சிலப்-ஆய்ச்-உள்வரி)

"மூக்கீ ருள்புக்கு மூவாத....." (சிலப்-ஆய்ச்-உள்வரி)

"பொன்னிமையக் கோட்டுப் புலி....." (சிலப்-ஆய்ச்-உள்வரி)

அவை என்பனவும்.

"தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
.....சிறுகுடி ழ்யாரே." (கலி-இஉ)

இஃது உரிப்பொருட் டலைவனை முருகனைக் கூறியது. இங்ஙனம் புறத்தும் அகத்தும் வருதலிற் பொதுவாயிற்று. இறப்ப உயர்ந்த தேவரை மக்கட்கு உவமையாகக் கூறலின் வழுவுமாயிற்று.

காவா என்றதனானே அரசர்புகழைக் காட்டுவாழ்வோர்க்குக் கூறுதலும், அவரை அரசர் பெயராற் கூறுதலுங் கொள்க.

"வீங்குசெலற் பரிதி வெவ்வெயி லெறித்தலி
னேங்க* ணேக்கா தாங்கு நீபோ
யரசுநுகம் பூண்ட பின்னர் நின்னிலை
முரசுடை வேந்தர் முகந்திரிந் தனரே
யஃதான்
றுவவுமதி நோக்குநர் போலப் பாணரொடு
வயிரியர் பொருநர்நின் பதிநோக் கினரே
யதனா
னதருங்† கோடு முதலிய கூட்டுண்
டிகலி னிசைமேஎந் தோன்றிப்
பலவா கிய‡நில நீபெறு நாளே."

இது முடியுங் குடையும் ஒழித்து அரசர்க்குரியன கூறி இழித்துக்கூறியும புகழ்மிகுத்தது.

"பல்லிதழ் மென்மலர்" என்னும் (கo) அகப்பாட்டினுள் "அறனில்வேந்த னுலும்—வறனுறு குன்றம் பலவிலங் கினவே" எனக் காட்டுத் தலைவனை நாட்டுத் தலைவன் பெயராற் கூறினார்.

ஆர் அமர் ஓட்டலும்—குறுநில மன்னருங் காட்டகத்து வாழும் மறவரும் போர்த்தொழில் வேந்தரைப் பொருது புறங் காண்டலும்;

(பாடம்) * 'ஆங்கண்', 'ஆங்குண்.'

† 'அதலும்' எனவும் 'அதர்கூட் டுண்ணு மணங்குடைப் பகழி' என்பது அகம்-ககஎ. ‡ 'தீதிலவாகிய.'

உதாரணம் :—

"பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
மின்னேர் பச்சை மிஞிற்றுக்குரற் சீறியாழ்
நன்மை நிறைந்த நயவரு பாண
சீறூர் மன்னன் சிறியிலை* யெஃகம்
வேந்தூர் யானை யேந்துமுகத்† ததுவே
வேந்துடன் றெறிந்த வேலே யென்னை
சாந்தா ரகல முளங்கழிந் தன்றே‡
யுளங்கிழி சுடர்ப்படை யேந்திநம் பெருவிற
லோச்சினன் றுரந்த காலை மற்றவன்
புன்றலை மடப்பிடி நாணக்
குஞ்சர மெல்லாம் புறக்கொடுத் தனவே." (புறம்-நடஅ)

இது சீறூர்மன்னன் வேந்தனைப் புறங்கண்டது.

"கள்ளின் வாழ்த்திக் கள்ளின் வாழ்த்திக்
காட்டொடு மிடைந்த சீயா முன்றி
ஞட்செருக் கனந்தர்த் துஞ்சு §வோனை
யவனெம் மிறைவன் யாமவன் பாணர்
நெருநை ¶வந்த விருந்திற்கு மற்றுத்தன்
னிரும்புடைப் பழவாள் வைத்தன னின்றிக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணைய மிதுகொண்
டீவதி லாள னென்னது நீயும்
வள்ளி மருங்குல் வயங்கிழை யணியக்
கள்ளுடைக் கலத்தேம் யாமகிழ் தூங்கச்
$சென்றுவாய் சிவந்து மேல்வருக
சிறுகண் யானை வேந்துவிழு முறவே." (புறம்-நகசு)

இது மறவன் ஆரமோட்டல் கூறியது.

இவை தன்னுறுதொழில் கூறியன.

இவை புறம்.

ஆரமோட்ட லென்பது பொதுப்படக் கூறவே, வேந்தர்க்கு உதவியாகச் செல்வோரையுங் கொள்க.

உதாரணம் :—

"வெருக்குவிடை யன்ன வெருணோக்குக் கயந்தலைப்
புள்ளுன் றின்ற புலவுநாறு கயவாய்

(பாடம்) * 'சீறிலை.' † 'வெருவந்து முகத்ததுவே.'
‡ 'கிழித்தன்றே.' § 'கனந்தார்த் துஞ்சு', 'கனந்தற்றுஞ்சு.'
¶ 'நெருநல்.' $ 'செறுநர் சிவந்து',

வெள்வாய் வேட்டுவர் *வீழ்துணை மகாஅர்
சிறியிலை யுடையின் சுரையுடை வான்முற்
றூக நுண்கோற் செறித்த வம்பின்
வலாஅர் வல்விற் குலாவரக் கோலிப்
பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலந் தழீஇய வங்குடிச் சீறூர்க்
குமிழுண் வெள்ளை மறுவாய் †பெயர்த்த
வெண்காழ் தாய ‡வண்காற் பந்தர்§
ரிடையன் பொத்திய சிறுதீ விளக்கத்துப்
பாணரோ டிருந்த நாணுடை நெடுந்தகை
வலம்படு தானை வேந்தற்
குலந்துழி யுலக்கு ¶நெஞ்சறி துணையே.” (புறம்-கூஉசு)

இது புறம். வேந்தற்குத் துணையாகச் $செல்வோரைக் கூறியது.

“இணைப்படைத் **தானை யரசோ டுறினுங்
கணைத்தொடை ††நாணுங் கடிந்துடி யார்ப்பி
னெருத்து வலிய வெறுழ்நோக் கிரலை
மருப்பிற் றிரிந்து மறிந்துவீழ் தாடி
யுருத்த கடுஞ்சினத் தோடா மறவர்.” (கலி-கஅ)

எனக் கலி அகத்தும் வந்தது.

“வயங்குமணிபொருத” என்னும் (கசுஎ) அகப்பாட்டினுள்,

“சேக்குவங் கொல்லோ நெஞ்சே சாத்தெறிந்
ததர்கூட் டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடுவில் ஆடவர்.”

எனச் சாத்தெறிதலும் அது. இங்ஙனம் பொதுவாதலிற் ‡‡பொதுவியலாயிற்று. வேந்தரொடு பொருதலின் வழுவுமாயிற்று.

ஆ பெயர்த்துத் தருதலும்—வெட்சிமறவர் கொண்ட நிரையைக் குறுநிலமன்னராயினுங் காட்டகத்து வாழும் மறவராயினும் மீட்டுத்தருதலும்;

உதாரணம்:—

“ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயரா
திலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வின் மறவ ரொடுக்கங் காணாய்
செல்லல் செல்லல் சிறக்கநின் னுள்ள

(பாடம்) *‘வேட்டுவர்.’ †‘பகுவாய்.’ ‡‘காய.’
§‘வன்காழ்ப் பந்தர்’ ¶‘உவர்துழி யுவக்கும்.’
$‘செல்வனென்றது.’ **‘முணைப்படை.’
††‘கணைத்தொடை.’ ‡‡‘பொதுவிதி.’

மூருகு மெய்ப்பட்ட புலித்தி போலத்
தாவுபு தெறிக்கு மான்மேற்
புடையிலங் கொள்வாட் புணைகழ லோயே.” (புறம்-உஞக)

இது குறுநில மன்னர் நிரைமீட்டல் கண்டோர் கூறியது.

“வளரத்தொடினும் *வவ்வுபு திரிந்து
விளரி யுறுதருந் தீந்தொடை நினையாத்
தளரு நெஞ்சந் தலைஇ மனையோள்
உளருங் கூந்த லுைக்கிக் களர
கள்ளி நீழற் கடவுள் வாழ்த்திப்
பசிபடு மருங்குலைக் கசிபு கைதொழா அக்
காணலென் கொல்லென வினவினை வருஉம்
பாண கேண்மதி யாணரது நிலையே
புரவுத்தொடுத் தண்ணுவை யாயினு மிரவெழுந்
தெவ்வங் கொள்குவை யாயினு மிரண்டுங்
கையுள போலுங் கடிதண் மையவே
மூன்னூர்ப் பூசலிற் றோன்றித் தன்னூர்
நெடுநிரை† தழீஇய மீளி யாளர்
விடுகணை நீத்தந் துடிபுணை யாக
வென்றி தந்து கொன்றுகோள் விடுத்து
வையகம் புலம்ப வளைஇய பாம்பின்
வையெயிற் றுய்ந்த மதியின் மறவர்
கையகத் துய்ந்த கன்றுடைப் பல்லா
னிரையொடு வந்த வுரைய ஞகி
யுரிகளை யரவ மானத் தானே
யரிதுசெ லுலகிற் சென்றன னுடம்பே
கானச் சிற்றியாற் றருங்கரைக் காலுற்றுக்‡
கம்பமொடு துளங்கிய விலக்கம் போல§
வம்பொடு துளங்கி யாண்டொழிந் தன்றே
உயிரிசை வெறுப்பத் தோன்றிப் பெயரே
மடஞ்சான் மஞ்ளை யணிமயிர்சூட்டி
யிடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்¶
படஞ்செய் பந்தர்க் கன்மிசை யதுவே.” (புறம்-உசo)

இதனுட் டன்னூரென்றலிற் குறுநிலமன்னன் நிரைமீட்டுப் பட்ட நிலையைப் பாணர் கையற்றுக் கூறியது.

ஏனைய வந்துழிக் காண்க.

இனிக் கண்டோரும் மறவருங் கூத்தரும் பாணரும் விறலி யருங் கூறினும், அவர்தாங் கையற்றுக் கூறினும், அத்துறைப் பாற் படும்.

(பாடம்) * ‘வாளாத் தொடினும்.’ † ‘நெடுவெறி.’
‡ ‘காலுற.’ § ‘விலங்குபோல.’ ¶ ‘சிறுநெறி.’

உதாரணம்:—

"பெருங்களிற் றடியிற் றேன்று மொருக
ணிரும்பறை யிரவல சேறி யாயிற்
றேழாதனே கழித லோம்புமதி வழாஅது
வண்டுமேம் படீஉமிவ் வறநிலை யாரே
பல்லாத் திரணிரை *பெயர்தரப் பெயர்தந்து
கல்லா மறவர் நீங்க நீங்கான்
வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொலபுனற் சிறையின் விலங்கியோன் கல்லே."

(புறம்-உசுங)

இது கண்டோர் கையற்றுக் கூறியது. ஏனைய வந்தழிக் காண்க.

"விசும்புற நிவந்த"† என்னும் (கஙக) அகப்பாட்டும் அது.

இதனுள் "மறவர் நாளா வுய்த்த என வேந்துறு தொழில் அல்லாத வெட்சிதகிணையும் பொதுவியற் கரந்தைக் கண்ணே கொள்க; இஃது ஏழற்கும் பொதுவாகலின்.

தருதலென்ற மிகையானே நிரையல்லாத கோடலும் அத் தறைப்பாற்படும். "வலஞ்சுரி மராஅத்து" (அகம்-அசு.) என் னுங் களிற்றியானை நிரையுள்,

"கறையடி மடப்பிடி கானத் தலறக்
களிற்றுக்கன் றேழித்த வுவகையர் கலிசிறந்து
கருங்கால் மராஅத்துக் கொழுங்கொம்பு பிளந்து
பெரும்பொளி வெண்ணூர் அழுந்துபடப் பூட்டி
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்
நறவுநொடை நல்லிற் புதவமுதற் பிணிக்குங்
கல்லா இளையர் பெருமகன் புல்லி."

என யானைக்கன்றைக் கவர்ந்தவாறு காண்க.

இதுவும் வேத்தியலின் வழீஇயினவாறு காண்க.

வேந்தன் சீர் சால் சிறப்பு எடுத்து உரைத்தலும்—வேந் தற்கு உரிய புகழ் அமைந்த தலைமைகளை ஒருவற்கு உரிய வாக அவன்றன் படையாளரும் பிறரும் கூறலும்;

இதுவும் வழு; வேந்தர்க் குரிய புகழைப் பிறர்க்குக் கூறின மையின்.

"அத்த நண்ணிய நாடுகெழு பெருவிறல்
கைப்பொருள் யாதொன்று மிலனே நச்சிக்
காணிய சென்ற இரவன் மாக்கள்

(பாடம்) *'பல்லானின நிரை.' † 'நிமிர்ந்த.'

களிற்றொடு நெடுந்தேர் வேண்டினுங் கடல
வுப்பொய் சாகாட் டெமணர் காட்டக்
கழிமுரி குன்றத் தற்றே
யெள்ளமை வின்றவ னுள்ளிய பொருளே.” (புறம்-உகஉ)

இது புறம். படையாளர் கூற்று.

இதற்கு முடியுடைவேந்தன் சிறப்பெடுத் துரைத்தலென்று கூறின், அது பொதுவியலிற் கூறலாகா தென்றுணர்க.

தலைத்தாள் நெடுமொழி தன்னெடுபுணர்த்தலும்—தன்னிடத்துளதாகிய போர்த்தொழிலின் முயற்சியாலே வஞ்சினங் கூறித் தன்னெடு கூட்டிக் கூறலும்;

உதாரணம்:—

“தாளல் விலங்காற் றனித்தாற் பிறன்வரைத்தால்
யானை யெறிதலிளிவரவால்—யானை
யொருகை யுடைய தெறிவலோ யானு
மிருகை சுமந்துவாழ் வேன்.”

என வரும்.

“பெருநீர் மேவற் றண்ணடை யெருமை
யிருமருப் புறழு நெடுமா நெற்றின்*
பைம்பய றுதிர்த்த கோதின் கோலணைக்
கன்றுடை மரையா துஞ்சுஞ் சீறூர்க்
கோளிவண் வேண்டேம் †புரவே ஈரரி‡
ஈனமுதிர்§ சாடி நறவின் வாழ்த்தித்
துறைநனி கெழீஇக் கம்பு ளீனுந்
தண்ணடை பெறுதலு முரித்தே வைந்துதி¶
நெடுவேல் பாய்ந்த மார்பின்
மடல்வன் போந்தையி னிற்கு மோர்க்கே.” (புற-உகஎ)

மடல்வன் போந்தைபோல் நிற்பலென நெடுமொழி தன்னெடு புணர்த்தவாறு காண்க. சீறூர் புரவாகக் கொள்ளேன்; தண்ணடை கொள்வேனெனத் தன்னூறுதொழில் கூறினன்.

இதுவும் பொது; புறம்.

வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்று இருவகைப் பட்ட பிள்ளைநிலையும்—தன்மேல் வருங் கொடிப்படையினைத் தானே தாங்குதல், வாட்டொழிலிற்$ பொய்த்தலென்றி மாற்றுரைக்கொன்று தானும் வீழ்தலென இரண்டு கூறுபட்ட

(பாடம்) * ‘னெற்றின்.’ † ‘கொளின்வேண்ட வேண்டேம்.’
‡ ‘நாரி.’ § ‘நிறைமுதிர்.’ ¶ ‘வைந்நுனை.’
$ ‘வாட்டொழிலால்.’

போரிற் சென்றறியாத மறமக்கள் தாமே செய்யுந் தறுகணுண்மையும்;

வேந்தன் குடிப்பிறந்தோரும் அவன் படைத்தலைவருமாகிய இளையர் செய்யினும் தன்னுறு தொழிலாதலிற் கரந்தையாம்; தும்பையாகாதென்று உணர்க.

உதாரணம்:—

"ஏற்றெறிந்தார் தார்தாங்கி வெல்வருகென் றேவினுள்
கூற்றினுந் தாயே கொடியளே—போர்க்களிறு
காணு விளைமையார் கண்டிவளே நின்றிலனேன்
மாணருள் யார்பிழைப்பார் மற்று."

இது வருதார் தாங்கல்.

"ஆடும் பொழுதி னறுகயிற்றுப் பாவைபோல்
வீடுஞ் சிறுவன்றாய் மெய்ம்மயிழ்ந்தாள்—வீடுவோன்
வாள்வாயின் வீழ்ந்த மறவர்தந் தாயரே
கேளா வழுதார் கிடந்து."

இது வாள் வாய்த்துக் கவிழ்தல்.

"கெடுக சிந்தை கடிதிவ டுணிவே" என்னும் (உசசு) புறப்பாட்டும் இதன்பாற் படும்.

இவை தன்னுறுதொழில். போரிற் சென்றறியாதவன் சேறலின் வழு.

வாண்மலிந்து எழுந்தோனே மகிழ்ந்து பறை தூங்க நாடவற்கு அருளிய பிள்ளையாட்டும்—வாளாற் பொருது உயர்ந்த அரசிளங்குமரனே அந் நாட்டிலுள்ளார் கொண்டுவந்து பறை தூங்கிசையாக ஒலிக்கும்படி அவற்கு அரசுகொடுத்த பிள்ளைப் பருவத்தோனைக் கொண்டாடிய ஆட்டும்;

இதுவும் நாட்டிலுள்ளார் கொடுத்தலிற் றன்னுறுதொழிலாய் வழுவுமாயிற்று.

உதாரணம்:—

"வன்கண் மறமன்னன் வாண்மலிந்து மேம்பட்ட
புன்றலை யொள்வாட் புதல்வற்கண்—டன்புற்றுக்
கான்கெழு நாடு கொடுத்தார் கருதார்க்கு
வான்கெழு நாடு வர."

என வரும்.

இதனைப் பிள்ளைத்தன்மையினின்று பெயர்த்தலிற் பிள்ளைப் பெயர்ச்சியு* மென்ப.

அணைக்குரி மரபிற் கரந்தையும்—ஆரம போட்டல் முதலிய ஏழு துறைக்கும் உரிய மரபினையுடைய கரந்தையும்; கரந்தையாவது தன்னுறுதொழிலாக நிரைமீட்டோர் பூச்சூடுதலிற் பெற்ற பெயராதலின் வெட்சித்திணைபோல ஒழுக்கமன்று.

"அந்தோவெந்தை" என்னும் (உசுக) புறப்பாட்டினுள்,

"நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபிற் சூட்ட
நிரையிவட் டந்து."

என்றவாறு காண்க.

அது அன்றி—அக் கரந்தையே அன்றி;

காட்சி—கல்கெழு சுரத்திற் சென்று கற்காண்டலும், அது கொணர்ந்து செய்வன செய்து நாட்டிப், பின்னர்க் கற்காண்டலும் என இருவகையாம்;

உதாரணம்:—

"தாழி கவிப்பத் தவஞ்செய்வர் மண்ணுக
வாழிய நோற்றனை மால்வரை—யாழிசூழ்
மண்டல மாற்று மறப்புகழோன் சீர்பொறிப்பக்
கண்டனெ னின்மாட்டோர் கல்."

இது கல் ஆராய்கின்றார் காட்சி.

"ஊர்நனி யிறந்த பார்முதிர் பறந்தலை
யோங்குநிலை வேங்கை யொள்ளிணர் நறுவீ
போந்தையந் தோட்டிற் †புனைந்தனர் தொடுத்துப்
பல்லான் கோவலர் படலை சூட்டக்
கல்லா யினையே கடுமான் றோன்றல்
வானேறு புரையுநின் றுணிழல் வாழ்க்கைப்
பரிசிலர் செல்வ மன்றியும் விரிதார்க்
கடும்பகட் டியானை வேந்த
ரொடுங்கா வென்றியு நின்னொடு செலவே." (புறம்-உசுஎ)

இது கோவலர் படலைசூட்ட என்றலிற் கடவுளாகியபின் கண்டது.

---

* 'பிள்ளைப் பெயர்ச்சி:—போர்தாங்கிப் புள்விலங்கியோனைத்—தார் வேந்தன் றலையளித்தன்று" என்பது புற-வெ-மாலை-கரந்தை-12. (பாடம்) † 'போந்தையந்தார்.'

"கல்லாயு மேறெதிர்ந்து காண்டற் கெளிவந்த
வல்லான் படலைக்கு வம்மினே—வெல்புகழாற்
சீரியல் பாடல் சிதையாமல் யாம்பாடத்
தூரிய மெல்லாந் தொட."

என்பதும் அது.

கால்கோள்—கல்லுறுத்து இயற்றுதற்குக் கால்கோடலும், நாட்டிய பின்னர் அவன் ஆண்டுவருவதற்குக் கால்கோடலும் என இரு வகையாம் ;

உதாரணம் :—

"வரையறை சூழ்கிடக்கை மாத்தாட் பெருங்கல்
வரையறை செய்யிய வம்மோ—வரையறை
வாராப் பெரும்புகழ் வலவேல் விடலைக்கு
மோராற்றூற் செய்வ துடைத்து."

இது வரையறை செய்யிய வம்மோ என ஒருவனைத் தெய்வமாக நிறுத்துதற்கு இடங் கொள்ளப்பட்டமையானும், அவ்விடத்துக் கால் கோடலானுங் கால்கோள்.

"காப்புநூல் யாத்துக் கடிகமழ் நீராட்டிப்
பூப்பலி பெய்து புகைகொளீஇ—மீப்படர்ந்த
காளை நடுகற் சிறப்பயர்ந்து கல்கொண்மி
ஞாளை வரக்கடவ *நாள்."

இது நட்டுக் கால்கொண்டது.

"இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லி னுட்பலி யூட்டி
நன்னீ ராட்டி †நெய்ந்நறைக் கொளீஇ ‡
மங்குன் மாப்புகை மறுகுடன் கமழு
மருமூனை யிருக்கைத் தாயினும் வரிமிடற்
றரவுறை புற்றத் தற்றே நாளும்
புரவலர் புன்க ணுணக்கா திரவலர்க்
கருகா தீயும் வண்மை
யுரைசா னெடுந்தகை யோம்பு மூரே." (புறம்-கூஉக)

இதன் கண்ணும் அது வந்தவாறு காண்க

நீர்ப்படை—கண்டு கால்கொண்ட கல்லினை நீர்ப்படுத்துத் தூய்மை செய்தலும், பின்னர்ப் பெயரும் பீடும் எழுதி நாட்டிய வழி நீராட்டுதலுமென இருவகையாம் ;

உதாரணம் :—

"வாளமர் வீழ்ந்த மறவோன்க ளீர்த்தொழுக்கிக்
கேளி ரடையக் கிளர்ந்தெழுந்து—நீள்விசும்பிற்

(பாடம்) * 'வரக்கடவா.' † 'நன்ன நாட்டி.'
‡ 'நின்னறைக் கொளீஇ.'

கார்ப்படுத்த வல்லேறு போலக் கழலோன்க
னீர்ப்படுத்தார் கண்ணீரி னின்று.”

இது நீர்ப்படை.

“பல்லா பெயர்த்து நல்வழிப் படர்ந்தோன்
கல்சொரிந் தாட்டிய நீரே தொல்லே
வான்வழங்கு நீரினுந் தூய்தே யதனுற்
கண்ணீ ரருவியுங் கழீஇத்
தெண்ணீ ராடுமின் றீர்த்தமா மதுவே.”

இது நாட்டி நீராட்டியது.

நடுதல்—கல்லினை நடுதலும், அக் கல்லின்கண் மறவனை நடுதலு மென இருவகையாம்;

உதாரணம்:—

“சீர்த்த துகளிற்றுய்த் தெய்வச் சிறப்பெய்த
நீர்ப்படுத் தற்கு நிலைகுறித்துப்—போர்க்களத்து
மன்னட்ட வென்றி மறவோன் பெயர்பொறிததுக்*
கன்னட்டார் கல்சூழ் கடத்து.”

இது கல் நாட்டியது.

“கோள்வாய்த்த சீயம்போற் கொற்றவர்தம் மாவெறிந்து
வாள்வாய்த்து வீழ்ந்த மறவேலாய்—நாள்வாய்த்
திடைகொள லின்றி யெழுத்துடைக் கல்வாய்
மடைகொளல் வேண்டு மகிழ்ந்து.”

இது மறவனை நாட்டியது.

சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை—அவன் செய்த புகழைத் தகும்படி பொறித்தலும், அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெருஞ் சிறப்புக்களைப் படைத்தலுமென இருவகையாம்;

உதாரணம்:—

“கைவினை மாக்கள் கலுழக்க ணேக்கிழந்து
செய்வினை வாய்ப்பவே செய்தமைத்தார்—மொய்போர்
மறவர் பிணம்பிறக்கி வாள்வாய்த்து வீழ்ந்தோன்
பிறபெயர்சூழ் கன்மேற் பெரிது.”

இது பெயர் முதலியன பொறித்தது.

“அன்றுகொ ளாபெயர்த் தாமமரில் வீழ்ந்தோன்கற்
கின்றுகொள் பல்லா னினமெல்லாங்—குன்றுமற்
செயம்மிஞை சீர்ப்பச் சிறப்பமைத் தீபங்கள்
வையம்மிஞை பீடம்† வகுத்து.”

இஃது அதற்குச் சிறப்புப் படைத்தது.

(பாடம்) * ‘பெயர் பொறிப்ப.’ † ‘கோட்டம்.’

வாழ்த்தல்—கால் கொள்ளுங்கால் தெய்வத்திற்குச் சிறப்புச்செய்து வாழ்த்தலும், பின்னர் நடப்பட்ட கல்லினைத் தெய்வமாக்கி வாழ்த்தலுமென இருவகையாம்.

உதாரணம் :—

"ஆவாழ் குழக்கன்றுய் வித்துக் களத்தவிந்த
நீவாழ வாழிய நின்னடுக—லோவாத
விற்கோட்ட நீண்டதோள் வேந்தன் புலிபொறித்த
பொற்கோட் டிமயமே போன்று."

இது கல்வாழ்த்து.

"பெருங்களிற்றடியில்" என்னும் (உசுஉ) புறப்பாட்டில் 'தொழாதனை கழிதலோம்புமதி' என வாழ்த்தியவாறு காண்க.*

என்று இரு மூன்றுவகையிற் கல்லொடு புணர—என்று முன்னர்க் கூறப்பட்ட அறுவகை இலக்கணத்தையுடைய கல்லொடு பின்னரும் அறுவகை இலக்கணத்தையுடைய கற் கூடச்; சொல்லப்பட்ட—இக்கூறப்பட்ட பொதுவியல்; எழுமூன்று† அறைத்து—இருபத்தொரு துறையினையுடைத்து என்றவாறு.

ஆரமரோட்டன் முதலிய எழுதுறைக்குரிய மரபினையுடைய கரந்தையும், அக் கரந்தையே யன்றி முற்கூறிய கல்லோடே பிற்கூறிய கல்லுங் கூடக், காந்தளும் பூவும் வள்ளியுங் கழனிலையும் உன்னநிலையும் பூவைநிலையும் உளப்பட இச்சொல்லப்பட்ட பொதுவியல் இருபத்தொரு துறையினையுடைத்தெனக் கூட்டுக. மாயோனிறம்போலும் பூவைப் பூ நிறமென்று பொருவுதல் பூவைநிலையென்றல், ஏனையோர் நிறத்தொடு பொருந்தும் பூக்களையும் பொருவுதல் கூறல்வேண்டும்; ஆசிரியர் அவை கூறுமையின், அது புலனெறிவழக்க மன்மையுணர்க. இதனுட் கரந்தைப்பகுதி ஏழும் வேறு கூறினர்; காட்டகத்து மறவர்க்குங் குறுநிலமன்னர்க்கும் அரசன் படையாளர் தாமே செய்தற்கும் உரிமையின். கற்பகுதி வேத்தியற் புறத்திணைக்கும் பொதுவாகலின் வேறுகூறினர் ஏனைய அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகலின் வேறுகூறினர்.

இனித் துறையென்றதனால் ஒன்று பலவாம். அவை, கற்காணச்சேறலும்,‡ இடைப்புலத்துச் சொல்லுவனவுங், கண்டுழியிரங்குவனவுங், கையறுநிலையும், பாணர் கூதளர் முதலியோர்க்குரைப்பனவும், அவர் தமக்குரைப்பனவும் போல்வன கற்காண்

(பாடம்) * 'உணர்க.' † 'மூவேழ்.' ‡ 'காண்டற்கட் சேறலும்.'

டலின் பகுதியாய் அடங்கும்; கால்கொள்ளுங் காலத்து, மாலையும் மலரும் மதவுஞ் சாந்தும் முதலியன கொடுத்தலும், அவையோற்கு இயைய கல் தகுமென்றலுங், தமர்பரிந்திரங்கலும் முதலியன கால்கோளின் பகுதியாய் அடங்கும்; நீர்ப்படுக்குங்கால் நீர்த்துக்கொண்டொழுக்கலும், ஏற்றிய சகடத்தினின்று இழிந்த வழி ஊர்த்தலும், அவர் தாயங்கூறலும் முதலியன நீர்ப்படையாய் அடங்கும்; நடுதற்கண், மடையும் மலரும் மதவும் முதலியன கொடுத்துப் பீலித்தொடையலும் மாலையும் நாற்றிப் பல்லியம் இயம்ப விழவுச் செய்யுஞ் சிறப்பெல்லாம் நடுதலாய் அடங்கும்; பெயரும் பீடும் எழுதுங்காலும் இப் பகுதிகள் கொள்க; நாட்டப்படுங் கல்லிற்குக் கோயிலும் மதிலும் வாயிலும் ஏனைச் சிறப்புக்களும் படைத்தல் பெரும்படைப்பகுதியாய் அடங்கும்; வாழ்த்தற்கண்ணும் இதுதான் நெடிதுவாழ்கவெனவும் இதன் கண்ணே அவனின்று நிலாவுக வெனவும் பிறவுங் கூறுவனவு மெல்லாம் வாழ்த்துதலாய் அடங்கும்; ஏனையவற்றிற்கும் இவ்வாறே துறைப்பகுதி கூறிக்கொள்க.

இனிப் "பரவுடைமருங்கிற் பதுக்கை" என்னும் (உசுச) புறப்பாட்டினுள் "அணிமயிற் பீலிசூட்டிப் பெயர் பொறித்—தினி நட்டனரே கல்லும்" எனக் கன்னூட்டுதல் பெரும்படைக்குப் பின்னுகக் கூறிற்றாலெனின், நீர்ப்படுத்த பின்னர்க் கற்படுத்துப் பெயர் பொறித்து நாட்டுதல் காட்டி நாட்டோர் முறைமை யென்பது சீர்த்தகு சிறப்பின் என்பதனுற் கொள்க. "பெயரும் பீடு மெழுதி யதர்தொறும்—பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்" என அகத்திற்குப் (அகம்-கஉக) வருதலிற் பொதுவியலாயிற்று; இவை ஒரு செய்யுட்கண் ஒன்றும் பலவும் வருதலும், அகத்தின் கண் வருதலுஞ் சுட்டியொருவர் பெயர் கோடலுங், கொள்ளாமையும் உடையவென்று உணர்க.

இப்பொதுவியலின்பின் வஞ்சி வைத்தார், வஞ்சிக்கண்ணும் பொதுவியல் வருவனவுள என்றற்கு அது "வேந்துவினை முடித்தனன்" என்னும் (கoச) அகப்பாட்டினுட் சுட்டியொருவர் பெயர் கூறு வஞ்சி பொதுவியலாய் வந்தவாறு காண்க. (நி)

கூக. வஞ்சி தானே மூல்லையது புறனே.

இது, தம்முண் மாறுபாடு கருதி வெட்சித்திணையை நிகழ்த்திய இருபெரு வேந்தருள் தோற்றோ ரொருவன் ஒருவன்மேற் செல்லும் வஞ்சித்திணை அகத்திணையுள் இன்னதற்குப் புறனு மென்கின்றது. வஞ்சியென்றது ஒருவர்மே லொருவர் சேறலை. அதற்கு வஞ்சி சூடிச் சேறலும் உலகியல்.

(இ - ள்.) வஞ்சி தானே—வஞ்சியெனப்பட்ட புறத்திணை; முல்லையது புறனே—முல்லை யெனப்பட்ட அகத்திணைக்குப் புறனும் என்றவாறு.

ஏனை உழிஞை முதலியவற்றினின்று பிரித்தலின் ஏகாரம் பிரிநிலை. பாடாண்டிணைக்குப் பிரிதலின்மையிற் 'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே' (தொ-பொ-புற-உசு) என்ப. ஏனைய பிரித்துக் கூறுவர். முதலெனப்பட்ட காடுறையுலகமும், கார் காலமும், அந்நிலத்திற்கேற்ற கருப்பொருளும், அரசன் பாச றைக்கட் டலைவியைப் பிரிந்து இருத்தலும், அவன் தலைவி அவனைப் பிரிந்து மனைவயி னிருத்தலுமாகிய உரிப்பொருளும் ஒப்பச் சேறலின், வஞ்சி முல்லைக்குப் புறனுமிற்று. வெஞ்சுடர் வெப்பம் நீங்கத் தண்பெயல்பெய்து நீரும் நிழலும் உணவும் பிறவும் உளவாகிய காட்டகத்துக் களிறு முதலியவற்றோடு சென்றிருத்தல் வேண்டுதலின் வஞ்சிக்கும் அம் முதல் கரு வுரியும் வந்தனவாம். முல்லைப்பாட்டினுட்,

> "கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
> சேணுறு பிடவமொடு பைம்புத லெருக்கி
> வேட்டுப் புழையருப்ப மாட்டிக் காட்ட
> விடுமுட் புரிசை யேமுற வளீஇப்
> படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி." (பத்து-முல்லை: உசு-அ)

என்பதனு ணுணர்க. (சு)

சுஉ. எஞ்சா மண்ணைசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே.

இது முல்லைக்குப் புறனென்ற வஞ்சித்திணை இன்னபொருட் டென்கின்றது.

(இ - ள்.) எஞ்சா மண் நசை — இருபெருவேந்தர்க்கும் இடையீடாகிய மண்ணிடத்து வேட்கையானே; அஞ்சுதகத் தலைச்சென்று — ஆண்டு வாழ்வோர்க்கு அஞ்சுதலுண்டாக அந் நாட்டிடத்தே சென்று; வேந்தனை வேந்தன் அடல் குறித்தன்று —ஒருவேந்தனை ஒரு வேந்தன் கொற்றங்கோடல் குறித்தன் மாத்திரைத்து வஞ்சித்திணை என்றவாறு.

ஒருவன் மண்ணசையான் மேற்சென்றால் அவனும் அம் மண்ணழியாமற் காத்தற்கு எதிரே வருதலின், இருவர்க்கும் மண்ணசையான் மேற்சேறல் உளதாகலின், அவ்விருவரும் வஞ்சிவேந்த ராவரென் றுணர்க. எதிர் சேறல் காஞ்சி என்பரா லெனின், *காஞ்சியென்பது எப்பொருட்கும் நிலையாமை

* தொல் - பொருள் - புறத் - உஉ.

கூறுதலிற் பெரிதும் ஆராய்ச்சிப்படும் பொதுவியற் பொருண்மைப் பெயராற் கூறலாகாமை யுணர்க. ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர்செல்லாது தன்மதிற்புறத்து வருந்துணையும் இருப்பின், அஃது உழிஞையின் அடங்கும். அது சேரமான்* செல்வுழித் தகடூரிடை அதிகமான்† இருந்ததாம். இங்ஙனம் இருவரும் வஞ்சிவேந்தரெனவே, மேற்கூறுந் துறை பதின்மூன்றும் இருவர்க்கும் ஒப்பக் கூறலாமென்றுணர்க. (எ)

௧௧௩. இயங்குபடை யரவ மெரிபரந் தெடுத்தல்
வயங்க லெய்திய பெருமை யானுங்
கொடுத்த லெய்திய கொடைமை யானும்
அடுத்தூர்ந்து அட்ட கொற்றத் தானும்
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்
பொருளின் றுய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
வொருவன் ருங்கிய பெருமை யானும்
பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்
வென்ரோர் விளக்கமுந் தோற்ரோர் தேய்வும்
குன்ருச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பிற் றுறைபதின் மூன்றே.

இது முற்கூறிய வஞ்சித்திணை பதின்மூன்றுஇ துறைத் தென்கின்றது.

(இ - ள்.) இயங்கு படை அரவம்—இயங்குகின்ற இரு படை யெழுச்சியின் ஆர்ப்பரவமும் ;

உதாரணம் :—

"விண்ணசை இச்செல்கின்ற வேலினையா ரார்ப்பெடுப்ப
மண்ணசைஇச் செல்கின்ருன் வாள்வேந்த—னெண்ணு
மொருபாற் படர்தரக்கண் டொன்னர்த முள்ள
மிருபாற் படுவ தெவன்."

(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-எஎச-பகைவயிற் சேறல்)

---

* 'இவன் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை' யாவன்.
(பாடம்) † 'அதியமான்.' ‡ 'வஞ்சித்திணைத்துறை பதின்மூன்றென்கின்றது.'

"சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்" என்னும் (நூக) புறப்பாட்டும் அது.

"இறும்பூதாற் பெரிதே கொடித்தே ரண்ணல்
வடிமணி யணைத்த பணைமரு* ணூன்ருட்
கடிமரத்தாற் களிறணைத்து
நெடுநீர் துறைகலகுக
மூழ்த்திறுத்த வியன்ருணையொடு
புலங்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம்
வாண்மதி லாக வேண்மிளை யுயர்த்து
வில்விசை யுமிழ்ந்த வைம்முள் ளம்பிற்
செவ்வா யெஃகம் வளைஇய வகழிற்†
காரிடி‡ யுருமி னுரறுபு முரசிற்
கால்வழங் காயில் கருதிற்
போரெதிர் வேந்த ரொளூஉ நின்னே." (பதிற்று-கூக)

இப் பதிற்றுப்பத்தும் அது.

"போர்ப்படை யார்ப்பப் பொடியா யெழுமரோ
பார்ப்புர வெண்ணுன்கொல் பார்வேந்த—ஞார்ப்புறத்து
நில்லாத தானை நிலனெளிய நீளிடைப்
புல்லார்மேற் செல்லும் பொழுது."

இஃது எதிர்செல்வோன் படையரவம்.

எரிபரந்து எடுத்தல்—இருவகைப் படையாளரும் இரு வகைப் பகைப்புலத்துப் பரந்துசென்று எரியை எடுத்துச் சுடுதலும்;

இவ்விரண்டற்கும் உம்மை விரிக்க.

உதாரணம்:—

"வினைமாட்சிய விரைபுரவியொடு
மழையுருவின தோல்பரப்பி
மூனைமுருங்கத் தலைச்சென்றவர்
வினைவயல் கவர்பூட்டி
மனைமரம் விறகாகக்
கடிதுறைநீர்க் களிறுபடீஇ
யெல்லுப்பட விட்ட சுடுதீ விளக்கஞ்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் ருேன்றப்
புலங்கெட விறுக்கும் வரம்பி ருனே." (புறநா-கசு)

எனவும்,

"களிறு கடைஇயதாட்
கழலுரீஇய திருந்தடிக்

(பாடம்) * 'அலைத்தபனை.' † 'அகழிக்.' ‡ 'காரிடை.'

கணைபொருத கவிவண்கையால்*
கண்ணெளிர்வரூஉங் கவின்சாபத்து."

என்னும் (எ) புறப்பாட்டினுள்,

"எல்லேயு மிரவு மெண்ணெய்† பகைவ
ரூர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளே மேவலே யாகலின்."

எனவும் வரும்.

இவை கொற்றவள்ளைப் பொருண்மையவேனும் உட்பகுதி பலவுந் துறையாய் வருதலின், எரிபரந் தெடுத்தற்கும் உதாரண மாயின.

வயங்க லெய்திய பெருமையானும்—ஒருவர் ஒருவர்மேற் செல்லுங்காற் பிறவேந்தர் தத்தந் தானையோடு அவர்க்குத் துணையாயவழி அவர் விளக்கமுற்ற பெருமையும்;

உதாரணம்:—

"மேற்செல்லுங் காலைத் துணைவந்த வேந்தர்தம்
பாற்செல்லச் செல்லும் பரிசிலை—ஞற்கடல்சூழ்
மண்மகிழுங் காட்சியான் மீன்பூத்த வானத்து
வெண்மதிபோன் மேம்பட்டான் வேந்து."

எனவரும்

இஃது இருவருக்கும் பொது.

கொடுத்தல் எய்திய கொடைமையானும்—மேற்செல்லும் வேந்தர் தத்தம் படையாளர்க்குப் படைக்கல முதலியன கொடுத்தலும், பரிசிலர்க்கு அளித்தலும் ஆகிய கொடுத்தலிற் பொருந்திய கொடைத்தொழிலும்;

உதாரணம்:—

"வேத்தமர் செய்தற்கு மேற்செல்வான் மீண்டுவந்
தேத்துநர்க் கீதுமென் றெண்ணுமோ—பாத்தி
யுடைக்கலி மான்றே ருடனீந்தா னீந்த
படைக்கலத்திற் சாலப் பல."

எனவரும்.

"சிறுஅர் துடியர் பாடுவன் மகாஅர்
னவெள் ளறுவை மாயோற் குறுகி
யிரும்பூட் பூச‡ லோம்புமின் யானும்

(பாடம்) * 'கணைபொருத கவின்வண்கையால்.'
† 'என்னெய்.' ‡ 'இரும்புட்பூசல்.'

விளரிக் கொட்பின் வெண்ணரி கடிகுவெ
னெம்போற் பெருவிதுப் புறுக வேந்தே
கொன்னுஞ் சாதல் வெய்யோற்குத்* தன்றலை
மணிமருண் மாலை சூட்டி யவன்றலை
யொருகாழ் மாலை தான்மலைந் தனனே." (புறம்-உகக)

என்பதும் அது.

அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றத்தானும்—எடுத்துச் சென்ற இருபெருவேந்தர் படையாளர் வரவறியாமல் இரவும் பகலும் பலகாலும் தாம் ஏறி அந் நாட்டைக் காவல் புரிந்தோரைக் கொன்ற கொற்றமும்,

உதாரணம் :—

"நீணில வேந்தர் நாட்செல்† விருப்பத்துத்
தோள்சுமந் திருத்த லாற்ரு ராள்வினைக்
கொண்டி மாக்க ளுண்டியின் முனிந்து
மூனைப்புல மருங்கி னினைப்பருஞ் செய்வினை
வென்றியது முடித்தனர் மாதோ
யாங்குள கொல்லினி யூங்குப்பெறுஞ் செருவே."

என வரும்.

"யாண்டு தலைப்பெயர வேண்டுபுலத் திறுத்து
மூனையெரி பரப்பிய துன்னருஞ் சீற்றமொடு
மழைதவழ்பு தலைஇய‡ மதின்மர முருக்கி
நிரைகளி ரூழுழைய நிரைய வெள்ளம்
பரந்தாடு கழங்கழி§ மண்மருங் கறுப்பக்
கொடிவிடு குரூஉப்புகை பிசிரக் கால்பொர
வழல்கவர் மருங்கி னுருவறக் கெடுத்துத்
தொல்கவி னழிந்த கண்ணகன் வைப்பின்
வெண்பூ வேளையொடு பைஞ்சுரை கலித்துப்
பீரிவர்பு பரந்த நீரறு நிறைமுதற்
சிவந்த காந்தண் முதல்சிதை மூதிற்
புலவுவில் லுழவிற் புல்லாள் வழங்கும்
புல்லிலை வைப்பிற் புலஞ்சிதை யரம்பி·
னறியா மையான் மறந்துதுப் பெதிர்ந்தநின்
பகைவர் நாடுங் கண்டுவந் திசினே ·
கடலவுங் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவறு பறியா முழவிமிழ் மூதூர்." (பதிற்று-கஞ)

என்னும் பதிற்றுப்பத்தும் அழிவு கூறிய இடம் அப்பாற் படும்.

(பாடம்) * 'வென்ரோர்க்கு.' † 'வேந்த ருடன்செல்.'
‡ 'தைஇய.' § 'பரந்தாடு வழங்குவழி.'

மாராயம் பெற்ற நெடுமொழியானும்—வேந்தனுற் சிறப் பெய்திய அதனுற், றானேயாயினும் பிறரேயாயினுங் கூறும் மீக் கூற்றுச் சொல்லும் ;

சிறப்பாவன ஏனாதி காவிதி முதலிய பட்டங்களும் நாடும் ஊரும் முதலியனவும பெறுதலுமாம். முற்கூறியது படைவேண் டியவாறு செய்க என்றது. இஃது அப்படைக்கு ஒருவனைத் தலைவனுக்கி அவன் கூறியவே செய்க அப்படை என்று வரை யறை செய்தது.

உதாரணம் :—

"போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்
கார்க்கடல் பெற்ற கரையன்றே—போர்க்கெல்லாந்
தானதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சே
ரேனதிப் பட்டத் திவன்."

இது பிறர் கூறிய நெடுமொழி.

"துடியெறியும் புலைய
வெறிகோல் கொள்ளு மிழிசின
கால மாரியி னம்பு தைப்பினும்
வயற்கெண்டையின் வேல்பிறழினும்
பொலம்புனை யோடை யண்ணல் யானை
யிலங்குவான் மருப்பி னுதிமழித் தான்றினு
மோடல் செல்லாப் பீடுடை யாளர்
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதற் புரளுந்*
தண்ணடை பெறுதல் யாவது படிநே
மாசின் மகளிர் மண்ற† னன்று
முயர்நிலை யுலகத்து நுகர்ப வதனுல்
வம்ப‡ வேந்தன் றானே
யீம்பர் நின்றுங் காண்டிரோ வரவே." (புறம்-உஅஎ)

இது தண்ணடை பெறுகின்றது. சிறிது சுவர்க்கம் பெறு தல் நன்று என்று நெடுமொழி கூறியது. போர்க்களம் புக்கு நெடுமொழி கூறலும் ஈண்டு அடக்குக.§

பொருளின்று உய்த்த பேராண் பக்கமும்—பகைவேந் தரை ஒரு பொருளாக மதியாது படையினைச் செலுத்தின பேராண்மை செய்யும் பகுதியும் ;

உதாரணம் :—

"மெய்ம்மலி மனத்தி னம்மெதிர் நின்றே
னடர்வினைப் பொலிந்த சுடர்விடு பாண்டிற்

(பாடம்) * 'பிறழுந்.' † 'மண்ண.' ‡ 'வம்பே.' § 'அடங்கும்'.

கையிகந் தமருந் தையணற் புரவித்
தலையவிழ் கண்ணி யினையோன் சீறின்
விண்ணுயர் நெடுவரை வீழ்புயல் கடுப்பத்
தண்ணறுங் கடாஅ முமிழ்ந்த வெண்கோட்
டண்ணல் யானை யெறித லொன்றே
மெய்ம்மலி யுவகைய னம்மருங்கு வருதல்
கடியமை களஞண் கைவல் காட்சித்
தடிய னுண்க ணேக்கிச் சிறிய
கொலைமொழி மன்னுச்சிதர்ந் தனையதன்
வேறிரித் திட்டு நகுதலு நகுமே.”*

இஃது அதிகமானைப் சிறப்பெய்திய பெரும்பாக்கனை மதி யாது சேரமான் முனைப்படை நின்றானைக் கண்டு அரிசில்கிழார் கூறியது.

“பல்சான் றீரே பல்சான் றீரே
குமரி மகளிர் கூந்தல் புரைய
வமரி னிட்ட வருமுள் வேலிக்
கல்லென் பாசறைப் பல்சான் றீரே
மூரசு முழங்கு தானைஞும்† அரசு மோம்புமி
னெஞ்சேறந்து மருப்பினுங் களிறும் போற்றுமின்
னெனைநாட் டாங்குநும்‡ போரே யனைநா
ளெறியா றெறிதல்§ யாவண தெறிந்தோ¶
ரெதிர்சென் றெறிதலுஞ் செல்லா$ னதனு
லறிந்தோர் யாரவன் கண்ணிய பொருளே
பலமென் றிகழ்ந்த லோம்புமி னுதக்கா
ணிலனளப் பன்ன நில்லாக் குறுநெறி
வண்பரிப் புரவிப் பண்புபா ராட்டி
வெல்லிடைப் படர்தந் தோனே கல்லென்
வேந்தூர் யானைக் கல்ல
தேந்துவன் போலான்ற** னிலங்கிலை வேலே.” (புறம்-கூ0க)

இதுவு மது.

வரு விசைப் புனலைக் கற்சிறை போல ஒருவன் தாங்கிய பெருமையானும்—தன்படை நிலையாற்றாது பெயர்ந்தவழி விசையோடும் வரும் பெருநீரைக் கல்லணை தாங்கிஞற்போலத் தன்மேல் வரும் படையினைத் தானே தடுத்த பெருமையும் ;

உதாரணம் :—

“கார்த்தரும் புல்லணற் கண்ணஞ்சாக் காளைதன்
ரூர்ப்பற்றி யோர்தரு தோணேக்கித்—தார்ப்பின்னர்

(பாடம்) * ‘இது தகடூர்யாத்திரை.’ † ‘தானையு’ ‡ ‘டாஞு.’
§ ‘அறிதல்.’ ¶ ‘அறிந்தோன்.’ $ ‘சொல்லா.’
** ‘போலானி.’

ஞாட்பினுள் யானைக் கணைநோக்கி யானைப்பின்
றேர்க்குழா நோக்கித்தன் மாநோக்கிக்—கூர்த்த
கணைவரவு நோக்கித்தன் வேலுைக்கிப் பின்னைக்
கிணைவனை நோக்கி நகும்.''

(தகடூர் யாத்திரை, புறத்திரட்டு-அஅக)

என வரும்.

இது பொன்முடியார் ஆங்கவனைக் கண்டு கூறியது.

''வேந்துடைத் தானை முனைகெட நெரிதலி
னேந்துவாள் வலத்த லெறுவ ளுகித்
தன்னிறந் வாராமை விலக்கலிற் பெருங்கடற்
காழி யனையன் மாதோ வென்றும்
பாடிச் சென்றோர்க் கன்றியும் வாரிப்*
புரவிற் காற்றுச் சீறூர்த்
தொன்மை சுட்டிய வண்மை யோனே.'' (புறம்-கூகo)

என்பதும் அது.

''வருகதில்வல்லே'' என்னும் (உஅச) புறப்பாட்டும் அதன் பாற்படும. முன்னர் மாராயம் பெற்றவனே பின் இரண்டு துறையும் நிகழ்த்துவான் என்றுணர்க.

பிண்டம் மேய பெருஞ்சோற்றுநிலையும்—வேந்தன் போர் தலைக்கொண்ட பிற்றைஞான்று தானே போர்குறித்த படையா ளருந் தானும் உடனுண்பான் போல்வதோர்† முகமன் செய்தற் குப் பிண்டித்து வைத்த உண்டியைக்‡ கொடுத்தன் மேயின பெருஞ்சோற்று நிலையும் ;

உதாரணம் :—

''இணர்ததை ஞாழற் கரைகெழு பெருந்துறை
மணிக்கலத் தன்ன மாயிதழ் நெய்தற்
பாசடைப் பனிக்கழி துழைஇப் புன்னை
வாலிணர்ப் படுசினை குருகிறை கொள்ளு
மல்குறு கானலொங் கிருமண லடைகரைத்
தாழுடும்பு மலைந்த புணரிவளை ஞரல
லிலங்குநீர்§ முத்தமொடு வார்துகி றெடுக்குந்
தண்கடற் படப்பை மென்பா லனவுங்
காந்தளங் கண்ணிக்¶ கொலைவில் வேட்டுவர்
செங்கோட் டாமா ஞரலுடு காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்குங்
குன்றுதலை மணந்த புன்புல வைப்புங்

(பாடம்) * 'வாடி.' † 'போல வந்தோர்.'
‡ ஏடுகளில் 'உண்டை' என்றுள்ளது.
§ 'லிலகுகதிர்.' ¶ 'காந்தட் கண்ணி.'

கால மன்றியுங் கரும்பறுத் தொழியா
தரிகா லவித்துப்* பல்பூ விழவிற்
றேம்பாய் மருத முதல்படக் கொன்று
வெண்டலைச் செம்புனல் பரந்துவாய் மிகுக்கும்
பலசூழ் பதப்பர் பரிய வெள்ளத்துச்
சிறைகொள் பூசலிற் புகன்ற வாயம்
முழவிமிழ் மூதூர் விழவுக் காணூஉப் பெயருஞ்
செழும்பல் வைப்பிற் பழனப் பாலு
மேன லுழவர் வாகுமீ திட்ட
காண்மிகு குளவிய வன்புசே ரிருக்கை
மென்றினை நுவணை முறைமுறை பகுக்கும்
புன்புலந் தழீஇய புறவணி வைப்பும்
பல்பூஞ் செம்மற் காடுபய மாறி
யரக்கத் தன்ன நுண்மணற் கோடுகொண்
டொண்ணுதன் மகளிர் கழலொடு மறுகும்
விண்ணுயர்ந் தோங்கிய கடற்றவும் பிறவும்
பணிகெழு வேந்தரும் வேளிரு மொன்றுமொழிந்து
கடலவுங் காட்டவு மரண்வலியார் நடுங்க†
மூரண்மிகு கடுங்குரல் விசும்படை பதிரக்
கடுஞ்சினங் கடாஅய மூழங்கு மந்திரத்
தருந்தெறன் மாபிற் கடவுட் பேணிய
ரூயர்ந்தோ னேந்திய வரும்பெறற் பிண்டங்
கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க
நெய்த்தோர் தூய நிறைமகி‡ ழிரும்பலி
யெறும்பு மூசா வீறும்பூது மரபிற்
கருங்கட் காக்கையொடு பருந்திருந் தார
வோடாப் பூட்கை யொண்பொறிக் கழற்காற்
பெருஞ்சமந் ததைந்த செருப்புகன் மறவ
ரூருமுகில னதிர்க்குங் குரலொடு கொளைபுணர்ந்து§
பெருஞ்சோ றுகுத்தற் கெறியுங்
கடுஞ்சின வேந்தேநின் றழங்கு குரன்¶ மூரசே.”

(பதிற்று-கூ0)

என வரும்.

இது பதிற்றுப்பத்து.

துறை யெனவே கள்ளும் பாகும் முதலியனவும் அப் பாற் படும்.

“வெள்ளே வெள்யாட்டுச் செச்சை போலத்
தன்னே ரன்ன விளைய ரிருப்பப்
பலர்மீ தூட்டிய மண்டை$யென் சிறுவனைக்
கால்கழி கட்டிலிற் கிடப்பித்
தாவெள் ளறுவை போர்ப்பித் திலதே.”** (புறம்-உஅசு)

(பாடம்) * ‘அரிகால் வித்தும்.’ † ‘நடுங்கும்.’ ‡ ‘நிரைமகிழ்.’
§ ‘கோள்புணர்ந்து.’ ¶ ‘தழங்குரன் மூரசே.’
$ ‘எண் சிறுவனே.’
** ‘போர்ப்பித் திலவே,’ ‘போர்ப்பித் திலனே.’

"உண்டியின் மூந்தா துடனுண்பான் றண்டோறன்
மண்டி வழங்கி வழீஇயதற்கோ—கொண்டி
மறவர் மறமிக் குயிர்நேர்ந்தார் மன்னர்க்
குறவிலர் கண்ணோடா தோர்ந்து."

என்பன கொள்க.

வெண்ரேர் விளக்கமும்—அங்ஙனம் பிண்டமேய இருபெரு வேந்தருள் ஒருவர் ஒருவர் மிகை கண்டு அஞ்சிக் கருமச் சூழ்ச் சியாற் றிறைகொடுப்ப அதனை வாங்கினர்க்கு உளதாகிய விளக்கத்தைக் கூறலும்;

உதாரணம்:—

"அரூஅ யாண ரகன்கட் செறுவி
னருவி யாம்ப னெய்தலொ டரிந்து
செறுவினை* மகளிர் மலிந்த வெக்கைப்
பரூஉப்பக டிதிர்த்த மென்செந் நெல்லி†
னம்பண வளவை யுறைகுவித் தாங்குக்
கடுந்தே றுறுகளை‡ மொசிந்தன துஞ்சுஞ்
செழுங்கூடு கிளைத்த விளந்துணை மகாஅரி
னலந்தனர் பெருமகின் னுடற்றி யோரே§
யூரெரி கவர வுருத்தெழுந் துரைஇப்
போர்சுடு கமழ்புகை¶ மாதிர மறைப்ப
மதில்வாய்த், தோன்ற லீயாது தம்பழி யூக்குநர்
குண்டுக ணகழிய குறுந்தாண் ஞாயி
லாரெயிற் ரோட்டி வெளவினை யேற்ரோடு
கன்றுடை யாயந் தீஇப் புகல் சிறந்து
புலவுவி லிளைய ரங்கை விடுப்ப
மத்துக்கயி ரூடா வைகற் பொழுது நினையூ
வான்பயம் வாழ்நர் கழுவுடலை மடங்கப்
பதிபா ழாக வேறுபுலம் படர்ந்து
விருந்தின் வாழ்க்கையொடு பெருந்திரு வற்றென
வருஞ்சமத் தருநிலை தாங்கிய புகர்நுதற்
பெருங்களிற் றியானையொ டருங்கலந் $தராஅர்
மெய்பனி கூரா வணங்கெனப் பராவலிற்
பலிகொண்டு** பெயரும் பாசம் போலத்††
திறைகொண்டு பெயர்தி வாழ்கநின் னூழி
யுரவரு மடவரு மறிவுதெரிந் தெண்ணி
யறிந்தனை யருளா யாயின்
யாரிவ ணெடுந்தகை வாழு மோரே." (பதிற்று-எக)

என வரும்.

(பாடம்) * 'செறிவளை.' † 'செழுஞ் செந்நெல்லின்.'
‡ 'கடுந்தேற் றுறுகளை.' § 'உடற்றிசி னோரே.'
¶ 'கமம்புகை.' $ 'தெரூஅர்.' ** 'பலிகொடு.'
†† 'பசாசம்போல.'

"இருங்கண் யானையோ டருங்கலங் *தெறுத்துப்
பணிந்துகுறை மொழித லல்லது பகைவர்
வணங்கா ராதல் யாவதோ மற்றே."

இதுவும் அது.

இவை பதிற்றுப்பத்து.

தோற்றோர் தேய்வும்—அங்ஙனந் திறைகொடுத்தோரது குறைபாடு கூறுதலும்;

உதாரணம்:—

"வாஅன் மருப்பிற் களிற்றியானை நிரை
மாமலையிற் கணங்கொண்டவ
ரெடுத்தெறிந்த விறன்முரசங்
கார்மழையிற் கடிதுமுழங்கச்
சாந்துபுலர்ந்த வியன்மார்பிற்†
ரொடிசுடர்வரும் வலிமுன்கைப்
புண்ணுடை யெறுழ்த்தோட் புடையலங் கழற்காற்
பிறக்கடி யொதுங்காப் பூட்கை யொள்வா
ளொடிவி றெவ்வ ரெதிர்நின் றுரைஇ
யிடுகி றிறையே புரவெதிர்ந் தோர்க்கென
வம்புடை வலத்த ருயர்ந்தோர் பரவ
வானையை யாகன் மாறே பகைவர்
கால்கிளர்ந் தன்ன கதழ்பரிப் புரவிக்
கடும்பரி நெடுந்தேர் மீமிசை நூடங்குகொடி
புலவரைத் தோன்றல் யாவது சினப்போர்
நிலவரை நிறீஇய நல்லிசை
தொலையாக் கற்பினின் தெம்முனை யானே." (பதிற்று-அ0)

என வரும்.

இது பதிற்றுப்பத்து.

குன்றுச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்—வேந்தனது குறையாத வெற்றிச் சிறப்பினுற் பகைவர் நாடழிதற் கிரங்கித் தோற்றோனே விளங்கக்கூறும் வள்ளைப்பாட்டும்:

வள்ளை, உரற்பாட்டு. ‡கொற்றவள்ளை தோற்ற கொற்றவன் கொடிக்குந் திறை என்று சொல்வாரும் உளர்.

உதாரணம்:—

"வேரறுகு பம்பிச் சுரைபரந்து வேளூபூத்து
ஊரறிய லாகா விடத்தனவே—போரின்

(பாடம்) * 'தறுத்து.' † 'வேந்து மொய்ம்பிற்.'
‡ 'இவ்வாக்கியம் ஏடுகளில் இல்லை.'

முகையவிழ்தார்க் கோதை முசிறியார் கோமான்
அகையிலைவேல் காய்த்தினூர் நாடு.”
(முத்தொள்ளாயிரம். புறத்திரட்டு-எகூஅ பகைப்புலம் பழித்தல்)

என வரும்.

அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ—அங்ஙனம் வென்றுந் தோற்றும் மீண்ட வேந்தர் தம்படையாளர் முன்பு போர்செய்துழிக் கணையும் வேலும் முதலிய படைகளைத் தம்மிடத்தே தடுத்துக்கொண்டழிந்தவர்களைத் தாஞ் சென்றும் பொருள் கொடுத்தும் விஞவியுந் தழுவிக்கோடலுடனே மூற்கூறியவற்றைத் தொகுத்து ;

படைதட் டழிவோர் என்று மாறுக. தழிச்சுதல் தழிஞ்சியாயிற்று; “பொருகணை தழிச்சிய புண்டீர் மார்பின்” என்றாற் போல.

உதாரணம் :—

“தழிச்சிய வாட்புண்ணூர் தம்மில்லந் தோறும்
பழிச்சியசீர்ப் பாசறை வேந்தன்—விழுச்சிறப்பிற்
சொல்லிய சொல்லே மருந்தாகத் தூர்ந்தன
புல்லணலார் வெய்துயிர்க்கும் புண்.”
(பெரும்பொருள் விளக்கம். புறத்திரட்டு-எகூஉ—பாசறை)

என வரும்.

வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
மூன்ஞென் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா*
இருஞ்சேற்றுத் தெருவி னெறிதுளி விதிர்ப்பப்
புடைவீ ழந்துகி லிடவயிற் றழீஇ
வாடோட் கோத்த வன்கட் காளை
சுவன்மிசை யசைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.”
(நெடுநல்வாடை களசு—கஅஅ)

இதுவும் அது.

கழிபெருஞ் சிறப்பின் துறை பதின்மூன்றே—மிகப் பெருஞ் சிறப்பினையுடையவாகிய துறை பதின்மூன்றும் என்ற வாறு.

(பாடம்) * ‘பாய்பரிப் புரவி.’

வெண்ணூர் விளக்கம் முதலிய மூன்றும் ஒழிந்தனவெல்லாம் இருவர்க்கும் பொதுவாய் வருமென்பது தோன்றக் கழிபெருஞ் சிறப்பென்னூர்.

இனி இயங்குபடையரவமெனவே இயங்காத வின்ஞாணெனி முதலியனவுங் கொள்க.

இத்திணைக்கும் பலபொருள் ஒருங்கு வந்து ஒரு துறைப் படுத்தலுங்கொள்க. அவை :—கொற்றவை நிலையுங், குடைநாட்கோளும், வாணுட்கோளும், படையெழுச்சி கண்டோ கூறுவனவும், பகைப்புலத்தார் இகழ்வும், இவைபோல்வன பிறவும் இயங்குபடையரவமாய் அடங்கும்.

நிரைகோடற்கு ஏவிய அரசருள் நிரைகொண்டோர்க்கும் நிரைகொள்ளப்பட்டோர்க்கும் விரைந்து ஏகவேண்டுதலிற் குடைநாட்கோளும் வாணுட்கோளும் இன்றியமையாதன அன்மையின் ஈண்டுக் கூறாராயினர். அவை உழிஞைக்குக் கூறுப, அதற்கு இன்றியமையாமையின்.

இனித் துணைவந்த வேந்தருந் தாமும் பொலிவெய்திய 'பாசறைநிலை'* கூறலும், அவர் வேற்றுப்புலத்திருத்தலின் ஆண்டு வாழ்வோர் பூசலிழைத்து† இரிந்தோடப் புக்கிருந்த நல்லிசை வஞ்சி‡ முதலியனவும் 'வயங்கலெய்திய பெருமை'ப் பாற்படும்.

துணை வேண்டாச் செருவின்றி நாடகவழக்கு; துணை வேண்டுதல் உலகியல்வழக்கு. நீயே புறவினல்ல லன்றியும் பிறவும்" (சசு) என்னும் புறப்பாட்டும் "வள்ளியோர்ப் படர்ந்து" (சஎ) என்னும் புறப்பாட்டும் முதலியன 'துணைவஞ்சி' என் பார்க்கு அவை மேற்செலவின்கண் அடங்காமையிற் பாடாண் டிணை யெனப்படு மென்றுரைக்க.

இனி மேற்செல்வான் மீண்டுவந்து பரிசில் தருமென்றல் வேத்திய லென்றுகலிற் பரிசிலர்க்குக் கொடுத்தலும் படைக்கல முதலியவற்றோடு கூறினர்.

---

* பாசறைநிலை :— "மதிக்குடைக்கீழ் வழிமொழிந்து மன்ன ரெல்லா மறந்துறப்பவும்—பதிபெயரான் மறவேந்தன் பாசறை யிருந்தன்று." என்பது புற-வெ-மாலை-வஞ்சி-உக.

(பாடம்) † 'பூசலிசைந்து.'

‡ 'நல்லிசை வஞ்சி :—'ஒன்னாதார் மூனெகடவிறுத்த-வென்வே லாடவன் விறன் மிகுத்தன்று'' என்பது புற-வெ-மாலை-வஞ்சி-உச.

இனிக் கடிமரந்தடிதலுங், களிறும் மாவுந் துறைப்படிவன வற்றைக் கோறலும், புறஞ்சேரியைச் சுடுதலும் முதலியனவும் அடுத்தூர்ந்தட்ட கொற்றத்தின்பாற்படும். அவை *கருவூ ரிடைச் சேரமான் யானையை யெறிந்தாற் போல்வன.

இனிப் புண்பட்டோரை முன்னர்ச்செய்த படைவலங்கூறி அரசராயினும் உழையராயினும் புகழ்வனபோல்வனவுந் தழிஞ் சிப் பாற்படும். 'இதணே முதுமொழிவஞ்சி'† என்பர். ஆண்டுக் கொடுத்தல்‡ முற்கூறிய கொடையாம். இத்தழிஞ்சியை 'அழியு நர் புறக்கொடை அயில்வா ளோச்சாக்—கழிதறு கண்மை' (புற-வெ-மாலை-வஞ்சி-உ0) யெனின், அது ஒருவன் முங்கிய பெருமைப்பாற்படு மென்றுணர்க.

இச் சூத்திரத்து ஆன் எல்லாம் இடைச்சொல். இது செவ்வெண் உம்மை எண்ணினை இடையிட்டுக்கொண்டது.

இனி ஏனையவற்றிற்கும் ஆன் உருபுகொடுத்து அதற்கேற் பப் பொருள் கூறலும் ஒன்று. (அ)

கூசு. உழிஞை தானே மருதத்துப் புறனே.

இஃது உழிஞைத்திணை அகத்திணையுண் மருதத்திற்குப் புறனு மென்கின்றது.

(இ - ள்.) உழிஞை தானே—உழிஞை யென்று கூறப் பட்ட புறத்திணை ; மருதத்துப் புறனே—மருதமென்று கூறப் பட்ட அகத்திணைக்குப் புறனும் என்றவாறு.

இருபெருவேந்தர் தம்முண் மாறுகொண்டவழி எதிர் செலற் காற்றாது போய் மதிலகத் திருந்த வேந்தன் மதில் பெரும்பான்மையும் மருதத்திடத்த தாதலானும், அம்மதிலை முற்றுவோனும் அந்நிலத்திருத்தலானும், ஒருவன் வாயில் வேண்டத் திறவாது அடைத்திருந்த ஒப்புமையானும், உள் ளிருந்தவனும் புறப்பட விரும்புதலானும், மருதம்போல் இதற் கும பெரும்பொழுது வரைவின்மையானுஞ், சிறுபொழுதினும் விடியற்காலமே போர்செய்தற்குக் காலமாதலானும் உழிஞை

---

* 'தகடூர்' என்றிருத்தல் வேண்டுவது. பிரதிகளிற் 'கருவூர்' என்றே காணப்படுவது.

† 'மூதுமொழிவஞ்சி :— தொன்மரபின் வாட்குடியின்-முன்னோ னது நிலைகிளந்தன்று' என்பது புற-வெ-மாலை-வஞ்சி-கஉ.

‡ "குளிறு முரசம்" (புற-வெ-மாலை-வஞ்சி-கஉ) எனவரும் வெண் பாவில் "தண்ணடை நல்கல் தகும்" என்பது பற்றி ஆண்டுக் கொடுத் தல் என்றார்.

மருதத்திற்குப் புறனியிற்று மருதநிலத்து மதிலாதல் "*அகநாடு புக்கவ ரருப்பம் வௌவி" யெனப் பாட்டிற் கூறியவாற்றானும், "பிணங்குகதிர்க் கழனி நாப்ப ணேமுற்—றுணங்குகலனுழியிற் றோன்று மோரெயின் மன்னன்" (புறம்-கூகூ அ) என்றதனானும் "கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார், நிலைக் கெளிதா நீர தரண் (திருக்குறள்-அரண்-நு) என்றதனானு முணர்க. மற்று எதிர்சென்றூணை வஞ்சிவேந்தன் என்னு மெனின், அஃது இருவருந் தத்தம் எல்லைக்கண் எதிர்சென் றிறுப்பரென்றலின் வஞ்சியாகாதாயிற்று. (கூ)

கூநு. முழுமுத லரண முற்றலுங் கோடலும் அனைநெறி மரபிற் றாகு மென்ப.

இது மேற்கூறிய உழிஞைத்திணையது பொதுவிலக்கணம் உணர்த்துகின்றது.

(இ - ள்.) முழுமுதல் அரணம்—வேற்றுவேந்தன் குலத் துக்கெல்லாம் எஞ்சாது முதலாய் வருகின்ற முழு அரணை, முற்றலும் கோடலும்—சென்ற வேந்தன் வளைத்தலும் இருந்த வேந்தன் கைக்கொண்டு காத்தலுமாகிய; அனைநெறி மரபிற்று ஆகும் என்ப—இரண்டு வழியாகிய இலக்கணத்தை உடைத்து அவ் வுழிஞைத்திணை என்று கூறுவர் புலவர் என்றவாறு.

முழு அரணுவது, மலையுங் காடும் நீருமல்லாத அகநாட்டுட் செய்த அருமதில்†. அது வஞ்சனைபலவும் வாய்த்துத், தோட்டி முண் முதலியன பதித்த காவற்காடுபுறஞ்சூழ்ந் ததனுள்ளே இடங்கர் முதலியன உள்ளுடைத்தாகிய கிடங்கு புறஞ்சூழ்ந்து, யவனர் இயற்றிய பல பொறிகளும் ஏனைய பொறிகளும் பதண மும் ஏப்புழை ஞாயிலும் ஏனைய பிறவும் அமைந்து, எழுவுஞ் சீப்பு முதலியவற்றுல் வழுவின்றமைந்த வாயிற் கோபுரமும் பிறவெந்திரங்களும் பொருந்த இயற்றப்பட்டதாம்.

இனி மலையரணும் நிலவரணுஞ் சென்று சூழ்ந்து நேர்த லில்லா ஆரதர் அமைந்தனவும் இடத்தியற்றிய மதில்போல வடிச்சிலம்பின் அரணமைந்தனவும் மீதிருந்து கணை சொரியும் இடமும் பிறவெந்திரங்களும் அமைந்தனவும் அன்றிக் காட்டர ணுமை நீரரணும் அவ்வாறே வேண்டுவன அமைந்தனவாம். இங்ஙனம் அடைத்திருத்தலும் அவணைச் சூழ்ந்தழித்தலுங் களியூழி தோறும் பிறந்த சிறப்பில்லா அரசியலாதலின் இவை வஞ்சமுடைத்தாயிற்று.

---

* மதுரைக் காஞ்சி—கசஉ.

(பாடம்) † 'செறலருமதில்.' 'சேமவருமதில்.'

சிறப்புடை அரசியலாவன, மடிந்த உள்ளத் தோணியும் மகப்பெறுதோணியும் மயிர்குலைந்தோணியும் அடிபிறக்கிட்டோ ணியும் பெண்பெயரோணியும படையிழந்தோணியும் ஒத்தபடை யெடாதோணியும் பிறவும இத்தன்மையுடையோரையுங் கொல் லாது விடுதலுங் கூறிப், பொருதலும முதலியனவாம்

இனி ஆகுமென்றதனுன் எதிர்சென்ற வேந்தன் பொருது தோற்றுச் சென்று அடைத்திருத்தலும் உழிஞையாம். மற்றை வேந்தன் வளையாது மீளின் அவனடைத்தது உழிஞையாகா தென்றுணர்க. (கo)

சூசு. அதுவே தானு மிருநால் வகைத்தே.

இது முற்கூறிய முற்றலுங் கோடலும் ஒருவன் தொழிலன் றென்பதூஉம் முற்கூறியபோல ஒருதலை இருவர்க்கு முரியவா காது, ஒருவர்க்கு நான்குநான்காக எட்டாமென்பதூஉங் கூறு கின்றது.

(இ - ள்.) அதுவே தானும்—அவ்வுழிஞைத் துறைதானும்; இருநால் வகைத்து—மதில்முற்றிய வேந்தன் கூறு நான்கும் அகத்தோன்கூறு நான்குமென எட்டு வகைத்தது என்றவாறு.

அது மேற்கூறுப. (கக)

சூள. கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்
உள்ளியது முடிகுகும் வேந்தனது சிறப்புந்
தொல்லெயிற் கிவர்தலுந் தோலின் பெருக்கமும்
அகத்தோன் செல்வமு மன்றி மூரணிய
புறத்தோ னணங்கிய பக்கமுந் திறப்பட
வொருதான் மண்டிய குறுமையு முடன்றோர்
வருபகை பேணு ராரெயி லுளப்படச்
சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே.

இது முற்கூறிய நாலிருதுறைக்கும் பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றது.

(இ - ள்.) கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்—பகை வர் நாட்டினைத் தான் கொள்வதற்கு முன்னேயுங் கொண்ட டான் போல வேண்டியோர்க்குக் கொடுத்தலைக்* குறித்த வெற்றியும்;

(பாடம்) * 'குறியிடுதலை.'

தன்னே இகழ்ந்தோரையுந் தான் இகழ்ந்தோரையும் கொள்ளாரென்ப.

உதாரணம்:—

"மாற்றுப் புலந்தோறு மண்டில மாக்கள்செல*
வேற்றுப் புலவேந்தர் வேல்வேந்தர்க்—கேற்ற
படையொலியிற் பாணெலி பல்கின்ரு லொன்னு
ருடையன தாம்பெற் றுவந்து."

(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-எகக-பாசறை)

என வரும்.

"கழிந்தது பொழிந்தென" என்னும் (உ0கூ) புறப்பாட்டினுள்.

"ஒன்னு—ராரெயி லவர்கட் டாகவு நுமதெனப்
பாண்கட னிறுக்கும் வள்ளியோய்."

என்பதும் அது.

"ஆனவீகை யடுபோர்" என்னும் (சஉ) புறப்பாட்டும் அது.

இராமன் இலங்கை கொள்வதன்முன் விடணற்குக் கொடுத்த துறையும் அது.

உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்—அவ்வாறு குறித்த குறிப்பினே முடிக்கின்ற வேந்தனது சிறப்பினே அவன் படைத்தலேவன் முதலியோரும் வேற்று வேந்தன்பால் தூது செல்வோரும் எடுத்துரைத்தலும்;

உதாரணம்:—

"மழுவான் மிளேபோய் மதிலா னகழ்ஞர்ந்
தெழுவாளோ னேற்றுண்ட தெல்லா—மிழுமென
மட்டவிழ் கண்ணி மறவேந்தன் சீற்றத்தீ
விட்டெரிய விட்ட மிகை."

(தகடூர் யாத்திரை, புறத்திரட்டு-எயில் காத்தல்)

என வரும்.

"மலேயகழ்க் குவனே கடறூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனெனத்
தான்முன்னிய துறைபோகலின்."

(பத்து-பட்டின-உஎக-உஎந)

(பாடம்) * 'போர்மண்டி மாக்களங்கொள்.'

என்பதும் அது, மாற்றூர் மதிலும் அகழுஞ் சுட்டிக் கூறினின்.

"அடுகை யாயினும் விடுகை யாயினும்
நீயளந் தறிதிகின் புரைமை வார்கோற்
செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடுந்
தண்ணறு பொருனை வெண்மணற் சிதையக்
கருங்கைக் கொல்ல னரஞ்செய் யவ்வாய்
நெடுங்கை கவியம் பாய்தலி னிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறுங்
கடிமரந் தடியு மோசை தன்னூர்
நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப
வாங்கினி திருந்த வேந்தரு மஞ்சுகின்
சிலைத்தார் மூசசங் கறங்க
மலைத்தனை யென்பது நாணுத்தக வுடைத்தே." (புறம்-நகசு)

இது புறத்துழிஞையோன்கண் தூதன்* அவன்சிறப்பு எடுத்துரைத்தது.

"வயலைக் கொடியின் வாடிய மருங்கு†
லுயவ லூர்திப் பயலைப் பார்ப்பா
னெல்லி வற்று நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே
யேணியுஞ் சீர்ப்பு மாற்றி
மாண்வினை யானெயு மணிகளுந் தனவே."‡ (புறம்-நஅ0நு)

இது தூதருரை கேட்ட அகத்துழிஞையோன் திறங் கண்டோர் கூறியது.

இவை புறம்.

தொல் எயிற்கு இவர்தலும்—ஒருகாலத்தும் அழிவில்லாத மதிலை இற்றைப்பகலுள் அழித்துமென்று கூறி அஃது அழித்தற்கு விருப்பஞ் செய்தலும்;

உதாரணம்:—

"இற்றைப் பகலு ளெயிலகம் புக்கன்றிப்
பொற்றூரான் போனகங்கைக் கொள்ளாஞ்—லெற்றுங்கொ
லாறுத வெம்பசித்தீ யாற வுயிர்பருகி
மாறு மறலி வயிறு."

எனவரும்.

"மறனுடை மறவர்க் கேறவிட னின்றி
செய்யோ டையவி யப்பியெவ் வாயு

(பாடம்) * 'தூதானவன்.' † 'மருங்கின்.' ‡ 'களுந்தனனே.'

மெந்திரப் பறவை* யியற்றின நிலீஇக்
கல்லுங் கவணும் கவிசைப் பொறியும்
வில்லும் கணையும் பலபடப் பரப்பிப்
பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலு
மென்றிவை பலவுஞ் சென்றுசென் றெறியு
மூன்தை மகளிரை யியற்றிப் பின்றை
யெய்பெரும் பகழி வாயிற் றூக்கிச்
சுட்டல் போயின் ரூயினும் வட்டத்†
தீப்பாய் மகளிர் திகழ்நலம் பேர
நோக்குநர் நோக்குநர் நொந்துகை விதிர்க்கூஉ
தாக்கருந் தானே‡ யிரும்பொறை
பூக்கோட் டண்ணுமை கேட்டொறுங் கலுழ்நதே.

இப் பொன்முடியார் பாட்டும் அது.

இதனுற் பூச்சூடுதல் பெற்றும்.

தோலின் பெருக்கமும்—அகழனம் மதின்மேற் சென்றழி மதிலகத்தோர் அப்புமாரி விலக்குதற்குக் கிடுகுங் கேடகமும் மிடையக்§ கொண்டுசேறலும்;

உதாரணம்:—

"இருசுட ரியங்காப்¶ பெருமூ திலங்கை
நெடுந்தோ ளிராமன் கடந்த ஞான்றை
யெண்கிடை மிடைந்த பைங்கட் சேனையிற்
பச்சை போர்த்த பல்புறத் தண்டை
யெச்சார் மருங்கினு மெயிற்புறத் திறுத்தலிற்
கடல்சூ ழுரணம் போன்ற
தடல்சின வேந்தன் முற்றிய வூரே."

(ஆசிரியமாலை, புறத்திரட்டு, அடிஉ-எயில்கோடல்)

என வரும்.

"நின்ற புகழொழிய நில்லா வுயிரோம்பி
யின்றுநாம் வைக லிழிவாகும்—வென்றெரிவிரும்
பாண்டி னிரைதோற் பணியார் பகையரணம்
வேண்டி லெளிதென்ரூன் வேந்து."

(புற-வெ-மாலை-உழிஞை-கஉ)

இதுவும் அது.

அரணத்தோர் $தத்தம் பதணத்து நிற்றலிற் ரூல் கூறிற்றிலர்.

---

* 'ஆண்டலை யடிப்பும்.....சென்றெறி செலவும்' எனச் சிலப் பதிகாரம் அடைக்கலக்காதை உகக—உகச ஆவது வரிகளிற் கூறியன போல்வன.

(பாடம்) † 'விட்ட' ‡ 'தகரூர்ந்த பெருஞ்சேர லிரும்பொறை.
§ 'பரிசையும் பலகையும்.' ¶ 'வழங்கா.' $ 'கருதின.'

இந்நான்கும் முற்றுவோர்க்கே உரியவெனக் கொள்க.

அகதேதான் செல்வமும்—அகத்து உழிஞையோன் குறை வில்லாத பெருஞ்செல்வங் கூறுதலும்;

அவை படை குடி கூழ் அமைச்சு நட்பும் நீர்நிலையும் ஏமப் பொருண் மேம்படு பண்டங்களும் முதலியவாம்.

உதாரணம் —

"பொருசின மாரூப் புலிப்போத் துறையு
மருவரை கண்டார்போ லஞ்சி—யொருவருஞ்
செல்லா மதிலகத்து வீற்றிருந்தான் றோர்வேந்த
னெல்லார்க்கு மெல்லாங் கொடுத்து."

(தகடூர்யாத்திரை, புறத்திரட்டு-அகுள-எயில் காத்தல்)

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் மூரசின் மூவிரு முற்றினு
முழவு ருழாதன நான்குபய னுடைத்தே
யொன்றே. சிறியிலை வெதிரின் நெல்லினை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிகிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றவன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுங்
தாளிற் கொள்ளலிர் வாளிற் ரூரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
வாடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே."

(புறம்-கoக)

என்னும் புறப்பாட்டும் அது.

அன்றி மூரணிய புறத்தோன் அணங்கிய பக்கமும்—மாறு பட்ட புறத்தோனே அகத்தோன் தன் செல்வத்தான் அன்றிப் போர்த்தொழிலான் வருத்திய கூறலும் ;

உதாரணம் :—

"கலையெனப் பாய்ந்த மாவு மலையென
மயங்கம ருழந்த யானையு மியம்படச்
சிலையலைத் துய்ந்த வயவரு மென்றிவை
பலபுறங் கண்டோர் முன்ஞ லினியே

யமர்புறங் கண்ட பசும்புண் வேந்தே
மாக்களி றுதைத்த கணைசேர் பைந்தலை
மூக்கறு துங்கிற் றாற்றயற் கிடப்பக்
களையாக் கழற்காற் கருங்க ணைடவர்
உருகெழு வெகுளியர் செறுத்தன ரார்ப்ப*
மிளைபோ† யின்று நாளை நாமே
யுருமிசை கொண்ட மயிர்க்கட்
டிருமூர சிரங்க வூர்கொள் குவமே." (தகடூர் யாத்திரை)

என வரும்.

இது சேரமான், பொன்முடியாரையும் அரிசில்கிழாரையும் நோக்கித் தன்படைபட்ட தன்மைகூறக் கேட்டோற்கு அவர் கூறியது.

திறப்பட ஒரு தான் மண்டிய ருமையும்—அகத்திருந் தோன் தன்னரணழிவு தோன்றியவழிப் புறத்துப் போர்செய் யுஞ் சிறுமையும் ;

உதாரணம் :—

"வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்துவிடு விழுத்தூ தாகுகாங் கிசைப்ப
நூலரி மாலை சூடிக்‡ காலின்
தமியன் வந்த மூதி லாளன்
அருஞ்சமந் தாங்கி முன்னின் றெறிந்த
வொருகை யிரும்பிணத் தெயிறு மிறையாகத்§
திரிந்த¶ வாய்வா டிருத்தாத்
தனக்கிரிந் தானைப்$ பெயர்புற நகுமே." (புறம்-உஅச)

என வரும்.

உடன்றோர் வருபகை பேணூர் ஆர் எயில் உளப்பட—புறத் தோன் அகத்தோனைமேல் வந்தழி அவன் பகையினைப் போற் றூது அகத்தோன் இகழ்ந்திருத்தற்கு அமைந்த மதிலரண் கூறுதலகப்பட ;

உதாரணம் :—

"மொய்வேற் கையர் முரண்சிறந் தோய்யென
வையக மறிய வலிதலைக் கொண்ட
தெவ்வழி யென்றி வியன்மூர் மார்ப
வெவ்வழி யாயினு மவ்வழித் தோன்றித்
திண்கூ ரெஃகின் வயவர்க் காணிற்

(பாடம்) * 'செறுத்தெழுந் தார்ப்ப.' † 'ஏறுபோய்.'
‡ 'சூட்டி.' § 'பிறையாக.' ¶ 'திருந்த.'
$ 'தனக்கிரிந்த தானை.'

புண்கூர் மெய்யி னுராஅய்ப் பகைவர்
பைந்தலை யுதைத்த மைந்துமலி தடக்கை
யாண்டகை மறவர் மலிந்துபிறர்
நீண்டல் தகாது வெந்தறை யரணே.” (தகடூர் யாத்திரை)

இஃது அகத்தோன் செல்வம் போற்றுதற்கு ஏதுவாகிய முழுவரண் கூறுதலிற் செல்வத்துள் அடங்காதாயிற்று.

இது பொன்முடியார் தகடூரின் தன்மை கூறியது.

சொல்லப்பட்ட நாலிருவகைத்தே——மேலிருநால்வகைத் தென்று சொல்லப்பட்ட இருநான்கு பகுதியதாம் உழிஞைத் திணை என்றவாறு.

மூற்கூறிய தொகையேயன்றி ஈண்டுந் தொகைகூறினார், அந்நாலிரண்டுமேயன்றி அவைபோல்வனவும் நாலிரண்டு துறை தோன்று மென்றற்கு. அவை புறத்தவேந்தன் தன் துணை யாகிய அரசனையாயினுந் தன் படைத்தலைவரையாயினும் ஏவி அகத்து வேந்தற்குத் துணையாகிய அரசரது முழுமுதலரண் முற்றலும் அவன்றன தணைக் காவல் கோடலும் நிகழ்ந்தவிடத் தும் இவ் விருநான்கு வகையும் இருவர்க்கு முளவாதலாம்.

உதாரணம் முற்காட்டியவே வேறுவேறு காட்டினும் அமையும். இத்திணைக்குப் ‘படையியங்கரவு’ (புறத்திணை-அ) முதலியனவும் அதிகாரதத்தாற் கொள்க. அது,

“இலங்குதொடி மருப்பிற் கடாஅம் வார்ந்து
நிலம்புடையூஉ வெழுதரும் வலம்படு குஞ்சர
மெரியவிர்ந் தன்ன விரியுளை சூட்டிக்
கால்கிளர்ந் தன்ன கடுஞ்செல லிவுளி
கோண்முனைக் கொடியினம் விரவா வல்லோ
னேன்மினே கடுக்குந் தோன்றல பெரிதெழுந்
தருவியி னெலிக்கும் வரிபுனை நெடுந்தேர்
கண்வேட் டனவே முரசங் கண்ணுற்றுக்
கதத்தெழு மாதிரங் கல்லென வொலிப்பக்
கறங்கிசை வயிரொடு வலம்புரி யாப்ப
நெடுமதி னிரைஞாயிற்
கடிமிளைக் குண்டு கிடங்கின்
மீப்புடை யாரரண் காப்புடைத் தேஎ
நெஞ்சுக லழிந்து நிலைதளர் பொரீஇ
யொல்லா மன்னர் நடுங்க
நல்ல மன்றவிவண் வீங்கிய செலவே.” (பதிற்றுப்பத்து)

என வரும்.

*இனித் தேவர்க்குரியவாக உழிஞையிற்றுறைகள் பலருங் கூறுவராலெனின், அவை உலகியலாகிய அரசியலாய் எஞ்ஞான்றும் நிகழ்வின்றி ஒருகால் ஒருவர் வேண்டியவாறு செய்வனவாகலிற் †'தமிழ் கூறு நல்லுலகத்'தன அல்லவென மறுக்க. இனி ‡முரசுழிஞை வேண்டுவாருளரெனின் முரசவஞ்சியுங் கோடல் வேண்டுமென மறுக்க.

இனி §ஆரெயிலுழிஞை ¶முழுமுதலரணம் என்றதன்கண் அடங்கும்.

இனி இவற்றின் விகற்பிப்பன வெல்லாம் அத் துறைப்பாற் படுத்திக்கொள்க. (கஉ)

கூஅ. குடையும் வாளு $நாள்கோ ளன்றி
மடையமை யேணிமிசை மயக்கமுங் கடைஇச்
சுற்றம ரொழிய வென்று கைக்கொண்டு
முற்றிய முதிர்வு மன்றி முற்றிய
அகத்தோன் வீழ்ந்த நொச்சியு மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்
நீர்ச்செரு வீழ்ந்த பாசியு மதாஅன்
றூர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்
அகமிசைக் கிவர்ந்தோன் பக்கமும் மிகன்மதிற்
குடுமி கொண்ட மண்ணுமங் கலமும்
வென்ற வாளின் மண்ணே டொன்றத்
தொகைநிலை யென்னுந் துறையொடு தொகைஇ
வகைநான் மூன்றே துறையென மொழிப.

---

* ஐயனரிதனார் உழிஞைப் படலத்துக் கந்தழி, முற்றுழிஞை, காந்தள் என்பனவற்றுள் மணிவண்ணன், அவிர்சடையன், மாத்தடிந்தான் இவர் செயலினைக் கூறியவாற்றுள் உணர்க.

† 'தமிழ் கூறு நல்லுலகத்து' என்பது பாயிரம் (பனம்பாரனார்.)

‡ ஐயனரிதனார் முரசவுழிஞை கூறினார். (புறப்பொருள்-வெ-மாலை-உழிஞை-ச.)

§ புறப்பொருள்-வெ-மாலை-உழிஞை-கக.

¶ தொல்-பொருள்-புறத்-க0.

(பாடம்) $ 'நாள்கோளன்றியும்.'

இஃது எய்தாத தெய்துவித்தது; உழிஞைத்திணையுள் இரு பெரு வேந்தர்க்கும் ஒன்றுய்ச் சென்று உரியவான துறை இதற்கு முன்னர்க் கூறுமையின்.

(இ - ன்.) குடையும் வாளும் நாள்கோள் அன்றி—தன் ஆக்கங்கருதிக் குடிபுறங்காத்து ஓம்பற்கெடுத்த குடை நாட்கொள்ளுதலும் அன்றிப் பிறன்கேடு கருதி வாளுட் கொள் ளுதலும் அன்றி;

புறத்தோன் புதிதாக அகத்தே புகுதற்கு நாள்கொள்ளு மென்க. தன்னுட்டினின்றும் புறப்படுதற்கு நாட்கோடல் உழிஞையெனப் படாதாகலின். அகததோனும் முற்று விடல் வேண்டி மற்றொரு வேந்தன் வருதுழித் தானும் புறத்துப் போதருதற்கு நாட்கொள்ளும். நாள்கொளலாவது நாளும் ஓரையுந் தனக்கேற்பக்கொண்டு செல்வுழி அக்காலத்திற்கு ஓர் இடையூறு தோன்றியவழித் தனக்கு இன்றியமையாதனவற்றை அத்திசை நோக்கி அக்காலத்தே முன்னே செல்லவிடுதல்;

உதாரணம் :—

"பகலெறிப்ப தென்கொலோ பான்மதியென் றஞ்சி
யிகலரணத் துள்ளவ ரெல்லா—மகநிலிய
விண்டஞ்சு மென்ன விரிந்த குடைநாட்கோள்
கண்டஞ்சிச் சிம்பிளித்தார் கண்."

(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு - எயில்கோடல்)

இது புறத்தோன் குடைநாள்கோள்.

"குன்றுயர் திங்கள்போற் கொற்றக் குடையொன்று
நின்றுயர் வாயிற் புறநிவப்ப—வொன்றூர்
விளங்குருவப் பல்குடை விண்மீன்போற் றோன்றித்
துளங்கினவே தோற்றந் தொலைந்து."

(தகடூர் யாத்திரை-புறத்திரட்டு-எயில்காத்தல்)

இஃது அகத்தோன் குடை நாட்கோள்.

"தொழுது விழாக்குறைக்குத் தொல்கடவுட் பேணி
யழுது விழாக்கொள்வ ரன்றே—முழுதளிப்போன்
வாளுட்கோள் கேட்ட மடந்தையர் தம்மகிழ்நர்
நீளுட்கோ ளென்று நினைந்து."

(பெரும் பொருள்விளக்கம் - புறத்திரட்டு-எயில்கோடல்)

இது புறத்தோன் வாளுட்கோள்.

"முற்றரண மென்னு முகிலுருமுப் போற்றோன்றக்
கொற்றவன் கொற்றவா ளுட்கொண்டான்—புற்றிழிந்த

நாகக் குழாம்போ னடுங்கின வென்ஞங்கொல்
வேகக் குழாக்களிற்று வேந்து.”
(பெரும் பொருள்விளக்கம்-புறத்திரட்டு - எயில்கோடல்)

இஃது அகத்தோன் வாணுட்கோள்.

மடையமை ஏணிமிசை மயக்கமும்—மீதிடு பலகையோடும் மடித்துச் செய்யப்பட்ட ஏணிமிசைகின்று புறத்தோரும் அகத்தோரும் போர்செய்தலும் ;

உதாரணம் :—

“சேணுயர் ஞாயிற் றிணிதோளா னேற்றவு
மேணி தவிரப்பாய்ந் தேறவும்—பாணியாப்
புள்ளிற் பரந்து புகல்வேட்டார் போர்த்தொழிலோர்
கொள்ளற் கரிய குறும்பு.”

இது புறத்தோர் ஏணிமயக்கம்.

“இடையெழுவிற் போர்மிலங்கும் யானையோர் போலு
மடையமை யேணி மயக்கிற்—படையமைந்த
ஞாயில் பிணம்பிறக்கித் தூர்த்தார் நகரோர்க்கு
வாயி லெவனுங்கொல் மற்று.”

இஃது அகத்தோர் ஏணிமயக்கம்.

இனி இரண்டும் ஒருங்கு வருதலுங் கொள்க.

உதாரணம் :—

“பொருவரு மூதூரிற் போர்வேட் டொருவர்க்
கொருவ ருடன்றெழுந்த காலை—யிருவரு
மண்ணெடு சார்த்தி மதில்சார்த் தியயேணி
விண்ணெடு சார்த்தி விடும்.”
(பெரும்பொருள் விளக்கம் - புறத்திரட்டு - எயில்கோடல்)

என வரும்.

கடைஇச் சுற்று அமர் ஒழிய வென்று கைக்கொண்டு முற்றிய முதிர்வும்—புறத்தோன் தன்படையைச்செலுத்திப் புறமதிலிற் செய்யும் போரின்றாக, அகத்தோன்படையை வென்று அப் புறமதிலைக் கைக்கொண்டு உண்மதிலை வளைத்த விளை முதிர்ச்சியும், அகத்தோன் தன்படையைச் செலுத்திப் புறமதிலிற்செய்யும் போரின்றாகப், புறத்தோன் படையைத் தள்ளி வென்று அப்புறமதிலைக் கைக்கொண்டு வளைத்த விளைமுதிர்ச்சியும் ;

உதாரணம் :—

"கடல்பரந்து மேருச்சூழ் காலம்போற் சென்றோர்
கொடிமதில் காத்தோரைக் கொல்லக்—கடலெதிர்
தோன்றுப் புலிபோ லரண்மறவர் தொக்கடைந்தார்
மான்றேரான் மூதூர் வரைப்பு."

இது புறத்தோன் முற்றிய முதிர்வு.

"ஊர்சூழ் புரிசை யுடன்சூழ் படைமாயக்
கார்சூழ்குன் றன்ன கடைகடந்து—போர்மறவர்
மேகமே போலெயில் சூழ்ந்தார் விலங்கல்போன்
ரூகஞ்சேர் தோள்கொட்டி யார்த்து."

இஃது அகத்தோன் முற்றிய முதிர்வு.

அன்றி முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்—புற மதிலிலன்றி உண்மதிற்கட் புறத்தோனூல் முற்றப்பட்ட அகத் தோன் விரும்பின மதில்காவலும், அவன் காத்தலின்றித் தான் சூழப்பட்ட இடத்திருந்த புறத்தோன் போர்செய்தலே விரும்பிய உள்ளத்தைக் காத்தலும் ;

நொச்சியாவது காவல் ; இதற்கு நொச்சி ஆண்டுச் சூடுத லுங் கொள்க. அது மதிலேக்காத்தலும் உள்ளத்தைக்காத்தலு மென இருவர்க்கு மாயிற்று. இக்கருத்தானே "நொச்சி வேலித் தித்த னுறந்தை" (அகம் - கஉஉ.) என்றார் சான்றோரும்.

உதாரணம் :—

"இருகன்றி னொன்றிழந்த வீற்றுப்போற் சீறி
யொருதன் பதிசுற் றெழியப்—புரிசையின்
வேற்றரணங் காத்தான் விறல்வெய்யோன் வெஞ்சினத்துக்
கூற்றரணம் புக்கதுபோற் கொன்று."

இஃது அகத்துழிஞையோன் எயிற்காத்த நொச்சி.

"தாய்வாங்கு கின்ற மகனைத் தனக்கென்று
பேய்வாங்கி யன்னதோர் பெற்றித்தே—வாய்வாங்கு
வெல்படை வேந்தன் விரும்பாதா ரூர்முற்றிக்
கொல்படை வீட்டுங் குறிப்பு."
(பெரும் பொருள்விளக்கம் - புறத்திரட்டு - எயில்கோடல்)

இது புறத்தோன் மனங்காத்த நொச்சி.

"மணிதுணர்ந் தன்ன மாக்குர லெஞ்சிப்
போதுவிரி பன்மர னுள்ளுஞ் சிறந்த
காதனன்மா மீமற் றிசினே

கடியுடை வியனகர்க் காண்வரப் பொலிந்த
தொடியணி *மகளிர் கல்குலுங் கிடத்திக்
காப்புடைப் புரிசை புக்குமா றழித்தலி
னூர்ப்புறங் கொடாஅ நெடுந்தகை
டீடுகெழு சென்னிக் கிழமையு நினதே." (புறம் - உஅஉ.)

இது சூடின னொச்சியைப் புகழ்ந்தது.

மற்று அதன் புறத்தோன் வீழ்ந்த புதுமையானும்—இடை மதிலைக் காக்கின்ற அகத்துழிஞையோன் நின்ற இடத்தினைப் பின்னை அம்மதிலின் புறத்திருந்தோன் விரும்பிக்கொண்ட புதுக்கோளானும், அங்ஙனம் புறத்தோன் கொண்ட அவ்விடத்தினைப் பின்னை யகத்தோன் தான் விரும்பிக்கொண்ட புதுக்கோளும்;

பிற்பட்ட துறைக்குப் புறத்தோன் அதனையென மாற்றிப் பொருள் கொள்க. முன்னர்ப் புறமதிலின் போர்போல இடை மதிலினும் போர் கூறினர்.

உதாரணம்:—

"வெஞ்சின வேந்த னெயில்கோள் விரும்பியக்கா
லஞ்சி யொதுங்காதார் யார்யாவர்—மஞ்சுசூழ்
வான்றோய் புரிசை பொறியு மடங்கின
வான்றோ ரடக்கம்போ லாங்கு."
(பெரும் பொருள்விளக்கம்-புறத்திரட்டு - எயில்கோடல்)

இது புறத்தோன் வீழ்ந்த புதுமை.

"தாக்கற்குப் பேருந் தகர்போன் மதிலகத்
தாக்க முடையோ ரொதுங்கியுங்—கார்க்க
ணிடிபுறப் பட்டாங் கெதிரேற்றூர் மாற்றூர
ரடிபிறக் கீடு மரிது."
(தகடூர்யாத்திரை, புறத்திரட்டு - எயில்கோடல்)

இஃது அகத்தோன் வீழ்ந்த புதுமை.

நீர்ச் செரு வீழ்ந்த பாசியும்—கொண்ட †மதிலகத்தை விட்டுப் போகாத புறத்தோரும் அவரைக் கழியத் தாக்கல் ஆற்றாத அகத்தோரும் எயிற்புறத்து அகழின் இருகரையும் பற்றி நீரிடைப் படர்ந்த நீர்ப்பாசி போன்று அக்கிடங்கின்கட் போரை விரும்பின பாசியும்;

பாசிபோல் நீங்காமல் நிற்றலிற் பாசி யென்றார்.

(பாடம்) * 'தொடையுடை.' † 'நிலத்தை.'

உதாரணம் :—

"பொலஞ்செய் கருவிப் பொறையுமிப் பண்ணுய்
நிலந்திடர் பட்டதின் ரூயிற்—கலங்கமர்மேல்
வேத்தமர் செய்யும் விரகென்னும் வேன்மறவர்
நீத்துநீர்ப் பாய்புலிபோ னின்று."

இஃது இருவர்க்கும் ஒக்கும்.

வேறு வேறு வருமெனினுங் காண்க.

அதாஅன்று ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்—அம்மதிற் புறத்தன்றி ஊரகத்துப் போரை விரும்பிய அப்பாசி மறனும் ;

பாசியென்றூர், நீரிற் பாசிபோல இருவரும் ஒதுங்கியும் தூர்ந்தும் பொருதலின்.

உதாரணம் :—

"மறநாட்டுந் தங்கணவர் மைந்தறியு மாதர்
பிறநாட்டுப் பெண்டிர்க்கு நொந்தா—றெறிதொறும்போய்
நீர்ச்செறி பாசிபோ னீங்காது தங்கோமா
னூர்ச்செரு வுற்றூரைக் கண்டு."

இது புறத்தோன் பாசிமறம்.

"தாந்தங் கடைதொறுஞ் சாய்ப்பவு மேல்வீழ்ந்த
வேந்தன் படைப்பிணத்து வீழ்தலா—லுங்கு
மதுக்கமழுந் தார்மன்னர்க் குள்ளூர் மறுகிற்
பதுக்கையும் வேண்டாதாம் பற்று."

இஃது அகத்தோன் *பாசிமறம்.

அகமிசைக்கு† இவர்ந்தோன் பக்கமும்—புறஞ்சேரிமதிலும் ஊரமர்மதிலும் அல்லாத சோயிற் புரிசைகளின்மேலும் ஏறி நின்று போர்செய்தற்குப் பரந்துசென்றோன் கூறுபாடும் ;

உதாரணம் :—

"வாயிற் கிடங்கொடுக்கி மாற்றினூர் தம்பிணத்தாற்
கோயிற் கிடங்கொடுக்கிக் கோண்மறவர்—ஞாயிற்‡
கொடுமுடிமேற் குப்புற்றூர் கோவேந்தர்க் காக
நெடுமுடிதாங் கோட னினைந்து."

இது புறத்தோன் அகமிசைக்கிவர்தல்.

"புற்றுறை பாம்பின் விடநோக்கம் போலுக்கிக்
கொற்றுறை வாய்த்த கொலைவேலோர்—கொற்றவ

(பாடம்) * 'அகத்தோர்.' † 'அகன்மிசைக்கு.' ‡ 'சாயின்.'

ஞரெயின்மேற் ரேன்றிஞ ரந்தரத்துக் கூடாத
போரெயின்மேல் வாழுவுணர் *போன்று.”

இஃது அகத்தோன் அகமிசைக்கிவர்தல்.

இகன் மதிற் குடுமி கொண்ட மண்ணும் மங்கலமும்—அங்ஙனம் இகல்செய்த மதிற்கண் ஒருவன் ஒருவனைக் கொன்று அவன் முடிக்கலம் முதலியன கொண்டு, பட்ட வேந்தன் பெயராலே முடிபுனைந்து சூடும் மங்கலமும்;

உதாரணம் :—

“மழுவாளான் மன்னர் மருங்கறுத்த மால்போற்
பொழிலேழுங் கைக்கொண்ட போழ்தி—னெழின்முடி
சூடாச்சீர்க் கொற்றவனுஞ் சூடினன் கோடியர்க்கே
கூடார்நா டெல்லாங் கொடுத்து.”†

இது புறத்தோன் மண்ணும் மங்கலம்.

“வென்றி பெறவந்த ‡வேந்தை யிகன்மதில்வாய்க்
கொன்று குடுமி கொளக்கண்டு—தன்பால்
விருந்தினர் வந்தார்க்கு விண்விருந்து செய்தான்
பெருந்தகையென் ரூர்த்தார் பீறர்.”

இஃது அகத்தோன் மண்ணும் மங்கலம்.

வென்ற வாளின் மண்ணெடு ஒன்ற—இருபெருவேந்தருள் ஒருவன் ஒருவனை வென்றுழி அங்ஙனம் வென்ற கொற்றவாளினைக் கொற்றவைமேனி முதித்து ராட்டுதலோடே கூட;

உதாரணம் :—

“செற்றவர் செங்குருதி யாடற்கு வாள்சேர்ந்த
கொற்றவை மற்றிவையுங் கொள்ளுங்கொன்—முற்றியோன்
பூவொடு சாந்தும் புகையவி நெய்ந்நறைத்
தேவொடு செய்தான் சிறப்பு.”

இது புறத்தோன் வாண்மங்கலம்.

“வருபெரு வேந்தற்கு வான்கொடுத்து §மற்றை
யொருபெரு வேந்தற்கூ ரீந்தா—ளொருவன்வா¶
ளிவ்வுலகிற் பெற்ற விகற்கலியேற் றூர்தியா
னவ்வுலகிற் போய்ப்பெறுங்கொ லாங்கு.”

இஃது அகத்தோன் வாண்மங்கலம்.

ஒன்றெனை$ முடித்தலான் இருவர் வேற்குஞ் சிறுபான்மை மண்ணுதல் கொள்க.

(பாடம்) * ‘வாளவுணர்.’ † ‘குறித்து.’ ‡ ‘படவந்த.’
§ ‘ஒன்றின.’ ¶ ‘வான்கொடுத்த.’ $ ‘ஒருவன்பால்.’

"பிறர்வேல் போலா தாகி யிவ்வூர்
மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே
யிரும்புற* நீறு† மாடிக் கலந்திடைக்‡
குரம்பைக் கூரைக் கிடக்கினுங் கிடக்கு
மங்கல மகளிரொடு மாலை சூட்டி
யின்குர லிகும்பை§ யாழொடு தழுமப்¶
தெண்ணீர்ப் படுவினுந் தெருவினுந் திரிந்து
மண்முழு தழுங்கச் செல்லினுஞ் செல்லுமாங்$
கிருங்கடற் றானை வேந்தர்
பெருங்களிற் றுமுகத்தினுஞ் செலவா னுதே."

(புறம்-கூஉ)

என வரும்.

தொகைநிலை என்னுந் துறையொடு தொகைஇ—அவ் வாண்மங்கலம் நிகழ்ந்த பின்னர் இருவருள் ஒருவர் பரந்துபட்ட படைக்கடற் கெல்லாஞ் சிறப்புச் செய்வான் ஒருங்கு வரு கெனத் தொகுத்தல் என்னுந துறையோடு முற் கூறியவற்றைத் தொகுத்து;

உதாரணம் :—

"கதிர்சுருக்கி யப்புறம்போங் காய்கதிர்போல் வேந்தை
யெதிர்சுருக்கி யேந்தெயில்பா** ழாக்கிப்—பதியிற்
பெயர்வான் மொருதத படைத்துகளாற் பின்னு
முயர்வான் குறித்த துலகு."

இது புறத்தோன் தொகைநிலை.

"தலைவன் மதில்சூழ்ந்த தார்வேந்தர்க் கொன்று
வலைவன் வலைசுருக்கி யாங்கு—நிலையிருந்த
தண்டத் தலைவர் தலைக்கூட வீற்றிருந்தா
னுண்டற்ற சோற்று மொழிந்து."

இஃது அகத்தோன் தொகைநிலை.

வகைநால் மூன்றே துறை என மொழிப—அங்ஙனம் ஒன்று இருவகைப்பட வந்து பன்னிரண்டேயாம் உழிஞைத் துறை என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

மூற்றலையுங் கோடலையும் இருவகையென்றார். துறையென் றதனுன் அவற்றின் பகுதியாய் வருவனவும் அத்துறைப்பாற்

(பாடம்) * 'இரும்புக.' † 'நீரு.' ‡ 'கலத்திடை.'
§ 'இரும்பை.' ¶ 'யர்ழெழுதித் தியம்ப'
$ 'மண்முழு திரங்கச் செல்லுங் கண்ணுறின்.'
** 'ஏற்றெயில்.'

படுத்துக.* உழையரை அழைத்து நாட்கொள்க என்றலும் அவர் அரசர்க்கு உரைப்பனவுங் குடைச்சிறப்புக் கூறுவனவும் முரசு முதலியன நாட்கோடலும் பிறவுங் குடைநாட் கோடலாய் அடங்கும். இது வாணுட் கோடற்கும் ஒக்கும். பொருவார்க்கும் அல்லுழிப் போவார்க்குங் குடை பொதுவாகலின் முற்கூறி மேல் வருகின்ற போர்த்தொழிற்கே சிறத்தலின் வாளினைப் பிற் கூறினர். இவை போர்தொழிற்கு ஏதுவாகலின் முற்கூறினர். எயிலுட் பொருதலும்† புட்போல உட்பாய்தலும் ஆண்டுப் பட்டோர் துறக்கம் புகுதலும் பிறவும் பாசிமறத்தின்பாற் படும். ஏறுந் தோட்டியுங் கதவும் முதலியன கோடல் அகமிசைக்கு இவர்ந்தோன் பக்கத்தின்பாற்படும். படிவம்‡ முதலியன கூறல் குடிமிகொண்ட மண்ணு மங்கலத்தின்பாற் படும். புறத்தோன் இருப்பிற், றொகைநிலைப்பாற்படும். 'துறை யென மொழிப' என எல்லாவற்றையுந் துறையென்று கூறுகின்றவர் தொகைநிலை; யென்னுந் துறையெனத் தொகைநிலையை விதந்தோதினர்; அது பலவாகாது இரண்டு துறைப் பட்டு வேறு வேறு துறையாம் என்றற்கு. அது தும்பைத் தொகைநிலைபோல் இருபெருவேந்தரும் உடன்வீழ்தலுஞ் சிறுபான்மை உளதாமென் றுணர்க. எதிர்செல்லா தடைத்திருந்தோன் புறப்பட்டுப்படுதல் சிறுபான்மையாதலின், இதனையும் வேறோர் துறையாக்கிப் பதின்மூன் றென்னாயினர்.

உதாரணம் :—

"அறத்துறைபோ லாரெயில் வேட்ட வரசர்
மறத்துறையு மின்னுது மன்னே—நிறைச்சுடர்க
ளொன்றி வரப்பகல்வா யொக்க வொளிதேய்ந்தாங்
கின்றிவர் வீழ்ந்தா ரெதிர்ந்து."

எனவரும்.

இது வேறுவேறு வருதலுஞ் சிறுபான்மை. இன்னுந் துறை யென்றதனானே புறத்தோன் கவடிவித்துதலுந் தொகைநிலைப்பாற்பட்டுழி அகத்தோர்க்குச் செல்லாமை கொள்க.

அது, "மதியோர்வெண்குடை" என்னும் (கூகூ) புறப் பாட்டினுள்.

"வெள்ளே வரகுங் கொள்ளும் வித்தும்
வைக லுழவ வாழிய பெரிதெனச்
சென்றியா னின்றென னுகை."

எனவரும்.

(பாடம்) * 'படும்.' † 'போருதலும்.' ‡ 'படிமம்.'

ஒன்ற வென்றதனுன் அகத்தோன் வாண்மண்ணுதல் சிறு பான்மை என்று கொள்க.

இனி மகண்மறுத்தோன் மதிலே முற்றுதன் மகட்பாற்காஞ் சிக்கண் அடங்கும். யானையுங் குதிரையும் மதிற்போர்க்குச் சிறந்தன அன்மையிற் கொள்ளாராயினர். ஈரடியிகந்து பிறக் கடியிடுதலுங் கேடு என்று உணர்க. (கஙூ)

ஊகூ. தும்பை தானே நெய்தலது புறனே.

இது தும்பைத்திணை அகத்திணையுள் இன்னதற்குப் புறனு மென்கின்றது. இதவும் *மைந்துபொருளாகப் பொருதலின் † மண்ணிடை யீடாகப் பொரும் வஞ்சிக்கும் ‡மதிலிடையீடாகப் பொரும் உழிஞைக்கும் பிற்கூறினர்.

(இ - ள்.) தும்பைதானே நெய்தலது புறனே—தும் பையென்னும் புறத்திணை நெய்தலெனப்பட்ட அகத்திணைக்குப் புறனும் என்றவாறு.

தும்பை யென்பது சூடும் பூவினைப் பெற்ற பெயர். நெய் தற்குரிய பெருமணலுலகம்போலக் காடுமலையுங் கழனியு மல் லாதகளரும் மணலும்பொருகளமாகவேண்டுதலானும், பெரும் பொழுதுவரை வின்மையானும், எற்பாடு போர்த்தொழில் மூடி யுங் காலமாதலானும், இரக்கமுந் தலைமகட்கே பெரும்பான்மை உளதாயவாறுபோலக் கணவனை இழந்தார்க்கன்றி வீரர்க்கு இரக்கமின்மையானும், அவ்வீரக்குறிப்பின் அருள்பற்றி ஒருவர் ஒருவரை நோக்கிப் போரின்கண் இரங்குப வாகலானும், ஒரு வரும் ஒழியாமற் பட்டொழிக்கண்டோர் இரங்குப வாகலானும், பிற காரணங்களானும் நெய்தற்குத் தும்பை புறனுயிற்று. (கச)

எo. மைந்து பொருளாக வந்த வேந்தனைச் சென்றுதலை யழிக்குஞ் சிறப்பிற் றென்ப.

இஃது அத்தும்பைக்குப் பொதுவிலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) மைந்து பொருளாக வந்த வேந்தனை—தனது வலியினை உலகம் மீக்கூறுதலே தனக்குப் பெறுபொருளாகக் கருதி மேற்சென்ற வேந்தனை; சென்று தலையழிக்குஞ் சிறப்பிற் றென்ப—அங்ஙனம் மாற்றுவேந்தனும் அவன் கருதிய மைந்தே தான் பெறுபொருளாக எதிர்சென்று அவனைத் தலைமை

* தொல்-பொ-புறத்-கஙி. † தொ-பொ-புறத்-எ உரை.
‡ ஷை-ஷை-ஷை-க உரை.

தீர்க்குஞ் சிறப்பினையுடைத்து அத்தும்பைத்திணை என்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு.

வரல் செலவாதல் "செலவினும் வரவினும்" (தொல்-சொல்-கிளவி-உஅ) என்பதன் பொதுவிதியாற் கொள்க. மைந்து பொருளாக என்பதனை வந்த என்பதற்குஞ் சென்று என்பதற்குங் கூட்டுக;* அஃது இருவர்க்கும் ஒத்தலின். எனவே இருவரும் ஒருகளத்தே பொருவாராயிற்று.

இது வேந்தனைத் தலைமையாற் கூறினுமேனும் ஏனையோர்க்குங் கொள்க; அவரும் அதற்குரியராதலின்.

இதனைச் சிறப்பிற் றென்றதனுன் அறத்திற் றிரிந்து வஞ்சினையாற் கொல்வனவுந் தேவாற் பெற்ற வரங்களாற் கொல்வனவுங் கடையூழிக்கட்டோன்றிய ஆதலிற் சிறப்பிலவாம். அவையுஞ் சிறுபான்மை கொள்க (கஙி)

எக. கணையும் வேலுந் துணையுற மொய்த்தலிற்
சென்ற வுயிரி னின்ற யாக்கை
யிருநிலந் தீண்டா வருநிலை வகையோ
டிருபாற் பட்ட வொருசிறப் பின்றே.

இது தும்பைக்காவதோர் இலக்கணங் கூறுதலின் எய்திய தன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ - ள்.) கணையும் வேலுந் துணையுற மொய்த்தலின்—பலரும் ஒருவனை அணுகிப் பொருதற்கஞ்சி அகல நின்று அம்பானெய்தும் வேல்கொண் டெறிந்தும் போர் செய்ய, அவ்வம்பும் வேலும் ஒன்றோடொன்று துணையாகத் தீண்டுமாறு செறிதலின்;† சென்ற வுயிரின் நின்ற யாக்கை—சிறிதொழியத் தேய்ந்த வுயிராலே தளர்கா நிலைமையை யுடம்பு; இருநிலந் தீண்டா யாக்கை அருநிலை வகையோடு—வாளுந் திகிரியு முதலியவற்றால் ஏறுண்ட தலையேயாயினும் உடலேயாயினும் பெரிய நிலத்தைத் தீண்டாதெழுந்து ஆடும் உடம்பினது பெறற்கரும் நிலையுடைத்தாகிய கூறுபாட்டோடே கூடி; இருபாற்பட்ட ஒரு சிறப்பின்று—இரண்டு கூறுபட்ட ஒரு சிறப்பிலக்கணத்தையுடைத்து முற்கூறிய தும்பைத்திணை என்றவாறு.

எனவே, முற்கூறிய மைந்துபொருளாகப் பொருதலினும் நின்ற யாக்கை சிறத்தலும் இருநிலந் தீண்டா யாகை அதனிற் சிறத்தலுங் கூறினார். இது திணைச்சிறப்புக் கூறியது.

(பாடம்) * 'கூறுக.' † 'செறுதலின்.'

மொய்த்தலி னென்றது, யாக்கை யற்றுடவேண்டுதலிற் கணையும் வேலுமன்றி வாள்முதலியன ஏதுவாகக்கொள்க. பிற்கூறியதற்கு அட்டை அற்றுழியும் ஊருமாறுபோல் அலகினிற அற்றுழியும் உட்டம் பாடுதலின் அட்டையாட லெனவும் இதணைக் கூறுப.

இனி மேற்றுறை கூறுகின்றது மைந்துபொருளாக வந்த துஞ் சென்றதுமாகிய பொது இலக்கணத்திற்கே என்றுணர்க. நிரை கொள்ளப்பட்டோன் பொருகளங் குறித்துப் போர்செய் தலும் அவன் களங்குறித்தது பொருது நிரைகொண்டானுங் களங்குறித்துப் போர்செய்தலும் வெட்சிப்புறத்துத் தும்பை யாம். வஞ்சியுள்ளும் விழுப்புண்பட்ட வீரரை நோக்கி வேந்தற் குப் பொருமை நிகழ்ந்து துறக்கம் வேண்டுழி நிகழ்ந்த தும்பை யும் வஞ்சிப்புறத்துத் தும்பையாம். முற்றப்பட்டோணை முற்று விடுத்தற்கு வேறோர் வேந்தன் வந்துழி, அவன் புறம்போந்து களங்குறித்துப் போர்செய்யக் கருதுதலும், அவன் களங்குறித் துழிப் புறத்தோனும் களங்குறித்துப் போர்செய்யக் கருது தலும் உழிஞைப்புறத்துத் தும்பையாம். இவையெல்லாம் மண்ணசையும் அரண்கோடலுமன்றி மைந்துபொருளாகச் சென்று துறக்கம்வேட்டுப் பொருந் தும்பைச்சிறப்புக் கூறிற்று.

மேற்காட்டுந் துறைகளெல்லாம் இச்சூத்திரத்துக்கூறிய இரண்டற்கு மன்றி மைந்துபொருளாயதற்கேயா மென்றுணர்க.

உதாரணம் :—

"நெடுவேல் பாய்ந்த மார்பின்
மடல்வன் போந்தையி னிற்கு மோர்க்கே." (புறம்-உகஎ)

"எய்போற் கிடந்தானென் னேறு."

(புறம் பொருள்-வெ-கஎசு)

என வருவன கணையும் வேலும் மொய்த்துநின்றன.

கிடந்தானென்புழி நிலந் தீண்டாவகையின் நின்ற யாகைக் யாயிற்று.

"வான்றுறக்கம் வேட்டெழுந்தார் வாண்மறவ ரென்பதற்குச்
சான்றுரைப்ப போன்றன தங்குறை—மான்றேர்மேல்
வேந்து தலைபனிப்ப விட்ட வுயிர்விடாப்
பாய்ந்தன மேன்மேற் பல."

(பெரும்பொருள் விளக்கம் - புறத்திரட்டு - அமர்)

இது வஞ்சிப்புறத்துத் தும்பையாய் இருநிலந் தீண்டா வகை.

"பருதிவேன் மன்னர் பலர்காணப் பற்ரூர்
குருதிவாள் கூறிரண்டு செய்ய—வொருதுணி
கண்ணிமையா முன்னங் கடிமதிலுள் வீழ்ந்ததே
மண்ணதே மண்ணதே யென்று."

இஃது உழிஞைப்புறத்துத் தும்பையாம் இருதிலந் தீண்டா வகை.

இது திணைக்கெல்லாம் பொது அன்மையிற் றிணையெனவும் படாது; திணைக்கே சிறப்பிலக்கணமாதலிற் றுறையெனவும் படாது; ஆயினுந் துறைப்பொருள் நிகழ்ந்து கழிந்தபிற் கூறியதாமென் றுணர்க. (கசு)

எஉ. தானை யானை குதிரை யென்ற
நோனு ருட்கு மூவகை நிலையும்
வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி யொருவன்
தான்மீண் டெறிந்த தார்நிலை யன்றியும்
இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்
ஒருவ னெருவனை யுடைபடை புக்குக்
கூழை தாங்கிய வெருமையும் படையறுத்துப்
பாழி கொள்ளு மேமத் தானுங்
களிறெறிந் தெதிர்ந்தோர் பாடுங் களிற்றொடு
பட்ட வேந்தனை யட்ட வேந்தன்
வாளோ ராடு மமலையும் வாள்வாய்த்
திருபெரு வேந்தர் தாமுஞ் சுற்றமும்
ஒருவரு மொழியாத் தொகைநிலைக் கண்ணுஞ்
செருவகத் திறைவன் வீழ்ந்தெனச் சினைஇ
ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்
பல்படை யொருவற் குடைதலின் மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலு முளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே.

இது மைந்துபொருளாகிய தமபைத்திணைக்குத் துறை இனைத்தென்கின்றது.

(இ - ள்.) தானை யானை குதிரை என்ற நோனுர் உட்கும் மூவகை நிலையுட்—தானைநிலை யானைநிலை குதிரைநிலை என்று

சொல்லப்பட்ட போர்செய்தற்கு ஆற்ற அரசர்* தலைபனிக்கும் மூன்று கூறுபாட்டின்கண்ணும்;

நோனுர் உட்குவ ரெனவே நோன்றூர் உட்காது நிற்பாரா யிற்று. அவர் போர்கண்டு சிறப்புச்செய்யுந் தேவரும் பிணங் கின் பெண்டிரும் படையாளர் தாயரும் அவர் மனைவியருங் கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியருங் கண்டோரும் பிறரு மென்று கொள்க.

துறக்கம்புகு வேட்கையுடைமையிற் காலாளே முற்கூறி, அதன் பின்னர் மதத்தாற் கதஞ்சிறந்து தானும் போர்செய்யும் யானையைக் கூறி, மதஞ்சிறவாமையிற் கதஞ்சிறவாத குதிரையை அதன்பிற் கூறினர். குதிரையானன்றித் தேர் தானே செல் லாமையிற் றேர்க்கு மறமின்றென்று அது கூறாராயினர்.

நிலை யென்றது வகை யென்றதனுன் அம்மூன்று நிலையுந் தாமே மறஞ்சிறப்பப் பொருதுவீழ்தலும், ஆசனேவலிற் றானை பொருது வீழ்தலும், யானையுங் குதிரையும் ஊர்ந்தாரேவலிற் பொருதலும், படையாளர் ஒருவரொருவர் நிலைகூறலும் அவர்க்கு உதவலு மென இப்பகுதியெல்லாங் கொள்க.

இனி இவைதாமே கருவுகொண்டு பொருவுழித்† தானை மறம் யானைமறங் குதிரைமற மென்று வெவ்வேறு பெயர்பெறு மென்று கொள்க.‡

இனித் தாயர் கூறுவன மூதின் முல்லையாம்; மனைவியர் கூறுவன இல்லாண் முல்லையாம்; கண்டோர் கூறுவன வல் லாண்முல்லையாம்; பாணர் கூறுவன பாண்பாட்டாம் என்க.

இவை கூறி ஏனைக கூத்தர்முதலியோர் கூறுவன கூறூர் மன ளெஞ்சிழந்து போவாரு முளர். அவை ஒரோர் துறையாக முதனூற்கண் வழங்காமையினுனும் அவற்றிற்கு வரையறை யின்மையானும் இவர் தானைநிலை யென அடக்கினர். இச்சிறப் பான் இதனை முற்கூறினர். அத் தானை சூடிய பூக்கூறலும், அதனெழுச்சியும், அரவமும், அதற்கரசன் செய்யுஞ் சிறப்பும், அதனைக் கண்டு இடைநின்றூர் போரை விலக்கலும், அவர் அதற்குடம்படாமைப் போர்துணிதலும், அத்தானையுள் ஒன்றற்கிரங்கலும், அதற்குத் தலைவரை வகுத்தலும், வேந்தன் சுற்றத்தாரையுந் தானைவந்த அரசரையும் ஏத்துவனவும்,

(பாடம்) * 'ஆற்றதவரை.' † 'பெருவழி.'
‡ புறப்பொருள் வெண்பாமாலை, தும்பைப்படலம் கூ, கூ, எ பார்க்க.

தும்போர் ஏனைநாட்டென்றலும், இருபெருவேந்தரும் இன்ன வாறு பொருதுமென்று கையெறிதலும் போல்வன வெல்லாம் இத்துறைப்பாற் படும்.

உதாரணம் :—

"கார்கருதி நின்றதிருங் கௌவை விழுப்பணையான்
சோர்குருதி சூழா நிலனனைப்பப்—போர்கருதித்
துப்புடைத் தும்பை மலைந்தான் றுகளறுசீர்
வெப்புடைத் தானையெம் வேந்து."

(புற-வெ-மாலை-தும்பை-க)

இது பூக் கூறியது.

இதனைத் திணைப்பாட்டு மென்ப.

"வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையுங்
கொல்களிறு மாவுங் கொடுத்தளித்தான்—பல்புரவி
நன்மணித் திண்டேர் நயவார் தலைபணிப்பப்
பன்மணிப் பூணன் படைக்கு." (புற-வெ-மாலை தும்பை-உ)

இது சிறப்புச்செய்தது.

"வயிர்மேல் வளைநரல வைவேலும் வாளுஞ்
செயிர்மேற் கனல்விழிப்பச் சீறி—யுயிர்மேற்
பலகழியு மேனும் பரிமான்றேர் மன்னர்க்
குலகழியு மோர்த்துச்* செயின்." (புற-வெ-மாலை-தும்பை-ச)

இது விலக்கவும் போர் துணிந்தது.

"மின்னுர் கினஞ்சொரிவேன் மீளிக் கடற்றானை
யொன்னுர் நடுங்க வுலாய்நிமிரி—னென்னுங்கொ
லாழித்தேர் வெல்புரவி யண்ணன் மதயானைப்
பாழித்தோண் மன்னர் படை." (புற-வெ-மாலை-தும்பை-டு)

இஃது இரண்டனுள் ஒன்றற்கு இரங்கியது.

"கங்கை சிறுவனும் காய்கதிரோன் செம்மலு
மிங்கிருவர் வேண்டா வெனவெண்ணிக்—கங்கை
சிறுவன் படைக்காவல் பூண்டான் செயிர்த்தார்
மறுவந்தார் தத்த மனம்."

இது பெருந்தேவனார் பாட்டு; குருக்கள் தமக்குப் படைத் தலைவரை வகுத்தது.

இனிப் போர்த்தொழிலாற் முனைநிலை வருமாறு :—

"சூழாக்களிற் றரசர் குறித்தெழு கொலைக்களம்
விழாக்களம் போல மெய்ம்மலி யுவகையர்
ஆண்மை யுள்ளங் கேண்மையிற் றுரத்தலின்

(பாடம்) * 'ஓர்ந்து.'

அழுந்துபடப் புல்லி விழுந்துகளம் படுநரும்
நீர்ப்பெயற் பிறந்த மொக்குள் போலத்
தாக்கிய விசையிற் சிதர்ந்துநிலம் படுநரும்
தகருந் தகருந் தாக்கிய தாக்கின்
முகமுகஞ் சிதர முட்டு வோரும்
மூட்டியின் முறைமுறை குத்து வோரும்
கட்டிய கையொடு கால்தட் குநருங்
கிட்டினர் கையறத் தொட்டுநிற்* போருஞ்
சுட்டிய பெயரற விட்டழிப் போருஞ்†
சக்கரம் போலச் சங்குவிட் டெறிநருஞ்
சிலைப்புடை முரசிற் றலைப்புடைக் குநரும்
மல்லிற் பிடித்தும் வில்லி னெற்றியும்
ஊக்கியும் உரப்பியு நோக்கியு நுவன்றும்
போக்கியும் புழுங்கியு நாக்கடை கவ்வியும்
எயிறுடன் றிருகியுங் கயிறுபல வீசியும்
இன்ன செய்தியின் முனைமயங் குநரும்
பிறப்பும் பெருமையுஞ் சிறப்புஞ் செய்கையும்
அரசறி பெருமையு முரைசெல் லாண்மையும்
உடையோ ராகிய படைகொண் மாக்கள்
சென்றுபுகு முலக மொன்றே யாதலின்
ஒன்றுபடு மனத்தொடு கொன்றுகொன் றுவப்பச்
செஞ்சோற்று விலையுந் தீர்ந்ததம் மினையர்
தம்பிணந் தழீஇ நொந்துகலுழ்ந் திரங்கவும்
புதுவது வந்த மகளிர்க்கு
வதுவை சூட்டிய வான்படர்ந் தோரே.”

(புறத்திரட்டு-அமர்-கo)

எனவும்,

“சென்ற வுயிர்போலத் தோன்ரு துடல்சிதைந்தோ
னின்ற வடிபெயரா னின்றவை—மன்ற
லரமகளிர் மங்கலத்திற் காங்காங்கு வைத்த
மரவடியே போன்றன வந்து.”

எனவும் வரும்.

“வெண்குடை மதிய மேனிலாத் திகழ்தரக்
கண்கூ டிறுத்த‡ கடன்மருள் பாசறைக்
குமரிப் படைதழீஇக்§ கூற்றுவினே யாடவர்
தமர்பிற ரறியா வமர்¶ மயங கழுவத்
திறையும் பெயருந் தோற்றி னுமரு
ணுண்முறை தபுத்தீர் வம்மி னீங்கெனப்
போர்மலைந் தொருசிறை நிற்ப$ யாவரும்
அரவுமிழ் மணியிற் குறுகார்
நிறைதார் மார்பினின் கேள்வனைப்** பிறரே.” (புறம்-உகச)

(பாடம்) * ‘கையிற் றொட்டா.’
† ‘பெயரை யிட்டிழைப்போரும்.’ ‡ ‘டியாத்த.’
§ ‘தழீஇய.’ ¶ அறியாதமர்.’ $ ‘ஒருதிறநிற்ப.’
** ‘நிரைகாழ் மாலையெங் கேள்வனே.’

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்." (குறள்-படைச்-ச)

"நறுவிரை துறந்த நரைவெண் கூந்த
லிரங்கா முன்ன திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் சிறுஅன்
குடப்பாற் சில்லுறை போலப்
படைக்குநோ யெல்லாந் தானு யினனே." (புறம்-உஎசு)

"தற்கொள் பெருவிறல் வேந்துவப்பத் தானவற்
கொற்கத் துதவினு னுகுமாற்* பிற்பிற்
பலர்புகழ் செல்வந் தருமாற்† பலர்தொழ
வானக வாழ்க்கையு‡ மீயுமா லன்னதோர்
மேன்மை யிழப்பப் பழிவருவ செய்பவோ
தானேயும் போகு முயிர்க்கு."
(தகடூர்யாத்திரை, புறத்திரட்டு, படைச்செருக்கு-கூ)

என வரும்.

"கோட்டங் கண்ணியுங் கொடுந்திரை யாடையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலு
மொத்தன்று மாதோ விவற்கே செற்றிய
திணிநிலை யலறக் கூழை போழ்ந்துதன்
வடிமா ணெஃகங் கடிமுகத் தேந்தி
யோம்புமி னோம்புமி னிவணென வோம்பாது
தொடர்கொள யானையிற் குடர்கா றட்பக்
கன்றமர் கறவை மான
முன்சமத் தெதிர்ந்ததன் றொழற்கு வருமே." (புறம்-உஎடு)

இஃது உதவியது.

இனி யானைநிலைக்குங் குதிரைநிலைக்குந் துறைப்பகுதியாய் வருவனவுங் கொள்க. அஃது அரசர்மேலும் படைத்தலைவர் மேலும் ஏனையோர்மேலும் யானை சேறலுங் களிற்றின்மேலுந் தேரின்மேலுங் குதிரைசேறலுந் தன்மேலிருந்து பட்டோருடலை மோந்து நிற்றலும் பிறவுமாம்.

உதாரணம்:—

"மாயத்தாற் றுக்கு மலையு மலையும்போற்
காயத்தா றஞ்சாக் களிற்றொடும்போய்ச்—சாயுந்
தொலைவறியா வாடவருந் தோன்றினர் வான்மேன்
மலையுறையுந் தெய்வம்போல் வந்து."
(பெரும் பொருள்விளக்கம். புறத்திரட்டு-யானை மறம்-கூ)

(பாடம்) * 'துவந்தானு மாகுமால்.' † 'செம்ம லுடைத்தால்.,
‡ 'வானுறை வாழ்க்கை.'

"கையது கையோ டொருதுணி *கோட்டது
மொய்யிலை வேன்மன்னர் மூடித்தலை—பைய
வுயர்பொய்கை நீராட்டிச் செல்லுமே யெங்கோன்
வயவெம்போர் மாறன் களிறு."

இவை யாணைநிலை.

"பல்லுருவக் காலின் பரியுருவத் தாக்கித்தன்
ரெல்லை யுருவிழந்த தோற்றம்போ—லெல்லா
மொருகணத்துத் தாக்கி யுருவிழந்த பாய்மாப்
பொருகளத்து வீழ்ந்து புரண்டு."

"மாவா ராதே மாவா ராதே
எல்லார் மாவும் வந்தன வெம்மிற்
புல்லூழ்க் குடுமிப் புதல்வற் றந்த
செல்வ னூரு மாவா ராதே
யிருபேர் யாற்ற வொருபெருங் கூடல்
விலங்கிடு †பெருமரம் போல
வுலந்தன்று கொல்லவன் மலைந்த மாவே." (புறம்-உஎந)

"பருத்தி வேலிச் சீறூர் மன்ன
னுழுத்தந் ருண்ட வோய்நடைப் புரவி
கடன்மண்டு தோணியிற் படைமுகம் போழ
நெய்ம்மிதி யருந்திய கொய்சுவ லெருத்திற்
றண்ணடை மன்னர் ‡தாருடைப் புரவி
யணங்குடை முருகன் கோட்டத்துக்
§கலந்தொடா மகளிரி னிகழ்ந்துநின் றவ்வே." (புறம்-உகஉ)

இவை குதிரைநிலை.

"நிலம்பிறக் கிடுவது போல" என்னும் (உஅஉ) புறப்பாட்டும் அது.

இவை தனித்துவாராது தொடர்நிலைச் செய்யுட்கண் வரும். அவை தகடூர்யாத்திரையினும் பாரதத்தினுங் காண்க. புறநானூற்றுள் தனித்து வருவனவுங்¶ கொள்க.

வேண்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன் தான் மீண்டெறிந்த தார்நிலை—தன்படை போர்செய்கின்றமை கண்டு தானும் படையாளர்க்கு முன்னேசென்று வேலாற் போர்செய்து வென்றிமிகுகின்ற வேந்தனை மாற்றோர் சூழ்ந்தழி அதுகண்டு வேறோரிடத்தே பொருகின்ற தன் ரூனைத்தலைவனையினும் தனக்குத் துணைவந்த அரசனையினும் போரைக் கைவிட்டுவந்து வேந்தனோடு பொருகின்றுரை எறிந்த தார்நிலைக்கண்ணும்;

(பாடம்) * 'கொண்டது.' † 'பெரும் பாம்பு.'
‡ 'தாருடைக் கலிமா.' § 'கலங்கொடா.'
¶ 'காண்க.'

தாரென்பது முந்துற்றுப் பொரும்படையாதலின் இது தார்நிலையாயிற்று.

உதாரணம் :—

"வெய்யோ னெழாமுன்னம் வீங்கிருள் கையகலச்
செய்யோ ளொளிதிகழுஞ் செம்மற்றே—கையகன்று*
போர்தாங்கு மன்னன்மூன் புக்குப் புகழ்வெய்யோன்
ஞர்தாகி நின்ற தகை."
(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-தானமறம்—ச)

எனவரும்.

"நிரப்பாது கொடுக்கும்" என்னும் (கஅ0) புறப்பாட்டினுள் "இறையுறு விழுமந் தாங்கி" என்பதும் அது.

"இவர்க்கித் துண்மதி கள்ளே சினப்போ
ரிணக்களிற்றி யானே யியறேர்க் குரிசி
னுந்தை தந்தைக் கிவன்றந்தை தந்தை
யெடுத்தெறி ஞாட்பி னிமையான் றச்ச
னெடுத்தெறி குறட்டி னின்றுமாய்ந் தனனே
மறப்புகழ் நிறைந்த மைந்திஞ் ஞிவனு
முறைப்புழி யோலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே." (புறம்-உகo)

இதுவும் அதன்பாற்படும்.

அன்றியும் இருவர் தலைவர் தபுதிப்பக்கமும்—இருபெரு வேந்தர் தானைத்தலைவருந் தத்தம் வேந்தர்க்காகித் தார்தாங்கு தலே யன்றி அத்தலைவரிருவருந் தம்மிற்பொருது வீழ்தற் கண்ணும்;

பக்கமென்றதனுன் அவரு ளொருவரொருவர் வீழ்தலுங் கொள்க.

உதாரணம் :—

"ஆதி சான்ற மேதகு வேட்கையி
ஞளுங் கோளு மயங்கிய ஞாட்பின்
மதியமு ஞாயிறும் பொருவன போல
வொருத்தி வேட்கையி னுடன்வயிற்† றிருவர்
செருக்கூர் தண்டி னெருக்கின ரெனவு
மரவணி கொடியோற் கிளையோன் சிறுவனும்
பெருவிறல் வீமற் கிளையோன் சிறுவனு
முடன்றமர் தொடங்கிய காலை யடங்கா

(பாடம்) * 'கையின்று.' † 'உடல்வயிற்.'

ருடங்குவருஞ் சிற்றத்துக் கைப்படை வழங்கி
யிழந்தவை கொடாஅர் கிடந்தன வாங்கித்
தேர்மிசைத் தமியர்† தோன்றூர் பார்மிசை
நின்றுசுடர் நோக்கியு மொன்றுபடத் திருகியுந்
தும்பியடி பிணங்கு மண்ணிற் றோற்றமொடு
கொடிகொடி பிணங்கி வீழ்வன போல
வொருவயின் வீழ்ந்தடு காலை
யிருபெரு வேந்தரும் பெரிதுவந் தனரே."

இப் பாரதப்பாட்டினுள் அவ்வாறுதல் கண்டுகொள்க.

இனித் தலைவரேயன்றிப் பிறரும் அவ்வாறு பொரினும் அதன்பாற் படுத்துக.

உடைபடை ஒருவன் புக்கு ஒருவனைக் கூழைதாங்கிய எருமையும்—தனது உடைந்த படைக்கண்ணே ஒரு படைத் தலைவன் சென்று நின்று அங்ஙனங் கெடுத்த மாற்றுவேந்தன் படைத்தலைவனை அவன் எதிர்கொண்டுநின்ற பின்னணியோடே தாங்கின கடாப்போலச் சிறக்கணித்து நிற்கு நிலைமைக் கண்ணும்;

ஒருவனொருவனைத் தாங்கின எருமையென முடிக்க.

உதாரணம்:—

"சிற்றங் கனற்றச் சிறக்கணித்துச் செல்லுங்கா
லேற்றெருமை போன்ற னிகல்வெய்யோன்—மாற்றான்
படைவரவு காத்துத்தன்‡ பல்படையைப்§ பின்காத்
திடைவருங்காற் பின்வருவார் யார்."

என வரும்.

படையறுத்துப் பாழிகொள்ளும் ஏமத்தானும்—கைப் படையைப்போக்கி மெய்யாற் போர்செய்யும் மயக்கத்தின் கண்ணும்;

பாழி, வலி; இஃது ஆகுபெயர்.

உதாரணம்:—

"கொல்லேறு பாய்ந்தழிந்த¶ கோடுபோற் றண்டிறுத்து
மல்லேறு தோள்வீமன் மாமனைப்—புல்லிக்கொண்
டாரூத போர்மலைந் தாங்கரசர் கண்டார்த்தா
ரேருட லாய தென."

என்னும் பாரதப்பாட்டுக் கொள்க.

(பாடம்) * 'ருட்குறும்.' † 'தழீஇயர்.' ‡ 'பார்த்து.'
§ 'பல்படையைக் காத்துய்த்.' ¶ 'பாய்ந்திழிந்த.'

"நீலக் கச்சைப் பூவா ராடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேறுரந் தினியே
தன்னுந் துரக்குவன் போலு மொன்னல
ரெஃகுடை வலத்த மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பி னூக்கி மெய்க்கொண் டனனே." (புறம்-உஎச)

என்பதும் அது.

களிறெறிந் தெதிர்ந்தோர் பாடும் — மாற்றுவேந்தன் ஊர்ந்துவந்த களிற்றைக் கையெறிந்தானுங் கடுக்கொண்டெதிர்ந் தானும் விலக்கி அவனையும் அக்களிற்றையும் போர்செய்தோர் பெருமைக் கண்ணும் ;

உதாரணம் :—

"இடியா னிருண்முகிலு மேறுண்ணு மென்னும்
படியாற் பகடொன்று மீட்டு—வடிவே
லெறிந்தார்த்தார் மள்ள ரிமையாத கண்கொண்
டறிந்தார்த்தார் வாளொரு மாங்கு."

என வரும்.

"வானவர் போரிற் றானவர்க் கடந்த
மான வேந்தன் யானையிற் றனதுயர்
பல்படை நெரிவ தொல்லான் வீமன்
பிறக்கிடங் கொடானதன் முகத்தெறிந் தார்த்துத்
தானெதிர் மலைந்த காலை யாங்கதன்
கோடிழக் கிழிந்த மார்பொடு நிலஞ்சேர்ந்து
போர்க்கோள் வளாகந் தேர்த்துக ளனைத்தினு*
மிடைகொள லின்றிப் புடைபெயர்ந்து புரண்டு
வருந்தா வுள்ளமொடு பெயர்ந்தனன்
பெருந்தகை யாண்மையொடு பெயர்த்தலோ வரிதே."

இப் பாரதப்பாட்டும் இதன் பாற்படும்.

இது களிறெறிந்தான் பெருமை கூறுதலின் யானைநிலையுள் அடங்காதாயிற்று.

களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும்—அங்ஙனம் நின்று களிற்றொடுபட்ட வேந்தனைக் கொன்ற வேந்தன் படையாளர் வியந்து பட்டோனைச் சூழ்ந்துநின்று ஆடுந் திரட்சிக்கண்ணும் ;

அமலுதல் நெருங்குதலாதலின், அமலை யென்பதூஉம் அப்பொருட்டாயிற்று ;

(பாடம்) * 'தோய்ந்துக ளனைத்தினும்.'

உதாரணம் :—

" ஆளுங் குரிசி லுவகைக் களவென்னும்
கேளன்றிக் கொன்ருரே கேளாகி—வான்வீசி
யாடிளு ரார்த்தா ரடிதோய்ந்த மண்வாங்கிச்
சூடினூர் வீழ்ந்தானைச் சூழ்ந்து."

என வரும்.

" நான்மருப் பில்லாக் கானவில் யானை
வீமன் வீழ்த்திய தடன்றெதிர்ச் தாங்கு
மாமுது மதுரை மணிகிறப் பாகனே
டாடமர் தொலைத்த லாற்ருன் றேரொடு
மைத்துனன் பணியின் வலமுறை வந்து
கைத்தலங் கதிர்முடி யேற்றி நிற்றங்
திறைஞ்சின னேவர்க் கிடையோ னதுகண்டு
மறந்தீர் மன்னனு மிறைஞ்சித் தனது
வேழம் விலக்கி வினைமடிந் திருப்பச்
சூர்மருங் கறுத்த நெடுவேள் போல
மலைபுரை யானையுந் தலைவனுங் கவிழிய*
வாளுகு களத்து வாள்பல வீசி
யொன்ளு மன்னரு மாடினர் துவன்றி
யின்ளு வின்ப மெய்தித்
தன்னமர் கேளிரு முன்னர்த் தனரே."

இப் பாரதப்பாட்டும் அது.

வாள்வாய்த்து இருபெருவேந்தர் தாமுஞ் சுற்றமும் ஒரு வரும் ஒழியாத் தொகைகிலைக் கண்ணும்—இருபெருவேந்தர் தாமும் அவர்க்குத் துணையாகிய வேந்தருந் தானைத்தலைவருந் தானையும் வாட்டொழின்முற்றி ஒருவரும் ஒழியாமற் களத்து வீழ்ந்த தொகைகிலைக் கண்ணும் ;

உதாரணம்:—

" வருதார் தாங்கி யமர்மிகல் யாவது
பொருதாண் டொழிந்த மைந்தர்புண் டொட்டுக்
குருதிச் செங்கைக் கூந்த நீட்டி
நிறங்கிள ருருவிற் பேஎய்ப் பெண்டி
ரெடுத்தெறி யனந்தர்ப் பறைச்சீர் தூங்கப்
பருந்தருந் துற்ற தானையொடு செருமுனிந்து
அறத்தின் மண்டிய மறப்போர்† வேந்தர்
தாமாய்ந் தனரே குடைதுளங் கினவே
யுரைசால் சிறப்பின் மூசைசொழிந் தனவே
பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞில
மிடங்கெட வீண்டிய வியன்கட் பாசறைக்
களங்கொளற் குரியோ ரின்றித் தெறுவர

(பாடம்) * 'கழிய.' † 'விதற்போர்.'

வுடன்வீழ்ந் தன்ரு லமரே பெண்டிரும்
பாசடகு* மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந்த தனரே
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி லேரு மாற்ற
வரும்பெற லுலக நிறைய
விருந்துபெற் றனராற் பொலிகநும் புகழே.” (புறம்-சுஉ)

எனவரும்.

செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினேஇ ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்—போரிடத்தே தன்வேந்தன் வஞ்சத் தாற் பட்டானெகச் சினங்கொண்ட மனத்தனுய்ப் பெரும்படைத் தலைவன் தலைமயங்கிப் பொருத நல்ல புகழைப் பெற்ற நிலை மைக்கண்ணும் ;

அது குருகுலவேந்தனைக் குறங்கறுத்தஞான்று இரவு ஊரெறிந்து பாஞ்சாலரையும் பஞ்சவர்மக்க ளவரையுங் கொன்று வென்றி கொண்ட அச்சுவத்தாமாவின் போர்த்தொழில் போல்வன. தன்னரசன் அறப்போரிடத்துப் படாது வஞ்சனை யாற் படுதலின், அவனுக்குச் சினஞ்சிறந்தது இச்சிறப்பில்லாத தும்பையும் இக்கலியூழிக்கா மென்பது ‘சென்றுதலையழிக்குஞ் சிறப்பிற்று’ (தொல்-பொ-புற-கஙு) என்புழிக் கூறிற்று.

உதாரணம் :—

“மறங்கெழு† வேந்தன் குறங்கறுத் திட்டபி
னருமறை யாசா னெருமகன் வெகுண்டு
பாண்டவர் வேர்முதல் கீண்டெறி சீற்றமோ
டிரவு ரறியாது துவரை வேந்தொடு
மாதுலன் றன்னை வாயிலி னிகீஇக்
காவல் பூட்டி யூர்ப்புறக்‡ காவயி
னேவகை வேந்தரோ டரும்பெறற் றம்பியைக்
கைவயிற் கொண்டு களியோன் காத்தலிற்
நெருக்குடம் பிரீஇத் துறக்க மெய்திய
தந்தையைத் தலையற வெறிந்தவ னிவனெனத்
துஞ்சிடத் தெழீஇக் குஞ்சி பற்றி
வடாது பாஞ்சால னெடுமுதற் புதல்வனைக்
கழுத்தெழத் திருகிப் பறித்த காலைக்
கோயிற் கம்பலை யூர்மூழ துணர்த்தலிற்
றம்பியர் மூவரு மைம்பான் மருகரு
மூடன்சமர் தொடங்கி யொருங்கு களத்தவிய
வாள்வாய்த்துப் பெயர்ந்த காலை யாள்வினைக்
கின்னே ரினிப்பிற ரில்லென வொராங்குத்

(பாடம்) * ‘பாகடகு.’ † ‘திறங்கெழு.’ ‡ ‘ஊர்ப்புக் காவயின்.’

தன்முதற் ருதையொடு கோன்முத* லமரர்
வியந்தனர் நயந்த விசும்பி
னியன்றலே யுலகமு மறிந்ததா லதுவே."

இப் பாரதப்பாட்டினுள் அவ்வாருதல் காண்க.

ஒருவற்குப் பல் படை உடைதலின் மற்றவன் ஒள்வாள் வீசிய நூழிலும்—அங்ஙனம் நல்லிசை எய்திய ஒருவற்கு வஞ்சத்தாற் கொன்ற வேந்தன் பல்படை புறங்கொடுத்தலின்† அவரைக் கோறல் புரிதல் அறனன்றென்று‡ கருதாது அவன் வாளாற் றடிந்து கொன்று குவித்தற்கண்ணும்;

வஞ்சத்தாற் கொன்ற வேந்தனைக் கொன்றமைபற்றித் தனக்குக் கெட்டோரையும் அடங்கக் கோறற்கு உரியானை நல்லிசை மூன்னர்ப பெற்ருனென்ருர். நூழிலாவது, கொன்று குவித்தல்.

"வள்ளே நீக்கி வயமீன் முகந்து
கொள்ளே சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழி லாட்டி."

(பத்து-மதுரை, உருடு-உருள)

என்ருற்போல.

உதாரணம்:—

"அறத்திற் பிறழ வரசெறியுந் தானை
மறத்திற் புறங்கண்டு மாருன்—குறைத்தடுக்கிச்
செல்லுங்காற் காட்டுத்தீச் சென்ருங்குத் தோன்றுமே
பல்படையார் பட்ட படி."

எனவரும்.

புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே—பொருந்தித் தோன்றும் பன்னிரு துறையினையுடைத்துத் தும்பைத்திணை என்றவாறு.

இன்னும் உளப்படப் புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்து எனவுங் கூட்டிப் பன்னிரண்டன்கண்ணும் முற் கூறிய வெட்சித்திணை முதலியவற்ருன் நிகழுந் தும்பையும் வந்துகூடப் பின் அவற்றிற்கு முரியவாய்ப் பொருந்தித்தோன்றும் பன்னிரு துறையினையுடைத்துத் தும்பைத்திணை என்றும் பொருள்கொள்க. பொருள் இடமாகத் துறை இடத்தியல் பொருளாங்கால் ஏனைத் திணைக்கட் கூறினுற்போல ஒன்று

(பாடம்) * 'கொண்முதல்.' † 'புறக்கொடுத்தலின்.'
‡ 'புரிதல் நன்றன்று.'

நிகழ்ந்தபின் ஒன்றுநிகழாது இரண்டு படைக்கும் பொருந்த ஒரு காலத்து இத்திணை நிகழுமென்றற்குப் 'புல்லித்தோன்றும்' என்றார். பல்பெருங் காதமாகிய நெடுநெறியிடைத் துணிந்த இடத்தையும்* துறையெனப் பலதுறை யென்பதுபோல இச் சூத்திரத்துத் துறையைத் தொகுதியுடன் அறுதிகாட்டிற்றென் றுணர்க. இவ்விலக்கணம் மேல்வருகின்ற திணைகட்கும் ஒக்கும். (கள)

எந. வாகை தானே பாலையது புறனே.

இவ் வாகைத்திணை பாலையெனப்பட்ட அகத்திணைக்குப் புறனுமென்கின்றது.

(இ - ள்.) வாகை தானே—இனிக் கூறுதுகின்ற† புறத் திணையுள் வாகையெனப்பட்டது தானே; பாலையது புறனே—பாலையென்னும் அகத்திணைக்குப் புறனும் என்றவாறு

என்னை? பாலைக்குப் புணர்ச்சியின் நீங்கி இல்லறநிகழ்த் திப் புகழெய்துதற்குப் பிரியுமாறுபோலச், சுற்றத்தொடர்ச்சி யின் நீங்கி அறப்போர்செய்து துறக்கம்பெறுங் கருத்தினுற் சேறலானும், வாளினுந் தாளினும் நிறையினும் பொறையினும் வென்றியெய்துவோரும் மண்ணோரைநீங்கிச் சேறலானும் பிரி வுள தாயிற்று.

பாலை தனக்கென ஓர் நிலமின்றி நால்வகைநிலத்தும் நிகழு மாறு போல, முற்கூறிய புறத்திணை நான்கும் இடமாக வாகைத் திணை நிகழ்தலிற் றனக்கு நிலமின்றாயிற்று. "நாளு நாளு மாள் வினை யழுங்க, வில்லிருந்து மகிழ்வோர்க் கில்லையாற் புகழ்"‡ என ஆள்வினைச் சிறப்புக்கூறிப் பிரியுமாறு போல இதற்குத் துறக்கமே எய்தும ஆள்வினைச் சிறப்புக் கூறலுங்கொள்க. பாலை பெருவரவிற்றாய்த் தொகைகளுள் வருமாறுபோல வாகை யும் பெருவரவிற்றாய் வருதலுங் கொள்க. (கஅ)

எசு. தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப் பாகுபட மிகுதிப் படுத்த லென்ப.

இஃது அவ் வாகைத்திணைக்குப் பொதுவிலக்கணங் கூறு கின்றது.

(பாடம்) * 'நெடுநெறியிடத்துள் நிகழ்ந்த இடத்தவும்.'
† 'கருதுகின்ற.'
‡ இந்நூல் கo-ஆம் பக்கத்திற் காண்க.

(இ - ள்.) தாவில் கொள்கைத் தத்தங் கூற்றை—வலியும் வருத்தமுமின்றி இயல்பாகிய ஒழுக்கத்தானே நான்கு வருணத்தோரும் அறிவருந் தாபதர் முதலியோருந் தம்முடைய கூறுபாடுகளே ; பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப—இருவகைப்பட மிகுதிப்படுத்தலென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

இருவகையாவன, தன்னைத்தானே மிகுதிப்படுத்தலும் பிறர் மீக்கூறுபடுத்தலுமாம். இனி இருவகைக்குள் உறழ்ச்சியாற் பெற்ற வென்றியை வாகையெனவும் இயலபாகப் பெற்ற வென்றியை முல்லையெனவுங் கூறுவர். படுதலென்னது படுத்தலெனப் பிறவினையாற் கூறினர், அவர் தம்மினுறழாதவழியும் ஒருவன் அவரை உறழ்ந்து உயர்ந்தோன் இவனென்றுரைத்தலும் வாகையென்றற்கு; ஒன்றனோடு ஒப்பு ஒரீஇக் காணுது மாணிக்கத்தினை நன்றென்றுற்போல உலகமுழுதும் அறியும் உயர்ச்சியுடைமையும் அது. தாவில் கொள்கையெனவே இரணியனைப்போல வலியானும் வருத்தத்தானுங் கூறுவித்துக் கோடல் வாகையன்றுயிற்று. (கசு)

எடு. அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபி னரசர் பக்கமும்
இருமூன்று மரபி னேனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியி னுற்றிய வறிவன் றேயமும்
நாலிரு வழக்கிற் ருபதப் பக்கமும்
பாலறி மரபிற் பொருநர் கண்ணும்
அனைநிலை வகையோ டாங்கெழு வகையிற்
ருகைநிலை பெற்ற தென்மனார் புலவர்.

இது வாகைத்திணைக்குப் பொதுவிலக்கணங் கூறினர், இன்னும் அதற்கேயாவதோர் சிறப்பிலக்கணம் பொதுவகையாற் கூறுகின்றது ; மேற்கூறி வருகின்ருற்போலத் துணைப்படுத்திக் கூறுதற்கேலாத பரப்புடைச் செய்கை* பலவற்றையுந் தொகுத்து ஒரோவொன்ருக்கி எழுவகைப்படுத்திக் கூறுதலின்.

(இ - ள்.) அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்—ஆறு கூற்றினுட்பட்ட பார்ப்பியற் கூறும் ;

(பாடம்) * 'யாப்புடைச் செய்கை.'

ஆறுபார்ப்பியலென்னுது வகையென்றதனுன் அவை தலை இடை கடையென ஒன்று மும்மூன்றுய்ப் பதினெட்டாம் என்று கொள்க; அவை ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் கொடுத்தல் கோடல் என ஆறும். இருக்கும் எசுரும் சாமமும் இவை தலையாய ஒத்து ; இவை வேள்வி முதலியவற்றை விதித்தலின் இலக்கணமுமாய், வியாகரணத்தான் ஆராயப்படுதலின்* இலக்கியமுமாயின. அதர்வமும் ஆறங்கமுந் தரும நூலும் இடையாய ஒத்து ; அதர்வம் வேள்விமுதலிய ஒழுக்கங்கூறுது பெரும்பான்மையும் உயிர்கட்கு ஆக்கமேயன்றிக் கேடுஞ்சூழும் மந்திரங்களும் பயிறலின் அவற்றோடு கூறப்படாதாயிற்று.

ஆறங்கமாவன, உலகியற்சொல்லே ஒழித்து வைதிகச் சொல்லே ஆராயும் நிருத்தமும் அவ்விரண்டையும் உடனராயும் ஐந்திரத்தொடக்கத்து வியாகரணமும், போதாயனீயம் பாரத்து வாசம் ஆபத்தம்பம் ஆத்திரேயம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் வாராகம் முதலிய கணிதங்களும், எழுத்தாராய்ச்சியாகிய பிரமமும், செய்யுளிலக்கணமாகிய சந்தமுமாம்.

தருமநூலாவன, உலகியல்பற்றி வரும் மனுமுதலிய பதினெட்டும் ; இவை வேதத்திற்கு அங்கமானமையின் வேறுயின.

இனி இதிகாச புராணமும் வேதத்திற்கு மாறுபடுவாரை மறுக்கும் உறழ்ச்சிநூலும் அவரவர் அதற்கு மாறுபடக்கூறும் நூல்களும் கடையாய ஒத்து. எழுத்துஞ் சொல்லும் பொருளும் ஆராய்ந்து இம்மைப்பயன் தருதலின்† அகத்தியந் தொல்காப்பியம் முதலிய தமிழ்நூல்களும் இடையாய ஒத்தாமென்றுணர்க ; இவையெல்லாம் இலக்கணம். இராமாயணமும் பாரதமும் போல்வன இலக்கியம்.

இனித் தமிழ்ச்செய்யுட்கண்ணும் இறையனூரும் அகத்தியனூரும் மார்க்கண்டேயனூரும் வான்மீகனூருங் கவுதமனூரும் போல்வார் செய்தன தலையும், இடைச்சங்கத்தார் செய்தன இடையுங், கடைச்சங்கத்தார் செய்தன கடையுமாகக்கொள்க.

இங்ஙனம் ஒத்தினையும் மூன்றுகப் பகுத்தது, அவற்றின் சிறப்புஞ் சிறப்பின்மையும் அறிவித்தற்கு. இவற்றுள் தருக்கமுங் கணிதமும் வேளாளர்க்கும் உரித்தாம்.

இனி ஓதுவிப்பனவும் இவையேயாகலின் அவைக்கும் இப்பகுதி மூன்றும் ஒக்கும். ஓதுவித்தலாவது கொள்வோனுணர்வு

(பாடம்) * 'வியாகரணத்தாற் காரியப்படுதலின்.'
† 'இனிமை பயின்று வருதலின்.'

வகை அறிந்து அவன் கொள்வரக் கொடுக்கும் ஈவோன்றன்மை யும் ஈதலியற்கையுமாம். வேட்டலாவது, ஐந்தீயாயினும் முத்தீ யாயினும் உலகியற்றீயாயினும் ஒன்றுபற்றி மங்கல மரபினுற் கொடைச்சிறப்புத்தோன்ற அவிமுதலியவற்றை மந்திரவிதி யாற் கொடுத்துச் செய்யுஞ் செய்தி; வேளாண்மைபற்றி வேள்வி யாயிற்று. வேட்பித்தலாவது, வேள்வியாசிரியர்க்கோதிய இலக் கணமெல்லாம் உடையனுய் மாணாக்கற்கு* அவன் செய்த வேள்விகளாற் பெரும்பயனைத் தலைப்படுவித்தலே வல்லனுதல்; இவை மூன்று பகுதியவாதல் போதாயனீயம் முதலியவற்று ணர்க. கொடுத்தலாவது, வேள்வியாசானும் அவற்குத் துணையாயினுரும் ஆண்டுவந்தோரும் இன்புறுமாற்றுன் வேளாண்மையைச் செய்தல். கோடலாவது, கொள்ளத் தகும் பொருள்களை யறிந்துகொள்ளுதல். உலகுகொடுப்பினும் ஊண் கொடுப்பினும் ஒப்பநிகழும் உள்ளம் பற்றியுந், தாஞ் செய்வித்த வேள்விபற்றியுங் கொடுக்கின்றுன் உவகைபற்றியுங், கொள் பொருளின் ஏற்றிழிவு பற்றியுந், தலை இடை கடையென்பனவுங் கொள்க.

இனி வேட்பித்தன்றித் தனக்கு ஒத்தினுற்கோடலுங் கொடுப்பித்துக் கோடலுந் தான் வேட்டற்குக் கோடலுந் தாய மின்றி இறந்தோர் பொருள்கோடலும் இழந்தோர் பொருள் கோடலும் அரசு கோடலுந் துரோணாசாரியனைப் போல்வார் படைக்கலங் காட்டிக் கோடலும் பிறவுங் கோடற்பகுதியாம்.

பார்ப்பியலென்னுது பக்கமென்றதனுனே பார்ப்பார் ஏனை வருணத்துக்கட்கொண்ட பெண்பால்கட்டோன்றின வருணத் தார்க்குஞ் சிகையும் நூலும் உளவேனும் அவர் இவற்றிற்கெல் லாம் உரியரன்றிச் சிலதொழிற்கு உரியரென்பது கொள்க.

உதாரணம்:—

"ஓதல் வேட்ட லவைபிறர்ச் செய்த
லீத லேற்றலென் ரூறுபுரிந் தொழுகு
மறம்புரி யந்தணர் வழிமொழிந் தொழுகி." (பதிற்று-உசு)

இஃது அந்தணர்க்குக் கூறிய பொது.

"முறையோ தினன்றி† முளரியோ னல்லன்
மறையோ கினுனுவே வாய்மை—யறிமினே
வீன்ரூள் வயிறறிருந்தே யெம்மறையு மோதினுன்
சான்ரூன் மகனெருவன் ரூன்."

இஃது ஓதல்.

(பாடம்) * 'மாணக்கனே.' † 'முறையோ தினன்மீ.'

இனி ஒதற்சிறப்பும் ஒதினுற்கு உளதாஞ் சிறப்புங் கூறு தலுங் கொள்க.

"இம்மை பயக்குமா லீயக் குறைவின்றூற்
றம்மை விளக்குமாற் றூமுளராக் கேடின்றூ
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்வீபோன்
மம்ம ரறுக்கு மருந்து." (நாலடி-கசை. உ)

"ஆற்றவுங் கற்றூ றறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை யந்நாடு
வேற்றூ நா டாகா தமவேயா மாதலா
லாற்றுணை வேண்டுவ தில்." (பழமொழி)

"ஒத்த முயற்சியா லெஞ்சு வெளிப்படினு
மித்திய மாக நிரம்பிற்றே—யெத்திசையுந்
தாவாத வந்தணர் தாம்பயிற்றிக் காவிரிநாட்
டோவாத வோத்தி னொலி."

இஃது ஒதுவித்தல்.

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு." (குறள்-அறிவுடைமை-ச)

இஃது ஒதுவித்தற் சிறப்பு.

"நன்றூய்ந்த நீணிமிர்சடை
மூதுமுதல்வன் வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டி
னூறுணர்ந்த வொருமுதுநூ
லிகல்கண்டோர் மிகல்சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோரா தமெய்கொளீஇ
மூவேழ் துறையு மூட்டின்று போகிய
வுரைசால் சிறப்பி னுரவோர் மருக
வினைக்குவேண்டி நீபூண்ட
புலப்புல்வாய்க் கலைப்பச்சைச்
சுவற்பூண்ஞாண் மிசைப்பொலிய
மறங்கடிந்த வருங்கற்பி
னறம்புகழ்ந்த வலைசூடிச்
சிறுநுதற்பே ரகலல்குற்
சிலசொல்லிற் பலகூந்தனி
னிலைக்கொத்தநின் றுணைத்துணைவியர்
தமக்கமைந்த தொழில்கேட்பக்
காடென்றூ நாடென்றூங்
கீரேழி னிடமுட்டாஅது
நீர்நாண நெய்வழங்கியு
மெண்ணுணைப் பலவேட்டு
மண்ணுணைப் புகழ்பரப்பியு
மருங்கடிப் பெருங்காலை
விருந்துற்றநின் றிருந்தேந்த நி

யென்றுங், காண்கதில் லம்ம யாமே குடாஅது
பொன்படு செவ்வரைப் புயலேறு சிலைப்பிற்
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்குந்
தண்புனற் படப்பை யெம்மூ ராங்க
ணுண்டுந் தின்று மூர்ந்து மாடுகஞ்*
செல்வ லத்தை யானே செல்லாது
மழையண் ணுப்ப நீடிய நெடுவரைக்
கழைவள ரிமயம் போல
நிலீஇய ரத்தைநீ நிலமிசை யானே.” (புறம்-கசுக)

இதனுள் வேட்டவாறும் ஈந்தவாறுங் காண்க.

“ஈன்ற வுலகளிப்ப வேதிலரைக் காட்டாது
வாங்கியதா யொத்தானம் மாதவத்தோ—னீந்த
மழுவா ணெடியோன் வயக்கஞ்சால் வென்றி
வழுவாமற் காட்டிய வாறு.”

இது பரசுராமனைக் காசிபன் வேட்பித்த பாட்டு.

“நளிகட லிருங்குட்டத்து” என்னும் (உசு) புறப்பாட்டினுள், அந்தணன் வேட்பித்தலும் அரசன் வேட்டலும் வந்தது.

“இல்லென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.” (குறள்-ஈகை-கூ)

இஃது ஈதல்.

“ஈத்துவக்கு மின்ப மறியார்கொ ரூமுடைமை
வைத்திழக்கும் வன்கண் ணவர்.” (குறன்-ஈகை-அ)

இஃது ஈதற் சிறப்பு.

“நிலம்பொறை யாற்ரு நிதிபல கொண்டுங்
குலம்பெறுதீங் கந்தணர் கொள்ளார்—நலங்கினர்
தீவா யவிசொரியத் தீவிளங்கு மாறுபோற்
ரூவா தொளிசிறந்த தாம்.”
(பெரும் பொருள்விளக்கம், புறத்திரட்டு-குடிமரபு)

இஃது ஏற்றல்.

“தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.” (நாலடி-சஅ)

இஃது ஏற்றற் சிறப்பு.

ஓதுவித்தலும் வேட்பித்தலும் ஏற்றலும் அந்தணர்க்கே உரிய.

(பாடம்) * ‘பாகெம்.’

ஐவகை மரபின் அரசர் பக்கமும்—ஓதல் வேட்டல் ஈதல் காத்தல் தண்டஞ்செய்தல் என்னும் ஐவகையிலக்கணத்தையுடைய அரசியற்கூறும்.

வகையென்றதனுன் முற்கூறிய மூன்றும் பொதுவும், பிற்கூறிய இரண்டுஞ் சிறப்புமாதல் கொளக.

பார்ப்பார்க்குரியவாக விதந்த வேள்வியொழிந்த வேள்விகளுள் இராசசூயமுந் தானவேள்வியும் போல்வன அரசர்க்குரிய வேள்வியாம். கலிங்கங் கழுத்து யாத்துக் குளம்புங் கோடும் பொன்னணிந்த புனிற்றுநிரையுங், கனகமும் கழுகு முதலியனவும் அன்னமும் செறிந்த படப்பை சூழ்ந்த மணியுந், தண்ணடையுங், கன்னியரும், பிறவுங்கொடுத்தலும் மழுவாணெடியோனெப்ப உலகு முதலியன கொடுத்தலும் போல்வன அவர்க்குரிய ஈதலாம். படைக்கலங்களாலும் நாற்படையானுங் கொடைத் தொழிலானும் பிறவாற்றானும் அறத்தின் வழாமற் காத்தல் அவர்க்குரிய காப்பாம். அங்ஙனங் காக்கப்படும் உயிர்க்கு ஏதஞ்செய்யும் மக்களாயினும் விலங்கையாயினும் பகைத்திறத்தையாயினும் அறஞ்செய்யா அரசையாயினும் விதிவழியால் தண்டித்தல் அவர்க்குரிய தண்டமாம். இஃது அரசர்க்கு அறமும் பொருளும் இன்பமும் பயக்கும்.

'வகை'யென்றதனானே களவுசெய்தோர் கையிற் பொருள் கோடலும், ஆறலைகள்ளர்கோடலுஞ், சுங்கங்கோடலும், அந்தணர்க்கு இறையிலி கொடுக்குங்கால் இத்தன்மைப்பொருள் நும்மிடத்து யான் கொள்வலெனக் கூறிக்கொண்டு அதுகோடலும், மறம்பொருளாகப் பகைவர்நாடு கோடலுங், தமரும் அந்தணரும் இல்வழிப் பிறன்றுயங்கோடலும், பொருளில்வழி வாணிகஞ் செய்துகோடலும, அறத்திற்றிரிந்தாரைத் தண்டத்திற்றகுமாறு பொருள்கோடலும் போல்வன கொள்க. அரசியலென்னுது பக்கமென்றதனுன் அரசர் ஏவினவருணத்தார்கட் கொண்ட பெண்பாற்கட் டோன்றிய வருணத்தப்பகுதியோருஞ் சில தொழிற்குரியர் என்றுகொள்க.

உதாரணம் :—

"சொற்பெயர் நாட்டங் கேள்வி நெஞ்சமென்
றைந்துடன் போற்றி யவைதானே யாக
வெவ்வஞ் சூழாது விளங்கிய கொள்கைக்
காலை யன்ன சீர்சால் வாய்மொழி
யருகெழு மரபிற் கடவுட் பேணியர்

கொண்ட தியின் சுடரெழு தோறும்
விருப்புமெய்* பரந்த பெரும்பெய ராவுதி.” (பதிற்று-உக)

என வரும்.

“கேள்வி கேட்டுப் படிவ மொடியாது
வேள்வி வேட்டனை யுயர்ந்தோ ருவப்பச்
சாயறல் கடுக்குந் தாழிருங் கூந்தல்
வேறுபடு திருவி னின்வழி வாழியர்
கொடுமணம் பட்ட வினைமா ணருங்கலம்
பந்தர்ப் பயந்த பலர்புகழ் மூத்தம்
வரையக நண்ணிக் குறும்பொறை நாடித்
தெரியுநர் கொண்ட சிரறுடைப் பைம்பொறிக்
கவைமரங் கடுக்குங் கவலைய மருப்பிற்
புள்ளி யிரலைத் தோலூ னுதிர்த்துத்
தீதுகளைந் தெஞ்சிய திகழ்விடு பாண்டிற்
பருதி போகிய புடைகிளை கட்டி
யெஃகுடை யிரும்பி னுள்ளமைத்து வல்லோன்
சூடுறிலை யுற்றுச் சுடர்விடு தோற்றம்
விசும்பாடு மரபிற் பருந்தா ளப்ப
நலம்பெறு திருமணி கூட்டு நற்றேர்ள்†
ஒடுங்கீ ரோதி யொண்ணுதல் கருவி
லெண்ணியன் முற்றி யீரறிவு புரிந்து
சால்புஞ் செம்மையு முளப்படப் பிறவுங்
காவற் கமைந்த வரசுதுறை போகிய
வீறுசால் புதல்வர்ப் பெற்றனை யிவணர்க்
கருங்கட னிறுத்த செருப்புகன் முன்ப
அன்னவை மருண்டனெ னல்லே னின்வயின்
முழுதுணர்ந் தொழுக்கு நரைமூ தாளனை
வண்மையு மாண்புமெ வளனும் மெச்சமுந்
தெய்வமும் யாவதுந் தவமுடை யோர்க்கென
வேறுபல நனந்தலை பெயரக்
கூறினை பெருமநின் படிமை யோனே.” (பதிற்று-எச)

எனவும் வருவனவற்றுள் ஒதியவாறும் வேட்டவாறுங் காண்க.

“ஒருமழுவாள் வேந்த லெருமூ வெழுகா
லரசடு வென்றி யளவோ—வுரைசான்ற
வீட்டமாம் பல்பெருந்தா ணெங்கும் பசுப்படுத்து
வேட்டாள் பெற்ற மிகை.”

இதுவும் வேட்டல்.

‡“விசையந்தப்பிய” என்னும் பதிற்றுப்பத்து ஈகை கூறிற்று.

(பாடம்) * ‘விசும்புமெய்.’ † ‘நோற்றேர்ன்.’
‡ ‘விசையம் பற்றிய.’ என்றே ஏடுகளில் உள்ளது.

"ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்." (குறள்-கொடுங்-கo)

இது காவல்கூறிற்று.

"கடுங்கண்ண கொல்களிற்றான்" என்னும் (கச) புறப்பாட்டுட் படைக்கலங் கூறியவதனாற் காத்தல் கூறியவாறுங் காண்க.

"தொறுத்தவய லாரல்பிறழ்நவு
மேரு பொருதசெறு வுழாது வித்துநவுவ்
கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்க ணெருமையி னிரைதடுக குநவுங்
கலிகெழு துணங்கை யாடிய மருங்கின்
வளைதலை மூதா வாம்ப லார்நவு
மொலிதெங்கி னிமிழ்மருதிற்
புனல்வாயிற் பூம்பொய்கைப்
பாடல் சான்ற பயங்கெழு வைப்பி
னூடுகவி னழிய நாமந் தோற்றிக்
கூற்றடூஉ நின்ற யாக்கை போல
நீசிவந் திறுத்த நீரழி பாக்கம்
வீரிபூங் கரும்பின் கழனி புல்லெனத்
திரிகாய் விடத்தொடு காருடை போகிக்
கவைத்தலைப் பேய்மகள் கழுதூர்ந் தியங்க
வூரிய நெருஞ்சி நீரூடு பறந்தலைத்
தாதெரு மறுத்த கலியழி மன்றத்
துள்ள மழிய வூக்குநர் மிடறபுத்
துள்ளுநர் பனிக்கும் பாழா யினவே
காடே கடவுண் மேன புறவே
யொள்ளிழை மகளிரொடு மள்ளர் மேன
வாறே யவ்வனைத் தன்றியு ஞாலத்துக்
கூலம் பகர்நர் குடிபுறந் தராஅக்
குடிபுறந் தருநர் பார மோம்பி
யழல்சென்ற மருங்கின் வெள்ளி யோடாது
மழைவேண்டு புலத்து மாரி நிற்ப
நோயொடு பசியிகந் தொரீஇப்
பூத்தன்று பெருமநீ காத்த நாடே." (பதிற்று-கஉ)

இதனுண் மறத்திற் சென்று நாட்டை அழித்தவாறும், அறத்திற் றிரிந்த வேந்தனையழித்து அவன் நாட்டைக் குடி போம்பிக் காத்தவாறுங் கூறிற்று.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்." (குறள்-செங்-கo)

இது தண்டம்.

இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்—ஒதலும் வேட்டலும் ஈதலும் உழவும் நிரையோம்பலும் வாணிகமுமாகிய அறுவகை இலக்கணத்தையுடைய வாணிகர்பக்கமும், வேதம்

ஒழிந்தன ஒதலும் ஈதலும் உழவும் நிரையோம்பலும் வாணிகமும் வழிபாடுமாகிய அறுவகை இலக்கணத்தையுடைய வேளாளர் பக்கமும்;

வாணிகரையும் வேளாளரையும் வேறுகூறுது இருமூன்று மரபினேனெனக் கூடவோதினர், வழிபாடும் வேள்வியும் ஒழிந்த தொழில் இருவர்க்குமொத்தலின்.

இனி வேளாளர்க்கு வழிபாடு கொள்ளாது பெண்கோடல் பற்றி வேட்டல் உளதென்று வேட்டலைக்கூட்டி ஆறென்பாருமுளர். வழிபாடு இருவகை வேளாளர்க்கும் உரித்து. இனி வேட்டலைக் கூட்டுவார் அரசராற் சிறப்பெய்தாத வேளாளர்க்கே வழிபாடு உரித்தென்பர்.

பக்கமென்பதனுன் *வாணிகர்க்கும் வேளாளர்க்கும் அன்னியராகத் தோன்றினரையும் அடக்குக; ஈண்டுப் பக்கத்தாராகிய குலத்தோர்க்குந் தொழில்வரையறை அவர்நிலைகளான் வேறுவேறு படுதல்பற்றி அவர்தொழில் கூறுது இங்ஙனம் பக்கமென்பதனுன் அடக்கினர். இவை ஆண்பால்பற்றி உயர்ச்சி கொண்டன.

உதாரணம் :—

"ஈட்டிய தெல்லா மிதன்பொருட் டென்பதே
காட்டிய கைவண்மை காட்டினர்—வேட்டொறுங்
காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார்வணிகர்
தாமரையுஞ் சங்கும்போற் றந்து."

(பெரும்பொருள் விளக்கம், புறத்திரட்டு-குடிமரபு)

இது வாணிகரீகை.

"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றுயுமனந் திரியு
மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னு தவரு
ளறிவுடை யோனு றசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே." (புறம்-கஅஉ)

இது வேளாளர் ஒதலின் சிறப்புக் கூறியது.

(பாடம்) * 'வாணிகர்க்கு, வேளாளர் கன்னியர்கட் டோன்றி னரையும்.'

"ஈத்துவக்கு மின்ப மறியார்கொ ருமுடைமை
வைத்திழக்கும் வன்கண் ணவர்." (குறள்-ஈகை-அ)

இஃது இருவர்க்கும் †ஈதற்சிறப்புக் கூறிற்று.

"போர்வாகை வாய்த்த புரவலரின் மேதக்கா
ரோர்வாழ்ந ரென்பதற் கேதுவாஞ்—சீர்சா
லுரைகாக்கு மன்னர்க் கொளிபெருகத் தாந்த
நிரைகாத்துத் தந்த நிதி."

இது வேளாளர் நிரைகாத்தது.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்." (குறள்-உழவு-கூ)

இஃது உழவுத்தொழிற் சிறப்பு இருவர்க்குங் கூறியது.

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்." (குறள்-நடுவு-கo)

இது வாணிகச்சிறப்பு இருவர்க்குங் கூறியது.

"இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்ரு வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்ரு வுணரற்பாற் றன்று." (நாலடி-குடி-கூ)

இது வழிபாடு கூறியது; ஏனைய வந்துழிக் காண்க.

மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்—காமம் வெகுளி மயக்கமில்லாத ஒழுகலாற்றினை இறப்பும் நிகழ்வும் எதிர்வுமென்னும் மூவகைக் காலத்தினும் வழங்கும் நெறியான் அமைத்த முழுதுணர்வுடையோன் பக்கமும;

தேயத்தைக் 'கிழமேவா டேனத்து' (இறையனாரகப்-அ) என்ரூற்போலக் கொள்க.

உதாரணம்:—

"வாய்மை வாழ்நர் மூதறி வாள
நீயே யொருதனித் தோன்ற லுறைபதி
யாருமி லொருநிறை யானே தேரி
னவ்வழி வந்தநின் னுணர்வுமுதற் றங்கும்
தொன்னெறி மரபினு மூவகை நின்றன
காலமு நின்னெடு வேறென
யாரோஒ பெருமநிற் றேர்கு வோரே."

என வரும்.

(பாடம்) * 'ஈதல் கூறிற்று.'

"வாடாப் போதி மரகதப் பாசடை
மாசிழ லமர்ந்தோ னெஞ்சம் யார்க்கு
மருளின் றீர்ந்தே னிறைந்துநனி ளெகிழ்ந்து
மலரினு மெல்லி தென்ப வதனைக்
காமர் செவ்வி மாரன் மகளிர்
நெடுமா மழைக்கண் விலங்கி* நிமிர்ந் தெடுத்த
வாளும் போழ்ந்தில வாயின்
யாதோ மற்றது மெல்லிய வாறே."

இதுவும் அது.

கலசயோனியாகிய அகத்தியன் முதலியோரும் அறிவரென் றுணர்க.

நாலிருவழக்கிற் றுபதப் பக்கமும்—அவ்வறிவர் கூறிய ஆக மத்தின்வழிநின் று வீடுபெற முயல்வார்க்கு† உரியவாகிய எண் வகை மார்க்கத்துத் தவம்புரியுங்கூறும்;

வழக்கென்றதனுன் அந்நாலிரண்டுந் தவம்புரிவார்க்கு உரி யனவுந் தவஞ்செய்து யோகஞ்செய்வார்க்கு உரியனவுமென இரு வகையவென்று கொள்க.

அவற்றுள் தவஞ்செய்வார்க்கு உரியன ஊணசையின்மை, நீர்நசையின்மை, வெப்பம்பொறுத்தல், தட்பம்பொறுத்தல், இடம்வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய்வாளாமை என எட்டும், இவற்றிற்கு உணவி னும் நீரினுஞ்சென்ற மனத்தைத் தடுத்தலும், ஐந்தீநாப்பணும், நீர்நிலையினும் நிற்றலுங், கடலுங் காடும் மலையும் முதலியவற்றில் நிற்றலுங், தாமரையும் ஆம்பலும் யாமையும் முதலிய ஆசனத் திருத்தலும், உண்டற்காலை உரையாடாமையுந், துறந்தகாற் றொட்டும் வாய்வாளாமையும் பொருளென் றுணர்க.

இனி யோகஞ்செய்வார்க்குரியன, இயமம் நியமம் ஆசனம் வளிநிலை தொகைநிலை பொறைநிலை நிற்றல் சமாதி என எட் டும். இவற்றை,

"பொய்கொலை களவே காமம் பொருணசை
யிவ்வகை யைந்து மடக்கிய தியமம்."

"பெற்றதற் குவத்தல் பிழம்புநனி ‡வெறுத்தல்
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும்பய மாசாற்§ களித்தலொடு
நயனுடை மரபி னியம மைந்தே."

(பாடம்) * 'விலங்கு' † 'வீடு முயல்வார்க்கு.'
‡ 'புணர்தல்.' § 'அரசர்க்'

"நிற்ற லிருத்தல் கிடத்தல் நடத்தலென்
றொத்த நான்கி லெல்லா நிலைமையோ
டின்பம் பயக்குஞ் சமய முதலிய
வந்தமில் சிறப்பி னுசன மாகும்."

"உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுந்
தந்த மியக்கந் தடுப்பது வளிநிலை."

"பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாம
லொருவழிப் படுப்பது தொகைநிலை யாமே."

"மனத்தினை யொருவழி நிறுப்பது பொறைநிலை."

"நிறுத்திய வம்மன நிலைதிரி யாமற்
குறித்த பொருளொடு கொளுத்த னினைவே."

"ஆங்கனம் குறித்த வாய்மூதற் பொருளொடு
தான்பிற வுகாத் *தகையது சமாதி."

என்னும் உரைச்சூத்திரங்களா னுணர்க.

பக்கமென்றதனான், முட்டின்றி முடிப்போர் முயல்வோர் என்பனவும்,

"நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
சோர்சடை தாழச் சுடரோம்பி—யூரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி." (புற-வெ-மாலை-வாகை-கசு)

என்பனவுங் கொள்க.

"ஓவத் தன்ன விடனுடை வரைப்பிற்
பாவை யன்ன குறுந்தொடி மகளிர்
நிழைநிலை நெகிழ்த்த மள்ளர்க் கண்டிகுங்
கழைக்க ணெடுவரை யருவி யாடிக்
கான யானை தந்த விறகிற்
†கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே." (புறம்-உடுக)

எனவும்,

"வைததனை யின்சொலாக் கொள்வானு நெய்பெய்த
சோறென்று ‡கூழை மதிப்பானு—§ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்." (திரிகடுகம்-சஅ)

எனவும்,

(பாடம்) * 'தசைப்பது.' † 'கடும்புகை.'
‡ 'கூழைத் ததிப்பானும்.' § 'ஞறிய.'

"ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து." (குறள்-அடக்கம்-சு)

எனவும்,

"ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்." (குறள்-அவா-கo)

எனவும்,

"நீஇ ராட னிலக்கிடை கோட
ரோஒ லுடித்த ரொல்லெரி யோம்ப
லூரடை யாமை யுறுசடை புனைதல்
காட்டி லுணவு கடவுட் பூசை
யேற்ற தவத்தி னியல்பென மொழிப."

எனவும் வரும்.

ஏனைய வந்துழிக் காண்க.

அறிமரபிற் பொருநர்கட் பாலும்-தாந்தாம், அறியும் இலக்கணங்களாலே போர்செய்வாரிடத்துக் கூறுபாடும்;

அவை சொல்லானும் பாட்டானுங் கூத்தானும் மல்லானுஞ் சூதானும் பிறவாற்றானும் *வேறலாம்.

உதாரணம்:—

"விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்." (குறள்-சொல்வன்-அ)

இது சொல்வென்றி.

"வண்டுறையுங் கூந்தல் வடிக்கண்ணுள் பாடினுள்
வெண்டுறையுஞ் செந்துறையும் †வேற்றுமையாக்-கண்டறியக்
கின்னரம் போலக் கிளையமைந்த தீந்தொடையா
ழுந்நரம்பு மச்சுவையு‡ மாய்ந்து."
(புற-வெ-மாலை-பெருந்-கஅ)

இது பாடல்வென்றி.

"கைகால் புருவங்கண் பாணி நடைதூக்குக்
கொய்யுங்கொம் பன்னுள் குறிக்கொண்டு—பெய்பூப்
பகைளிவண் டார்ப்பப் பயில்வளினின் றூடுந்
தொகைழன் மன்னன் றுடி." (புற-வெ-மாலை-பெருந்-கஎ)

இஃது ஆடல்வென்றி.

(பாடம்) * 'பொரலாம்.' † 'வேற்றுமையாற்—பண்டங்கு.'
‡ 'ஈர்ஞ்சுவையும்.'

"இன்கடுங் கள்ளி ஞமூ ராங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
யொருகான் மார்பொதுங் கின்றே யொருகால்
வருதார் தாங்கிப் பின்னுதுங் கின்றே
கல்கினும் கல்கா ஞயினும் வெல்போர்ப்
போரருந் தித்தன் காண்கதி லம்ம
பசித்துப் பிணமுயலும் யானை போல
*விருதலை யொசிய வெற்றிக்
களம்புகு மள்ளர்க் கடந்தடு நிலையே." (புறம்-உ0)

இது மல்வென்றி.

"கழகத் தியலுங் கவற்றி னிலையு
மழகத் திருநுதலா ளாய்ந்து—புழகத்துப்
பாய வகையாற் பணிதம் பலவென்ரு
ளாய வகையு மறிந்து. (புற-வெ-மாலை-ஒழிபு-கசு)

இது சூதவென்றி.

அணைநிலை வகையோடு ஆங்கு எழுவகையில் தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்—அக்கூறுபட்ட ஆறுபகுதியும் நிலைக்களமாக அவற்றுக்கண் தோன்றிய வேறுபட்ட கூறு பாட்டோடு முன்னிய ஆறுங் கூட்டி அவ்வெழுகூற்றால் துணை பல திரண்ட தொகை பெற்றது அவ்வாகைத்திணை என்று கூறுவா ராசிரியர் என்றவாறு.

அணையென்றது சுட்டு. நிலை—நிலைக்களம், நிலையது வகை. ஆங்கென்றதனை அணைநிலைவகையொ டென்பதன்கண் வகைக்கு முன்னே கூட்டுக. ஒடு எண்ணிடைச்சொல்லாதலின் முன் னெண்ணியவற்றொடு கூட்டி ஏழாயிற்று.

இனிப் பார்ப்பனப்பக்கத்து வகையாவன பார்ப்பார்க்கும் பார்ப்பனக் கன்னியிடத்துக் கற்புநிகழ்வதற்கு முன்னே கள வில் தோன்றினனும், அவள் பிறர்க்குரியளாகிய காலத்துக் களவில் தோன்றினனும், அவள் கணவனை இழந்திருந்துழித்† தோன்றினனும், ஒழிந்த மூவகை வருணத்துப் பெண்பாற்கண் ணும் இவ்வாறே தோன்றினரும், அவரவர் மக்கட்கண் அவ் வாறே பிறழத் தோன்றினருமாகிய சாதிகளாம். இன்னோருந் தத்தந் தொழில்வகையாற் பாகுபட மிகுதிப்படுத்தல் வாகைத் திணையாம். ஒழிந்த பகுதி ஐந்தற்கும் இஃதொக்கும். இன்னும் பெண்பாலுயர்ந்து ஆண்பாலிழிந்தவழிப் பிறந்த சாதிகளும் அணைநிலைவகைப்பாற்படும். யோகிகளாய் உபாயங்களான் முக்

(பாடம்) * 'ஒருதலை யொசிய வொற்றி.'
† 'களவிற்றோன்றினும்.'

காலமு முணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன்றேயத்து அணி நிலைவகையோராவர்; அவர்க்கு மாணாக்காகித் தவஞ்செய்வோர் தாபதப்பக்கத்தாராவர். தகர்வென்றி பூழ்வென்றி கோழிவென்றி முதலியன பாலறிமரபிற் பொருநர்கண் அணி நிலைவகையாம்.

ஒரு வரையறைப்படாது பலதறைப்படுவனவற்றை யெல்லாந் தொகைநிலையெனத் தொகுத்து ஒரோவொன்றுக்கிக் கூறினர்; தொகுத்துக் கூறலென்னும் உத்திவகையான். பார்ப்பன வாகை அரசவாகையென்றிவை அவற்றின் பகுதி அடங்காமையிற் குன்றக்கூறலாமாதலின் இங்ஙனமோதினர் காட்டாதனவற்றிற்கு *உதாரணங்கள் வந்தழி வந்தழிக் காண்க. (உ0)

எசு. கூதிர் வேனி லென்றிரு பாசறைக்
காதலி னென்றிக் கண்ணிய மரபினும்
ஏரோர் களவழி யன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியுந் தேரோர்
வென்ற கோமான் முன்றேர்க் குரவையும்
ஒன்றிய மரபிற் பின்றேர்க் குரவையும்
பெரும்பகை தாங்கும் வேலி னானும்
அரும்பகை தாங்கு மாற்ற லானும்
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்
ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையி னென்றொடு புணர்ந்து
தொல்லுயிர் வழங்கிய வவிப்பலி யானும்
ஒல்லா ரிடவயிற் புல்லிய பாங்கினும்
பகட்டி னானு மாவி னானும்
துகட்டபு சிறப்பிற் சான்றோர் பக்கமும்
கட்டி னீத்த பாலி னானும்
எட்டுவகை நுதலிய வவையத் தானும்
கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வண்புகழ்க் கொடைமை யானும்
பிழைத்தோர்த் தாங்குங் காவ லானும்

* 'உதாரணம் வந்தழிக் காண்க.'

பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த வகற்சி யானும்
காம நீத்த பாலி னானுமென்
றிருபாற் பட்ட வொன்பதிற் றுத் துறைத்தே.

இது மேல் தொகுத்துக் கூறிய எழுவகைத் திணையுள் அடங்காதவற்றிற்கு முற்கூறிய துறைகளேபோலத் தொடர் நிலைப்படுத்தாது மறத்திற்கு ஒன்பதும் அறத்திற்கு ஒன்பது மாக இருவகைப் படுத்துத் துறை கூறுகின்றது.

(இ - ள்.) கூதிர் வேனில் என்று இரு பாசறைக் காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினும் - கூதிரெனவும் வேனிலெனவும் பெயர்பெற்ற இருவகைப் பாசறைக்கண்ணுங் காதலால் திரிவில்லாத மனத்தனாகி ஆண்டு நிகழ்த்தும் போர்த்தொழில் கருதிய மரபானும்;

கூதிர், வேனில் ஆகுபெயர். அக்காலங்களிற்சென்றிருக்கும் பாசறையாவது தண்மைக்கும் வெம்மைக்குந் தலைமைபெற்ற காலத்துப் போகத்திற் பற்றற்று வேற்றுப்புலத்துப் போந் திருத்தல். இக் காலங்களிற் பிரிதல் வன்மையின் இது வென்றி யாயிற்று. தலைவிமேற் காதலின்றிப் போரின்மேற் காதல்சேற லின் ஒன்றியென்றார். இக்காலத்துச் சிறப்புப்பற்றி இரண் டையும் ஒதினாரேனும் ஓர்யாட்டை எல்லே இருப்பினும் அவற்று வழித்தோன்றிய ஏனைக் காலங்களும் இரண்டாகி அவற்றுள் அடங்குமென்பது ஆசிரியர் கருத்தாயிற்று.

"வினைவயிற் பெயர்க்குந் தானைப்
புனைதார் வேந்தன் பாசறை யேமே. (அகம்-அச)

எனத் தலைவியை நினைவன வாகைக்கு வழுவாம். அகத் திற்கு வழுவன்றென்றற்கு மரபென்றார். *ஏனையகாலங்களாற் பாசறைப் பெயர் இன்றென்றற்கு இரண்டானும் பெயர் கூறி னார். இங்ஙனங் கூறவே முற்கூறிய துறைபோலத் தொடர் நிலைப்படுத்தலின்றாய் இதனானே பலவாகி ஒருதுறைப்படுத் தலும் இன்றாயிற்று.

இனி இருத்தற்பொருண் முல்லையென்பதேபற்றிப் பாச றைக்கண் இருத்தலாற் பாசறைமுல்லையெனப் பெயர் கூறு வாரும் உளர்.

(பாடம்) * 'ஏனைய காலங்கள் பாசறைப் பெயராதலி னென்றற்கு இரண்டானும் பெயர் கூறினார்.'

உதாரணம் :—

"மூதில்வாய்த் தங்கிய முல்லேசால் கற்புடைய
மாதர்பாற் பெற்ற வலியளவோ—கூதிரின்
வெங்கண் விறல்வேந்தன் பாசறையுள் வேனிலா
னெங்கணே தோற்ற வழிவு."
(பெரும்பொருள் விளக்கம், புறத்திரட்டு-பாசறை-ச)

என வரும்.

"கவலே மறுகிற் கடுங்கண் மறவ
ருவலேசெல் கூரை யொடுங்கத்—துவலேசெய்
கூதிர் நலியவு முள்ளான் கொடித்தேரான்
மூதின் மடவாண் முயக்கு." (புற-வெ-வாகை-கஞ)

எனவும் வரும்.

ஏரோர் களவழி(த் தேரோர் தோற்றிய வென்றி) யன்றிக் களவழித் தேரோர் தோற்றிய வென்றியும்—வேளாண்மாக்கள் விளையுட்காலத்துக் களத்துச் செய்யுஞ் செய்கைகளைத் தேரேறி வந்த கிணைப்பொருநர் முதலியோர் போர்க்களத்தே தோற்றுவித்த வென்றியன்றிக் களவழிச் *செய்கைகளை மாறுதே தேரேறி வந்த புலவர் தோற்றுவித்த வென்றியானும்;

என்றது நெற்கதிரைக்கொன்று களத்திற் குவித்துப் போர் அழித்து, அதரிதிரித்துச் சுற்றத்தொடு நுகர்வதற்கு முன்னே கடவுட் பலிகொடுத்துப் பின்னர்ப் பரிசிலாளர் முகந்து கொள்ள வரிசையின் அளிக்குமாறுபோல, அரசனும் நாற் படையையும் கொன்று களத்திற் குவித்து எருது களிறாக †வாள்படை ஒச்சி அதரிதிரித்துப் பிணக்குவையை நிணச்சேற் றொடு உதிரப் பேருலக்கண் ஏற்றி ஈனவேண்மான் இடத்துழந் தட்ட கூழ்ப்பலியைப் பலியாகக்கொடுத்து எஞ்சினின்ற யானை குதிரைகளையும் ஆண்டுப்பெற்றன பலவற்றையும் பரிசிலர் முகந்துகொள்ளக் கொடுத்தலாம்.

உதாரணம் :—

"இருப்புமுகஞ் செறித்த வேந்தெழின் மருப்பிற்
கருங்கை யானை கொண்மூ வாக
நீண்மொழி மறவ ரெறிவன ருயர்த்த
வாண்மின் னொக வயங்குகடிப் பமைந்த
குருதிப் பலிய மூரசுமுழக் காக
வரசராப் பனிக்கு மணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக
விசைப்புறு வல்வில் வீங்குநா ணுகைத்த

(பாடம்) * 'செய்யுள்.' † 'வான்மடல்.'

கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
மீரச் செறுவிற் றேரே ராக
வீடியல் புக்கு நெடிய *நீட்டினின்
செருப்படை மிளிர்த்த திருத்துறு செஞ்சாற்
பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி
விழுத்தலே சாய்த்த வெருவரு பைங்கூழ்
பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்
கான நரி†யோடு கழுதுகளம் படுப்பப்
பூதங் காப்பப் பொலிகளந் தழீஇப்
பாடுநர்க் கிருந்த பீடுடை யாள
தேய்வை வெண்காழ் புரையும் விதிபிணி
வேய்வை காணு விருந்திற் போர்வை
யரிக்குரற் றடாரி யுருப்ப வொற்றிப்
பாடி வந்திசிற் பெருமை பாடான்
றெழிலி தோயு மிமிழிசை யருவிப்
பொன்னுடை நெடுங்கோட் டிமயத் தன்ன
வோடை நுதல வொல்குத லறியாத்
துடியடிக் குழவிப் பிடியிடை மிடைந்த
வேழ முகவை நல்குமதி
தாழா வீகைத் தகைவெய் யோயே." (புறம்-நூசுகூ)

என வரும்.

"நளிகட லிருங்குட்டத்து" என்னும் (உசு) புறப்பாட்டுப் பலி கொடுத்தது.

களவழிநாற்பது புலவர் களவழியைத் தோற்றுவித்தது.

"ஓஒ வுவமை யுறழ்வின்றி யொத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
மாவுதைப்ப மாற்றூர் குடையெல்லாங் கீழ்மேலா
யாவுதை காளாம்பி போன்ற புனலுடன்
மேவாரை யட்ட களத்து." (களவழி நாற்பது-நூசு)

என வரும்.

தேரோர்வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்—தேரின்கண் வந்த அரசர் பலரையும் வென்ற வேந்தன் வெற்றிக் களிப்பாலே தேர்த்தட்டிலே நின்று போர்த்தலைவரோடு கை பிணைந்தாடுங் குரவையானும்;

உதாரணம் :—

"சூடிய பொன்முடியும் பூணு மொளிதுளங்க
வாடிய கூத்தரின்வேந் தாடினனே—வீடிக்
குறையாடல் கண்டுவந்து கொற்றப்போர் வாய்த்த
விறையாட வாடாதார் யார்."

(பாடம்) * 'நீடலின்.' † 'கணநரி,' 'புகாநரி.'

"விழவுவீற் றிருந்த வியலு ளாங்கட்
கோடியர் முழவின் முன்ன ராடல்
வல்லா னல்லன் வாழ்கவவன் கண்ணி
வலம்படு முரசந் துவைப்ப வாளுயர்த்
திலங்கும் பூணன் பொலங்கொடி யுழிஞையன்
மடம்பெரு மையி* னுடன்றுமேல் வந்த
வேந்து மெய்ம்மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்க்களத் தாடுங் கோவே." (பதிற்று-இசு)

என வரும்.

ஒன்றிய மரபிற் பின்தேர்க் குரவையும்—தேரோரை வென்ற கோமாற்கே பொருந்திய இலக்கணத்தானே தேரின் பின்னே கூழுண்ட கொற்றவை கூளிச்சுற்றம் ஆடுங் குரவை யானும்;

உதாரணம்:—

"வென்று களங்கொண்ட வேந்தன்றேர் சென்றதற்பின்
கொன்ற பிணநிணக்கூழ் கொற்றவை—நின்றளிப்ப
வுண்டாடும் பேய்கண் டுவந்தனவே போர்ப்பரிசில்
†கொண்டா டினகுரவைக் கூத்து."
(பெரும் பொருள் விளக்கம், புறத்திரட்டு-களம்-கஉ)

என வரும்.

"களிற்றுக் கோட்டன்ன வாலெயி றழுத்தி
விழுக்கொடு விரைஇய வெண்ணிணச் சுவையினள்
குடர்த்தலை துயல்வரச் சூடி யுணத்தின‡
வாளுப் பெருவளஞ் செய்தோன் வானத்து
வயங்குபன் மீனினும் வாழியர் பலவென
வுருகெழு பேயம்ம களரக்
குருதித்துக ளாடிய களங்கிழ வோயே." (புறம்-கூஎக)

என்பதும் அது.

பெரும்பகை தாங்கும் வேலினானும்—போர்க்கணன்றியும் பெரியோராகிய பகைவரை அத்தொழிற்சிறப்பான் அஞ்சுவித் துத் தடுக்கும் வேற்றொழில் வன்மையானும்;

காத்தற்றொழிலன்றி அழித்தற்றொழில் பூண்ட மூக்கட் கடவுட்குச் சூலவேல் படையாதலானும் முருகற்கு வேல் படை யாதலானுஞ் சான்றோர் வேற்படையே சிறப்பப் பெரும் பான்மை கூறலானும் வேலைக் கூறி ஏனைப்படைகளெல்லாம்,

(பாடம்) * 'மடங்காப் பெருமையின்.' † 'கொண்டாடினர்.'
‡ 'குடர்த்தலைமாலை துயல்வரச் சூடி யுணர்த்தின.'

"மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின்
மொழியா ததனையு முட்டின்று முடித்தல்."
(தொல்-பொ-செய்-கக0)

என்னும் உத்தியாற் பெறவைத்தார்.

உதாரணம் :—

"குன்று துகளாக்குங் கூர்ங்கணையான் வேலெறிந்
தன்று திருநெடுமா லாடிஞ—னென்றும்
பனிச்சென்று மூளாத பல்கதிரோன் சேயோ
டினிச்சென் றமர்பொரா யென்று."

இது பாரதம்.

"இரும்புமுகஞ் சிதைய நூறி யொன்னர்
இருஞ்சமங் கடத்த லேஞர்க்கு மெளிதே
நல்லரா வுறையுஞ் புற்றம் போலவுங்
கொல்லேறு திரிதரு மன்றம் போலவும்
மாற்றருந் துப்பின் மாற்றோர் பாசறை
யுளனென வெரூஉ மோரொளி
வலனுயர் நெடுவே லெண்ணகண் ணதுவே." (புறம்-கூ0க)

என்பதும் அது.

"இவ்வே, பீலியணிந்து" என்னும் (கூடு) புறப்பாட்டும் அது.

அரும்பகை தாங்கும் ஆற்றலானும்—வெலற்கரும் பகைவர் மிகையை நன்குமதியாது எதிரேற்றுக்கொள்ளும் அமைதியானும் ;

உதாரணம் :—

"எருதுகா லுரூஅ நிலைஞர் கொன்ற
சில்லிலை* வரகின் புல்லென் குப்பை
தொடுத்த கடவர்க்குக் கொடுத்த மிச்சில்
பசித்த பாண ருண்டுகடை தப்பலி
னெஞ்ச லொற்கஞ் சொலியத் தன்னூர்ச்
சிறுபுல் லாளர் முகத்தளவ கூறி
வரகுகட னிரகு† நெடுந்தகை
யரசுவரிற் ருங்கும் வல்லா ளன்னே." (புறம்-கூஉஎ)

என வரும்.

"களம்புக லோம்புமின்" என்னும் (அஎ) புறப்பாட்டும் அது.

வாழ்க்கை புல்லா வல்லாண் பக்கமும்—உயிர்வாழ்க்கையைப் பொருந்தாத வலிய ஆண்பாலின் கூறுபாட்டானும் ;

(பாடம்) * 'சில்லினை.' † 'ஈர்க்கு.'

பக்கமென்றதனற் தாபதப்பக்கமல்லாத போர்த்தொழி லாகிய வல்லாண்மையே* கொள்க.

உதாரணம் :—

"கலிவர லூழியின் வாழ்க்கை கடிந்து
மலிபுகழ் வேண்டு மனத்த—ரொலிகடல்சூழ்
மண்ணகலம் வேண்டாது வான்வேண்டி மீண்டினர்
புண்ணகலாப்† போர்க்களத்துப் போந்து."

இப் பாரதத்துள் அது காண்க.

ஒல்லார்நாணப் பெரியவர்க் கண்ணிச் சொல்லிய வகையின் ஒன்றுடிபுணர்ந்து தொலையுயிர் வழங்கிய அவிப்பலியானும்— பகைவர் நாணும்படியாக உயர்ந்தோரான் நன்குமதித்தலைக் கருதி இன்னது செய்யேனுயின் இன்னது செய்வலெனத் தான் கூறிய பகுதியிரண்டனுள் ஒன்றனேடே பொருந்திப் பல பிறப் பினும் பழகிவருகின்ற உயிரை அங்கியங்கடவுட்குக்‡ கொடுத்த அவிப்பலியானும் ;

நாணுதலாவது நம்மை அவன் செய்யாதே நாம் அவனை அறப்போர் செய்யாது வஞ்சனையால் வென்றமையில் அவன் தன்னுயிரை அவிப்பலி கொடுத்தானென நாணுதல்.

உதாரணம் ,—

"எம்பியை வீட்டுத லெம்மனேக்கா யான்படுதல்
வெம்பகன்மூன் யான்விளப்ப னென்றெழுந்தான்—றம்பி
புறவோரிற் பாணிப்பப் பொங்கெரிவாய் வீழ்ந்தா
னறவோன் மறமிருந்த வாறு."

இப் பாரதத்துள் ஒருவன் இன்னது செய்வலென்று அது செய்ய முடியாமையின் அவிப்பலி கொடுத்தவாறு காண்க.

"இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்." (குறள்-படைச்-கூ)

இதுவும் அது.

ஒல்லாரிடவயிற் புல்லியபாங்கினும் — பகைவராயினும் அவர் சுற்றமாயினும் வந்து உயிரும் உடம்பும் உறுப்பும்போல் வன வேண்டியக்கால் அவர்க்கவை மனமகிழ்ந்து கொடுத்து நட்புச்செய்தலானும் ;

(பாடம்) * 'வல்லானே.' † 'புண்ணியமாம்.'
‡ 'அங்கிக் கடவுள்.'

உதாரணம் :—

"இந்திரன் மைந்த னுயிர்வேட் டிரந்திரவி
மைந்தனே வெல்வான் வரங்கொண்டான்—றந்தா
ளேந்திலேவேன் மன்னனே யன்றி யிதற்குவந்த
வேந்தனும் பெற்றான் மிகை."

இப் பாரதத்துப் பகைவனுற் படுதலறிந்துந் தன் கவச குண்டலங் கொடுத்தமை கூறினமையிற் புல்லியபாங்காயிற்று. அது வீரம்பற்றிய கருணையாகலின் வாகையாயிற்று.

இத்துணையு மறத்திற்குக் கூறியன.

பகட்டினனும் மாவினனும் துகட்டபு சிறப்பிற் சான்றோர் பக்கமும்—எருதும் எருமையுமாகிய பகட்டினனும் யானையுங் குதிரையுமாகிய மாவினனுங் குற்றத்தினீங்குஞ் சிறப்பினுல் அமைந்தோரது கூறுபாட்டானும்;

இவற்றுன் உழவஞ்சாமையும் பகையஞ்சாமையுமாகிய வெற்றி கூறினர். பக்கமென்றதனுற் புனிற்றுவுங் காலாளுந் தேருங் கொள்க.

உதாரணம் :—

"யானே நிரையுடைய தேரோ ரினுஞ்சிறந்தோ
ரேனே நிரையுடைய வேர்வாழ்நர்—யானைப்
படையோர்க்கும் வென்றி* பயக்கும் பகட்டே
ருடையோர்க் காசரோ வொப்பு."

(பெரும்பொருள் விளக்கம், புறத்திரட்டு-குடிமரபு-க)

"எனைப்பெரும் படையஞ்சி னெப்போர்ப் பொறைய
னென்றனி ராயி னுறுசெல் வம்பலிர்
மன்பதை மருள† வரசுகளத் தவியக்
கொன்றுதோ ளோச்சிய வென்றுடு துணங்கை
மீபிணத் துருண்ட தேயா வாழியிற்‡
பண்ணமை தேரு மாவு மாக்களு
மெண்ணற் கருமையி னெண்ணின்றே விலனே
கந்துகோ ளீயாது காழ்பல மூருக்கி
யுகக்கும் பருந்தி னிலத்துநிழல் சாடிச்
சேண்பரன் முரம்பி னீர்ம்படைக் கொங்கர்
ஆபரந் தன்ன செலவிற்பல்
யானை காண்பலவன் ரூனே யானே." (பதிற்று-எஎ)

என்பதும் அது.

கட்டில் நீத்த பாலினனும் — அரசன் அரசவுரிமையைக் கைவிட்ட பகுதியானும்;

(பாடம்) * 'நன்றி.' † 'பெயர.' ‡ 'தெய்வயாழின்.'

அது பரதனும் பார்த்தனும் போல்வார் அரசு துறந்த வென்றி.

உதாரணம் :—

" கடலு மலையுந் தேர்படக் கிடந்த
மண்ணக வளாக* நுண்வெயிற் றுகளினு
நொய்தா லம்ம தானே யிஃதெவன்
குறித்தன னெடியான் கொல்லோ மொய்தவ
வாங்குசிலை யிராமன் றம்பி யாங்கவ
னடிபொறை யாற்றி னல்லது
முடிபொறை யாற்றலன் படிபொறை குறித்தே."

இஃது அரசு கட்டினீத்தபால்.

" பரிதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநில
மொருபக லெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தாக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்று தாதலிற்
கைவிட் டனரே காதல ரதனால்
விட்டோரை விடாஅ டிருவே†
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே." (புறம்-௫௰அ)

என்பதும் அது.

எட்டுவகை நுதலிய அவையத்தானும் — எண்வகைக் குணத்தினைக் கருதிய அவையத்தாரது நிலைமையானும்;

அவை குடிப்பிறப்புக் கல்வி ஒழுக்கம் வாய்மை தூய்மை நடுவுநிலைமை அழுக்காறின்மை அவாவின்மை எனவிவை யுடையராய், ‡அவைக்கண் முந்தியிருப்பார் வெற்றியைக் கூறுதல்.

உதாரணம் :—

" குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு காமுறூ§
வாய்மை வாய்மடித்து மாந்தித் தூய்மையிற்
காத லின்பத்துத் தாங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலு
மழுக்கா றின்மை யவாஅ வின்மையென
விருபெரு நிதியமு மொருதா மீட்டுந்

(பாடம்) * 'மண்ணக வளாக நிறைய நுண்வெயிற்-றுகளினு
நொய்தா லம்மதானே-யிஃதெவன் குறித்தனன்
கொல்லோ மொய்தவ.'
† 'விடாஅது திருவே.'
‡ 'உடையாரவைக்கண் முந்தியிருப்பதோர் வெற்றி.'
§ 'நாளினும்.'

தோலா நாவின் மேலோர் பேரவை
யுடன்மசீஇ யிருக்கை யொருநாட் பெறுமெனிற்*
பெறுகதில் லம்ம யாமே வரன்முறைத்
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து
கின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பவிம்
மலர்தலை யுலகத்துக் கொட்கும் பிறப்பே."
(ஆசிரியமாலை-புறத்திரட்டு-அவையறிதல்)

என இதனுள் எட்டும் வந்தன.

கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமையாணும்—வேத முதலியவற்றுற் கட்டுதலமைந்த ஒழுக்கத்தோடு பொருந்திய காட்சியானும்;

கண்ணதுதன்மை கண்மையெனப்படுதலின் அதனைக் கண்ணுமையென உகரங்கொடுத்தார். எண்மை வன்மை வல்லோர் என்பது எளுமை வலுமை வல்லுவோர் என்றுற்போல.

இவை மனத்தான் இவ்வொழுக்கங்களைக் குறிக்கொண்டு ஐம்பொறியினை வென்று தடுத்தலாம் அவை இல்லறத்திற்கு உரியவாக நான்கு வருணத்தார்க்குங் கூறிய அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை. பிறர்மனை நயவாமை, வெஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம, அழுக்காறாமை, பொறையுடைமை முதலியனவாம்.

உதாரணம் :—

"ஒருமையு ளாமைபோ லொந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து." (குறள்-அடக்க-கங)

"ஒழுக்கம் விழுப்பந் தரலா லொழுக்க
முயிரினு மோம்பப் படும். (குறள்-நடுவு-அ)

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி." (குறள்-நடுவு-அ)

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனெனறே வான்ற வொழுக்கு." (குறள்-பிறனில்-அ)

"படுபயன் வெஃகிப் பழிப்படவு செய்யார்
நடுவண்மை நாணு பவர்." (குறள்-வெஃகாமை-உ)

"அறங்கூறு னல்ல செயினு மொருவன்
புறங்கூறு னென்ற வினிது." (குறள்-புறங்-கசஞ)

"தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு." (குறள்-தீவினை-க)

(பாடம்) * 'உடனய லிருக்கை யொருநா ளாமெனின்.'

"ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு." (குறள்-அழுக்கா-க)

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்." (குறள்-பொறை-அ)

பிறவும் இந்நிகரனவெல்லாங் கொள்க.

"விழையா வுள்ளம் விழையு மாயினுங்
கேட்டவை தோட்டி யாக மீட்டாங்
கறனும் பொருளும் வழாமை நாடித்
தற்றக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னு கும்மே முன்னிய முடித்த
லினைய பெரியோ ரொழுக்க மதனு
லரிய பெரியோர்த் தெரியுங் காலே." (அகம் உஅசு-அ-கசை)

என இது தொகுத்துக் கூறியது.

இடையில் வண்புகழ்க் கொடைமையானும்—இடையீ டில்லாத வண்புகழைப் பயக்குங் கொடைமையானும்;

உலகமுழுதும் பிறர்புகழ் வாராமைத் தன்புகழ் பரத்தலின் இடையி லென்றார்.

வண்புகழ்-வள்ளிதாகிய புகழ்; அது வளனுடையதென விரியும். இக்கொடைப் புகழுடையான் மூப்புப் பிணி சாக்காட்டுக்கு அஞ்சாமையின் அது வாகையாம்.

உதாரணம்:—

"மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந தனரே
தன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வ
நின்மையி னிரப்போர்க் கீ யாமையிற்
றொன்மை மாக்களிற் றொடாபறி யலரே
தாடாழ் படுபணி யிரட்டும் பூநுத
லாடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றனெ னுகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
னுடிழந் ததனினு நனியின் னுதென
வாடந் தனனே தலையெமக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையி
னுடுமலி யுவகையொடு வருகுவ
லோடாப் பூட்கைநின் னிழமையோற்* கண்டே." (பதம்-கசுஇ)

என வரும். இது புறம்.

(பாடம்) * 'னிலைமையோன்.'

பிழைத்தோர்த் தாங்குங் காவலானும்—தம்மைப் பிழைத் தோரைப் பொறுக்கும் பாதுகாப்பானும் ;

காவலாவது இம்மையும் மறுமையும் அவர்க்கு ஏதம் வாரா மற் காத்தலாதலால், இஃது ஏனையோரின் வெற்றியாயிற்று.

உதாரணம் :—

" தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ* லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்." (நாலடி-நிஅ)

" அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை." (குறள்-பொறை-க)

என வரும்.

பொருளொடு புணர்ந்த பக்கத்தானும் — அரசர்க்குரிய வாகிய படை குடி கூழ் அமைச்சு நட்பு முதலியனவும் புதல் வரைப் பெறுவனவுமாகிய பொருட்டிறத்திற்பட்ட வாகைப் பகுதியானும் ;

பக்கமென்றதனான் மெய்ப்பொரு ளுணர்த்துதலுங்கொள்க.

உதாரணம் :—

" படைகுடி கூழமைச்சு நட்பர ணுறு
முடையா னரசரு ளேறு.' (குறள்-இறை-க)

நாடு அரண்முதலாகக் கூறுவனவெல்லாந் திருவள்ளுவப் பயனிற் காண்க.

" படைப்புப் பலபடைத்துப் பலரோ டெண்ணு
முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி†
யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட‡ விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழ் நாளே." (புறம்-கஅஅ)

" கேள்வி கேட்டுப் படிவமொடியாது" என்னும் (எசு) பதிற்றுப்பத்தும் அது.

" ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு." (குறள்-மெய்யு-ச)

என வரும்.

(பாடம்) * 'நிரயத்தளெய்துங்கொல்.'
† 'நடந்துஞ்சிறுகை நீட்டியும்.' ‡ 'மெய்பெற.'

அருளொடு புணர்ந்த அகற்சியானும்—அருளுடைமை யோடு பொருந்திய துறவறத்தானும் :

அருளொடு புணர்தலாவது ஒருயிர்க்கு இடர்வந்துழித் தன்னுயிரைக் கொடுத்துக் காத்தலும் அதன் வருத்தந் தனதாக வருந்துதலும் பொய்யாமை கள்ளாமை முதலியனவுமாம். இக்கருத்து நிகழ்ந்த பின்னர்த் துறவுள்ளம் பிறத்தலின் இதுவும் அறவெற்றியாயிற்று.

உதாரணம் :—

"புனிற்றுப் பசியுழந்த புலிப்பிணவு தனது
மூலமறுக் குழவி வாங்கி வாய்மடுத்
திரையெனக் கவர்புற நோக்கி யாங்க
ஏரிளங் குழவியின் முன்சென்று காணக்
கூருகிர்* வயமான் புலவுவேட்டுத் தொடங்கிய
வாளெயிற்றுக் கொள்ளாயிற் றங்கினன் கதுவப்
பாலிலைப் போதி மாதவன் பெருந்தகை
யாருயிர் காவல்† பூண்ட
பேரருட் புணர்சரியி னகலு மாறே."

"தன்னுயிர்க் கின்னுமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னு செயல்." (குறள்-இன்னு-அ)

"வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல் : (குறள்-வாய்மை-க)

"களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்." (குறள்-கள்ளாமை-எ)

"யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனு னதனி னிலன்." (குறள் துறவு-க)

ஏனையவும் இதன்கண் அடக்குக.

காமம் நீத்த பாலினானும்—அங்ஙனம் பிறந்தபின்னர்‡ எப் பொருள்களினும் பற்றற்ற பகுதியானும் ;

உதாரணம் :—

"காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னுமங் கெடக்கெடு நோய்." (குறள்-மெய்யு-க0)

என வரும்.

பாலென்றதனால் உலகியலு ணின்றே காமத்தினைக் கைவிட்ட பகுதியுங் கொள்க.

(பாடம்) * 'தானக் கூருகிர்.' † 'ஆருயிர்க்காவல்.'
‡ துறவுள்ளம் பிறந்த பின்னர் என்றவாறு.

"இளையர் மூதிய ரெனவீருபால் பற்றி
வினையு மறிவென்ன வேண்டா—வினையுளுத்
தன்ரூதை காம நுகர்தற்குத் தான்காம
மொன்ரூது நீத்தா னுளன்."
(பெரும் பொருள்விளக்கம் புறத்திரட்டு-அறிவுடைமை-கஎ)

என வரும்.

என்று இருபாற்பட்ட ஒன்பதிற்றுத் துறைத்தே—முன்னர் ஒன்பானும் பின்னர் ஒன்பானுமாக இரண்டு கூறுபட்ட ஒன்பதாகிய பதினெட்டுத் துறையினையுடைத்து வாகை என்ற வாறு.

இதனுள் ஏது விரியாதனவற்றிற்கும் ஏது விரித்தவாற்றுன் இருபாற்பட்ட பதினெட்டாத லுடைத்தென முடிக்க.
(உக)

எஎ. காஞ்சி தானே பெருந்திணைப் புறனே.

இத்திணையும் உரிப்பொருள்பெற்ற அகத்திணைக்குப் புறங்கூறி, இஃது உரிப்பொருளில்லாத பெருந்திணைக்குப் புறனிது வென்கின்றது. இது வாகைக்குப் பின்வைத்தார், வீரக்குறிப்பு நிலையாமைக் குறிப்போடு உறவுடைதது என்றற்கு.

(இ - ள்.) காஞ்சிதானே பெருந்திணைப் புறனே—எழுதிணையுட் காஞ்சிதானேயெனப் பிரிக்கப்பட்ட புறத்திணை பெருந்திணைக்குப் புறனும் என்றவாறு.

அதற்கு இது புறனுயவாறு* என்னையெனின், எண்வகை மணத்தினும நான்குமணம்பெற்ற பெருந்திணைபோல இக்காஞ்சியும் அற முதலாகிய மும்முதற்பொருளும் அவற்றது நிலையின்மையுமாகிய ஆறனுள்ளும் நிலையின்மை மூன்றற்கும் உரித்தாய் எல்லாத்திணைகட்குமை ஒத்த மரபிற்றுகலானும், 'பின்னர் நான்கும் பெருந்திணை பெறும்' (தொல். களவியல்-கசு) என்ற நான்குஞ் சான்றோர் இகழ்ந்தாற் போல அறம் முதலியவற்றது நிலையின்மையுணர்ந்து அவற்றை அவர் இகழ்தலானும், 'ஏறிய மடற்றிற' (தொல். அகத்-நிக) முதலிய நான்குந் தீய காமமாயினவாறுபோல உலகியலேக்கி நிலையாமையும் நற்பொருளன்றுகலானும், உரிப்பொருள் இடைமயங்கி வருதலன்றித் தனக்கு நிலமில்லாத பெருந்திணைபோல அறம்பொருளின்பம் பற்றியன்றி வேறுவேறு நிலையாமையென்பதோர் பொருளின்றுதல் ஒப்புமையானும், பெருந்திணைக்குக் காஞ்சி புறனுயிற்று. 'கைக்

(பாடம்) * 'அஃது அகத்துக்குப் புறனுயவாறு.'

கினை முதலாப் பெருக்கிணையிறுவாய்' (தொல். அகத்-க.) ஏழ னையும் அகமென்றலின் அவ்வகத்திற்கு இது புறனுவதன்றிப் புறப்புறமென்றல் ஆகாமையுணர்க. இது மேலதற்கும் ஒக்கும். (உட)

எஅ. பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றூனு
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே.

இது முற்கூறிய காஞ்சிக்குப் பொது இலக்கணங் கூறு கின்றது.*

(இ - ள்.) பாங்கருஞ் சிறப்பின்—தனக்குத் துணை யில்லாத வீட்டின்பம்† ஏதுவாக; பல்லாற்றூனும்—அறம் பொருள் இன்பமாகிய பொருட்பகுதியானும அவற்றுப் பகுதி யாகிய உயிரும யாக்கையுஞ் செல்வமும் இளமையும் முதலிய வற்றூனும்; நில்லா உலகம் புல்லிய நெறித்து—நிலேபே றில் லாத உலகியற்கையைப் பொருந்திய நன்னெறியினே யுடைத் தாக் காஞ்சி என்றவாறு.

எனவே, வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலேயாமை யைச் சான்றோர் சாற்றுங் குறிப்பினது‡ காஞ்சியாயிற்று. பாங்கு-துணை.

உலகிற்கு நிலேயாமை கூறுங்கால் அறமுதலாகிய பொருட் பகுதி ஏதுவாகக் கூறினன்றி உலகென்பதற்கு வடிவு வேறின் மையிற் பல்லாற்றூனுமென்று ஆன் உருபு கொடுத்தார். கெடுங்காற் கணந்தோறுங் கெடுவனவுங் கற்பந்தோறுங் கெடு வனவுமா மென்றற்கு ஆறென்றூர். நிலேபெற்ற வீட்டினுன் இவற்றின் நிலேயாமையுணர்தலின் வீடு ஏதுவாயிற்று. பல் லாற்றூனுமென்றதனுற் சில்லாற்றூனும் வீடேது வாகலின்றி நிலேயாமைக்குறிப்பு ஏதுவாகலுங் கொள்க. இஃது அறிவன் தேயமுந் தாபதப்பக்கமும்பற்றி நிலேயின்மைக் குறிப்புப் பெற் றும்.

உதாரணம்:—

"மயங்கிருங் கருவிய விசும்பு முகனுக§
வியங்கிய விருசுடர் கண்ணெனப் பெயரிய
வளியிடை¶ வழங்கா வழக்கரு நீத்தம்
வயிரக் குறட்டின் வயங்குமணி யாரத்துப்$
பொன்னுக் திகிரி முன்சமத் துருட்டிப்

(பாடம்) * 'இலக்கணம் உணர்த்துகின்றது.' † 'பேரின்பம்.'
‡ 'குறிப்பாயினது.' § 'முகனக', 'முதலாக.'
¶ 'வழியிடை.' $ 'வயங்கு மணியாத்து.'

பொருநர்க் காணைச் செருமிகு மொய்ம்பின்*
முன்னோர் செல்லவுஞ் செல்லா தின்னும்
வீலைலப் பெண்டிரிற் பலர்மீக் கூற
வுளனே †வாழியர் யானெனப் பன்மா
ணிலமக ளழுத காஞ்சியு
முண்டென வுரைப்பரா லுணர்ந்திசி னோரே.” (புறம்-உகூஙி)

இதனுள் உண்டென உரைப்பரால் உணர்ந்தோ ரென்ற தின் வீடுபேறு ஏதுவாகத் தாபதர் போல்வார் நில்லா உலகம் புல்லியதாயிற்று. வீடுபேறு நிமித்தமாகச் சான்றோர் பல வேறு நிலையாமையை அறைந்த‡ மதுரைக்காஞ்சி இதற்கு உதாரணமாம். (உங)

எகூ. மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையுங்
கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய
மூதுமையும்
பண்புற வருஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து§ மூடியு மறத்தி னுனு
மேமச் சுற்ற மின்றிப் புண்ணேற்
பேள யோம்பிய பேளய்ப் பக்கமு
மின்னனென் றிரங்கிய மன்னே யானு
மின்னது பிழைப்பி னிதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானு
மின்னகை மனவி பேளய்ப் புண்ணேற்
றுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியு
நீத்த கணவற் றீர்த்த வேலிற்
பேளத்த மனவி யாஞ்சி யானு
நிகர்த்து மேல்வந்த வேந்தனெடு முதுகுடி
மகட்பா டஞ்சிய மகட்பா லானு
மூலையு முகனுஞ் சேர்த்திக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
யீரைந் தாகு மென்ப பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்ற

(பாடம்) * ‘முன்பின்.’ † ‘உள்ளேன்.’ ‡ ‘அறிந்த.’
§ ‘புண்கழித்து.’

மாய்ந்த பூசன் மயக்கத் தானுந்
தாமே யேங்கிய தாங்கரும் பையுளுங்
கணவனொடு மூடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமு
நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து
தனிமகள் புலம்பிய மூதுபா லையுங்*
கழிந்தோர் தேளத் தழிபட ருறீ இ
யொழிந்தோர் புலம்பிய கையறு நிலையுங்
காதலி யிழந்த தபுதார நிலையும்
காதல னிழந்த தாபத நிலையு
நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச்
சொல்லிடை யிட்ட பாலை நிலையு
மாய்பெருஞ் சிறப்பிற் புதல்வன் பெயரத்†
தாய்தப வருஉந் தலைப்பெய னிலையும்
மலர்தலை யுலகத்து மரபுநன் கறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பின் றுறையிரண் டுடைத்தே.

இது முற்கூறிய காஞ்சித்திணை வீடேதுவாகவன்றி வாளாது நிலையின்மை தோன்றக் கூறும்பகுதி கூறுகின்றது. இதுவும் வாகையைத் தொகுத்தோதிய பொதுச்சூத்திரம்போலத் துறை யொடும் படாது நிலையின்மைப்பொருளை வகுத்தோதிய சூத்திர மென்றுணர்க.

(இ - ள்.) மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும்— பிறராற் றடுத்தற்கரிய கூற்றம் வருமெனச் சான்றோர் சாற்றிய பெருங்காஞ்சியானும்;

கூற்றுவது, வாழ்நாள் இடையறுது செல்லுங் காலத்தினைப் பொருள்வகையாற் கூறுபடுத்துங் கடவுள்; அதனைத்தான் பேரூர்க் கூற்றம்போலக் கொள்க. கூற்றத்திற்குக் காலமென் பது வேறன்மையிற் 'காலம் உலகம்' என (தொல்-சொல்-கிளவி-நூ.அ.) முன்னே கூறினர்.

(பாடம்) * 'தலைமகன் புலம்பிய முதுபாலை நிலையும்.'
† 'சிறுவன்.'

உதாரணம் :—

"பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
டயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினு
மல்லது செய்த லோம்புமி னதுதா
னெல்லாரு முவப்ப தன்றியு*
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே." (புறம்-ககூடு)

இது வீடேதுவாகவன்றி வீடுபேற்று நெறிக்கட் செல்லும் நெறியேதுவாகக் கூறியது.

"இருங்கடலுடுத்த" என்னும் (கூசுஉ) புறப்பாட்டும் அது.

கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்—இளமைத்தன்மை கழிந்து அறிவுமிக்கோர் இளமைகழியாத அறிவின் மாக்கட்குக் காட்டிய முதுகாஞ்சியானும்;

முதுமை மூப்பாதலான் அது காட்சிப்பொருளாக இளமை நிலையாமை கூறிற்றும்.†

உதாரணம் :—

"இனிநினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி‡
மறையென லறியா§ மாயமி லாயமொ
டுயர்நினே¶ மருதத் துறையுறத் தாழ்ந்த
நீர்நணிப்$ படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத்** தடுமெனப் பாய்ந்து
குளிததுமணற் கொண்ட கல்லா வீளமை
யளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரோ மாகிய வெமக்கே." (புறம்-உசஉ)

இது வீடுபெறுதற்கு வழிகூறியது.

பண்புறவருஉம் பகுதி நோக்கிப் புண்கிழித்து முடியும் மறத்தினுனும்—நன்றுகிய குணம் உறுநிலையாகப்†† பெறுகின்ற

(பாடம்) * 'எல்லாரும் புகழ்வ தன்றியும்.'
† 'இளமை நிலை கூறிற்றும்.' ‡ 'தங்குவழித் தங்கி.'
§ 'மறையென வறியா.' ¶ 'உயர்நிணை.'
$ 'நீர்க்கணிப்படிந்த.' ** 'நெடுமென் குட்டத்து.'
†† 'உறுவிலையாக.'

பகுதி யாராய்ந்து பெறுதற்குப் பட்ட விழுப்புண் தீர்ந்து வாழும் வாழ்க்கை நிலையின்மையின் அதனை வேண்டாது புண்ணைக் கிழித்து இறக்கும் மறக்காஞ்சியாதலும்;

இஃது யாக்கை நிலையின்மையை நோக்கிப் புகழ்பெறுதல் குறித்தது. இதனை வாகைத்திணைப்பின்னர் வைத்தார்; இக் காஞ்சியும் வாகையொடு மயங்கியுங் காஞ்சியாதல்பற்றி.

உதாரணம் :—

"பொருது வடுப்பட்ட யாக்கை நாணிக்
கொன்று முகந்தேய்ந்த வெஃகந் தாங்கிச்
சென்று களம்புக்க தானை தன்னெடு
முன்மலைந்து மடிந்த வோடா விடலை
நடுக னெனிலை நோக்கி யாங்குத்தன்
புண்வாய் கிழித்தனன் புகழோ னங்கிலைச்
சென்றுழிச் செல்க மாதோ வெண்குடை
யரசுமலைந்து தாங்கிய களிறுபடி பறந்தலை
முரண்கெழு தெவ்வர் காண
விவன்போ லிங்கிலை பெறுகயா னெனவே."

இது போர் முடிந்தபின் களம்புக்கு நடுகல் ஆயினானைக் கண்டு உடம்பினது நிலையின்மையினையும் பண்புறவருதலையும் நோக்கி இறந்தமை கூறலிற் காஞ்சியாயிற்று.

ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணெற் பேஎய் ஒம்பிய பேஎப்பக்கமும்—கங்குல யாமத்துக் காத்தற்குரிய சுற்றக்குழாமின்மையின் அருகுவந்து புண்பட்டோனைப் பேயானே காத்த பேய்க்காஞ்சியாதலும்;

பேய் காத்தலென்றலின் ஏமம் இரவில் யாமமாயிற்று; ஏமம் காப்புமாம். ஒம்புதலாவது அவனுயிர் போந்துணையும் ஓரியும் நரியுங் கிடந்தவன் தசையைக் கோடலஞ்சிப் பாதுகாத்தலாம்.

இது சுற்றத்தாரின்மை கூறலிற் செல்வநிலையாமையாயிற்று. பக்கமென்றதனாற் பெண்டிர் போல்வார் காத்தலும் பேயோம்பாத பக்கமுங் கொள்க.

உதாரணம் :—

"புண்ணனந்த ளுற்றுனைப் போற்றுநரின்மையிற்
கண்ணனந்த ரில்லாப்பேய் காத்தனவே—புண்ணு
முளையோரி யுட்க வுணர்வொடுசா யாத*
விளையோன் கிடந்த விடத்து."

என வரும்.

(பாடம்) * 'உணர்வொடுஞ் சாயா.'

ஏனைய வந்துழிக் காண்க.

இன்னன் என்று இரங்கிய மன்னையானும்—ஒருவன் இறந்துழி அவன் இத்தன்மையோனென்று ஏனையோர் இரங்கிய கழிவு பொருட்கண்வந்த மன்னைக்காஞ்சியானும் ;

இது பலவற்றின் நிலையாமைகூறி இரங்குதலின் மன்னைக் காஞ்சியென வேறுபெயர் கொடுத்தார். இது பெரும்பான்மை மன் என்னும் இடைச்சொற் பற்றியே வருமென்றற்கு மன் கூறினர்.* இது மன்னையெனத் திரிந்து காஞ்சியென்பதனை டுத்து நின்றது. † இஃது உடம்பொடு புணர்த்தல்.

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற்ருனு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் ருனு நனிபல கலத்தன் மன்னே
யென்பொடு தடிபடு வழியெல்லா மெமகீயு மன்னே
யம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே."
(புறம்-உகூடு)

என இப் புறப்பாட்டு மன் அடுத்து அப்பொருடந்தது.

"பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே ‡
யாடுநர்க் கீத்த பேரன் பினனே
யறவோர் புகழ்ந்த §வாய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே
மகளிர் சாயன் மைந்தர்க்கு மைந்து
துகளறு கேள்வி யுயர்ந்தோர் புக்கி
லனைய னென்ஞ தத்தக் கோனை
நினையாக் கூற்ற மின்னுயி ருய்த்தன்று
பைத லொக்கற் றழீஇ யதனை
வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்
நனந்தலை யுலக மரந்தை தூங்கக்
கெடுவி னல்லிசை சூடி
நடுகல் லாயினன் புரவல னெனவே."
(புறம்-உஉக)

இது மன் அடாது அப்பொருடந்தது.

"செற்றன் ருயினும்" என்னும் (உஉசு) புறப்பாட்டு முதலியனவும் அன்ன.

இதனை ஆண்பாற் கையறுநிலை யெனினும் அமையும்.

இன்னது பிழைப்பின் இதுவாகியரெனத் தன்னருஞ் சிறப்பின் வஞ்சினத்தானும் — இத்தன்மைய தொன்றினைச்

(பாடம்) * 'மன்னே கூறினர்.' † 'நின்றதென்னும்.'
‡ 'பல்புக ழினனே.' § 'ஆய்சொல் லினனே.'

செய்தலாற்றேனையின் இன்னவாறுகக் கடவேனெனக் கூறிய வஞ்சினக் காஞ்சியானும் ;

அது தான்செய்யக் கருதியது பொய்த்துத் தனக்கு வருங் குற்றத்தால் உயிர்முதலியன துறப்ப னென்றல். சிறப்பு-வீடு பேறன்றி உலகியலிற் பெருஞ்சிறப்பு.

உதாரணம் :—

"மெல்ல வந்தெ னல்லடி பொருந்தி
யீயென விரகுவ ராயிற் சீருடை
மூரசுகெழு தாயத் தரசோ தஞ்ச
மின்னுயி ராயினுங் கொடுக்குவ னிங்கிலத்
தாற்ற லுடையோ ராற்றல் போற்றுதென்
னுள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
வுய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரேஎ ஞயிற் பொருந்திய
திதீ னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளி
ரொல்லா முயக்கிடைக் குழைகவென் றூரே." (புறம்-எங)

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்" "மடங்கலிற் சினைஇய" என்னும் (எஉ, எக) புறப்பாட்டுக்கள் உயிருஞ் செல்வமும் போல்வன நிலையும் பொருளென நினையாது வஞ்சினஞ் செய்தன.

இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணுற் முன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்—இனிதாகிய நகையினையுடைய மனைவி தன் கணவன் புண்ணுறறோனைப் பேய் தீண்டுதலை நீக்கித் தானுந் தீண்டாத காஞ்சியானும் ;

என்றது, நகையாடுங் காதலுடையாள், அவனைக் காத்து விடுவனவுஞ் சுற்றுதலன்றி மூயங்குதற்கு உள்ளம் பிறவாதபடி அவன் நிலையாமையை எய்தினனென்றவாறு.

இதுவும் ஆண்பாற்காஞ்சியாம். இக் காஞ்சி யென்பதனை முன்னும்பின்னுங் கூட்டுக.

"தீங்கனி யிரவமொடு* வேம்பு †மனைச்சேரீஇ
வாங்குமருப் பி‡ யாழொடு பல்லியங் கறங்கப்
பையப் பெயர்த்து§ மைவிழு திழுகி¶

(பாடம்) * 'தீங்கினி யாஅமொடு.' † 'மனைச்சேரீஇய.'
‡ 'யாங்கு மருப்பு.' § 'கையப் பெயர்த்து.'
¶ 'மையிழு திழுகி.'

யையவி சிதறி யாம்ப லூதி
யிசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
*காக்கம் வம்மோ காதலந் தோழி†
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே.” (புறம்-உஅக)

என வரும்.

நீத்த கணவற் றீர்த்த வேலிற் பேஎத்த மனைவி ஆஞ்சி யானும்—உயிர்நீத்த கணவன் தன்னுறவை நீக்கின வேல்வடு வாலே மனைவி அஞ்சின ஆஞ்சிக்காஞ்சியானும்;

எஞ்ஞான்றும் இன்பஞ்செய்த கணவனுடம்பு அறிகுறி தெரியாமற் புண்பட்டு அச்சநிகழ்தலின், யாக்கை நிலையாமை கூறியதாம். பேஎத்த என்பது உரிச்சொன் மூதனிலையாகப் பிறந்த பெயரெச்சம். அஞ்சின, ஆஞ்சி யென நின்றது.

“இன்ப முடம்பு‡கொண் டெய்துவிர் காண்மிஞ்ஞே
வன்பி னுயிர்புரக்கு மாரணங்கு—தன்கணவ
னல்லாமை யுட்கொள்ளு மச்சம் பயந்ததே
புல்லார்வேண் மெய்சிதைத்த புண்.”
(தகடூர்யாத்திரை-புறத்திரட்டு-மூதின்மறம்-அ)

என வரும்.

இனி ‘வேலிற்பெயர்த்த மனைவி’ யென்று பாடமோதி, அவ் வேலான் உயிரைப்போக்கின மனைவி யென்று கூறி, அதற்குக்

“கௌவைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோ—னவ்வேலே
யம்பிற் பிறழுந் தடங்க ணவன்காதற்
கொம்பிற்கு மாயிற்றே கூற்று.” (புற-வெ-மாலை-காஞ்சி-உக)

என்பது காட்டுப.

நிகர்த்து மேல்வந்த வேந்தனெடு மூதகுடி மகட்பாடு அஞ் சிய மகட்பாலானும்—பெண்கோளொழுக்கத்தினைத்து மறுத் தல் பற்றிப் பகைவனுய் வலிந்து கோடற்கு எடுத்துவந்த அரச னெடு மூதகுடித் தலைவராகிய வாணிகரும் வேளாளருந் தத்தம் மகளிரைப் படுத்தற்கு அஞ்சிய மகட்பாற் காஞ்சியானும்;

வேந்தியலாவது உயிர்போற்றுது வாழ்தலின், அவரது நிலையின்மை நோக்கி, அவரோடொத்து மகளிரைப் படுத்தற் கஞ்சி மறுப்பாராதலின் அஞ்சியவென்றும், மேல்வந்த வென்றுங்

(பாடம்) * ‘காக்க வம்மோ.’ † ‘தொழில்.’
‡ ‘இன்னு முடம்பு.’

கூறினர். அம்முது குடிகள் தாம் பொருதுபடக் கருதுதலின் உயிரது நிலையாமை உணர்ந்த காஞ்சி யாயிற்று. பாலென்றதனுன் முதுகுடிகளேயன்றி 'அணிநிலைவகை' (தொல்-புறத்திணை-உ0) யெனப்பட்டார் கண்ணும் இத்துறை நிகழ்தல் கொள்க.

உதாரணம் :—

"நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாக்
கடிய *கூறும் வேந்தே தந்தையு
நெடிய வல்லது பணிந்துமொழி யலனே
இஃதிவர் படிவ மாயின் வையெயிற்
றரிமதர் மழைக்க ணம்மா வரிவை
மரம்படு சிறுதீப் போல
வணங்கா யினடான் பிறந்த வூர்க்கே." (புறம்-உசசு)

என வரும்.

"களிறணைப்பக் கலங்கின காஅ
தேரோடத் துகள்கெழுமின தெருவு
மாமறுகலின்† மயக்குற்றனவழி
கலங்கழாஅலிற் றுறை, கலக்குற்றன
தெறன்மறவ ரிறைகூர்தலிற்
பொறைமலிந்து நிலனெளிய
வந்தோர் பலரே வம்ப வேந்தர்
பிடியுயிர்ப் பன்ன கைகவ ரிரும்பி
ஞெவுற ழிரும்புறங் காவல் கண்ணிக்
கருங்கண் கொண்ட நெருங்கல் வெம்முலை
மைய ஞெக்கிற் றையல ரயந்தோ
ரளியர் தாமேயிவ டன்னே மாரே
செல்வம் வேண்டார் செருப்புகல் வேண்டி
நிரலல் லோர்க்குத் தாரோ வில்லெனக்
கழிப்பிணிப் பலகையர் கதுவாய்‡ வாளர்
குழாஅங் கொண்ட குருதியம் புலவாடு
கழாஅத் தலைய கருங்கடை நெடுவே
§லின்ன மறவர்த் தாயினு மன்ஞெ
வென்ஞ வதுகொ ரூனே
பன்னல் வேலி¶யிப் பணைநல் லூரே. (புறம்-உசஅ)

இதனுள் "நிரலல் லோர்க்குத் தாரோ வில்லென" என்றலின், அரசர்க்கு மகட்கொடைக் குரியரல்லாத அணிநிலைவகை யோர்பாற் பட்டது.

மூலையும்? முகனுஞ் சேர்த்திக் கொண்டோன் தலையொடு முடிந்த நிலையொடு தொகையஇ சுரைந்தாகு மென்ப—தன்கண

(பாடம்) * 'கடவும்.' † 'மாவழங்கலின்.' ‡ 'கதுவாய்.'
§ 'இன்னம் பிறவர்த் தாயினும்.' ¶ 'பன்னெல்வேலி.

வன் தலையைத் தன்முகத்தினும் முலையினுஞ் சேர்த்திக்கொண்டு, அத்தலையான் மனைவி யிறந்த நிலைமையானுந் தொகைபெற்றுக் காஞ்சி பத்திவகைப்படுமென்று கூறுவாராசிரியர் என்ற வாறு.

தலை, அவள் இறத்தற்கேதுவாகலின் அது வினைமுதலா யிற்று. மேல் துறை இரண்டென்பாராகலின், இவை பத்தும் ஒருதுறையாமென்றற்கும் இவை ஆண்பாற்குரிய வென்றற் கும் ஈரைந்தென வேறோர் தொகை கொடுத்தார். அவன் தலை யல்லது உடம்பினை அவள் பெறுமையின், அவன் யாக்கைக்கு நிலையின்மை யெய்தலின், இதுவும் ஆண்பாற்கே சிறந்ததாம். மனைவி இறந்துபடுதலும்* அதனாலெய்துதலின் மேல்வருகின்ற பெண்பாற்கும் இயைபுபடப் பின்வைத்தார். இதற் கியைபு படத் தொடாக்காஞ்சியும் ஆஞ்சிக்காஞ்சியும் பெண்பாலொடு பட்ட ஆண்பாற் காஞ்சியாதலின் முன் வைத்தார். இவை ஒரு வகையாற் பெண்பாற்கண்ணு நிலையின்மையுடைய வாயினும் இரண்டிடத்தும் ஒதிச் சூத்திரம் பல்காமற், சிறப்புடைய ஆண் மகற்கே ஒதிப் பெண்பாற் பகுதியுந் தழீஇயினு ரென்றுணர்க. இனி வருகின்ற பத்தும் பெண்பாற்கே யுரிமையின் அவற்றிற் கும் ஈரைந்தென்பதனைக் கூட்டிமுடிக்க.

உதாரணம்:—

> "நிலையி லுயிரிழத்தற் கஞ்சிக் கணவன்
> றலையொழிய மெய்பெறுள் சாய்ந்தா—டலையுலல்
> வண்ணம் படைத்தான் முழுமெய்யு மற்றத
> னுண்ணின்ற தன்றே வுயிர்."

என வரும்.

பேரிசை மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம் ஆய்ந்த பூசன் மயக்கத்தானும்—பெரும்புகழுடையனாகி மாய்ந்தானொருவனைச் சுற்றிய பெண்கிளைச் சுற்றங் குரல்குறைவுபட்ட கூப்பீட்டு †மயக்கத்தானும்;

என்றது, சுற்றத்தார் அழுகைக்குரல் விரவியெழுந்த ஓசையை. ஆய்ந்தவென்பது உளளத னுணுக்கம். 'மாய்ந்த பூசன் மயக்க' மென்று பாடமாயிற், சுற்றம ஒருங்கு மாய்ந்த வழிப் பிறரழுத பூசன் மயக்கமென்று கொள்ளினும் அமையும். ஈண்டு மாய்ந்த மகனென்றதனாலுஞ் சுற்றப்படுவானை அறிவித் தற்கே; ஆண்பாலும் உடன்கூறியதன்று. மேலனவற்றிற்கும் இஃதொக்கும்.

(பாடம்) * 'இறந்துபாடும்.' † 'கூப்பிட்டமெய்மயக்கத்தானும்.'

உதாரணம் :—

"இரவலர் வம்மி னெனவிசைத்த லின்றிப்
புரவலன் மாய்ந்துழியும் பொங்கு—முரைமயங்க*
வேற்கண் ணியரழுத வெம்பூசல் கேட்டடங்கா
தோற்கண்ண போலுந் துடி."

(தகடூர் யாத்திரை, புறத்திரட்டு-இரங்கல்-உ)

என வரும்.

†"மீனுண் கொக்கின் றூவியன்ன" (உஎஎ) புறப்பாட்டும் அது.

தாமே ஏங்கிய தாங்கரும் பையுளும்—அச்சுற்றத்தாரு மின்றி மனைவியர் தாமே தத்தங் கொழுநரைத் தழீஇயிருந்து அழுதது கண்டோர் பொறுத்தற்கரிய நோயானும்;

தாமே யெனப் பன்மை கூறினர், ஒருவர்க்குத் தலைவியர் பலரென்றற்கு. ஏகாரஞ் சுற்றத்திற் பிரித்தலிற் பிரிநிலை.

இது செல்வமும் இன்பமும் ஒருங்கு நிலையாமை கூறியது.

"மழைகூர் பாஞ்சட் கழைபிணங் கடுக்கத்துப்
புலிவழங் கதரிடைப்‡ பாம்புதூங் கிறுவரை
இருள்புக்குத் துணிந்த§ வெண்குவரற் கல்லா
யொருதனி வைகிய தனைத்தே பெருவளத்து
வேனின் மூதூர்ப் பூநாறு நறும்பக
லெழுதுசுவர் மாடத்துக் கிளையுடை யொருசிறை
யவரின்று நிகழ்தரு முறவே யதனா
லழுதுபனி கலுழ்ந்தவெங் கண்ணே யவ்வழி
நீர்நீந்து பாவை யசைவது நோக்கிச்
சேணிடை யகன்ற துயிலே யதுவினி
யவருடைக் கனவோ டிவ்வழி யொருநாள்
வாரா தாயினும் யாதாங் கொல்லோ
மெலிந்து மெலியுமென் யாக்கையிற்
கழிந்த கழியுமென் ஞருயிர் நிலையே."

என வரும்.

(பாடம்) * 'உரையழுங்க.'

† 'மீனுண் கொக்கின் றூவி யன்ன'
வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
யீன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே."

‡ 'புலிவழங் காரிடை.' § 'துறந்த.'

"கதிர்மூக் காரல் கிழ்ச்சேற் றெளிப்ப" என்னும் (உசசு) புறப்பாட்டும் அது.

தாமே யேங்கிய என்பதற்குச் சிறைப்பட்டார் தாமே தணித்திருந்த தென்றுகூறிக்,

"குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினு
மாளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபத
மதுகை யின்றி வயிற்றுத் தீத்தணியத்
தாமிரந் துண்ணு மளவை
யீன்ம ரோவிவ் வுலகத் தானே." (புறம்-எச)

என்னும் புறப்பாட்டுக் காட்டுவாரும் உளர்.

கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச் செல்வோர் செப்பிய மூதானந்தமும்—மனைவி தன் கணவன் முடிந்தபொழுதே உடன் முடிந்துபோகிய செலவுநினைந்து கண்டோர் பிறர்க் குணர்த்திய மூதானந்தத்தானும் ;

ஆனந்தம் - சாக்காடு. முதுமைகூறினார், உழுவலன்புபற்றி. இப்படியிறத்தலின் இஃது யாக்கை நிலையின்மை.

உதாரணம் :—

"ஒருயி ராக வுணர்க வுடன் கலந்தார்க்
கிருயி ரென்ப ரிடைதெரியார்—போரில்
விடனேந்தும் வேலோற்கும் வெள்வளையி னூட்கு
முடனே யுலந்த துயிர்."

(புற-வெ-மாலை-சிறப்பிற்-பொது-கூ)

என வரும்.

நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து தனிமகள் புலம்பிய முதுபாலையும்—மிகுதிமிக்க* அருநிலத்தே தன் கணவனை இழந்து தனித்த தலைமகள் தன் தனிமையை வெளிப்படுத்தின முதுபாலையானும் ;

புலம்பிய வெனவே அழுதல் வெளிப்படுத்தல்† கூறிற்று. பாலை யென்பது பிரிவாகலின், இது பெருமபிறி தாகிய பிரிவா தல் நோக்கி முதுபாலை யென்றார். நனிமிகு சுரமென்று இருகால்‡ அதனருமை கூறவே, பின்பனிப் பிரிவு அதற்குச் சிறந்த தன்றுயிற்று.§

(பாடம்) * 'மிகுதி தக்க.' † புலப்படுத்தல்.' ‡ 'இருக்கால்.'
§ 'பின்பனிதானு முரித்தென மொழிப' என்று அகத் திணையியலுள் ஓதியது கொண்டு இது கூறினார்.

இதுவும் இன்பமுஞ் செல்வமும் ஒருங்கு நிலையின்மை கூறிற்று.

"இளையரு முதியரும் வேறுபுலம் படர
வெடுப்ப வெழாஅய் மார்பமண் புல்ல
விடைச்சுரத் திறுத்த மள்ள விளர்த்த
வளையில் வறுங்கை யோச்சிக் கிளையு
ளின்ன ஞயின னிளையோ னென்று
நின்னுரை செல்லு மாயின்* மற்று
முன்னூர்ப் பழுனிய கோளியா லத்துப்
புள்ளார் யாணர்த் தற்றே யென்மகன்
வளனுஞ் செம்மலு மெமக்கென நாளு
மாஞது புகழு மன்னே
யாங்கா குவள்கொ லளிய டானே." (புறம்-உகிச)

என வரும்.

கழிந்தோர் தேஎத்து அழிபடர் உறீஇ ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்—கணவனோடு மனைவியர் கழிந்துழி† அவர்கட்பட்ட அழிவுபொருளெல்லாம் பிறர்க்கு அறிவுறுத்திச் தாம் இறந்துபடா தொழிந்த ஆயத்தாரும் பரிசில்பெறும் விறலியருந் தனிப்படருழந்த செயலறு நிலைமையானும்;

ஒழிந்தோரென வரையாது கூறினமையிற் கழிந்தோராற் புரக்கப்படும் அவ்விருதிறத்தாரையும் உடன்கொள்க. கழிந்தோ ரென்ற பன்மையால் ஆண்பாலுந் தழீஇயினர்; கையறுநிலை அவரையின்றி அமையாமையின். ஆண்பாற் கையறுநிலை மன்னீக்காஞ்சியுள் அடங்கும். அழிவாவன புனல்விளையாட் டும், பொழில விளையாட்டுந், தலைவன்வென்றியும் போல்வன.

உதாரணம்:—

"தேரோன் மகன்பட்ட செங்களத்து ளிவ்வுடம்பிற்
றீராத பண்பிற் றிருமடந்தை—வாரா
வுலகத் துடம்பிற் கொழிந்தனள் கொல்லோ
வலகற்ற கற்பி னவள்."

என வரும்.

காதலி இழந்த தபுதார நிலையும்—தன் மனைவியைக் கணவ னிழந்த தபுதார நிலையானும்;

என்றது தாமிழந்த நிலை. தன் காதலியை இழந்தபின் வழிமுறைத் தாரம் வேண்டின், அது காஞ்சிக் குறிப்பன்று என்றற்கும், எஞ்ஞான்றும் மனைவியில்லாதானுந் தபுதார நிலைக்கு உரியனாயினும், அது காஞ்சியாகாதென்றற்கும், தபுதார

(பாடம்) * 'சொல்லுமாயின்.' † 'கழிந்தவழி.'

நிலையென்றே பெயர்பெறுதன் மரபென்றற்குங், காதலியிழந்த நிலையுமென்றே ஒழியாது, பின்னுந் தபுதாரநிலையு மென்றார். தலைவர் வழிமுறைத்தாரமும் எய்துவாராகலின் அவர்க்கு நிலை யாமை சிறப்பின்மையின் ஆண்பாற் காஞ்சியன்றுயிற்று.

இஃது யாக்கையும் இன்பமும் ஒருங்கு நிலையின்மையாம்.

உதாரணம் :—

"யாங்குப் பெரிதாயினு நோயள வெனைத்தே
யுயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையிற்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்ளிடைப் பொத்திய வீளைவிற கீமத்
தொள்ளழற் பள்ளிப் பாயல் சோத்தி
ஞாங்கர் மாய்ந்தனண் மடந்தை
யின்னும் வாழ்வ லென்னிதன் பண்பே." (புறம்-உசஙி)

என வரும்.

காதலன் இழந்த தாபதநிலையும்—காதலனையிழந்த மனைவி தவம் புரிந்தொழுகிய நிலைமையானும் ;

இருவரும் ஒருயிராய் நிகழ்ந்தமையின் உயிரும் உடம்பும் இன்பமுஞ் செல்வமும் ஒருங்கிழந்தாள் தலைவியேயாம்.

இதனை இல்லறம் இழத்தலின் அறநிலையின் அமையு மென்ப.

உதாரணம்:—

"அளிய தாமே சிறுவெள் ளாம்ப
லிளைய மாகத் தழையா யினவே
யினியே,
பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்
தின்னு வைக லுண்ணும்
அல்லிப் படூஉம் புல்லா யினவே." (புறம்-உசஅ)

என வரும்.

நல்லோள் கணவனொடு நனியழற் புகுஇச் சொல்லிடை யிட்ட பாலைநிலையும் - கற்புடைமனைவி தன்கணவன் இறந்து அவனோடு எரிபுகுதல் வேண்டி எரியை விலக்கினோரோடு உறழ்ந்துகூறிய புறங்காட்டு நிலையானும்;

எல்லாநிலத்தும் உள தாகி வேறுதனக்கு நிலனின்றி வருத லானும் நண்பகல்போல் வெங்கனலான் வெதுப்புதலானும் புறங்காட்டைப் பாலை யென்றார்; பாலைத்தன்மை எய்திற்று என்றற்கு நிலையென்றார்.

உதாரணம்:—

"பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
யணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் தட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த* கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேஎ வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியு
மூயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்கோட்டுப் பண்ணிய கருங்கோட் டூம
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே.' (புறம்-உசசு)

என வரும்.

மாய்பெருஞ் சிறப்பிற் சிறுவற் பெயரத் தாய் தப வரூஉந் தலைப்பெயல் நிலையும் — பொருகளத்துப் பொருதுமாயும் பெருஞ்சிறப்பிற் றீர்ந்து தன்மகன புறங்கொடுத்துப் போந்தா னெக, அதுகேட்டுத் தாய் சாக்காடு துணிந்து சென்று மகனைக் கூடுங் கூட்டமொன்றனும்; இனி அவன் பிறர்சிறப்பு மாய்தற் குக் காரணமாகிய பெருஞ்சிறப்பொடு களப்பட்டுத் துறக்கத் துப் போயவழி அவனெடு இறந்துபட வரும் தாயது தலைப்பெய னிலைமையொன்றனும்;

இவ் விருகூறும் உய்த்துக்கொண்டுணர்த லென்னும் உத்தி. நிலையென்றதனால் அவள் இறந்துபடாது மீடலுஞ் சிறுபான்மையாம் காஞ்சி யென்றுகொள்க, அஃது அன்பிற்கு நிலையின்மையாம்.

"வாதுவல் வயிறே வாதுவல் வயிறே
நோவே னத்தை நின்னீன் றனனே
பொருந்தா மன்ன ரருஞ்சம முருக்கி
யக்களத் தொழிதல் செல்லாய் மிக்க
புகர்முகக் குஞ்சர மெறிந்த வெஃக
மதன்முகத் தெழிய நீபோந் தனையே
யதனு, லெம்மில் செய்யாப் பெரும்பழி செய்த
கல்லாக் காளையை யீன்ற வயிறே."

(தகடூர் யாத்திரை, புறத்திரட்டு மூன்மறம்-கூ)

இத் தகடூர்யாத்திரை கரியிடை வேலொழியப் போந்ததற் குத் தாய்தபவந்த தலைப்பெயனிலை,

(பாடம்) * 'அடகிடைக்.'

"எற்கண் டறிகோ வெற்கண் டறிகோ
வென்மக ளுத லெற்கண் டறிகோ
கண்ணே கணைமுழ் கினவே தலையின்
வண்ண மாலையும் வாளிவிடக் குறைந்தன
வாயே, பொங்கு நுணைப் பகழி மூழ்கலிற் புலர்வழித்
தாவ* நாழிகை யம்புசெறித் தற்றே
நெஞ்சே வெஞ்சரங் கடந்தன குறங்கே
நிறங்கரந்து பலசர நிரைத்தன வதளு
லவிழ்பூ வப்பணைக் கிடந்தோன்
கமழ்பூங் கழற்றீங் காய்போன் றனனே."

இத் தகடூர்யாத்திரை துறக்கத்துப்பெயர்ந்த நெடுங்கோளன்† தாய் இறந்துபட்ட தலைப்பெயனிலை.

"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோண்
மூளரி மருங்கின் மூதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன‡ ஞயி னுண்டவென்
மூலையறுத் திடுவன் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றுகிய
படுமகன் கிடக்கை காணூஉ
வீன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே." (புறம்-உஎஅ)

இப் புறப்பாட்டு மீண்டது.

"நன்றுபுறந்தருதல்" என்னும் (நகஉ) புறப்பாட்டும் அது.

மலர்தலை உலகத்து மரபு நன்கறியப் பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தாது—அகன்ற இடத்தினையுடைய உலகங்களிடத்து வரலாற்றுமுறைமையினைப் பலரும் பெரிதுணரும் படியாகப் பிறந்தோரெல்லாரும் இறந்துபோகவும் எஞ்ஞான்றும் இறப்பின்றி நிலைபெற்ற புறங்காட்டினை வாழ்த்துதலானும்;

உதாரணம்:—

"உலகு பொதியுருவந் தன்னுருவ மாகப்
பலர்பரவத் தக்க பறந்தலை நன்காடு
புலவுங்கொ லென்போல் புலவுக் களத்தோ
டிகனெடுவே லானை யிழந்து."

(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-இரங்கல்-கக)

என வரும்.

"களரி பரந்து கள்ளி போகிப்
பகலுங் கூகை கூகையொடு பிறழ்வர

(பாடம்) * 'புலாவழித் தாவா.' † 'நெடுங்கோளன்.'
‡ 'உலந்தனன்.'

வீம விளக்கிற் பேஎய் மகளிரோ
டஞ்சுவந் தன்றி மஞ்சுபடு முதுகாடு*:
நெஞ்சமர் காதல ரழுத கண்ணீர்
ரென்புபடு சுடலை வெண்ணீ றவிப்ப
வெல்லாப் புறனுந் தான்கண் டிலகத்து
மன்பதைக் கெல்லாந் தானுய்த்
தன்புறங் காண்போர்க் காண்பறி யாதே.''† (புறம்-சுகூ)

இதுவும் அது.

தொகைஇ ஈரைந்து ஆகுமென்ப — தொகைபெற்றுக் காஞ்சி பத்துவகைப்படுமென்று கூறுவர் ஆசிரியர்; நிறை யருஞ் சிறப்பிற் றுறை இரண்டு உடைத்தே—ஆதலான்‡ அக் காஞ்சி நிறுத்தற்கு எதிர் பொருளில்லாத பெரிய சிறப்பினை யுடைய ஆண்பாற்றுறையும் பெண்பாற்றுறையுமாகிய இரண்டு துறையினையுடைத்து என்றவாறு.

எனவே முற்கூறிய பத்தும் இப்பத்துமாக இருபதென் பதுங் கூறினராயிற்று. நிறையருஞ் சிறப்பென்றதனானே மக் கட்குந் தேவர்க்கும் உள்ள நிலையாமையே காஞ்சிச் சிறப்புடைத் தாகக் கூறப்படுவது; ஏனை அஃறிணைப்பகுதிக்கண்ணுள்ள நிலையாமை காஞ்சிச்சிறப்பன்று என்றுணர்க. (உச)

அ0. பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே நாடுங் காலை நாலிரண் டுடைத்தே.

இது மேற் புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின் (தொல்-புறத்திணை-க) என்புழிக் கிடக்கைமுறை கூறிய முறை யான் இறுதிநின்ற பாடாண்டிணைக்குப் பொதுவிலக்கணம் உணர்த்துவான் அதற்குப் பெயர் இன்ன தெனவும், அது கைக் கிளைப்புறனுமெனவும், அஃது இத்திணைப் பொருளுடைத்தென வுங் கூறுகின்றது.

(இ - ள்.) பாடாண்பகுதி கைக்கிளைப்புறனே பாடா ணெனப்பட்ட புறத்திணையது கூறு கைக்கிளையென்று கூறப் பட்ட அகத்திணைக்குப் புறனும்; நாடுங்காலை நாலிரண்டு உடைத்து—தன்னை நாடிச் சொல்லுவார் செய்யுளுண் முடிந்த பொருள் பாடாணுகவே நிறுப்ப நாடுங்காலத்து எண்வகைப் பொருளுடைத்து என்றவாறு.

பாடாணென்பது பாடுதல் வினையையும் பாடப்படும் ஆண் மகனையும் நோக்காது, அவனதொழுகலாறுகிய திணை யுணர்த்

(பாடம்) * 'அஞ்சுவந் தமிய மென்ன துஞ்சுவந்—தன்றி மஞ்சு படுமுது காடு.'
† 'காண்பொல் லாதே.' ‡ 'என்பதாகலான்.'

தினமையின் விணைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. ஒரு தலைவன் பரவலும்* புகழ்ச்சியும் வேண்ட, ஒரு புலவன் வீடுபேறு முதலிய பரிசில் வேண்டலின் அவைதம்மின் வேறுகிய ஒருதலைக்காம மாகிய கைக்கிளையோ டொத்தலிற் பாடாண்டிணை கைக்கிளைப் புறனுயிற்று. வெட்சி முதலிய திணை களுஞ் சுட்டி யொருவர் பெயர் கொடுத்துங் கொடாதும் பாடப் படுதலிற் பாடாண்டிணையாயினும், ஒருவனை ஒன்று நச்சிக் கூறுமையின், அவர் பெறுபுகழ் பிறரைவேண்டிப் பெறுவதன் றித் தாமே தலைவராகப் பெறுதலின், அவை கைக்கிளைப்புறன் ஆகாமை உணர்க. இவ் விருகூறுந் தோன்றப் பகுதியென்றார். புகழை விரும்பிச் சென்றோர் வெட்சி முதலியவற்றைப் பாடின், அவை கைக்கிளைப்புறன் ஆகாதென உணர்க.

இதனுனே புறத்திணை ஏழற்கும் பெயரும் முறையும் ஒரு வாற்றுற் கூறினராயிற்று. நாலிரண்டாவன இப்பாடாண் டிணைக்கு ஒதுகின்ற பொருட்பகுதி† பலவுங் கூட்டி ஒன்றும், இருவகை வெட்சியும் பொதுவியலும் வஞ்சியும் உழிஞையுந் தும்பையும் வாகையுங் காஞ்சியுமாகிய பொருள்கள் ஏழுமாகிய எட்டுமாம்.

இனி இக்கூறிய ஏழுதிணையும் பாடாண்டிணைப் பொருளா மாறு காட்டுங்கால் எல்லாத்திணையும் ஒத்ததாயினும், அவை பெரும்பான்மையுஞ் சிறுபான்மையுமாகி வருதலும் அவை இரண்டும் பலவும் ஒருங்குவருதலும் பாடாண்டிணைக்கு மேற் கூறும் பொருளும் விராய் வருதலுமாமென்று உணர்க.

உதாரணம்:—

> "மூனைப்புலத்துக் கஃதுடை முன்னிரைபோல் வேந்தர்
> மூனைப்புலம்பு முன்னிரையும் வீசி—யெனைப்புலத்துச்
> சென்றது நின்சீர்த்தி தேர்வளவ தெவ்வர்போ
> னன்றுமுண் டாக நமக்கு."

இது கூற்றுவகையானன்றிக் குறிப்புவகையான் ஒன்று பயப்பானுக்கி நிணைத்துரைத்தலின் வெட்சியும் வாகையும் வந்த பாடாண்டிணையாம்.

> "அவலெறிந்த வுலக்கை‡ வாழைச் சேர்த்தி
> வலைக்கை மகளிர் வள்ளை கொய்யும்
> மூடன்தை நெல்லின் விளைவயற் பரந்த
> தடந்தா ணுரை யிரிய வயிரைக்
> கொழுமீ னுர்கையு மரந்தொறுங் குழாஅலின்§

(பாடம்) * 'பாடுதலும்.' † 'பொருளும் பகுதியும்.'
‡ 'அவலெறி யுலக்கை.' § 'குழறலின்.' 'குமுறலின்.'

வெண்கை மகளிர் வெண்குரு கோப்பு
மழியா விழவி னிழியாத் திவவின்
வயிரிய மாக்கள் பண்ணமைத் தெழீஇ
மன்ற கண்ணி மறுகுசிறை பாடு
மகன்கண் வைப்பி னுடிம னளிய
விரவுவேறு புலமொடு குருதி வேட்ட*
மயிர்கோதை மாக்கண் கடிய கழற
வமர்கோ ணேரிகந் தாரெயில் கடக்கும்
பெரும்பல்† யானைக் குட்டுவன்
வரம்பி ரூனை பரவா வுங்கே.” (பதிற்று-உங)

இதில் இமையவரம்பன் நம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக்கௌதமனார் துறக்கம் வேண்டினரென்பது குறிப்பு வகையாற் கொள்ள வைத்தலின் இது வஞ்சிப்பொருள் வந்த பாடாணியிற்று.

“இலங்கு தொடிமருப்பின்” என்னும் பதிற்றுப்பத்து உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பாகிய உழிஞையாயினும் பதின்றுலாம் பொன் பரிசில் பெற்றமையிற் பாடாணியிற்று.

“பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே
பணியா வுள்ளமொ டணிவரக் கெழீஇ
நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே
வணங்குசிலை பொருதநின் மணங்கம ழுகல
மகளிர்க் கல்லது மலர்ப்பறி† யலையே
நிலந்திறம் பெயருங் காலை யாயினுங்
கிளந்த சொன்னீ பொய்ப்பறி யலையே
சிறியிலை யுழிஞைத் தெரியல் சூடிக்
கொண்டி§ மிகைபடத் தண்டமிழ் செறித்துக்
குன்று நிலை¶ தளர்க்கு முருமிற் கீறி
யொருமுற் றிருவ ரோட்டிய வொள்வாட்
செருமிகு தானை வெல்போ ரோயே
யாடுபெற் றழிந்த மள்ளர் மாறி
நீகண் டனையே மென்றனர் நீயு
நுங்குங் கொண்டியும் வென்றீ யதனுற்$
செல்வக் கோவே சேரலர் மருக
சாறிரை யெடுத்த முழங்குகுரல் வேலி
நனந்தலை யுலகஞ் செய்தநன் றுண்டெனி
னடையடுப் பறியா வருவி யாம்ப
லாயிர வெள்ள வூழி
வாழி யாத வாழிய பலவே.” (பதிற்று-சுங)

இது வாகைத்துணைப் பாடாண்பாட்டு.

(பாடம்) * ‘வட்ட.’ † ‘பெருமலை.’ ‡ ‘மலைப்பறி.’
§ ‘கொண்டமை.’ ¶ ‘குன்றினிலை.’
$ ‘நுங்குங் கொண்டியும் வென்றீயே.’

இப் பதிற்றுப்பத்து மூறும் இவ்வாறே வருதலிற் பாடாண் டிணையேயாயிற்று. புறத்துள்ளும் இவ்வாறு வருவனவும் உணர்க. (உடு)

அக. அமரர்கண் முடியு மறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி யொன்று மென்ப.

இது முன்னர் எட்டெனப் பகுத்த பாடாண்டிணையுள் ஏழொழித்துத் தன் பொருட்பகுதிகள் எல்லாங் கூடி ஒன்று மென்ற பாடாண்டிணை தேவரும் மக்களு மென இருதிறத் தார்க்கே உரிய என்பார் அவ்விரண்டினுள் தேவர்பகுதி இவை யென்ப தணர்த்துகின்றது.

(இ - ள்.) அமரர்கண்முடியும் அறுவகையானும்—பிறப்பு வகையானன்றிச் சிறப்புவகையால் தேவர்கண்ணே வந்து முடிதலுடையவாகிய அறுமுறை வாழ்த்தின்கண்ணும்; புரை தீர் காமம் புல்லிய வகையினும்—அத்தேவரிடத்தே உயர்ச்சி நீங்கிய பொருள்களே வேண்டுங் குறிப்புப் பொருந்தின பகுதிக் கண்ணும்; ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப—மேற் பாடாண் பகுதியெனப் பகுத்து வாங்கிக்கொண்ட ஒன்றனுள் தேவரும் மக்களுமெனப் பகுத்த இரண்டனுள் தேவர்க்கு உரித்தாம் பகுதியெல்லாந் தொக்கு ஒருங்குவருமென்று கூறுவார் ஆசிரியர் என்றவாறு.

அமரர்கண்ணே வந்து முடியுமெனவே அமரர் வேறென் பதூஉம் அவர்கண்ணே வந்து முடிவன வேறென்பதூஉம் பெற்றும். அவை முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழை யும் முடியுடை வேந்தரும் உலகுமாம். இவை தத்தஞ் சிறப்பு வகையான் அமரர்சாதிப் பால வென்றல் வேதமுடிவு. இதனனே பிறப்புமுறையாற் சிறந்த அமரரை வாழ்த்தலுஞ் சொல் லாமையே முடிந்தது தந்திரவுத்தி வகையான். வகையென்ற தனனே அமரரை வேறு வேறு பெயர் கொடுத்து வாழ்த்தலும் ஏனைப் பொதுவகையாற் கூறி வாழ்த்தினன்றிப் பகுத்துக் கூறப்படாமையுங் கொள்க. புரை, உயர்ச்சியாதலின் உயர்ச்சி யில்லாத காமமாவது மறுமைப்பயன்பெறுங் கடவுள்வாழ்த் துப்போல் உயர்ச்சியின்றி இம்மையிற் பெறும்பயனாதலின், இழிந்த பொருள்களிற் செல்லும் வேட்கைக் குறிப்பு. புல்லிய வகையாவது, அம்மனக்குறிப்புத் தேவர்கண்ணே பொருந்திய கூறுதன் பொருட்டானும் பிறன்பொருட்டானும் ஆக்கத்து மேல் ஒருவன் காமுற்றவழி அவை அவற்குப் பயன்கொடுத்த

லாம. இது ஒன்றனுடைய பகுதியென்க. இத்திணைப் பகுதி யென்று இரண்டிறந்தன எனக்கூறுது, வாளாதே பகுதியென் றமையில் தேவரும் மக்களுமென இரண்டேயாயிற்று, அத் தேவருட் பெண்டெய்வங் 'கொடிநிலை கந்தழி' என்புழி அடங் கும். மக்களுட் பெண்பால் பாடுதல் சிறப்பின்மையிற் "செயிர் தீர் கற்பிற் சேயிழை கணவ" (புறம்-கூ) என்றாற்போலச் சிறு பான்மை ஆண்மக்களோடுபடுத்துப் பாடுப. வகை யென்ற தனுன் வாழ்த்தின்கண் மக்கட்பொருளும் உடன்றழுவினும் அவை கடவுள் வாழ்த்தாமென்று கொள்க.

உதாரணம் :—

"எரியெள்ளு வன்ன நிறத்தன் விரியிணர்க்
கொன்றையம் பைந்தா ரகலத்தன் பொன்ரு
ரெயிலெரி யூட்டிய வில்லன் பயிலிருட்
காடமர்ந் தாடிய வாட னீடிப்
புறம்புதை தாழ்ந்த சடையன் குறங்கறைந்து
வெண்மணி யார்க்கும் விழவின னுண்ணூற்
சிரந்தை யிரட்டும் விரலனிரண் டுருவா
யீரணி பெற்றவெழிற் றகைய னேரு
மிளம்பிறை சேர்ந்த நுதலன் களங்கனி
மாறேற்கும் பண்பின் மறுமிடற்றன் றேறிய
சூலம் பிடித்த சுடர்ப்படைக்
காலக் கடவுட் குயர்கமா வலனே."

இது கடவுள் வாழ்த்து.

தொகைகளிலுங் கீழ்க்கணக்கிலும் உள்ள கடவுள் வாழ்த் தெல்லாம் இதன்கண் அடக்குக.

இனி அறுமுறை வாழ்த்தும் வருமாறு :—

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்." (குறள்-நீத்-அ)

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றுங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை." (குறள்-வான்-இ)

"நாகின நந்தி யினம்பொலியும் போத்தென
வாய்வா ளுழவர் வளஞ்சிறப்ப வாயர்
அகன்ரூர் சுரைய கறந்தபால் சீர்சிறந்த
வான்பொருள் வட்டத் தயிராகு மத்தயிர்
மெல்லக் கடைவிடத்து நெய்தோன்று நெய்பயந்து
நல்லமு தன்ன வளையாகு நல்ல
புனிதமு மெச்சிலு நீக்கித் துனியின்றி
யன்ன பெரும்பயத்த வாகலாற் ரூன்மரபிற்
காரார் புறவிற் கலித்த புதர்மாந்தி
யாவா ழியரோ நெடிது."

ஏனைய வந்துழிக் காண்க.

"புயல்சூடி நிவந்த பொற்கோட் டிமயத்து
வியலறைத் தவிசின் வேங்கை வீற்றிருந்தாங்
கரிமான் மீடத் தரசுதொழ விருந்து
பெருநிலச் செல்வியொடு திருவீழ் மார்பம்
புதல்வருந் தாமு மிகலின்று பெறூஉந்
துகளில் கற்பின் மகளிரொடு விளங்கி
மூமூமதிக் குடையி னமுதுபொதி நீழ
லெழுபொழில் வளர்க்கும் புகழ்சால் வளவன்
பிறந்தது பார்த்துப் பிறர்வாய் பரவின்
னறங்கெழு சேவடி காப்ப வுறந்தையோ
ழேழி யூழி வாழி
யாழி மானில் மாழியிற் புரந்தே."

இது கடவுள் வாழ்த்தி ஒழியாது தனக்குப் பயன்படுவோன் ஒருவனையுங் கூட்டி வாழ்த்தலின் புரைதீர்காமம் புல்லிய வகையாயிற்று. (உசு)

அஉ. வழங்கியன் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியுங் கருதிய பாங்கினு
முன்னோர் கூறிய குறிப்பினுஞ் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின் ருங்கே.

இது மேல் 'ஒன்றன்பகுதி' (தொல்-புறத்திணை-உசு.) என்புழித் தோற்றுவாயாகச் செய்த இருபகுதியுண் மக்கட் பகுதி கூறுகின்றது.

(இ - ள்.) பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்—ஒரு தலைவன் தன்னைப் பிறர் வாழ்த்துதலும் புகழ்ந்துரைத்தலுங் கருதிய பக்கததின்கண்ணும; வகைபட முன்னோர் கூறிய குறிப்பினும்—அறம்பொருளின்பங்களின் கூறுபாடு தோன்ற முன்னுள்ளோர் கூறிய குறிப்புப்பொருளின் கண்ணும்; செந்துறை நிலைஇ—செவ்வன கூறுந்துறை நிலை* பெற்று; வழங்குஇயல் மருங்கின்—வழங்குதல் இயலுமிடத்து; ஆங்கு வண்ணப்பகுதி வரைவின்று—அச்செந்துறைக்கண் வருணங்களின் கூறுபாடு நிகழ்ந்தன நீக்கு நிலைமையின்று என்றவாறு.

பரவல் முன்னிலைக்கட் பெரும்பான்மை வரும். பரவலும் புகழ்ச்சியுந் தலைவன்கண்ணவாய்ப் பரிசில் பெறுதல்

(பாடம்) * 'குறிப்பினது பொருள்.'

பாடுவான் கண்ணதாகலின் ஒருதலைக் காமமாகிய கைக்கிளைக்கு புறனுயிற்று. முன்னோர் கூறிய குறிப்பும் பாடப்படுவோன்கண் வேட்கை யின்மையிற் கைக்கிளையாம். குறிப்பென்றார், அறம் பொருள் இன்பம் பயப்பச்செய்த செய்யுளைக் கேட்டோர்க்கும் அஃது உறுதிபயத்தலைக் குறித்துச் செய்தலின். செந்துறை யாவது விகாரவகையான் அமராக்கிச் செய்யும் அறுமுறை வாழ்த்தினைப் போலாது உலகினுள் இயற்கைவகையான் இயன்ற மக்களைப் பாடுதல் இது செந்துறைப் பாடாண்பாட் டெனப்படும்.

"வண்ணமுந் தினையும் பொரீஇ யெண்ணே" (பத்து-குறிஞ்சி-கூக) என்பவாகலானும் ஐவகை நிறத்தினையும் வண்ண மென்பவாகலானும் வண்ணமென்பது இயற்சொல்: வருண மென்பது வடமொழித்திரிபு.

ஆங்கு வண்ணப்பகுதி வரைவின்றெனவே வருகின்ற காமப்பகுதியிடத்து வண்ணப்பகுதி வரையப்படுமாயிற்று; கைக்கிளைக் கிழத்தியை உயர்ந்தோன் வருணத்துப்படுத்துக் கூறுதது, 'அணங்கிலை' (தொல்-புறத்திணை-உ0) வருணப்படுத் துத் தோன்றக்கூறலின்.

உதாரணம்:—

"நிலநீர் வளிவிசும் பென்ற நான்கி
னளப்ப ரியையே
நாள்கோ டிங்கள் ஞாயிறு கனையழ
லங்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை
போர்தலை மிகுத்த வீரைம் பதின்மரொடு
துப்புத்துறை போகிய துணிவுடை யாண்மை
யக்குர னனைய கைவண் மையையே
யமர்கடந்து மலைந்த தும்பைப் பகைவர்
போர்டழித்த செருப்புகன் முன்ப
கூற்று வெகுண்டு வரினு மாற்றுமாற் றலையே
யெழுமுடி கெழீஇய திருவெஞ மகலத்து
நோன்புரி தடகைகைச் சான்றோர் மெய்ம்மறை
வானுறை மகளிர் நலனிகல் கொள்ளும்
வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப்பி
னெடுங்கோ நோதிக் கொடுங்குழை கணவ
பல்களிற்றுத் தொகுதியொடு வெல்கொடி நுடங்கும்
படையே ருழவ பாடினி வேந்தே
யிலங்குமணி மிடைந்த பொலங்கலத் திகிரிக்
கடலக வரைப்பினிப் பொழின்முழு தாண்டின்
மூன்றினை முதல்வர் போல நின்றுநீ
கெடாஅ நல்லிசை நிலஇத்
தவாஅ லியரோவிவ் வுலகமோ டுடனே." (பதிற்று-கசு)

பரவற்கண் வந்த செந்துறைப் பாடாண்பாட்டு; இதனை வாழ்த்தியலென்பர்.

“ வரைபுரையு மழகளிற்றின்மிசை
வான்றுடைக்குந்* தகையபோல
விரவுருவின கொடிநுடங்கும்
வியன்ரூனை விறல்வேந்தே
நீ, யுடன்று நோக்கும்வா யெரிதவழ
நீ, நயந்து நோக்கும்வாய் பொன்பூப்பச்
செஞ்ஞாயிற்று கிலவுவேண்டினும்
வெண்டிங்களுள் வெயில்வேண்டினும்
வேண்டியது விளக்கு மாற்றலை யாகலி
னின்னிழற் பிறந்து நின்னழல் வளர்ந்த
வெம்மள வெவனை மற்றே யின்னிலைப்
பொலம்பூங் காவி னுன்னுட் டோருஞ்
செய்வினை மருங்கி னெய்த லல்லதை
யுடையோ ரீதலு மில்லோ ரிரத்தலுங்
கடவ தன்மையிற் கையற வுடைத்தென
வாண்டுச்செய் நுகர்ச்சி யீண்டுங் கூடலி
னின்னை யிள்ளுவர் பரிசில
ரொன்னூர் தேஎத்து நின்னுடைத் தெனவே.” (புறம்-நஅ)

இது புகழ்ச்சிக்கண்வந்த செந்துறைப் பாடாண்பாட்டு. இயைபியன்மொழி யென்பதும் அது.

“ உண்டா லம்மவிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே.” (புறம்-கஅஉ)

இது வகைபட மூன்றோர்கூறிய சூறிப்பின்கண்வந்த செந்துறைப் பாடாண்பாட்டு.

இது முனிவர் கூறுமாறுபோலக் கூறிப் பரவலும் புகழ்ச்சியுங் கூறுது மறுமைப்பயன் பிறர்க்குறுதி பயப்பக் கூறலிற் கைக்கிளைப் புறனுய்ப் பாடாணுயிற்று.

இவை செந்துறை மார்க்கத்து வண்ணப்பகுதியாகிய பாடல் பற்றி வருமென்பதூஉம் வெண்டுறை மார்க்கமாகிய நாடகத்துள் அவிநயத்துக்குரியவாகி வருமென்பதூஉங் கூறின், அவை நண்டுக்கூறல்† மயங்கக் கூறலாம். அன்றியும்

(பாடம்) * ‘வான்றைவரும்.’ † ‘இரண்டுங்கூறல்.’

ஏனை அறுவகைத் திணைக்கும் இங்ஙனங் கூறாது இத்திணைக்கே உரித்தாகக் கூறுதற்கோர் காரணமின்மையானும் அங்ஙனங் கூறாரென்ப. பரவலும் புகழ்ச்சியும் அவ்வப் பொருண்மை கருதினாரைத் தலைவராக வுடைமையானும், ஏனையது அக்குறிப் பிற் றன்மாகலானும், அதற்குப் பாட்டுடைத்தலைவர் பலராயி னும் ஒருவராயினும் பெயர்கொடுத்துங் கொடாதுங் கூறலானும் வேறு வைத்தாரென்க. இத்திணை வேறுபாடுடையதனைப் பரவல் புகழ்ச்சியோடு கூடவைத்தார், அவை முன்னோர் கூறிய குறிப்பினுள்ளும் விராய்வரும் என்றற்கு. இன்னும் அதனானே பாடாண்டிணைப்பொருண்மை மயங்கிவரினும் முடிந்த பொரு ளாற் பெயர்பெறுமென்று கொள்க.

"நிலமிசை வாழ்நர்" என்னும் (சூ) புறப்பாட்டுப் புலவன் அரசனை வைதலாதி அது நன்குரைத்தல். அது இயற்கை வகையானன்றிச் செயற்கைவகையாற் பரவலும் புகழ்ச்சியுந் தொடர்ந்த முன்னோர் கூறிய குறிப்பு.

இன்னும் மயங்கி வருவனவெல்லாம் இதனுள் அமைக்க.

அசு. காமப் பகுதி கடவுளும் வரையா
ரேனோர் பாங்கினு மென்மனார் புலவர்.

இது முற்கூறிய கடவுட்கும் மக்கட்கும் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ - ள்.) காமப்பகுதி—முன்னர்ப் 'புரைதீர் காம' (தொல்-புறத்திணை-உசு) மென்றதனுட் பக்குகின்ற புணர்ச்சி வேட்கை; கடவுள் பாங்கினும் வரையார்—கட்புலனாகிய கடவு ளிடத்தும் நீக்கார்: ஏனோர் பாங்கினும் வரையார் என்மனார் புலவர் —மக்களிடத்தும் நீக்காரென்று கூறுவர் புலவர் என்ற வாறு.

பகுதி ஆகுபெயர். அது கடவுண்மாட்டுக் கடவுட்பெண் டிர் நயப்பனவும், அவர்மாட்டு மானிடப்பெண்டிர் நயப்பனவுங், கடவுண் மானிடப்பெண்டிரை நயப்பனவும் பிறவுமாம்.

இன்னும் பகுதியென்றதனானே எழுதிணைக்குரிய காமமுங் 'காமஞ்சாலா இளமையோள்வயிற்' (தொல்-அகத்திணை-நிo) காமமுமன்றி இது வேறோர் காமமென்று கொள்க.

உதாரணம்:—

"நல்கெனி னுமிசையா ணேமென்னுஞ் சேவடிமே
லொல்கெனி னுச்சியா ணேமென்னு-மல்கிரு

ளாட லமர்ந்தாற் கரிதா லுமையாளே
யூட லுணர்த்துவதோ ராறு. (புற-வெ-மாலை-பாடாண்-சஅ)

"பல்லேற்ற பரிகலத்துப் பலியேற்றன் மேலிட்டு
வல்லேற்ற மூலமகளிர் மனமேற்ப வருதிரால்
வல்லேற்ற மூலமகளிர் மனமேற்ப நீரேறுங்
கொல்லேற்றுக் கறுகிடினுங் கொள்ளுமோ கொள்ளாதோ."

"குமிழ் பருவத்தே கோதை புனைந்தே
யிடுமுத்தம் பூத னிருப்பப்—படுமுத்தம்
புன்னை யரும்பும் புகாஅர்ப் புறம்பணையார்க்
கென்ன முறைய ளிவள்."

என வரும்.

"களியானைத் தென்னன் கனவின்வந் தென்னை
யளியா னளிப்பானே போன்றான்—தெளியாதே
செங்காந்தண் மெல்விரலாற் சேக்கை தடவந்தே
னென்காண்பே னென்னலால் யான்." (முத்தொள்ளாயிரம்)

"அணியாய செம்பழுக்காய் வெள்ளிலையோ டேந்திப்
பணியாயே யெம்பெருமா னென்று—கணியார்வாய்க்
கோணலங் கேட்ப.ஈஉங் கொண்கர் பெருமானூர்
தோணலஞ் சேர்தற் பொருட்டு."

என வரும்.

"அடிபுனை தொடுகழன் மையணற் காளைக்கென்
றெடிகழித் திடுதல்யான் யாயஞ் சுவலே
யடுதோண் முயங்க* லவைநா ணுவலே
யென்போற் பெருவிதுப் புறுக வென்று
மொருபாற் படாஅ தாகி
யிருபாற் பட்டவிம் மைய லூரே." (புறம்-அசு)

இது பெருங்கோழி நாய்கன் மகள் †ஒருத்தி ஒத்த அன்பினாற் காமமுரைதவழியுங் குணச்சிறப்பினறித் தானே காமமுற்றுக் கூறியது, இதனுளடக்குக.

இன்னும் ஏனோர்பாங்கினும் என்பதனானே கிளவித்தலைவனல்லாத பாட்டுடைத்தலைவனைக் கிளவித்தலைவனாகக் கூறுவனவுங் கொள்க.

உதாரணம் :—

"கார்முற்றி யிணரூழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலங்

(பாடம்) * 'அடுதொறு முயங்கல்.'

† இவள் பெயர் நக்கண்ணையார். புறநானூற்று கூசு-ஆம் பக்கத்துப் பிரதி பேதத்தா னுணர்க.

தார்மூற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்*
நீர்மூற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார்
போர்மூற்ரென் றறியாத புரிசைசூழ் புனலூரன்." (கலி-சுஎ)

இது குறிப்பினுற் பாட்டுடைத்தலைவனைக் கிளவித்தலைவனுகக் கூறியது.

"மீளிவேற் ரூனேயர் புகுதந்தார்
நீளுயர் கூட னெடுங்கொடி யெழவே." (கலி-நஉ)

என்பதும் அது.

இவ்வாறு வருவதெல்தாம் இதனுன் அமைக்க. (உஅ)

அசு. குழவி மருங்கினுங் கிழவ தாகும்.

இது முன்னிற்சூத்திரத்திற் பக்குகின்ற காமத்திற்கன்றிப் 'புரைதீர் காம'த் (தொல்-புறத்திணை உசு) திற்குப் புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) குழவிமருங்கினும் கிழவதாகும்—குழவிப் பருவத்துங் காமப்பகுதி உரியதாகும் எ - று.

மருங்கென்றதனுன் மக்கட்குழவியாகிய ஒருமருங்கே கொள்க; தெய்வக்குழவி யின்மையின். இதனே மேலவற்ரோடொன்ரூது வேறுகூறினுர், தந்தையரிடத்தன்றி ஒரு திங்களிற் குழவியைப்பற்றிக் கடவுள் காக்க என்று கூறுதலானும், பாராட்டுமிடத்துச் செங்கீரையுந் தாலுஞ் சப்பாணியும் முத்தமும் வரவுரைத்தலும், அம்புலியுஞ் சிற்றிலுஞ் சிறுதேருஞ் சிறுபறையுமெனப் பெயரிட்டு வழங்குதலானு மென்பது.

இப்பகுதிகளெல்லாம் 'வழக்கொடு சிவணிய' (தொல்-புறத்திணை-நக) என்னுஞ் சூத்திரத்தாற் பெறுதும். இப்பருவத்துக்கு உயர்ந்தவெல்லே மூவகை வருணத்தாரும் இருபிறப்பாளராகின்ற பருவமாம். வேளாளர்க்கும் மூவகையோர்க்குரிய பருவமேகொள்க. குழவிப்பருவங் கழிந்தோர் அது வேண்டியக்காலும் அக்குழவிப் பருவமே கருதிப் பாடுக வென்றதற்குக் கிழவதாகுமென்றூர். இதற்குப் பரிசில்வேட்கை அக்குழவிக்கணன்றி அவன் தமர்க்கண்ணுமாமென் றுணர்க.

உதாரணம்:—

"அன்னு யிவளெருவ னந்தரத்தா னெனென்ரூன்
முன்ன மொருகான் மொழியினுன்—பின்னுங்
கலிகெழு கூடலிற் கண்ணீடி† வந்து
புலியாய்ப் பொருவான் புகும்."

(பாடம்) * 'வையையின்.' † 'கண்ணுடி.'

அந்தரத்தாரு னென்ரூன் அம்புலி வேறுயும் ஒருகாலத்தே விளையாட்டு நிகழ்த்துமென, மதுரையிற் பிட்டுவாணிச்சி மகற்கு மங்கலக் குறிப்பாற் சான்ரோர் கூறியது. (உசு)

அரு. ஊரொடு தோற்றமு மூரித்தென மொழிப.

இது புரைதீர் காமத்திற்கன்றிப் பக்குநின்ற காமத்திற்குப் புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) பக்குநின்ற காமம் ஊரிற் பொதுமகளிரொடு கூடிவந்த விளக்கமும் பாடாண்டிணைக்கு உரித்தென்றுகூறுவர் ஆசிரியர் எ - று.

தோற்றமுமென்றது, அக்காமந் தேவரிடத்தும் மக்களிடத்தும் விளங்குமவிளக்கத்தை. அது பின்னுள்ளோர் ஏழு பருவமாகப் பகுத்துக் கலிவெண்பாட்டாகச் செய்கின்ற உலாச் செய்யுளாம்.

இச் சூத்திரத்திற்குத் தலைவர் பிறந்த ஊரும் அவர் பிறப்பு மென்று பொருள்கூறின், மரபியற்கண்ணே 'ஊரும் பெயரும்' (தொல்-மரபியல்-உஎ) என்னுஞ் சூத்திரத்து ஊர்பெறுதலானும்,* முன்னர் 'வண்ணப்பகுதி' (தொல்-புறத்திணை-உஎ.) என்பதனுற் பிறப்புப் பெறுதலானும் இது கூறியது கூறலா மென்றுணர்க. (கூ0)

அசு. வழக்கொடு சிவணிய வகைமை யான.

இது 'அமரர்கண் முடியும்' (தொல்-புறத்திணை-உசு) என்னுஞ் சூத்திர முதலியவற்றுக்கெல்லாம் புறனடை.

(இ - ள்.) கடவுள் வாழ்த்தும் அறுமுறை வாழ்த்தும் முதலாக ஊரொடு தோற்ற மீறாகக் கிடந்தனவெல்லாஞ் சான்ரோர் செய்த புலனெறிவழக்கோடே பொருந்திவந்த பகுதிக்கண்ணேயான பொருள்களாம் எ - று.

எனவே, புலனெறிவழக்கின் வேறுபடச் செய்யற்க என்பது கருத்து.

கடவுள் வாழ்த்துப் பாடுங்கான் முன்னுள்ளோர் பாடியவாறன்றி முப்பத்துமூவருட் சிலரை விதந்துவாங்கிப் பாடப் பெறுது.

இனி அறுமுறைவாழ்த்துப் பாடுங்கான் முன்னுள்ளோர் கூறியவாறன்றி ஆவிற்கினமாகிய எருமை முதலியனவும் வாழ்த்தப்படா.

(பாடம்) * 'ஊரெய்தலானும்.'

இனிப் புரைதீர் காமம் புல்லியவகையும் ஒருவன்றெழுங் குலதெய்வத்தை* நோக்கியன்றி வரைவின்றிக் கூறப்படாது.

இனிச் செந்துறைப்பாடாண்பாட்டு முன்னுள்ளோர் கூறிய வாறன்றி இறப்ப இழித்தும் இறப்ப உயர்த்தும் கூறப்படாது.

இனிக் காமப்பகுதிக் கடவுளரைக் கூறுங்காலும் பெண் டெய்வத்தோடு இயல்புடையாரைக் கூறினன்றி எண்வகை வசுக்கள் போல்வாரையும் புத்தர் சமணர்† முதலியோரையுங் கூறப்படாது.

இனி மக்களுள் ஒருவனைத் தெய்வப்பெண்பால் காதலித் தமை கூறுங்காலும் மக்கட்பெண்பாற்குக் காதல் கூறுங்காலும் முன்னோர் கூறியவாறன்றிக் கூறப்படாது.

இனிக் குழவிப்பருவத்துக் காமங் கூறுங்காலும் முன்னர்க் காப்பும் பின்னர் ஏனையவுமாக முன்னுள்ளோர் கூறியவா றன்றிக் கூறப்படாது.

இனி ஊரொடு தோற்றமும் பரத்தையர்க்கன்றிக் குலமக னிர்க்குக் கூறப்படாது.

இன்னுஞ் 'சிவணியவகைமை' என்றதனானே முற்கூறிய வற்றோடே நாடும் ஊரும் மலையும் யாறும் படையுங் கொடியுங் குடையும் முரசும் நடைநவில் புரவியுங் களிறுந் தேருந் தாரும் பிறவும் வருவன வெல்லாங் கொள்க.

உதாரணம் ;—

"மூற்பற்றி ஞரை முறைசெய்யிற் ருனென்னைக்
கைப்பற்றக் கண்டேன் கனவினு—ளிப்பெற்றித்
தன்னைத் தனக்கே முறைப்படி னென்செய்யும்
பொன்னம் புனலுட்டார் கோ."

"ஏரியு மேற்றத்தி னூலும் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாங்—தேரி
னரிதாளின் கீழுகூஉ மங்நெல்லே சாலுங்
கரிகாலன் காவிரிசூழ் நாடு"‡ (பொருநராறு)

இவை நாடும் யாறும் அடுத்துவந்தன.

"மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்மு
ளொலியும் பெருமையு மொக்கு—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்."

இஃது ஊர் அடுத்துவந்தது.

(பாடம்) * 'குலத்தெய்வ.' † 'அமணர்.' ‡ 'நாட்டு.'

"மிதியற் செருப்பிற் பூழியர் கோவே
குவியற் கண்ணி மழவர் மெய்ம்மறை
பால்பயந் தழீஇய பயங்கெழு நெடுந்தோட்டு
நீறறன் மருங்குவழிப் படாப் பாகுடிப்
பார்வற் கொக்கின் பரிவேட் பஞ்சரச்
சீருடைத் தேனத்த மூனைகெட விலங்கிய
நேருயர் நெடுவரை யயிரைப் பொருந." (பதிற்று-உக)

இது மலை யடுத்தது.

"ஆவஞ் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்
சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்." (புறம்-கச)

இது படையடுத்தது.

"பூங்க ணெடுமுடிப் பூவைப்பூ மேனியான்
பாம்புண் பறவைக் கொடிபோல*—வோங்குக
பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
கொல்யானை மன்னன் கொடி." (புற-வெ-பாடாண்-கூக)

இது கொடியடுத்தது.

"வெயின்மறைக் கொண்ட வுருகெழு சிறப்பின்
மாலை வெண்குடை யொக்குமா லெனவே." (புறம்-கூ0)

இது குடையடுத்தது.

"முரசு முழங்குதானை மூவருங் கூடி
யரசவை யிருந்த தோற்றம் போல." (பொருந)

இது முரசடுத்தது.

"சாலியரி சூட்டான் மடையடைக்கு நீர்நாடன்
மாலு மழைத்தடக்கை மாவளவன்—காலியன்மா
மன்னர் முடியுதைத்து மார்பகத்துப் பூணுழக்கிப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு."

இது புரவியடுத்தது.

"அயிற்கதவம் பாய்ந்துழக்கி யாற்றல்சான் மன்ன
ரெயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற்—பனிக்கடலுட்
பாய்தோய்ந்த நாவாய்போற் ரோன்றுமே யெங்கோமான்
காய்சினவேற் கிள்ளி †களிறு."

(முத்தொள் ளாயிரம்-யானை மறம், எக)

இது களிறடுத்தது.

"நீயே, யலங்குளைப் பரீஇயிவுளிப்
பொலந்தேர்மிசைப் பொலிவு தோன்றி‡

(பாடம்) * 'கொடிப்போல.' † 'கோதை' யென ஏடுகளிலுள்ளது.
‡ 'பொலிவொடுதோன்றி.'

மாக்கட னிவந்தெழுதருஞ்
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ.” (புறம்-ச)

இது தேரடுத்தது.

“ மள்ளர் மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப.” (புறம்-கo)

இது தாரடுத்தது.

இவற்றுட் சிலவற்றை வரைந்துகொண்டு சின்னப்பூ வென்று பெயரிட்டு இக்காலத்தார் கூறுமா றுணர்க. (ஙக)

அள. மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே.

இது சுட்டி ஒருவர் பெயர்கொள்ளும் பாடாண்டிணைக் குரிய மெய்ப்பெயர்களிடமாகவும் அகத்திணை நிகழுமென்கின் றது.

(இ - ள்.) மெய்ப்பெயர் மருங்கின்—புறத்திணைக்குரிய மெய்ப்பெயர்களின் மருங்கே; வழி வைத்தனர்—புறத்திணை தோன்றுதற்கு வழியாகிய அகத்திணையை வைத்தார் முதனூ லாசிரியர் என்றவாறு.

என்றது எனக்கும் அதுவே கருத்தென்பதாம். வழியென் பது ஆகுபெயர் மெய்ப்பெயராவன புறத்திணைக்குரிய பாட் டுடைத்தலைவர் பெயரும் நாடும் ஊரும் முதலியனவாம்.

இதன் கருத்துச் ‘சுட்டியொருவர் பெயர்கொளப் பெறுஅர்’ (தொல்-அகத்திணை-நூசு) என அகத்திணையியலுட் கூறினமையிற் கிளவித்தலைவன் பெயரை மெய்ப்பெயராகக் கொள்ளாது ஏனைப் புறத்திணையாற்கொண்ட மெய்ப்பெயரிடம் பற்றி அகத்திணைப் பொருணிகழவும் பெறுமென்பதாம்.

உதாரணம்:—“ * அரிபெய் சிலம்பின்” என்னும் (சு) அகப் பாட்டினுள் தித்தனெனைப் பாட்டுடைத்தலைவன் பெயரும், பின்ட நெல்லினென நாடும், உறந்தையென ஊரும், காவிரி யாடினை யென யாறுங் கூறிப், பின்னர் அகப்பொருள் நிகழ்ந்த வாறுங் கொள்க.

‘மருங்கு’ என்றதனாற் பாட்டுடைத்தலைவன் பெயர்கூறிப் பின்னர் நாடு முதலியன கூறன் மரபென்று கொள்க. அதுவும் அச் செய்யுளாற் பெற்றும்.

“ நிலம்பூத்த மரமிசை நிமிர்பாலுங் குயிலெள்ளு
நலம்பூத்த நிறஞ்சாய நம்மையோ மறந்தைக்க

* இச்செய்யுளை உக-ஆம் பக்கத்திற் காண்க.

கலம்பூத்த வணியவர் காரிகை மகிழ்செய்யப்
புலம்பூத்துப் புகழ்பாலுக் கூடலு முள்ளார்கொல்."
(கலி-உஎ)

இதனுட் கூடலிடத்துத் தலைவி யென்பது கூறினர்.

" கன்மிசை மயிலாலக் கறங்கியூ ரலர்தூற்றத்
தொன்னல நனிசாய நம்மையோ மறந்தைக்க
வொன்னுதார்க் கடந்தடூஉ முரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும்பார்கொல்."
(கலி-உஎ)

இதனுள் வென்வேலான் குன்றென மலை கூறினர்.

" திசைதிசை தேனூர்க்குந் திருமருத மூன்றுறை
வசைதீர்ந்த வென்னலம் வாடிவ தருளுவார்
நசைகொண்டு தந்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்த
மிசைபரந் தலகேத்த வேதினுட் டுறைபவர்." (கலி-உசு)

இதனுள் ஆறு கூறினர்.

" புனவளர் பூங்கொடி " என்னும் (உஎ) மருதக்கலியும் அது.

" கரியமலர் நெடுங்கட் காரிகைமுன் கடற்றெய்வங் காட்டிக் காட்டி
யரியசுள் பொய்த்தா ரரனிலென் றேழையம்மாங் கறிகோ மைய
விரிகதிர் வெண்மதியு மீன்கணமு மாமென்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையு முத்துங்கண் டாம்பல் பொதியவிழ்க்கும் புகாரே யெம்மூர்."
(சிலப்-கானல்-எ)

இதுமுதலிய மூன்றும் புகாரிற் றலைவியெனக் கூறியவாறு காண்க

இன்னுஞ் சான்றோர் செய்யுட்கள் இங்ஙனம் வருவனவெல்லாம் இதனுல் அமைக்க. இக்கருத்தினுற் செய்யுள் செய்த சான்றோர் தமக்கும் பாடாண்டலைவர்கண் நிகழ்ந்த ஒருதலைக் காமமேபற்றி அகத்திணைச் செய்யுள் செய்தாரேனும் 'தம்மிசை பரந்தலகேத்த வேதினுட்டுறைபவ'ரென்று இவை பாடாண்டிணையெனப் பெயர்பெறு என்றற்கு இது கூறினர். (சூஉ)

அஅ. கொடிநீலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.

இது தேவரும் மக்களுமெனப் பகுத்த முறைமையானே அப்பகுதி யிரண்டுங் கூறி இன்னும் அத்தேவரைப்போல் ஒரு

வழிப் பிறக்கும் பிறப்பில்லாத தெய்வங்களும் பாடாண்டிணைக்கு உரிய ரென்கிறது.

(இ - ள்.) கொடிநிலை — கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர்மண்டிலம்; கந்தழி—ஒருபற்றுக் கோடின்றி அருவாகித் தானேநிற்குந் தத்துவங் கடந்த பொருள்; வள்ளி—தண்கதிர்மண்டிலம்; என்ற வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும்—என்று சொல்லப்பட்ட குற்றந்தீர்ந்த சிறப்பினையுடைய முற்கூறப்பட்ட மூன்று தெய்வமும்; கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே—முற்கூறிய அமரரோடே கருதுமாற்றால் தோன்றும் என்றவாறு.

> "பொய்தீ ருலக மெடுத்த கொடிமிசை
> மையறு மண்டிலம் வேட்டனள் வையம்
> புரவூக்கு மூள்ளத்தே னென்னை யிரவூக்கு
> மின்னு விடும்பைசெய் தாள்." (கலி-கசக)

என்றவழிக் கீழ்த்திசைக்கண்ணே தோன்றும் மண்டில மென்றுற்போலக்* கொடிநிலை யென்பதூஉம் அப்பொருடந்த தோர் ஆகுபெயர்.

இனி எப்புறமும் நீடுசென்று எறித்தலின் அந்நீட னிலைமை† பற்றிக் கொடிநிலையென்பாருமுளர்,

> "குவவுமென் முலையள் கொடிக்கூந் தலளே." (குறுந்-கஉஉ)

என்றுற்போல வள்ளியென்பதுவுங் கொடியை; என்னை? பன் மீன்தொடுத்த‡ உடுத்தொடையைக் கொடியெனப்படுதலின், அத் தொடையினை இடைவிடா துடைத்தாதலின் அதனை அப் பெயராற் கூறினர்; முத்துக்கொடியெனவும் மேகவள்ளியென

---

* "மூவர் கொடியுள்ளு மொன்றுடு பொரீஇ
மேவரு மன்னவன் கொடிபுகழ்ந் தன்று."

எனவும்,

"சூழுநேமியான் சோவெறிந்த
வீழாச்சீர் விறன்மிகுத் தன்று.'

எனவும்,

"பூண்முலையார் மனமுருக
வேன்முருகற்கு வெறியா டின்று."
(புறப்-வெ-மாலை-பாடாண்-உக-சஅ சக)

எனவும் கூறினர் ஐயனரிதனர்.

(பாடம்) † 'அந்நீண்ட நிலைமை.' ‡ 'கோத்த.'

வுங் கூறுமதுபோல. கந்தழி அவ்விரண்டற்கும் பொதுவாய் நிற்றலின் இடையே வைத்தார்.

இனி அமரரென்னும் ஆண்பாற்சொல்லுள் அடங்காத பெண்பாற்றெய்வமும் வள்ளியென்னுங் கடவுள்வாழ்த்தினுட் படுவனவாயின பாடா ணெனப்படா வாயினுமென்பது; என்னை? ஞாயிறு நெருப்பின்றன்மையும் ஆண்டன்மையும் உடைமையானுங், திங்கள் நீரின்றன்மையும் பெண்டன்மையும் உடைமையானுமென்பது. அல்லதூஉம், வெண்கதிர் அமிர்தந் தேவர்க்கு வழங்கலானும் வள்ளி யென்பதூஉமாம் என்பது.

உதாரணம்:—

"மேகத்தான் வெற்பா னிமையான் விழுப்பனியா
லூகத்தா னீமறைய நாட்கதிரே—யோகத்தாற்
காணுதார் நின்னே நிலையாமை* கட்டுரைப்பர்
நாணுத கண்ணெனைக்கு நல்கு."

இது கொடிநிலை வாழ்த்து.

†"சார்பினுற் ரூன்ரூது தானருவா யெப்பொருட்குஞ்
சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
னய்மையதா மைதீர் சுடர்."

இது கந்தழி வாழ்த்து.

"பிறைகாணுங் காலத்தன் பேருருவ மெல்லாங்
குறைகாணு தியாங்கண்டு கொண்டு—மறைகாணு
தேய்ந்து வளர்ந்து பிறந்திறந்து செல்லுமென்
ரூய்ந்தது நன்மாயை யாம்."

இது வள்ளிவாழ்த்து.

"தனிக்கணிற் பாகமுந் தாளுளு மாமை‡
பனிக்கண்ணி சாவு படுத்துப்---பனிக்கணந்
தாமுறையா நிற்குமத் தண்மதிக்குத் தாயிலளென்
றியாமுரையா நிற்கு மிடத்து."

இது வள்ளிப்பாற்பட்ட பெண்பாற் கடவுள் வாழ்த்து.

(கூகூ)

(பாடம்) * 'அலையாமை.'

† "கந்தழியாவது ஒருபற்றுமற்று அருவாய்த் தானே நிற்குந் தத்துவங்கடந்தபொருள்: அது, 'சார்பினுற் ரூன்றது.....மைதீர் சுடர்' என்பதாம்." என்பது பத்து—திருமுருகாற்றுப்படை - நச்சினார்க்கினியர் உரை. ‡ 'தாளுளும் யாமை.'

அகூ. கொற்ற வள்ளை யோரிடத் தான.

இஃது எய்தாதது எய்துவித்தது ; தேவர்க்கும் உரியவாம் ஒரு சார் அப்பாடாண்டிணைக் கொற்றவள்ளை யென்றலின்.

(இ - ள்.) கொற்றவள்ளை—அதிகாரத்தாற் கைக்கிளைக்குப் புறனாய் வெட்சிமுதல் வஞ்சி யீறாகிய பாடாண் கொற்றவள்ளை ; ஓரிடத்தான—மேற்கூறி நின்ற தேவர் பகுதிக் கண்ணதன்றி அவரின் வேறாகிய மக்கட் பகுதிக்கண்ணது என்றவாறு.

எனவே, உழிஞை முதலிய பாடாண் கொற்றவள்ளை நற்றிணைஞாநூங் கூளிச்சுற்றமுங் ஒன்றினை நச்சிப் புகழ்ந்துவாளாதே கூறுதலும், ஈண்டுக் கூறுகின்ற கொற்றவள்ளை புலவன் ஒன்றினை நச்சி வெட்சி முதலிய ஏழனுளும் புகழ்ந்துரைத்தலுமாயிற் றுதலிற் 'படையியங் கரவம்' (தொல்-புறத்திணை. கூ) முதலாக வஞ்சியிற் 'குன்றுச்சிறப்பிற் கொற்றவள்ளை' யீறாகக் கிடந்த பொருட்பகுதியெல்லாம் பாடாண்டிணையாகப் பாடுங்கான் மக்கட்கேயுரிய என்பதூஉம், உழிஞை முதலியவற்றைப் பாடாண் டிணையாகப் பாடுங்கால் அவை மக்கட்குந் தேவர்க்கும் ஒப்ப உரியவென்பதூஉங் கூறுதலாயிற்று. என்னை? அரசியலாற் போர்குறித்து நிரைகோடலும் மீட்டலும் மேற்செல்லும் வஞ்சியுந் தேவர்க் கேலாமையாயினும், அவுணரான் முற்றப்பட்ட துறக்கத்தினை அகத் தழிஞை யரணைக்கி மறிவழித் தோன்றிய முசுகுந்தனோடு இந்திரன் காத்தாற் போல்வனவும் பிறவுந் தேவர்க்குக் *கூறுதலான் அவருமதின்முற்றியவழிப் போர் தோன்றுதலும் ஆண்டு வென்றியெய்துதலும் உடையராதலிற் பாடாண் பொருட்கும் உரியாரென நேர்பட்டது

இச்சூத்திரம் மக்கட்கெய்திய பொருண்மையை மீட்டுங் கூறி நியமித்ததாம் ; ஆகவே, வெட்சிமுதல் வஞ்சியிற் கொற்றவள்ளை சாரய பொருண்மை உழிஞைமுதற் பாடாண்டிணைக் குரியராகி இடைபுகுந்த தேவர்க் காகாவென விதிவகையான் விலக்கியதாம். எனவே, தேவர்க்கு உழிஞைமுதலிய கொற்றவள்ளை ஆமென்பதூஉங் கூறினராயிற்று.

கொடிநிலை முதலிய மூன்றற்குமன்றிக் கடவுளெனப் பட்டாரை அதிகாரங்கொண்ட அளவேயாமென் றுணர்க.

உதாரணம் :—

"மாவாடியபுல நாஞ்சிலாடா
கடாஅஞ் சென்னிய கடுங்கண் யானை

---

* ஏடுகளிற் 'கூறு' என்பதன்பின் சிறிதிடம் எழுதாது விட்டுத் தானவரும் மதின்முற்றிய வழி' யென எழுதப்பட்டுள்ளது.

யினம்பரந்த புலம் வளம்பரப் பறியா
நின்படைஞர், சேர்ந்த மன்றங் கழுதை போகி
நீ,புடன்றோர் மன்னெயி றோட்டி வையா
கடுங்கா லொற்றலிற் சுடர்சிறந் தருத்துப்
பசும்பிசி ரொள்ளழ லாடிய மருங்கி
ஞண்டலே வழங்குங் கானுணங்கு கடுநெறி
மூனேயகன் பெரும்பா ழாக மன்னிய
வருமுறழ் பிரங்கு மூசிற் பெருமலே
வரையிழி யருவியி ஞெளிறுகொடி நூடங்கக்
கடும்பரிக் கதழ்சிற கைப்பரீ
நெடுந்தே ரோட்டியபிற ரகன்றலே நாடே.” (பதிற்று-உடு)

இது புலவன் பொருணச்சிக் கூறலிற் பாடாண்கொற்ற வள்ளே, ‘வல்லா ராயினும் வல்லுந ராயினும்’ ‘காலனுங் காலம்’ என்னும் (நிள, சக) புறப்பாட்டுக்களும் அது. (கூச)

கூ0. கொடுப்போ ரேத்திக் கொடாஅர்ப் பழித்தலு
மடுத்தூர்ந் தேத்திய வியன்மொழி வாழ்த்துஞ்
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலே யானுங்
கண்படை கண்ணிய கண்படை நிலேயுங்
கபிலே கண்ணிய வேள்வி நிலேயும்
வேலி ஞெக்கிய விளக்கு நிலேயும்
வாயுறை வாழ்த்துஞ் செவியறி வுறூஉ
மாவயின் வருஉம் புறநிலே வாழ்த்துங்
கைக்கிளே வகையோ டுளப்படத் தொகைஇத்
தொக்க நான்கு மூலவென மொழிப.

இது முன்னிற் சூத்திரத்து அதிகாரப்பட்டு நின்ற மக்கட் பாடாண்டிணேக் குரிய துறை கூறுகின்றது.

(இ - ள்) கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப்பழித் தலும்—பிறர்க்கு ஈவோரைப் பிறரி னுயர்த்துக்கூறிப் பிறர்க் கியாதாரை இழித்துக் கூறலும்;

சான்றோர்க்குப் பிறரை யிழித்துக்கூறற்கண் ணது தக்க தன்றேனும் நன்மக்கள் பயன்பட வாழ்தலுந் தீயோர்* பயன் படாமல் வாழ்தலுங் கூறக்கேட்டு ஏனேயோரும் பயன்பட வாழ் தலே விரும்புவரென்பது பயப்பக்கூறலின் இவர்க்கு இங்ஙனங்

(பாடம்) * ‘தீமக்கள்.’

கூறுதல் தக்கதாயிற்று. இதனை ஏத்தலும் பழித்தலும் ஏத்திப் பழித்தலுமென மூவகையாகக் கொள்க.

உதாரணம்:—

"தடவுநிலைப் பலவி னுஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செங்காப் புலவீர்
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
வடகின் கண்ணுறை யாக யாஞ்சில
வரிசி வேண்டினே மாகத் தான்பிற
வரிசை யறிதலிற் றன்னுங் காக்கி
யிருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு *நல்கி யோனே யன்னதோர்
தேற்ற வீகையு மூளதுகொல்
போற்ற ரம்ம பெரியோர்தங் கடனே. (புறம்-கசo)

இது கொடுப்போர் ஏத்தியது.

"பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செங்காப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு மூண்டூண் டுலகுபுரப் பதுவே." (புறம-கoஎ)

என்பதுவும் அது.

"ஒல்லுவ தொல்லு மென்றலு மியாவர்க்கு
மொல்லா தில்லென மறுத்தலு மிரண்டு
மாள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே
யொல்லா தொல்லு மென்றலு மொல்லுவ
தில்லென மறுத்தலு மிரண்டும் வல்லே
யிரப்போர் வாட்ட லன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயி லத்தை
யனைத்தா கியரினி யிதுவே யெனைத்துஞ்
சேய்த்துக் காணாது கண்டன மதனை
ஞெயில ராகநின் புதல்வர் யாணும்
வெயிலென முனியேன் பனியென மடியேன்
கல்குயின் றன்னவென் னல்கூர் வளிமறை
நாணல தில்லாக் கற்பின் வாணுதன்
மெல்லியற் குறுமக ளுள்ளிச்
செல்வ லத்தை சிறக்கநின் னுளே." (புறம்-ககசு)

"புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்." (குறள்-புகழ்-எ)

இவை கொடாஅர்ப் பழித்தல்.

"களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாடின் பனுவற் பாண ருய்த்தனைக்

(பாடம்) * 'கருங்களிறு.'

களிறில வாகிய புல்லரை நெடுவெளிற்
கான மஞ்ஞை கணஞெடு சேப்ப
வீகை யரிய விழையணி மகளிரொடு
சாயின் றென்ப வாஅய் கோயில்
சுவைக்கினி தாகிய சூய்யுடை யடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
யுரைசா லோங்குபுக ழொரீஇய
மூசுகெழு செல்வர் நகர்போ லாதே.” (புறம்-கஉஎ)

இஃது ஆனையப் புகழ்ந்து ஏனைச்செல்வரைப் பழித்தது.

“ மின்னுந் தமனியமும் வெற்றிரும்பு மொன்றுகிப்
பொன்னின் பெயர்படைத்தாற் போலாதே-கொன்னே
யெள்ளிப்பாரு மக்களா யொல்லுவ தாங்கே
யளிப்பாரு மக்களா மாறு.’’

(பெரும்பொருள் விளக்கம் - புறத்திரட்டு)

இதுவும் அது.

அடுத்து ஊர்ந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்தும்—தலை வனைநேர்சென்று ஏறி அவன் செய்தியையும் அவன் குலத்தோர் செய்தியையும் அவன்மேலே ஏற்றிப் புகழ்ந்த இயன்மொழி வாழ்த்தும் ;

என்றது, இக்குடிப்பிறந்தோர்க்கெல்லாம் இக்குணங்கள் இயல்பென்றும், அவற்றை நீயும் இயல்பாக உடையை யென் றும், அன்னோர்போல எமக்கு நீயும் இயல்பாக ஈ யென்றும் உயர்ந்தோர் கூறி அவனை வாழ்த்துதலின் இயன்மொழி வாழ்த்தாயிற்று. இதனை உம்மைத்தொகையாக்கி இயன் மொழியும் வாழ்த்துமென இரண்டாக்கிக்கொள்க.

இஃது ஒருவர் செய்தியாகிய இயல்பு கூறலாலும் வண்ணப் பகுதியின்மையாலும் பரவலின் வேறுபிற்று.

உதாரணம் :—

“ மாசற விசித்த வார்புற வள்பின்
மைபடி மருங்குல் பொலிய மஞ்ஞை
யொலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு மூரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
யறியா தேறிய வென்னைத் தெறுவர
விருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
யதூஉஞ் சாலுநற் றமிழ்மூழு தறித
லதலெடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென

வீசி யோயே வியலிடங் கமழ
விவணிசை யுடையோர்க் கல்ல தவண
துயர்நிலை யுலகத் துறையு ளின்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசினீ யீங்கிது செயலே." (புறம்-இ0)

இவை போல்வன வெல்லாம் இயன்மொழி.

" மலையுறழ் யானை வான்றேய் வெல்கொடி
வரைமிசை யருவியின் வயின்வயி னுடங்கத்
கடல்போ லானைக் கடுங்குரன் முரசங்
காலுறு கடலிற் கடிய வுரற
வெறிந்து சிதைந்தவா
ளிலைதெரிந்த வேல்
பாய்ந்தாய்ந்த மா
வாய்ந்துதெரிந்த புகன்மறவொடு
படுபிணம் பிறங்க நூறிப் பகைவர்
கெடுகுடி பயிற்றிய கொற்ற வேந்தே
நின்போ, லசைவில் கொள்கைய ராகலி னசையா
தாண்டோர் மன்றவிம் மண்கெழு ஞால
நிலம்பயம் பொழியச் சுடர்சினந் தணியப்
பயங்கெழு வெள்ளி யாங்கி நிற்ப
விசும்புமெய் யகலப் பெயல்புர வெதிர
நால்வே றுனந்தலை யோராங்கு நந்த
விலங்குகதிர்த் திகிரி முந்திசி னோரே." (பதிற்று-கூக)

இது முன்னுள்ளோர்க்கும் இயல்பென்பதுபடக் கூறிய இயன்மொழிவாழ்த்து.

" முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவு
மரசுடன் பொருத வண்ண னெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறமபிற் கோமான் பாரியும் பிறங்குமிசைக்
கொல்லி யாண்ட வல்வி லோரியுங்
காரி யூர்ந்து பேரமர்க் கடந்த
மாரி யீகை மறப்போர் மலையனு
மூரா தேந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியு
மீர்ந்தண் சிலம்பி* னிருடுங்கு களிமுழை
யருந்திறற் கடவுள் காக்கு முயர்சிமையப்
பெருங்க ளுடன் பேகனுந் திருந்துமொழி
மோசி பாடிய வாயு மார்வமுற்
றுள்ளி வருந ருலவுநனி கீரத்
தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்
கொள்ளா ரோட்டிய நள்ளியு மெனவாங்
கெழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி

(பாடம்) * 'இருந்தண் சிலம்பின்.'

யிரந்தோ ரற்றந் தீர்க்கென விரைந்திவ
ணுள்ளி வந்தனென் யானே விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
யாஞினிக் கவினிய பலவி ஞர்வுற்று
மூட்புற முதுகனி பெற்ற கடுவன்
றுய்த்தலே மந்தியைக் கையிடூஉப் பயிரு
மதிரா யாணர் மூதிரத்துக் கிழவ
விவண்விளங்கு சிறப்பி னியறோர்க் தமண
விசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுகடீ யேர்திய வேலே." (புறம்-கஙிஅ)

இஃது இன்னோர்போல எமக்கு ஈ யென்ற இயன்மொழி வாழ்த்து.

"இன்று செலினுந் தருமே சிறுவரை
நின்று செலினுந் தருமே பின்னு
மூன்னே தந்தனெ னென்னுது துன்னி
வைகலுஞ் செலினும் பொய்யல ஞகி
யாம்வேண்டி யாங்கெம் வறுங்கல நிறைப்போன்
ரூன்வேண்டி யாங்குத் தன்னிறை யுவப்ப
வருந்தொழின் முடியரோ திருந்துவேற் கொற்ற
னினமலி கதச்சேக் களஞெடி வேண்டினுங்
களமலி நெல்லின் குப்பை வேண்டினு
மருங்கலங் களிற்றெடு வேண்டினும் பெருந்தகை
பிறர்க்கு மன்ன வறத்தகை யன்னே
யன்ன ஞகலி னெந்தை யுளளடி
மூள்ளு நோவ வுரூற்க தில்ல
வீவோ ரரியவிவ் வுலகத்து
வாழ்வோர் வாழவவன் ரூள்வா ழியவே." (புறம்-களக)

இது படர்க்கையாகிய இயன்மொழி வாழ்த்து.

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனு
மறவிலே வணிக னுயலன் பிறருஞ்
சான்ரோர் சென்ற நெறியென
வாங்குப் பட்டன் றவன்கைவண் மையே." (புறம்-கருச)

இது பிறருஞ் சான்ரோர் சென்ற நெறி யென்றமையின் அயலோரையும் அடுத்தூர்ந்தேத்தியது. இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதன்கண் அடக்குக.

சேய்வரல் வருத்தம் வீட வாயில் காவலற்கு உரைத்த கடைநிலையானும்—சான்ரோர் சேணிடை வருதலாற் பிறந்த வருத்தந்தீர வாயில் காக்கின்றவனுக்கு என் வரவினை இசை யெனக்கூறிக் கடைக்க ணின்ற கடைநிலையும்;

இது வாயிலோனுக்குக் கூறிற்றேனும் அவ்வருத்தந் தீர்க்கும் பாடாண்டலைவனதே துறையென்பது பெற்றும்.

இழிந்தோரெல்லாந் தத்தம் இயல்களே இயல்பிக் கடைக் கணிற்றல் 'பரிசில் கடையிய கடைக்கூட்டு நிலையும்' (தொல்-பொரு-புற-நூசு)என்புழிக் கூறுதலின், இஃது உயர்ந்தோர்க்கே கூறியதாம்.

உதாரணம் :—

"வேற்றுச் சுரத்தொடு வேந்தர்கண் வெம்மையு
மாற்றற்கு வந்தனேம் வாயிலோய்—வேற்றூர்
திறைமையக்கு முற்றத்துச் சேணுங்கு கோயி
லிறைமகற்கெம் மாற்ற மிசை."

என வரும்.

"வாயி லோயே வாயி லோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்
தாம், முன்னியது முடிக்கு முரணுடையுள்ளத்து*
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க் கடையா வாயி லோயே
கடுமான் ரேருன்ற னெடுமா னஞ்சி
தன்னறி யலன்கொ லென்னறி யலன்கொ
லறிவும் புகழு முடையோர் மாய்ந்தென
வறுந்தலை யுலகமு மன்றே யதனற்
காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை
மரங்கொ றச்சன் கைவல் சிறுஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
யெத்திசைச் செலினு மத்திசைச் சோறே." (புறம்-உ0சு)

இது தலைவனே எதிர்ப்பட்டுக் கூறுது வாயிலோனே நோக்கிக் கூறலிற் பரிசில் கடாயதின்றும்.

ஆன் அசை; ஏழனுருபாக்கி எல்லாவற்றிற்கும் விரித்தலு மொன்று.

கண்படை கண்ணிய கண்படைநிலையும்—அரசரும் அரசரைப் போல்வாரும் அவைக்கண் நெடிது வைகியவழி மருத்துவரும் அமைச்சரும் முதலியோர் அவர்க்குக் கண்டுயில்கோடலைக் கருதிக் கூறிய கண்படை நிலையும் ;

கண்படை கண்ணிய என்றூர், கண்படை முடிபொருளாக இடைநின்ற உண்டிமுதலியனவும அடக்குதற்கு.

உதாரணம் :—

"வாய்வாட் டானை வயங்குபுகழ்ச் சென்னிநின்
னேவா வீகையி னுயிர்ப்பிடம் பெறுஅர்

(பாடம்) * 'உன்னியது முடிக்கு முரணுடை யுள்ளத்து.'

களிறுகவர் முயற்சியிற் பெரிது வருந்தினசே
யுலகங் காவலர் பலர்விழித் திருப்ப
வறிது துயில்கோடல் வேண்டுகின்
பரிசின் மாக்களுந் துயில்கமா சிறிதே.”

என வரும்.

கபிலை கண்ணிய வேள்வி நிலையும்—சேதாவினைக் கொடுக்கக் கருதிய கொடைநிலை கூறுதலும் ;

இது வரையா ஈகையன்றி இன்னலுற்றுற் கொடுக்கவென உயர்ந்தோர் கூறு நாட்காலையிலே கொடுப்பதாமாதலின் வேறு கூறினர் கண்ணிய என்றதனுற் கன்னியர் முதலோரைக் கொடுத்தலுங் கொள்க.

“ பொன்னிறைந்த பொற்கோட்டுப் பொற்குளம்பிற் கற்றூதந்
தின்மகிழா னந்தணரை யின்புறுப்பச்—சென்னிதன்
மாநிலமே யானுலகம் போன்றது வான்றுகள்போர்த்
தானுலக மண்ணுலகா மன்று.”

வேலின் ஒக்கிய விளக்கு நிலையும்—வேலும் வேற்றலையும் விலங்காதோங்கியவாறு போலக் கோலோடு விளக்கும் ஒன்று பட்டோங்குமாறு ஒங்குவித்த விளக்குநிலையும்,

இன், உவமப்பொருள். இது கார்த்திகைத் திங்களிற் கார்த்திகை நாளின் ஏற்றிய விளக்குக் கீழுமேலும் வலமுமிட முந் திரிபரந்து சுடர்ஓங்கிக் கொழுந்துவிட்டெழுந்ததென்று அறிவோராக்கங் கூறப்படுவதாம்.

உதாரணம்:—

“ மைமிசை யின்றி மணிவிளக்குப் போலோங்கிச்
செம்மையி னின்றிலங்குந் தீபிகை—தெம்முனையுள்
வேலினுங்கோடாது வேந்தன் மனைவிளங்கக்
கோலினுங் கோடா கொழுந்து.”

என வரும்.

வேலின் வெற்றியை நோக்கிநின்ற விளக்குநிலையெனப் பொருள் கூறி,

“ வளிதுரந்தக் கண்ணும் வலந்திரியாப் பொங்கி
யொளிசிறந் தோங்கி வரலா—லளிசிறந்து
நன்னெறியே காட்டு நலந்தெரி கோலாற்கு
வென்னெறியே காட்டும் விளக்கு ”

(புற-வெ-மாலை-பாடாண்-கூ)

என்பது காட்டுவாரும் உளர். அவர் இதனை நிச்சம் இடுகின்ற விளக்கென்பர்.

வாயுறை வாழ்த்தும்—'வாயுறை வாழ்த்தே * * * வேம்புங் கடிவும்' என்னும் (ககஉ) செய்யுளியற் சூத்திரப்பொருளை உரைக்க.

இதற்கு ஒரு தலைவன் வேண்டானையினும் அவற்கு உறுதி பயத்தலைச் சான்றோர் வேண்டி வாய்மொழி மருங்கினன் அவனை வாழ்ச்சிப்படுத்தலின் இதுவுங் கைக்கிளைப்புறனகிய பாடாண் பிற்று. செவியுறைக்கும் இஃதொக்கும்.

உதாரணம்.—

"எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றுனிற் பரக்கும் யானைய முன்பிற்*
கானக நாடனை நீயோ பெரும
நீயோ ராகலி னின்னெனன் றுமொழிவ
லருளு மன்பு நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
குழவி கொள்பவரி னெம்புமதி
யளிதோ தானேயது பெறலருங் குரைத்தே." (புறம்-ஙி)

இதனுள் நிரயங் கொள்வாரோ டொன்றாது காவலிலேமாம் பென வேம்புங் கடிவும்போல வெய்தாகக்கூறி அவற்கு உறுதி பயத்தலின் வாயுறை வாழ்த்தாயிற்று.

"காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் †பன்னுட் காகு
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கு
மறிவுடை வேந்த னெறியறிந் து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்து
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கலலென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணு னுலகமுங் கெடுமே." (புறம்-கஅச)

என்னும் புறப்பாட்டும் அது,

தத்தம் புதுநூல் வழிகளாற் புறநானூற்றிற்குத் துறை கூறினுரேனும், அகத்தியமுந் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின், அவர் சூத்திரப்பொருளாகத் துறைகூறவேண்டு மென்றுணர்க. 'செவியுறைதானே' (தொல்-பொ-செ-ககச) என்னும் சூத்திரப் பொருண்மை இவ்வுதாரணங்கட்கு இன்மை உணர்க.

(பாடம்) * 'மொய்ம்பின்.' † 'பன்மாக்காக்கும்.'

செவியறிவுறூஉம்—இதற்குச் 'செவியுறைதானே' என்னும் செய்யுளியற் (ககசு) சூத்திரப்பொருளே உரைக்க.

ஒருவுதலே ஒருஉதலெனவும் ஒருஉவெனவுங் கூறுமாறு போல, உறுவும் உறாதலெனவுமே உறாஉவெனவுங் கூறப்படும்.

உதாரணம்:—

"அந்தணர் சான்றோ ரருந்தவத்தோர் தம்முன்னோர்
தந்தையா யென்றிவர்க்குத் தார்வேந்தே—முந்தை
வழிநின்று பின்னே வயங்குநீர் வேலி
மொழிநின்று கேட்டன் முறை."

(புற-வெ-மாலை-பாடாண்-கூ.கூ.)

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்குந்
தெனாஅ துருகெழு குமரியின் றெற்குங்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்குங்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்குங்
கீழது, முப்புண ரடுக்கிய முறைமுதற் கட்டி
வீர்ங்கிலை நிவப்பின் கீழு மேல
தானிலை யுலகத் தானு மாஞ
துருவும் புகழு மாகி விரிசீர்த்
தெரிகோன் ஞமன்* போல வொருதிறம்
பற்ற லியரோ† நிற்றிறஞ் சிறக்க
செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி யடர்புகர்ச்
சிறுகண் யானை செவ்வி தினேவிப்‡
பாசவற் படப்பை யாரெயில் பலதந்
தவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கிப்
பணியிய ரத்தை§நின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
யிறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவ ரேந்து¶ கை யெதிரே
வாடுக வினைவநின்$ கண்ணி யொன்னார்
நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே
**செலிய ரத்தைநின் வெகுளி வாலிழை
மங்கையர் தளித்த வாண்முகத் தெதிரே
யாங்க, வென்றி யெல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா வீகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவுந் தெறுசுட
ரொண்கதிர் ஞாயிறு போலவு
மன்னிய பெருமநீ நிலயிசை யானே." (புறம்-சு)

(பாடம்) * 'தெரிகோற்சமன்.' † 'பற்றிலியரோ.' ‡ 'ஏஎ.'
§ 'பணீஇயரத்தை.' ¶ 'முதல்வர்.' $ 'இயவுணின் .'
** 'செலீஇயரத்தை.'

இதனுள் இயல்பாகிய குணங்கூறி அவற்றோடு செவியுறை யுங் கூறினான், செவியுறைப்பொருள் சிறப்புடைத்தென்று அவன்கருதி வாழ்தல்வேண்டி.

ஆவயின் வருஉம் புறநிலை வாழ்த்தும்—தெய்வவழிபாடு உடைத்தாயினும் மக்கள் கண்ணதேயாகித் தோன்றும் பாட் டுடைத்தலைவன் முன்னிலையாகத் தெய்வம் படர்க்கையாக வாழ்த்தும் வாழ்த்தும் ;

தெய்வஞ் சிறந்ததேனும் மக்கள் அதிகாரப்படுதலின் அவர் கண்ணதேயாதற்கு ' ஆவயின் வருஉம் ' என்றார். இதற்கு 'வழிபடு தெய்வம்' என்னும் செய்யுளியற் (ககo) சூத்திரப் பொருளே யுரைக்க.

இதுவுந் தலைவன் குறிப்பின்றித் தெய்வத்தால் அவனை வாழ்விக்கும் ஆற்றலுடையார்கண்ணதாகலிற் கைக்கிளைப் புறனுயிற்று.

உதாரணம் :—

" கண்ணுதலோன் காப்பக் கடன்மேனி மால்காப்ப
வெண்ணிருதோ ளேந்திழையா டான்காப்பப்-பண்ணியலூர்ச்
சென்னியர்க் களிக்குந் தெய்வநீ
மன்னுக நாளுமிம் மண்மிசை யானே."

என வரும்.

கைக்கிளை வகையோடு உளப்படத் தொகைஇ—மேற் காமப்பகுதியென்ற கைக்கிளையல்லாத கைக்கிளையின் பகுதி யோடே வாயுறை வாழ்த்துஞ் செவியறிவுறூஉம் புறநிலைவாழ்த் துங்கூட நான்காகிய தொகைபெற்ற நான்கும்;

வாயுறை வாழ்த்து முதலிய மூன்றுந் தத்தம் இலக்கணத் திற் றிரிவுபடா; இக்கைக்கிளை திரிவுபடுமென்றற்கு எண்ணும் மையான் உடனிகழ்தாது உளப்படவென வேறுபடுத்தோதினார். அகத்திணையியலுள் இருபாற்குங் கூறிய கைக்கிளையுங், 'காமஞ் சாலா இளமையோள்வயிற்' (தொல்-பொ-அகத்-நிo) கைக்கிளை யும், 'மூன்றிய நான்கும்' (தொல்-பொ-அகத்-நிஉ) என்ற கைக்கிளையும், 'காமப்பகுதி' (தொல்-பொ-புறம்-உஅ) என்ற கைக்கிளையும், களவியலுண் 'மூன்றிய மூன்றும்' (தொல்-பொ-கள-கச) என்ற கைக்கிளையும் போலாது எஞ்ஞான்றும் பெண் பாலார் கூறுதலின்றி இடைநின்ற சான்றோராயினும் பிறரா யினுங் கூறுதற்கு உரித்தாய் முற்காலத்து ஒத்த அன்பினராகிக் கடைநிலைக்காலத்து ஒருவன் ஒருத்தியைத் துறந்ததனால் துறந்த

பெண்பாற் கைக்கிளையாதலின் திரிபுடைத்தாயிற்று. இது முதனிலைக்காலத்துத் தான்குறித்து முடித்துப் பின்னர் அவளை வருத்தஞ்செய்து இன்பமின்றி யொழிதலான் ஒருதலைக் காம மாயிற்று.

உதாரணம்:—

"அருளா யாதலோ கொடிதே யிருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக
னீனறு நெய்தலிற் பொலிந்த வுண்கண்
கலுழ்ந்துவா ராரிப்பனி பூணக நனைப்ப
வினைத லாளு ளாக வினையோய்
கிளையை மன்னெங் கேள்வெய் யோற்கென
யாந்தற் ரெழுதனம் வினவக் காந்தண்
முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா
யாமவன் கிளைஞரே மல்லேங் கேளினி
யெம்போ லொருத்தி நலனயந் தென்றும்
வரூஉ மென்ப வயங்குபுகழ்ப் பேக
லெல்லென வொலிக்குந் தேரொடு
மூல்லை வேலி நல்லூ ரானே." (புறம்-கசச)

இது கண்ணகி காரணமாக வையாவிக்கோப் பெரும் பேகனைப் பரணர் பாடிய கைக்கிளைவகைப் பாடாண்பாட்டு.

'கிளையை மன்னெங் கேள்வெய் யோற்கென' வினவ, யாங் கிளையல்லேம் மூல்லை வேலி நல்லூர்க்கண்ணே வருமென்று சொல்வாளெனக் கூறுதலின், அஃது ஏனைக் கைக்கிளைகளின் வேறுபிற்று.

'கன்முழை யருவி' யென்னும் (கசள) புறப்பாட்டும் அது.

தொக்க நான்கும் உள என மொழிப—அந்நான்கும் முற் கூறிய ஆறனுளே தொக்குப் பத்தாய்ப் பாடாண்பகுதிக் கண்ணே உளவாய் வருமென்று கூறுவா ஆசிரியர் என்றவாறு.

'தொக்க நான்' கென்றதனுன் இந்நான்கும் வெண்பாவும் ஆசிரியமுந் தொக்குநின்ற மருட்பாவானும் வருமென்பதூஉங் கொள்க. இவற்றை மேல்வருகின்றவற்றோடு உடன்கூறாயினுர், அவை இழிந்தோர் கூறுங் கூற்றுகளின். (கூடு)

கக. தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூத ரேத்திய துயிலெடை நிலையுங்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்

பெற்ற பெருவளம் பெரு அர்க் கறிவுதீ இச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமுஞ்
சிறந்த நாளணி செற்ற நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங் கலமுஞ்
சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமு
நடைமிகுத் தேத்திய குடைநிழன் மரபு
மாணுர்ச் சுட்டிய வாண்மங் கலமு
மன்னெயி லழித்த மண்ணுமங் கலமும்
பரிசில் கடையிய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவள னேத்தி
நடைவயிற் ரேன்று மிருவகை விடையு
மச்சமு மூவகையு மெச்ச மின்றி
நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமுங்
காலங் கண்ணிய வோம்படை யுளப்பட
ஞாலத்து வருஉ நடக்கையது குறிப்பிற்
கால மூன்ரெடு கண்ணிய வருமே.

இதுவும் அது.

(இ - ள்.) தாவில் கிடந்தோர்க்கு நல்லிசை கருதிய சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்—தமது வலியாலே பாசறைக்கண் ஒரு மனக்கவற்சியின்றித் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் அத்துயிலெடுப்பின் ஏத்தின துயிலெடை நிலையும்;

'கிடந்தோர்க்' கெனப் பன்மைகூறவே, அவர் துயிலெடுப்புத் தொன்றுதொட்டு வருமென்பதூஉஞ், சூதர் மாகதர் வேதாளிகர் வந்திகர் முதலாயினேருட் சூதரே இங்ஙனம் வீரத்தால் துயின் ரூரைத் துயிலெடுபபுவரென்பதூஉம், யாண்டும் முன்னுள் ளோரையும் பிறரையுங் கூறப்படுமென்பதூஉங் கொள்க. அவர் அங்ஙனந் துயின்றமை பிறர்க்கும் புலப்படப் புகழல் அவர் கருத்தாகலின் ஒரு தலைக் காமம் உளதாயிற்று.

உதாரணம்:—

"கானம் பொருந்திய கயவாய் மகளிரின்
யானுறுந் துயர நந்திய பானு

எிமையாக் கண்ணே டமையாக் காத்தநின்
மூதின் முதல்வன் முயில்கொண் டாங்குப்
போற்ரு மன்னரை யெள்ளிச் சிறிதுநீ
சேக்கை வளர்ந்தனே பெரும தாக்கிய
வண்கை யவுண னுயிர்செல வாங்கவ
னன்றுணர்ந் தாங்கு வென்றி மேய
வாடா வஞ்சி மலைந்த சென்னிப்
போரடு தானைப் பொலந்தேர் வளவ
நின்றுயி லெழுமதி நீயு
மொன்ரு வேந்தர் பொன்றுதுயில் பெறவே.”

எனவரும்.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் பெற்ற பெருவளம் பெரு அர்க்கு அறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்—ஆடன்மாந்தரும் பாடற்பாணரும் கருவிப் பொருநரும் இவருட் பெண்பாலாகிய விறலியுமென்னும் நாற் பாலாருந் தாம்பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச்சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும்;

கூத்தராயிற் பாரசவரும்* வேளாளரும் பிறரும் அவ் வாடற் ரொழிற்கு உரியோர்களும் பாரதிவிருத்தியும்† விலக் கியற்கூத்துங் கானகக்கூத்துங் கழாய்க்கூத்தும் ஆடுபவராகச் சாதி வரையறையிலராகலின் அவரை முன்வைத்தார்: பாணரும் பொருநருந் தத்தஞ் சாதியில் திரியாது வருதலிற் சேரவைத் தார்; முற்கூறிய மூப்பாலோருட் கூத்தராயினுர் எண்வகைச் சுவையும் மனத்தின்கட்பட்ட குறிப்புக்களும் புறத்துப் போந்து புலப்பட ஆடுவார்; அது விறலாகலின் அவ் விறல்பட ஆடுவாளை விறலியென்ரார். இவளுக்குஞ் சாதிவரையறை யின்மையிற் பின்வைத்தார். பாணரும் இசைப்பாணரும் யாழ்ப்பாணரும் மண்டைப்பாணருமெனப் பலராம். பொருநரும் ஏர்க்களம் பாடுநரும் போர்க்களம்பாடுநரும் பரணிபாடுநருமெனப் பலராம். விறலிக்கு அன்னதோர் தொழில் வேறுபாடின்றித் தொழி லொன்ரு கலின் விறலியென ஒருமையாற் கூறினர்.

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெரு அர்க்கு அறிவுறீஇச் சென்றுபயனெதிரச் சொன்ன பக்கமும்—இல்லறத்தைவிட்டுத் துறவறமாகிய நெறியிடத்து

(பாடம்) * ‘பாரசைவர்.’ என்பது மூன் அச்சுப்பிரதியிற் கண்ட பாடம். ஆனல் அது திருத்தமானதன்று.

† ‘பாரத விருத்தி.’ என்பது திருத்தமான பாடம் அன்று.

நிற்றல் நன்றென்றுங் கண்டகாட்சி நீதென்றும் மாறுபடத் தோன்றுகையினாலே தான் இறைவனிடத்துப்பெற்ற கந்தழி யாகிய செல்வத்தை யாண்டுந்திரிந்து பெறுதார்க்கு இன்ன விடத்தே சென்றுற் பெறலாமென்று அறிவுறுத்தி அவரும் ஆண்டுச் சென்று அக் கந்தழியினைப் பெறும்படி சொன்ன கூறுபாடும் ;

பக்கமென்றதனானே அச்செய்யுட்களைக் கூத்தராற்றுப் படை பாணாற்றுப்படை பொருநராற்றுப்படை விறலியாற்றுப் படை முருகாற்றுப்படையென வழங்குதலும் ஆற்றினருமையும் அவனூர்ப் பண்புமுதலியனவுங் கூறுதலுங் கொள்க.

உதாரணம் :—

"வான்றோய் வெண்குடை வயமா வளவ
னீன்றோர் தம்மினுந் தோன்ற நல்கினன்
சுரஞ்செல் வருத்தமோ டிரங்கி யென்று
மிரந்தோ ரறியாப் பெருங்கலஞ் சுரக்குவன்
சென்மதி வாழிய நீயே நின்வயி
னுடலு மகிழ்வான் பாடலுங் கேளான்
வல்லே வருகென விடுப்பி னல்லது
நில்லென நிறுக்குவ னல்ல னல்லிசைப்
பெருந்தகை வேந்தர் கோலமொடு
திருந்தா வாழ்க்கையின் வருந்து வோயே."

"திருமழை தலைஇய விருணிற விசும்பின்."

(பத்து-மலைபடுகாடம்-க)

இவை கூத்தராற்றுப்படை.

"பாணன் சூடிய பசும்பொற் றுமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ
யூரீர் போலச் சுரத்திடை யிருந்தனிர்
யாரீ ரோவென வினவ லானாக்
காரெ னெக்கற் கடும்பரி யீரவல
வென்வே லண்ணற் காணு வுங்கே
நின்னினும் புல்லியே மன்னே யினியே
இன்னே மாயினே மன்னே யென்று
மூடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேக
னெத்துணை யாயினு மீத்த னன்றென
மறுமைநோக் கின்றே வன்றே
பிறர், வறுமைநோக் கின்றவன் கைவண் மையே.*"

(புறம்-கசக)

(பாடம்) * 'நல்லா தெனினும்' திருக்குறள், உஉஉ.

"மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை."
(பத்து-சிறுபாண்-க)

இவை பாணற்றுப்படை.

"சிலையுலாய் நிமிர்ந்த சாந்துபடு மார்பி
ஞெலிபுனற் கழனி *வெண்குடைக் கிழவோன்
வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் தட்டோன்
வள்ளிய ஞதல் வையகம் புகழினு
மூள்ள லோம்புமி† னுயர்மொழிப் புலவீர்
யானும், இருணிலாக் கழிந்த பகல்செய் வைகறை
யொருகண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றிப்
பாடிமிழ் முரசி னியறேர்த் தந்தை
வாடா வஞ்சி பாடினே ஞக
வகமலி யுவகையொ டணுகல் வேண்டிக்
கொன்றுசினந் தணியாப் புலவுநாறு மருப்பின்
வெஞ்சின வேழ நல்கின னஞ்சி
யான தெயர்த்தனெ ஞகத் தானது
சிறிதென வுணர்ந்தமை நாணிப் பிறிதுமோர்
பெருங்களிறு நல்கி யோனே யதற்கொண்
டிரும்பே ரொக்கல் பெரும்புலம் புறினுந்
துன்னரும் பரிசி னருமென
வென்றுஞ் செல்லேனவன் குன்றுகெழு நாட்டே."
(புறம்-நகச)

"அரஅ யாண ரகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட்."
(பத்து-பொருந-க-உ)

இவை பொருநராற்றுப்படை.

"சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி
தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை
வண்டெபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினு மருவி
கொள்ளுழு வியன்புலத் துழைகா லாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ நிழிதரு
நீரினு மினிய சாயற்
பாரி வேள்பாற் பாடினே செலினே."
(புறம்-கஅஞ)

"மெல்லியல் விறலிநீ நல்லிசை செவியில்."
(புறம்-ககக)

இவை விறலியாற்றுப்படை.

கூத்தராற்றுப்படை தடுமாறுதொழிலாகாமற் கூத்தரை ஆற்றுப் படுத்தென விரிக்க. ஏனையவும் அன்ன.

முருகாற்றுப்படையுட் 'புலம்பிரிந் துறையுஞ் சேவடி' யெனக்கந்தழிகூறி, 'நின்னெஞ்சத் தின்னசைவாய்ப்பப் பெறுதி' யெனவுங் கூறி, அவனுறையும் இடங்களும் கூறி, ஆண்டுச்

(பாடம்) * 'ஒலிகதிர்க் கழனி.' † மோம்புமி.

சென்றால் அவன் 'விழுமிய பெறலரும் பரிசினல்கும்' எனவுங் கூறி, ஆண்டுத் தான் பெற்ற பெருவளம் அவனும்பெறக் கூறியவாறு காண்க. இதனைப் புலவராற்றுப்படை என்று உய்த்துணர்ந்து பெயர் கூறுவார்க்கு முருகாற்றுப்படை யென்னும் பெயரன்றி அப்பெயர் வழங்காமையான் மறுக்க. இனி முருகாற்றுப்படை யென்பதற்கு முருகன்பால் வீடு பெறுதற்குச் சமைந்தான் ஓரிரவலனை ஆற்றுப்படுத்த தென்பது பொருளாகக்கொள்க. இனிக் கூத்தர் முதலியோர் கூற்றாகச் செய்யுட் செய்யுங்கால் அவர்மேல் வைத்துரைப் பினன்றிப் புலனுடை மாந்தர் தாமே புலனெறி வழக்கஞ் செய்யாமையுணர்க.

இனி இசைப்புலவர்க்கும் நாடகப்புலவர்க்கும் இங்ஙனங் கூறலமையாது; அவருள் உயர்ந்தோரல்லாதாரும் அத் தொழிற்குப் பெரும்பான்மையும் உரியராய் நடத்தலின்.

நாளணி செற்ற நீக்கிச் சிறந்த பிறந்த நாள்வயிற் பெரு மங்கலமும்—நாடொறுந் தான் மேற்கொள்ளுகின்ற செற்றங் களைக் கைவிட்டுச்* சிறந்த தொழில்கள் பிறத்தற்குக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியும்;

அரசன் நாடோறும் தான் மேற்கொள்கின்ற செற்றமாவன சிறைசெய்தலுஞ் செருச்செய்தலுங் கொலைபுரிதலும் முதலியன. சிறந்த தொழில்களாவன சிறைவிடுதலுஞ் செருவொழிதலுங் கொலையொழிதலும் இறைதவிர்த்தலுந் தானஞ்செய்தலும் வேண்டின கொடுத்தலும் பிறவுமாம்.

மங்கலவண்ணமாகிய வெள்ளணியும் அணிந்து எவ்வுயிர்க் கண்ணும் அருளே நிகழ்தலின் அதனை வெள்ளணி யென்ப. ஆகுபெயரான் அப்பொருள் கூறிய செய்யுளும் வெள்ளணி யாயிற்று.

உதாரணம்:—

"அந்தண ராவொடு பொன்பெற்றூர் நாவலர்
மந்தரம்போன் மாண்ட களிறூர்ந்தா—ரெந்தை
யிலங்கிலைவேற் கிள்ளி யிரேவதிநா ளென்னை
சிலம்பிதன் கூடிழந்த வாறு." (முத்தொள்ளாயிரம்-அஉ)

இது சிலம்பி கூடிழக்குந்தினை அடங்கலும் வெளியாயிற் றென்றலின் வெள்ளணியாயிற்று.

(பாடம்) * 'செற்றங்களைக் கையிட்டு' என்பது முன் அச்சுப் பிரதிப் பாடம். இது பொருந்தவில்லை.

"செய்கை யரிய களவழிப்பா முன்செய்த
போயிகை யொருவனும் போந்தரமோ—சைய
மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்தி
கொலைச்சிறைதீர் வேந்துக் குழாம்."

இது சிறைவிடுதல் கூறிற்று.

"கண்ணுர் கதவந் திறமின் களிரெடுதேர்
பண்ணுர் நடைப்புரவி பண்ணிடுமின்—நண்ணுதீர்
தேர்வேந்தன் றென்னன் றிருவுத் திராடநாட்
போர்வேந்தன் பூச லிலன்." (முத்தொள்ளாயிரம் ஏ)

இது செருவொழிந்தது.

"ஏமாரு மன்னீ ரெயிறிமி னெங்கோமான்
வாமான்றேர்க் கோதை சதயநா—ளாமாறு
காம நுகருமின் கண்படுமி னென்னுமே
யேம முரசின் குரல்."

இதனுள் இழிகுலத்தோன் பறைசாற்றினமை கூறுதலின் இழிந்தோர் கூறுதல் ஒழிந்த மங்கலங்கட்கும் ஒக்கும். பெருமங்கல மென்றதனுனே பக்கநாளுந் திங்கடோறும் வரும் பிறந்த நாளும் பாடலுட் பயிலாமை யுணர்க.

சிறந்த சீர்த்தி மண்ணும் மங்கலமும்—அரசர்க்குச் சிறப் பெய்திய மிக்க புகழை எய்துவிக்கும் முடிபுனைந்து ஆடும்நீராட்டு மங்கலமும்;

இதனைப் பிறந்தநாளின் பின்வைத்தார் பொன்முடிபுனைந்த ஞான்று தொடங்கி யாண்டுதோறும் இது வருமென்றற்கு. குறு நில மன்னர்க்காயின் அவர்க்குரிய பட்டத்தோடு கூடிய மண்ணு மங்கலமுங் கொள்க:

உதாரணம் :—

"அளிமுடியாக் கண்குடையா ளுகுதிநாள் வேய்ந்த
வொளிமுடி பொன்மலையே யொக்கு—மொளிமுடிமேன்
மந்திரத்தா லந்தணர் வாக்கியநீ ரம்மலமே
லந்தரத்துக் கங்கை யனைத்து."

என வரும்.

இதனுனே யாண்டு இத்துணைச் சென்றதென்று எழுதும் நாண்மங்கலமும் பெறுதும்.

நடை மிகுத்து ஏத்திய குடைநிழன் மரபும்—உலகவொழுக் கத்தை இறப்ப உயர்த்துப் புகழ்ந்து கூறப்பட்ட குடைநிழல திலக்கணமும்;

இங்ஙனம் புனைந்துரைத்தற்கு ஏதுவாயது நிழலாம்; என்னை? அந்நிழல் உலகுடனிழற்றியதாகக் கூறுதலும்பட்டுக் குடி புறங்காத்தற்குக் குறியாகக் குடைகொண்டேனென்று அக் கொற்றவன் குறிக்கவும் படுதலின்.

மரபென்றதனாற் செங்கோலுந் திகிரியும் போல்வன வற்றைப் புனைந்துரையாக்கலுங் கொள்க.

உதாரணம்:—

"மந்தரங் காம்பா மணிவிசும் போலியாத்
திங்க ளதற்கோர் திலதமா—வெங்கணு
மூற்றுநீர் வைய முழுது நிழற்றுமே
கொற்றப்போர்க் கீள்வி குடை." (முத்தொள்ளாயிரம்-சுஉ)

என வரும்.

"அறநீர்மை தாங்கி யளப்பரிதாய் வானப்
புறநீர்போன் முற்றும் பொதியும்—பிறரொவ்வா
மூவேந்த ருள்ளு முதல்வேந்தன் முத்தமிழ்க்குக்
கோவேந்தன் கண்டான் குடை."

எனவும்,

* * * * *

ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பி னடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்குநின் வெண்பொரு வியன்குடை
வெயின் மறைக் கொண்டன்றே வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ (புறம்-சுஅ)

* * * * *

எனவும்,

"திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதுங்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்." (சிலப்-மங்கல.)

எனவும்,

"திங்கண் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி."
(சிலப்-கானல்வரி)

"ஞாயிறு போற்றுது ஞாயிறு போற்றுதுங்
காவிரி நாடன் றிகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்." (சிலப்-மங்கல)

எனவும் இவை குடையையும் செங்கோலையுந் திகிரியையும் பணைத்தன.

மாணூர்ச்சுட்டிய வாண்மங்கலமும்—பகைவரைக் குறித்த வாள் வென்றியாற் பகிப்பிணி தீர்ந்த பேய்ச்சுற்றமும் பிறரும் வாளினை வாழ்த்தும் வாண்மங்கலமும் ;

இது பிறர் வாழ்த்தப்படுதலிற் கொற்றவையைப் பரவும் 'வென்ற வாளின் மண்' (புறத்திணை-கஉ)ணென்பதனில் வேறு பிற்று. புகழ்ச்சிக்கட் பகைவரை இகழ்ந்து புகழ்தலின் 'மாணூர்ச்சுட்டிய' என்றூர்.

உதாரணம் :—

" ஆளி மதுகை யடல்வெய்யோன் வாள்பாடிக்
கூளிகள் வம்மினே கூத்தாடக்—காளிக்குத்
தீராத வெம்பசி தீர்த்துநாஞ் செங்குருதி
நீராட்டி யுண்ட நிணம்."

என வரும்,

" அரும்பவிழ்தார்க் கோதை யரசெறிந்த வொள்வாள்
பெரும்புலவுஞ் செஞ்சாந்து நாறிச்—சுரும்பொடு
வண்டாடும் பக்கமு முண்டு குறுநரி
யுண்டாடும் பக்கமு முண்டு." (முத்தொள்ளாயிரம்-கoக)

இது பிறர் கூறியது.

இது பாணியிற் பயின்றுவரும்.

மன்னெயில் அழித்த மண்ணூ மங்கலமும் - மாற்றரசன் வாழ்ந்த மதிலெயழித்துக் கழுதையேரான் உழுது வெள்ளெவர குங் கொள்ளும் விதி மங்கலமல்லாதன செய்தவன் மங்கல மாக நீராடுமங்கலமும்;

அழித்ததனன் மண்ணுமங்கலம்.

உதாரணம்:—

"கடிந்தேர் குழித்த வெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனெயவர் நனந்தலை நல்லெயில்." (புறம்-கஅ)

என எயிலழித்தவாறு கூறி,

"வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட." (புறம்-கஅ)

எனவே, ஒருவாற்றன் மண்ணியவாறுங் கூறியவாறு காண்க.

குடிமிகாண்ட மண்ணுமங்கலம் எயிலழித்தல் கூறுமை யின் இதனின் வேறுயிற்று.

பரிசில் கடைஇய நிலையும்—பரிசிலரை நீக்குதலமையாது நெடிது கொண்டு ஒழுகிய தலைவற்குப் பரிசில் வேட்டோன் தன் கடும்பினது இடும்பை முதலியன கூறித் தான் குறித்த பொருண்மையினைச் செலுத்திக் கடாவினநிலையும்;

கடைக்கூட்டு நிலையும்—வாயிலிடத்தே நின்று தான் தொடங்கிய கருமத்தினை முடிக்கும் நிலையும்;

இதுவும் இழிந்தோர் கூற்றுயிற்று, இருத்தலே அன்றிக் கடாவுதலின். நிலையென்றதனானே பரிசில்பெறப் போகல் வேண்டுமென்னுங் குறிப்பும் பரிசினிலையும் பல்வகையாற் கூறுதல் கொள்க.

உதாரணம்:—

"ஆடுகளி மறந்த கோடுய ரடுப்பி
னும்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றேரொடு திரங்கி
யில்லி தூர்ந்த பொல்லா வறுமூலை
சுவைத்தொ றழுஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணெண்
ணினையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் தமண
வென்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணூர் முழவின் வயிரிய
ரின்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே." (புறம்-கசுச)

இது பரிசில் கடாநிலை.

"மதியோர் வெண்குடை யதியர் கோமான்
கொடும்பூ ணெழினி நெடுங்கடை நின்றியான்
பசலை நிலவின் பனிபடு விடியற்
பொருகளிற் றடிவழி யன்ன வென்கை
யொருகண் மாக்கிணை யொற்றுபு கொடாஅ
வுருகெழு மன்ன ராரெயில் கடந்து
நிணம்படு குருதிப் பெரும்பாட் டுரத்
தணங்குடை மரபி னிருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்
வைக லுழவ வாழிய பெரிதெனச்
சென்றியா னின்றனெ னுக வன்றே
யூருண் கேணிப் பகட்டிலைப் பாசி
வேர்புரை சிதாஅர் நீக்கி நேர்கரை
நுண்ணூற் கலிங்க முடீஇ யுண்மெனத்
தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்
கோண்மீ னன்ன பொலங்கலத் தனைஇ

யூண்முறை யீத்த லன்றியுங்* கோண்முறை
வீருந்திறை நல்கி யோனே யந்தரத்
தரும்பெற லமிழ்த மன்ன
கரும்பிவட் டந்தோன் பெரும்புறங் கடையே†."

(புறம்-உகஉ)

இது கடை நிலை.

"நல்யா ழாகுளி பதலியொடு சுருக்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
‡விசும்பா டெருவைப் பசுந்தடி தடுப்பப்
பகைப்புல மரீஇய தகைப்பெருஞ் சிறப்பிற்
குடுமிக் கோமாற் கண்டு
கொடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே." (புறம்-சுச)

இது போகல்வேண்டுங் குறிப்பு.

"ஊனு மூணு முனையி னினிதெனப்
பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவு
மளவுபு கலந்து மெல்லிய தருகி
விருந்துறுத் தாற்றி யிருந்தனை மாகச்
சென்மோ பெருமவெம் விழவுடை நாட்டென
யாந்தன் னறியுந மாகத் தான்பெரி
தன்புடை மையி னெம்பிரி வஞ்சித்
துணரியது கொளாஅ வாகிப் பழமூழ்த்துப்
பயம்பகர் வறியா மயங்கரின் முதுபாழ்ப்
பெயல்பெய் தன்ன செல்வத் தாங்க
ணீயா மன்னர் புறங்கடைத் தோன்றிச்
சிதாஅர் வள்பிற் சிதர்ப்புறத் தடாரி
யூனுகிர் வலந்த தெண்க ணெறற்றி
விரல்விசை தவிர்க்கு மரலையில் பாணியி
னிலம்பா டகற்றல் யாவது புலம்பொடு
தெருமர லுயக்கமுந் §தீர்க்குவோ மதனு
¶னிருநிலங் கூலம் பாறக் $கோடை
வருமழை **மூழக்கிசைக் கோடிய பின்றைச்
சேயை யாயினு மிவணை யாயினு
மிதற்கொண் டறிதி வாழியோ கிணைவ
சிறுநனி, யொருவழிப் படர்கென் றூனே யெந்தை
யொலிவெள் ளருவி வேங்கட நாட
னுறுவருஞ் சிறுவரு மூழ்மா றுய்க்கு
மறத்துறை யம்பியின் மாண மறப்பின்

(பாடம்) * 'ஊண்முறை விடுத்த லின்றியும்.'
† 'பெரும் பிறங்கடையே.' என்பது முன் அச்சுப்பிதியிற் கண்ட பாடம். ஆனல் அது சிறந்ததன்று.
‡ 'விசும்போ டெருவை' § 'தீர்க்குவோ னதனுல்.'
¶ 'இருநிலங் கூலமாறி.' $ 'கொண்ட வருமழை.'
** 'மூழக்கிடை.'

நிருங்கோ ளீராப் பூட்கைக்
கரும்ப னூரன் காதன் மகனே.” (புறம்-ங அக)

இது மேலும் இக்காலத்தும் இங்ஙனந் தருவலென்னு னெனக் கூறினமையின் அவன் பரிசினிலே கூறிற்று.

“குன்று மலையும் பலபின் னெழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந் தருளி யீதுகொண்
டீங்ஙனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனே தாங்கருங் காவலன்
காணு தீத்த விப்பொருட் கியானேர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே.” (புறம்-உ0அ)

என்னும் புறப்பாட்டும் அப்பரிசினிலையைக் கூறியது காண்க.

பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி நடைவயின் தோன்றும் இருவகை விடையும்—அங்ஙனம் பரிசில் பெற்றபின் அவனும் அவன் கொடுத்த பெருவளனை உயர்த்துக்கூறி உலகவழக்கியலால் தோன்றும் இரண்டு வகைப்பட்ட விடையும்;

இருவகையாவன, தலைவன் தானே விடுத்தலும் பரிசிலன் தானே போகல் வேண்டுமெனக் கூறிவிடுத்தலுமாம்.

உதாரணம்:—

“தென்பரதவர் மிடல்சாய
வடவடுகர் வாளோட்டிய
தொடையமை கண்ணித் திருந்துவேற் றடக்கைக்
கடுமா கடைஇய விடுபரி வடிம்பி
னற்றூர்க் கள்ளின் சோழன் கோயிற்
புதுப்பிறை யன்ன சுதைசெய் மாடத்துப்
பனிக்கயத் தன்ன நீணகர் நின்றே
னரிக்கூடு மாக்கிணை யிரிய வொற்றி
யெஞ்சா மரபின் வஞ்சி பாட
வெமக்கென வருத்த வல்ல மிகப்பல
மேம்படு சிறப்பி னருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே யதுகண்
டிலம்பா டுழந்தவென் னிரும்பே ரொக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநருஞ்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரு
மரைக்கமை மரபின மிடற்றியாக் குநரு
மிடற்றமை மரபின வரைக்கியாக் குநருங்
கடுந்தே ரீராம னுடன்புணர் சீதையை
வலித்தலை யரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் மதாணி கண்ட குரங்கின்

செம்முகப் பெருங்களி யிழைப்பொலிந் தாஅங்
கரும்அ வருநகை யினிதுபெற் றிகுமே
யிருங்களைத் தலைமை யெய்தி
யரும்படை செல்வ முழந்ததன் றலையே." (புறம்-கூஎஅ)

இது தானே போவென விடுத்தபின் அவன் கொடுத்த வளனே உயர்த்துக் கூறியது.

"உயிர்ப்பிடம் பெரும்அ ணண்முனிந் தொருநாட்
செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய
செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தன மாக வல்லே
யகறி ரோவெம் மாயம் விட்டெனச்
சிறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு
துடியடி யன்ன துங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறி யளவையிற் றரத்தர யானு
மென்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்
டின்மைதீர வந்தனென்." (பத்து-பொருநர்-ககக-உகூ)

இது யான் போகல்வேண்டுமெனக் கூறி விடுத்தபின், அவன் தந்த வளனே உயர்த்துக்கூறியது. 'நடைவயின் தோன்று' மென்றதனாற் சான்றோர் புலனெறிவழக்கஞ்செய்துவரும் விடைகள் பலவுங் கொள்க. அவை பரிசில் சிறிதென்று போகலும், பிறர்பாற் சென்று பரிசில்பெற்றுவந்து காட்டிப் போகலும், இடைநிலத்துப் பெற்ற பரிசிலை இடைநிலத்துக் கண்டார்க்குக் கூறுவனவும், மனைவிக்கு மகிழ்ந்து கூறுவனவும், பிறவும் வேறுபட வருவனவெல்லாங் கொள்க.

உதாரணம்:—

"ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிது
மீத லெளிதே மாவண் டோன்ற
லதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே." (புறம்-கஉக)

இது சிறிதென்ற விடை.

"இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்ல
ரிரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னோர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றேரன்றல் செல்வல் யானே." (புறம்-ககூஉ)

இது பிறன்பாற் பெரிதுபெற்றுச் சிறிது தந்தவற்குக் காட்டிய விடை.

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி" என்னும் (கஞிஉ) புறப்பாட்டு இடைநிலத்திற் பரிசுபெற்றமை கண்டார்க்குக் கூறியது.

"நின்னயந் துறைநர்க்கு நீயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் னிலோமுத லோர்க்குங்
கடும்பின் கடும்பகி ரீர யாழநின்
னெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கு
மின்னேர்க் கென்னு தென்னெடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னுது நீயு
மெல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழங்ணங்கு மூதிரத்துக் கிழவன்
றிருந்துவேற் றுமண னல்கிய வளனே." (புறம்-உசுஉ)

இது மனைக்குக் கூறியது.

நாளும் புள்ளும் பிறவற்று நிமித்தமும் அச்சமும் உவகை யும் எச்சமின்றிக் காலங் கண்ணிய ஒம்படை உளப்பட— நாணிமித்தத்தானும் புண்ணிமித்தத்தானும் பிறவற்றினிமித்தத் தானும் பாடாண்டலைவர்க்குத் தோன்றிய தீங்குகண்டு அஞ்சிய அச்சமும் அது பிறத்தற்குக் காரணமாகிய அன்பும் ஒழிவின் றிப் பரிசிலர்கது நிகழ்தலின் அவர் தலைவர் உயிர்வாழுங் காலத் தைக் கருதிய பாதுகாவன் முற் கூறியவற்றோடுகூட;

ஒருவன் பிறந்தநாள்வயின் ஏனைநாள்பற்றிப் பொருந் தாமை பிறத்தலும், அவன் பிறந்த நாண்மீனிடைக் கோண்மீன் கூடியவழி அவன் நாண்மீனிடைத் தீதுபிறத்தலும், வீழ்மீன் தீண்டியவழி அதன்கண் ஒரு வேறுபாடு பிறத்தலும் போல் வன நாளின்கண் தோன்றிய நிமித்தம். *"புதுப்புள் வருதலும் பழம்புட் போதலும்" பொழுதன்றிக் கூகை குழறலும் போல் வன புள்ளின்கண் தோன்றிய நிமித்தம்; ஓர்த்து நின்றுழிக் கேட்ட வாய்ப்புள்ளும் ஓரிக்குர லுள்ளிட்டனவுங் கழுதுடன் குழீஇய குரல்பற்றலும் வெஞ்சுடர் மண்டிலத்துக் கவந்தம் வீழ் தலும் அதன்கண் தலைதோன்றுதலுந் தண் சுடர் மண்டிலம் பகல் நிலவெறித்தலும் போல்வன பிறவற்றுக்கண் தோன்றிய நிமித்தம்.

உவகை, அன்பு இந்நிமித்தங்கள் பிறந்துழித் தான் அன்பு நிகழ்த்தினுன் ஒரு பாடாண்டலைவனது வாழ்க்கை நாளிற்கு ஏதம் வருங்கொலென்று அஞ்சி அவற்குத் தீங்கின்றுகவென்று ஓம்படை கூறுதலின் அது காலங்கண்ணிய ஓம்படையாயிற்று. எஞ்ஞான்றுந் தன் சுற்றத்து இடும்பை தீர்த்தானொருவற்கு இன்னுங்கு வந்துழிக் கூறுதலின், இற்றைஞான்று பரிசிலின்

* 'இருமுந்நீர்க்' புறநானூறு—உ0. பக்கம், உகூச.

றேனும் முன்னர்ப் பெற்ற பரிசிலே நினைந்து கூறினமாகவே கைக்கிளைக்குப் புறனயிற்று. இவன் இறத்தலான் உலகுபடுந் துயரமும் உளதாகக் கூறலிற் சிறந்த புகழுங் கூறிற்று.

"நெல்லரியு நிருந்தொழுவர்" என்னும் (உச) புறப்பாட்டினுள் "நின்று நிலையிரின் ஞண்மீன்" என அவனளிற்கு முற்கூறிய வாற்றான் ஒரிடையூறு கண்டு அவன்கண் அன்பால் அஞ்சி ஒம்படை கூறியது.

உதாரணம் :—

"ஆடிய லழற்குட்டத்
தாரிரு ளரையிரவின்
மூடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயங்காயப்
பங்குனி யுயரழுவத்துத்
தலைநாண்மீ னிலைதிரிய
நிலைநாண்மீ னதனெதிரோர்தரத்
தொன்ஞண்மீன் றுறைபடியப்
பாசிச் செல்லா தூசி முன்ஞ
தளக்கர்த்திணை விளக்காகக்
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி*
யொருமீன் வீழ்ந்தன்றல் விசும்பி னூனே
யதுகண், டியாமும் பிறரும் பல்வே றிரவலர்
பறையிசை யருவி நன்ஞட்டுப் பொருந
ஞயில ஞயி னன்றுமற் றில்லென
வழிந்த நெஞ்ச மடியுளம் பரப்ப
வஞ்சின மெழுநாள் வந்தன் றின்றே
மைந்துடை யாளை கைவைத் தறங்கவுந்
திண்பிணி முரசங் கண்கிழிந் தூருளவுங்
காவல் வெண்குடை கால்பரிந் தலறவுங்
காலியற் களிமாக் கதியின்றி வைகவு
மேலோ ருலக மெய்தின ஞகலி
ஞெண்டொடி மகளிர்க் குறுதுணை யாகித்†
தன்றுணை யாய மறந்தனன் கொல்லோ
பகைவர்ப் பிணிக்கு மாற்ற னசைவர்க்
களந்து கொடையறியா வீகை
மணிவரை யன்ன மாஅ யோனே." (புறம்-உஉக)

இதனுட் பாடாண்டலைவனது நாண்மீனை வீழ்மீன் நலிந்தமை பற்றிக் கூறியது.

"இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதாநிலைஇய காயமு, மென்றூங்
கவையளந் தறியினு மளத்தற் கரியை

(பாடம்) * 'கால்பிதிர்வுபொங்கி.' † 'மகளிர்க் கமர்துணை யாகி.'

யறிவு மீரமும் பெருங்கண் ணேட்டமுஞ்
சோறுபடுக்குந் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியார்கின் னிழல்வாழ் வோரே
திருவி லல்லது கொலைவில் லறியார்
நாஞ்சி லல்லது படையு மறியார்
திறனறி வயவரொடு தெவ்வர் தேயவப்
பிறர்மண் ணுண்ணுஞ் செம்மனின் ஞெட்டு
வயவுறு மகளிர் வேட்டினி னல்லது
பகைவ ருண்ணு வருமண் ணினையே
யம்புதுஞ்சுங் கடியரணு
லதந்துஞ்சுஞ் செங்கோலையே
புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
விதுப்புற வறியா வேமக் காப்பினை
யனையை யாகன் மாறே
மன்னுயி ரெல்லா நின்னஞ் சும்மே.” (புறம்-உ0)

இப் புறப்பாட்டும் அது.

புதுப்புள் வந்ததும் பழம்புட் போயதுங் கண்ட தீங்கின் பயன் நின்மேல் வாராமல் விதுப்புறவறியா ஏமக் காப்பினையாக என்று ஓம்படை கூறியது. அது மேல் நின்னஞ்சுமென்று அச்சங்கூறி வெளிப்படுத்ததனுன் உணர்க.

“மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயுந்
தீமுரணிய நீரும், என்றூங்
கைம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றூர்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலு மளியு முடையோய்
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பி னன்ஞாட்டுப் பொருந
வான வரம்பனை நீயோ பெரும
வலங்குலைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
யீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
பாஅல்புளிப்பினும் பகலிருளினு
நாஅல்வேத நெறிதிரியினுந்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ வத்தை யடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
யந்தி யந்தண ருருங்கட னிறுக்கு
மூத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே.” (புறம்-உ)

என்னும் புறப்பாட்டுப் பகைநிலத்தரசற்குப் பயந்தவாறு கூறிப் பின்னர்த் திரியாச் சுற்றமொடு விளங்கி நடுக்கின்றி நிற்பாயென அச்சந்தோன்றக் கூறி ஓம்படுத்தலின் ஓம்படை வாழ்த்தாயிற்று. "காலனுங் காலம்" என்னும் (சக) புறப்பாட்டும் அது.

ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பிற் கால மூன்றொடு கண்ணிய வருமே—உலகத்துத் தோன்றும் வழக்கினது கருத்தினானே மூன்று காலத்தோடும் பொருந்தக் கருதுமாற்றான் வரும் மேற்கூறிவருகின்ற பாடாண்டிணை என்றவாறு

என்றது, இவ்வழக்கியல் காலவேற்றுமைபற்றி வேறுபடுமாயின், அவையும் இப்பொருள்களின் வேறுபடா . என்ப துணர்த்தியவாறு.

அவை, பகைவர்நாட்டுப் பார்ப்பார் முதலியோரை ஆண்டு கின்றும் அகற்றிப் பொருதல் தலையாய அறம்; அதுவன்றிப் பொருள் கருதாது பாதுகாவாதான் நிரையைத் தான் கொண்டு பாதுகாத்தல் அதனினிழிந்த இடையாய அறம்; அதுவன்றிப் பிறர்க்கு அளித்தற்கு நிரைகோடல் நிகழினும், அஃது அதனினுமிழிந்த கடையாய அறமெனப்படும். இனிப் பகைவன் போற்றுத நாட்டைக் கைக்கொண்டு தான் போற்றச் சேறலும், பொருள் வருவாய்பற்றிச் சேறலும், வஞ்சித்தச் சேறலும் போல்வன ஒன்றனின் ஒன்றிழிந்த ஞாலத்து நடக்கைக் குறிப்பு; மாற்றரசன் முற்றியவழி ஆற்றுதோன் அடைத்திருத்தலும், அரசியலாயினும் அவன் வென்றியுள்ளமொடு வீற்றிருத்தலுங், தனக்கு உதவிவரவேண்டியிருத்தலும், ஆற்றலன்றி ஆக்கங் கருதாது காத்தேயிருத்தலும் ஒன்றனினொன்றிழிந்த நடக்கைக் குறிப்பு.

இனி வாகைக்குப் பார்ப்பன ஒழுக்க முதலியன நான்கற்கும் வேறுபட வருதலுங் கொள்க. காஞ்சிக்கும் அவரவர் அறிவிற்கேற்ற நிலையாமை கொள்க; உயிரும் உடம்பும் பொருளுமென்ற மூன்றும்பற்றி. இது பாடாண்டிணையுட் கூறினர், எல்லாத்திணைக்கும் புறனடையாதல் வேண்டி. இனிக் கடவுள் வாழ்த்திற்குத் தலை இடை கடைகோடலும், அறுமுறை வாழ்த்திற்கும் அவற்றின் ஏற்றிழிவு பற்றிக் கோடலும், பிறவுஞ் சான்றோர் செயயுட்கண் வேறுபட வருவனவெல்லாம் இதனுள் அமைக்க. முற்கூறியனவெல்லாம் ஓம்படையுளப்படக் கண்ணிய வருமென்பது. (கூச)


இரண்டாவது புறத்திணையியற்கு,

ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த காண்டிகை முடித்தது.

சூத்திர முதற்குறிப்பு அகரவரிசை

	பக்கம்		பக்கம்
அகத்திணை மருங்	கஉஅ	குடையும் வாளும்,	கஅஉ
அடியோர் பாங்கி	நிஉ	குழவி மருங்கினும்	உகக
அதுவே தானு	களசு	கூதிர்வேனி	உஉக
அமரர்கண் முடியு	உஙிச	கைக்கிளை	க
அயலோர் ஆயினும்	எள	கொடிநிலை கந்தழி	உசுசு
அவற்றுள் ஒதலுங்	நிஅ	கொடிப்போரேத்திக்	உஎ0
அவற்றுள், நடுவண்	ச	கொண்டுதலைக்	சக
அறுவகைப்பட்ட	உ0எ	கொள்ளார்தேஎங்	களநி
ஆயர்வேட்டுவர்	சசூ	கொற்றவள்ளை	உசுக
இயங்குபடை மரபு	ககக	தலைவரும் விழும	எள
இருவகைப் பிரிவும்	உநி	தன்னும் அவனும்	சுக
உயர்ந்தோர்க் குரிய	சுசு	தாவில் கொள்கை	உ0சு
உரிப்பொருள்	நுச	தாவினல்விசை	உஅ0
உழிஞை தானே	களங	தானே சேறலும்	நிக
உள்ளுறுத் தித	ககங	தானை யானை	ககச
உள்ளுறை உவமம்	கக0	திணைமயக்குறுத	உள
உள்ளுறை தெய்வ	ககஉ	தும்பைதானே	ககக
ஊரொடு தோற்றமு	உசுஉ	தெய்வம் உணவே	சநி
எஞ்சாமண்ணைசை	ககசு0	நடுவுநிலைத்திணையே	உக
எஞ்சியோர்க்கும்	கூள	நாடக வழக்கினும்	கஉ0
எத்திணை மருங்கினும்	சுக	நிகழ்ந்ததுகூறி	க0ங
எந்நில மருங்கிற்	சசு	நிகழ்ந்ததுநினை	க0க
ஏமப் பேரூர்ச	எசு	படையியங்கரவம்	கஙக
ஏவல் மரபின்	நிச	பனியெதிர் பருவமும்	கஅ
ஏறியமடற்றிறம்	ககள	பாங்கருஞ் சிறப்பிற்	உஙநி
ஏனையுவமங்	ககச	பாடாண் பகுதி	உநிக
ஏனோர் பாங்கினும்	நி0	பின்பனி தானும்	உச
ஒன்றுத்தமரினும்	அசு	புணர்தல் பிரிதல்	ஙசு
ஒதல் பகைவே	நிள	புறத்திணை மருங்கிற்	கஉசு
கணையும் வேலும்	ககூஉ	பெயரும் வினையு	சள
கலந்த பொழுதும்	சஙக	பொருள் வயிற்பிரி	சுஅ
காஞ்சிதானே	உகச	பொழுதும் ஆறும்	அஉ
காமஞ்சாலா	ககநி	மக்கள் நுதலிய	கஉங
காமப் பகுதி	உநிகூ	மரபுநிலை திரியா	க0சு
காரும் மாலையும்	சநி	மறங்கடைக் கூட்டிய	கச0

	பக்கம்		பக்கம்
மன்னர் பாங்கிற்	கடு	மேவிய சிறப்பி	சுக
மாயோன் மேய	கக	மைந்து பொருளாக	ககக
மாற்றருங் கூற்றஞ்	உடசு	வஞ்சிதானே	கதிக
முதல்கரு வுரிப்	நி	வழக்கொடு சிவணிய	உசுஉ
முதலெனப்படுவ	சச	வழங்கியன் மருங்கி	உநிசு
முதலெனப் படுவது	க0	வாகைதானே	உ0சு
மூந்நீர் வழக்கம்	சுஅ	வெறியறி சிறப்பின்	கசக
முழுமுதலரண	களச	வேந்துவிடு முனைஞர்	கஉக
முன்னிய நான்கும்	ககக	வேந்து விளையற்	சுள
மெய்ப்பெயர்மருங்	உசுநி	வைகுறு விடியன்	கஅ
மேலோர் முறைமை	சுநட		



விலை ரூ. 5-50.